உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருப்புத்தூர்ப் புராணம்.

இரண்டாம் பதிப்பு.

இது.

ஸ்ரீ வன்றொண்டரவர்கள் மாணாக்கருளொருவராகிய

காரைக்குடி.

ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

ஷடியூர் ஷெ. பெரி. ராம. மெ.

ஞானசம்பந்தச் செட்டியாரவர்களால்

குமரன் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பெற்றது.

ருத்திரோத்காரி௵ கார்த்திகைமீ.

திருப்புத்தூர்ப்புராணம்.

முதலில் சிலபாகம் ஞானம்பிகாப் பிரசிலும்

மத்தியில் சிலபாகம் ஞானசம்பந்த விலாசப் பிரசிலும்.

முடிவில் குமரன் பிரசிலும் அச்சிடப்பெற்றது.

முகவுரை.

ஸ்ரீமந் மணிவாசகப் பெருமான் "பாண்டிநாடே பழம் பதி" என்பது முதலிய பற்பல திவ்விய வாக்கியங்களால் விதந்தெடுத் தோதப்பெற்ற பாண்டிநாட்டிலே பரமசிவாபேதர்களாகிய சுத்தாத்துவித சித்தாந்தசைவ சமயாசாரியர்கள் திருவாய் மலர்ந்தருளிய திராவிட சுருதிகளாகிய தேவார திருவாசகாதி திருவருட் பாடல்பெற்ற திருத்தலங்களின் ஒன்றாய்த் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் தேவாரப்பதிக மிரண்டு பெற்று விளங்குவது திருப்புத்தூரென்னும் சிவஸ்தலம்.

இத் தலமகிமை, பதினெண் புராணங்களுட் சிறந்த காந்த மகா புராணத்தின் ஆறு சங்கிதைகளிற் சிறந்த சங்கர சங்கிதையிலே ஸ்ரீ தலமான்மியம் நவபுரி மான்மியமென விளங்குவதாம். இம்மகிமை வடமொழியி லிருத்தலால் இது தமிழுலகர்க் குபயோகமாகும்படி பெரியாராஞ்ஞை சிரமேற்கொண்டு திருவருள் விளக்கியவாறு தென்மொழியாகிய தமிழ்மொழி பெயர்த்துத் திருப்புத்தூர்ப் புராணம் என்று பெயர்தந்து இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் அச்சிட்டு வெளியிடப் பெற்று நாளடைவிலே செலவாகி விட்டபடியால் மேலும் பல அறிஞர் விருப்பம் நோக்கிச் சிற்சில குறிப்புரைகளும் விளக்கி மெ. பெரி. ராம. மெ. ஞானசம்பந்தச் செட்டியாரவர்கள் பொருள்கொண்டு அச்சிடப்பெற்றது.

இதில், சிற்சில இடங்களில் எதுகை முதலியன நோக்கி நகரத்துக்கு னகரம் சேர்த்துள்ளது.

ராம. சோ.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

ஸ்ரீ வீணாகான புரஸ்த நல்லூராக்கிய நகரநிவாஸ

சுத்தாத்துவித சித்தாந்தசைவ வியவஸ்தாபக

ஸ்ரீமந் நாவலர் பெருமான் பாததூளி சிரமேற்கொண்ட

ஸ்ரீ அம்பலவாண நாவல சுவாமிகள் இயற்றியது.

திருவளரு மலர்ச்சும்மைச் செழும்பொழில்கள் சூழ்ந்திலங்கு
மருவளர்செந் தமிழ்ப்பாண்டி மண்டலத்துப் பன்னான்கா
முருவளர்வாண் மதிச்சடையார்க் குகந்ததல மவற்றொன்று
புருவளர்விற் றிருவளர்மா புரிதிருப்புத் தூராமால். (க)

அன்னதல மதுகௌரி யரியலர்மின் காரிசுரர்
மன்னவன்சே யிவர்முதலோர் தொழுதுவரம் வாய்ந்ததெனி
லின்னதென விதன்பெருமை யியம்புநர்யா ரிவ்வுலகின்
முன்னுபல மொழியுள்ளு முதன்மொழியாம் வடமொழியில். (உ)

சூதமுனி யொருவாறு சொற்றதனைத் தூய்மைமிகு
மாதவத்தோர் வழுத்துமருள் வளஞ்சால்செந் தமிழ்மொழியி
லோதுகென வானன்பர் பலர்வேண்ட வுவந்துரைத்தான்
போதமலி நூல்கள்பல புரைதபக்கற் றுணர்புனிதன். (ங)

அருளடக்கம் பொறைவாய்மை யன்புநடு நிலையின்சொற்
பொருண்மிகுமெய்க் கொடையாதி பொருந்துகுணக் குன்றனையான்
றிருவருளை யுருக்கொளுநஞ் சீமானாவலர்பெருமான்
குருபதத்தன் பாலுரிமை யெனக்கிசைந்த கொள்கையினேன். (ச)

சைவசிகா மணியெங்கள் சாதுசிகா மணிபாசத்
தெவ்வைமுனிந் திடுதீர சிகாமணிநா வலர்செம்மல்
செவ்விதருட் டொடர்புநிகழ் சிறப்பதனு லெஞ்ஞான்று
மெவ்வழியுந் திறம்பாம லென்பாலு மன்புடையான். (ரு)

வேதவா கமங்களெலாம் விளம்புபொருள் சிவமென்றே
போதமலி தாவரசங் கமமிவற்றிற் பொருந்துநெறி
யாதரவின் வழிபடுவோ னக்கமணி வெண்ணீறு
மோதுதிரு வெழுத்தைந்து முறுதனமாக் கொண்டுயர்ந்தோன். (சு)

பாடுபுகழ் நால்வருரை முதன்முறைகள் பன்னிரண்டுந்
தேடுமியன் மெய்கண்ட சித்தாந்தம் பதினன்கும்
வீடுறுமெய்ச் சிவாநுபவம் விளைநிலமா வதுவேட்டு
நாடுமருட் டாளாண்மை வழுவாத நன்மையினன். (எ)

அரியயற்கு மரிதாய வசிதாரா விரதமென்ப
பரர்மனையை நயவாமை யங்கதையிப் பார்மீதே
திரமுறுதன் செயலதனுற் றெருட்டுமுயர் சீலனெனத்
தரியலரும் வியந்துரைக்கத் தகுநிதரி சனயானேன். (அ)

என்போல்வார்க் குற்றதுணை யியல்காரைக் குடியதனி
லின்பால்செய் வணிகர்குலத் திராமநா தக்குரிசி
றன்பான்மெய்த் தவத்துதித்தோன் சைவநெறி தகவளர்க்கு
மன்பானன் னெறிநின்ற சொக்கலிங்க மாநிதியே. (கூ)

சூசிபத்திரம்

பக்கம்.	சருக்கம்.	பாடற்றொகை.
௧	காப்பு நூற்பயன் வாழ்த்து	௪
௨	கடவுள் வாழ்த்து	௩௰
௭	பாயிரம்	௧௧
௮	திருநாட்டுச்சிறப்பு	௧௧௩
௨௩	திருநகரச்சிறப்பு	௧௫௧
௪௩	புராணவரலாறு	௩௩
௪௭	தலவிசேடச்சருக்கம்	௧௮
௪௯	தீர்த்தவிசேடச்சருக்கம்	௧௮
௫௧	மூர்த்திவிசேடச்சருக்கம்	௨௩
௫௪	திருக்கைலாயச்சருக்கம்	௮௫
௬௬	கௌரிதாண்டவச்சருக்கம்	௨௩௰
௯௫	இலக்குமிதாண்டவச்சருக்கம்	௧௪௨
௧௧௭	வைரவச்சருக்கம்	௧௫௪
௧௩௭	சீதளிதீர்த்தச்சருக்கம்	௯௧
௧௫௧	ஆதிசந்திரபாண்டியச்சருக்கம்	௨௩௨
		ஆகூ ௲௩௱௩௰௫

E 593

பிழைத்திருத்தம்.

தேவாரம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௧	௧	௨	ளொடு	ளோடு
௨	௮	௩	வல்லி	வல்ல

புராணம்.

௩	௮	௨	வந்தருளு	வுவந்தருளு
,,	,,	,,	கண்ட	கண்டங்
௪	௧௮	௨	சொல	சொல்
௬	௨௬	௨	நீத்த	கோதுநீத்த
௧௨	௩௧	௨	வம்பணி	வெம்பணி
௧௩	௩௨	௪	காற்றினி	காற்றனி
,,	௩௬	௧	கோளு	கொளு
,,	௩௭	௧	மெய்தரு	பெய்தரு
௧௪	௪௫	௩	ரிடைபுண	ரிடைப்புண
௧௮	௭௩	௩	யார்போ	யாற்போ
௨௦	௮௮	௪	றிறள்	றிரள்
௨௧	௯௭	௧	படரக்குப்	படரக்
,,	௧௦௧	௧	தொன்றோர்	தொன்றோ
,,	௧௦௨	௪	புறப்ப	புரப்ப
௨௨	௧௦௫	௩	உணந்தி	உணர்ந்தி
௨௨	௧௦௮	௧	நிலத்தில	நித்தில
௨௩	௧௧௩	௪	பெளுர்	பெளுற்
௨௪	௬	௧	மேதலாய்	மேவதாய்
,,	௯	௧	மருசங்	மிருசங்
௨௫	௧௫	௧	கவிகைச்	கவிகைக்
௨௬		௨௯	சல்பன்	கல்பன்
௨௭	௨௬	௩	ெய்யார்	மெய்யார்
௨௯	௪௫	௩	றொழிசெய்	றொழில்செய்
௩௨	௭௧	௪	கவாவர்	கவர்வர்
௩௩	௭௪	௨	யுயர்த்திய	யுயர்த்தியு
,,	௭௭	௪	ருமிவர்	ரும்மிவர்
௩௫	௯௫	௪	வோடும்	வொடும்
௩௬	௯௯	௩	பசுபடு	பசுப்படு
,,	௧௦௦	௪	வினபுரி	வினப்புரி

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை	திருத்தம்.
,,	௧௦௫	௪	கமந்து	கமர்ந்து
௩௮	௧௧௪	௩	முட்பொ	முப்பொ
,,	௧௧௫	௨	யரியமுத	யரிமுத
,,	௧௧௯	௩	றியைநத	றியைந்த
,,	௧௨௨	௪	ரன்பார்காசி	ரனபரற்காசி
௪௦	௧௩௧	௪	ஹுலகி	ஹுலகி
,,	௧௩௪	௧	களினிடை	களிடை
,,	௧௩௭	௪	வேவு	மேவு
௪௨	௧௪௮	௪	செல்வள	செல்வவள
௪௩	௧	௪	மேதியின்	மேதினியின்
௪௪	௧௦	௪	துண்ண	திண்ண
௫௨	௯	௨	ரேனு	ரேனும்
௫௩	௧௧	,,	பாட்டு	இரட்டித்துவிட்டது
௫௬	௧௧	௪	டகயை	டகைய
,,	௧௪	௨	காத்தி	கரத்தி
௫௮	௨௫	௧	சிளர்	கிளர்
,,	௩௦	௨	சநது	சந்து
௬௦	௪௫	௧	முதல்	முதல
௬௧	௪௭	௧	முன்றும்	மூன்றும்
௬௩	௬௬	௧	திகழ	திகழ்
௬௪	௭௧	௪	மராக	மராக்
,,	௭௫	௪	பஙச	பங்க
௬௭	௫	௩	மன்றி	மன்றின
௭௧	௪௦	௨	பால	பால்
௭௨	௪௪	௩	கரச	கரசு
,,	௪௬	௧	நகவே	நகவேத

புட்நோட் *ஆதம்—விருப்பம்

,,	௪௯	௧	கனியி	கணியி
௭௩	௫௧	௨	பிறராற	பிறராற்
,,	௫௩	௩	யானறோர்	யான்றோர்
,,	௫௫	௪	கிதழ	கிதழ்
,,	,,	,,	ணரந்து	ணர்ந்து
௭௪	௬௯	௨	கைகெங்கை	கைக்கொங்கை
,,	௬௩	௪	தொழலிரு	தொழவிரு
௭௭	௯௦	௪	பெருாவ	பொருவ
௮௧	௧௨௨	௨	திப்பய	திப்பிய
௮௨	௧௩௧	௩	துகிலொடுக்	துகிலொடு
௮௪	௧௪௧	௪	கண்ட	கண்டை
௮௬	௧௫௬	௬	ழஞ்சுனழ்	ழஞ்சனம்

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௯௦	௧௯௧	௧	மாதவரா	மாதவனு
௯௩	௨௧௫	௨	ள்வேயருரான்	யருள்வோன்
௯௫	௨௨௯	௨	தகமை	தகைமை
௯௮	புட்நோ	ட்	தத்தம்	தந்தம்
௧௦௨	௫௨	௩	வுந்தம்	வுந்தச்
௧௦௫	௭௪	௩	பருகு	பிருகு
,,	௮௧	௪	பிதிவுற	பதியுற
௧௦௯	௧௧௨	௧	யதிகேட்	யதுகேட்
௧௧௮	௨௮	௪	தன்ட	தண்ட
௧௨௦	௪௨	௩	கழுவு	கழிவு
௧௨௨	௫௪	௪	புரிந்தியி	புரிந்திய
௧௨௪	௬௬	௪	சிவணிருத்	சிவநிறுத்
௧௨௪	௬௭	௧	ருமவி	மருவி
,,	,,	௪	திருவு	திருவ
,,	௭௧	௩	சமர	சமரச
௧௨௫	௭௩	௩	பசு	பேசு
,,	௭௭	௩	தம்பர	தம்பவ
௧௨௬	௭௯	௩	திடுச	திடுகு
,,	௮௦	௩	லித்தகு	வித்தகு
௧௨௭	௯௨	௪	தரிவணவாய்	தறிவணவாய்ச்
௧௨௮	௯௪	௩	யெனசிவா	யெனச்சிவா
௧௨௯	௧௦௨	௧	ஞாணி	ஞாளி
௧௩௦	௧௦௬	௪	யலக	யலக்க
௧௩௧	௧௧௪	௪	கொள்	கொல்
௧௩௨	௧௨௫	௩	மிக்குய	மிக்குப
,,	௧௨௬	௩	சிரமிகை	சிரமிசை
௧௩௬	௧௪௭	௨	வில்சார்	வில்வார்
௧௪௦	௧௬	௩	விலங்க	விலிங்க
,,	௧௭	௧	நெறி	ணெறி
௧௪௨	௩௪	௪	ணிமிரிய	ணிமிரிம
௧௪௬	௫௭	௧	மலரடி	மலாடி
,,	,,	௩	நேர்கின்	நேர்நின்
,,	௬௦	௧	அயனைபெரும	அனையபெரும்
,,	௬௪	௧	புரிந்து	புரிந்த
௧௪௭	௬௮	௨	பதிபுகழு	பதிபுகலு
௧௭௩	௧௫௨	௪	மார்ட்பி	மார்ப்பி

சிவமயம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

தேவாரத்திருப்பதிகம்.

பண்—தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்முவெறியார்பொழிற்சோலைத்
திங்களோடுதிளைக்குந்திருப்புத்தூர்க்
கங்கைதங்குமுடியாரவர்போலு
மெங்களுச்சியுறையுமிறையாரே. (௧)

வேனல்விம்முவெறியார்பொழிற்சோலைத்
தேனும்வண்டுந்திளைக்குந்திருப்புத்தூ
ரூனமின்றியுறைவாரவர்போலு
மேனமுள்ளுமெயிறும்புனைவாரே. (௨)

பாங்குநல்லவரிவண்டிசைபாடத்
தேங்கொள்கொன்றைதிளைக்குந்திருப்புத்தூ
ரோங்குகோயிலுறைவாரவர்போலுந்
தாங்குதிங்கடவழ்புன்சடையாரே. (௩)

நாறுவிண்டநறுமாமலர்கவ்வித்
தேறல்வண்டுதிளைக்குந்திருப்புத்தூ
ராறுவாழ்க்கையுடையாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே. (௪)

இசைவிளங்குமெழிற்சூழ்ந்தியல்பாகத்
திசைவிளங்கும்பொழில்சூழ்திருப்புத்தூர்ப்
பசைவிளங்கப்படித்தாரவர்போலும்
வசைவிளங்கும்வடிசேர்நுதலாரே. (௫)

வெண்ணிறத்தவிரையோடலருந்தித்
தெண்ணிறத்தபுனல்பாய்திருப்புத்தூ
ரொண்ணிறத்தவொளியாரவர்போலும்
வெண்ணிறத்தவிடைசேர்கொடியாரே. (௬)

நெய்தலாம்பல்கழுநீர்மலர்ந்தெங்குஞ்
செய்கண்மல்குசிவனூர்திருப்புத்தூர்த்
தையல்பாகமகிழ்ந்தாரவர்போலு
மையுணஞ்சமருவுமிடற்றாரே. (எ)

கருக்கமெல்லாங்கமழும்பொழிற்சோலைத்
திருக்கொள்செம்மைவிழவார்திருப்புத்தூ
ரிருக்கவல்லவிறைவரவர்போலு
மரக்கனொல்கவிரலாலடர்த்தாரே. (அ)

மருவியெங்கும்வளருமடமஞ்ஞை
தெருவுதோறுந்திளைக்குந்திருப்புத்தூர்ப்
பெருகிவாழும்பெருமானவன்போலும்
பிரமன்மாலுமறியாப்பெரியோனே. (௯)

கூறைபோர்க்குந்தொழிலாரமண்கூற
றேறல்வேண்டாதெளிமின்றிருப்புத்தூ
ராறுநான்குமமர்ந்தாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே. (௧௦)

நல்லகேள்விஞானசம்பந்தன்
செல்வர்சேடருறையுந்திருப்புத்தூர்ச்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்று
மல்லறீருமவலமடையாவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருநாவுக்கரசுநாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

தேவாரத்திருப்பதிகம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

புரிந்தமரர்தொழுதேத்தும்புகழ்தக்கான்காண்போர்விடையின்பாகன்காண்புவனமேழும், விரிந்துபலவுயிராகிவிளங்கினான்காண்விரைக்கொன்றைக்கண்ணியன்காண்வேதந்தான், தெரிந்துமுதற்படைத்தோனைச்சிரங்கொண்டோன்காண்தீர்த்தன்காண்திருமாலோர்பங்கத்தான்காண், திருந்துவயல்புடைதழுவுதிருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே (௧)

காராருமுலைமங்கைபங்கத்தான்காண்மாமறைகளாயவன்காண்மண்ணும்விண்ணுங், கூரார்வெங்கனலவனுங்காற்றுநீருங்குலவரையுமாயவன்காண்கொடுநஞ்சுண்ட, காரார்ந்தகண்டன்காணெண்டோளன்காண்கயிலைமலைப்பொருப்பன்காண்விருப்போடென்றுந், தேராருநெடுவீதித்திருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௨)

மின்காட்டுங்கொடிமருங்குலுமையாட்கென்றும்விருப்பவன்காண் பொருப்புவலிச்சிலைக்கையோன்காண்,நன்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறிநற்கனகக்கிழிதருமிக்கருளினோன்காண், பொன்காட்டக்கடிக்கொன்றைமருங்கேநின்றபுனக்காந்தள்கைகாட்டக்கண்டுவண்டு,தென்காட்டுஞ்செழும்புறவிற்றிருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௩)

ஏடேறுமலர்க்கமலத்தயனுமாலுமிந்திரனும்பணிந்தேத்தவிருக்கின்றான்காண், தோடேறுமலர்க்கடுக்கைவன்னிமத்தந்துன்னியசெஞ்சடையான்காண்துகளூர்சங்க, மாடேறிமுத்தீனுங்கானல்வேலிமறைக்காட்டுமாமணிகாண்வளங்கொண்மேதி, சேடேறிமடுப்படியுந்திருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௪)

கருமருவுவல்வினைநோயகற்றினான்காண்காமருபூங்கச்சியேகம்பத்தான்காண், பெருமருவுபேருலகிற்பிணிகடீர்க்கும்பெரும்பற்றத் தண்புலியூர்மன்றாடிகாண், தருமருவுகொடைத்தடக்கையளகைக்கோன்றன்சங்காத்தியாரூரிற்றனியானேகாண், திருமருவுபொழில்புடைசூழ்திருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௫)

காம்பாடுதோளுமையாள்காணநட்டங்கலந்தாடல்புரிந்தவன்காண்கையில்வெய்ய, பாம்பாடப்படுதலையிற்பலிகொள்வான்காண்பவளத்தின்பருவரைபோற்படிமத்தான்காண், டாம்பாடுசினவிடையேபகடாக்கொண்டசங்கரன்காண்பொங்கரவக்கச்சையோன்காண், சேம்பாடுவயல்புடைசூழ்திருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௬)

வெறிவிரவுமலர்க்கொன்றைவிளங்குதிங்கள்வன்னியொடுவிரிசடைமேன்மிலைச்சினான்காண், பொறிவிரவுகதநாகமக்கினோடுபூண்டவன்காண்பொருபுலித்தோலாடையான்கா, ணறிவரியநுண்பொருள்களாயினான்காணாயிரம்பேருடையவன்காணந்தண்கானற், செறிபொழில்சூழ்மணிமாடத்திருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௭)

புக்கடைந்தவேதியற்காக்காலற்காய்ந்தபுண்ணியன்காண்வெண்ணகைவெள்வளையாளஞ்ச, திக்கெதிர்ந்தகரியுரித்தகோன்காண்வெண்மதியைக்கலைசேர்த்ததன்மையோன்கா, ணக்கரும்புபெரும்புன்னைநெருங்குசோலையாருக்கதிபதிகாணந்தண்டென்ற, றிக்கணைந்தமருமருங்கிற்றிருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௮)

பற்றவன்காணேனோர்க்கும்வானோருக்கும்பராபரன்காண்டக்கன்றன்வேள்விசெற்ற, கொற்றவன்காண்கொடுஞ்சினத்தையடங்கச்செற்றுஞானத்தைமேன்மிகுத்தல்கோளாக்கொண்ட, பெற்றியன்காண்பிறவிகருவிகழுக்குன்றக்கெம்பிஞ்ஞகன்காண்பேரெழிலார்காமவேளைச், செற்றவன்காண்சீர்மருவுதிருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௯)

உரமதித்தசலந்தரன்றனாகங்கீண்டவோராழிப்படைத்தவன்காணுலகுசூழும், வரமதித்தவிராவணனைப்பற்கொண்டோன்காண்வானவர்கோன்புயநெரித்தவல்லாளன்கா, ணரமதித்துச்செம்பொன்னிறைப்பூணணிந்தவன்காணலைகடல்சூழிலங்கைவேந்தன், சிரநெரித்தசேவடிகாண்டிருப்புத்தூரிற்றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௰)

திருச்சிற்றம்பலம்.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருப்புத்தூர்ப்புராணம்.

விநாயகர்.

காப்பு.

திருத்த லம்புக ழாரியந் தென்மொழிப்
பொருந்த லம்புனை சொற்பொருள் பொற்புறக்
கருத்த லம்புணர் காட்சியர் காமுறு
மொருத்த லம்புயச் சேவடி யுன்னுவாம். (௧)

வேறு.

திருவாக்குக் கிறைவனெனுந் தேவகுரு முதலெவருஞ் செயலா ரம்பத்
தொருவாக்கும் பிடுதலையைப் பொருட்கியற்றிக் கருமசித்தி யுறுகின் றாரப்
பொருவாக்குன் றலில்பொருளாங் கைவலிய பத*நிபனைப் புரையி லூனத்
துருவாக்குங் கருணைமழை யும்பன்முக நம்பனையெம் முளத்திற் சேர்ப்பாம்.

நூற்பயன்.

திருவாழுந் திருப்புத்தூர்ச் சிவசரிதம் படனவிதி சிறப்பச் செய்து
ஒருசார்வத் துடன்கேட்போ ருரைப்போர் நன்மகவுபொருளுலப்பில் போகந்
தருவாழ்வு பெற்றநெடு நாளமர்ந்து நரேந்திரராய்த் தகுபொன் னாட்டின்
மருவாநின் றின்பமுறீஇ மறைமுதல்வ னறைகழற்கீழ் மன்னி வாழ்வார். ()

வாழ்த்து.

வேதநெறி மகம்வளர்க விண்மாரி முறைபொழிக விரிநீர் வையத்
தோதுவள மறம்பொருளின் போங்குகளை நிகசைவ முயர்க வென்று
மீதுறுக கண்மணியும் வெண்ணீறு மைந்தெழுத்தும் விமல ஞான
பூதபரம் பரைபொலிக புரவலன்செங் கோல்வாழ்க புவன மெல்லாம். (௪)

---

* நிபம்-காரணம்

கடவுள்வாழ்த்து

சீதளிநாதர்

திருமாத வன்புவனி பெருந்தவப் பிருந்தகண திருந்தாள் சென்றே
திருமாத§ வன்புவளர் சிந்தையராய்த் தினம்போற்றுஞ் சீத ளீசன்
திருமாத வன்புவன மலியிதழி பொதிவேணிச் செம்மல் பாற்க
திருமாத†வன்புவனந் தருபரமன் திருவடிகள் சென்னி சேர்ப்பாம். (க)

பிறந்தைபல புக்கொழிந்தும் பிரமமெனத் தமைமான்ற பிரமன் மாற்குச்
சிறந்தவய னச்சுதனுந் திருப்பெயரீந் தவர்க்குயர்வு திகழு வேதத்
தறைந்தருளுந் திறைந்ததனியருட்கடல்பொற்றிருத்தலத்தினளவாச்செல்வத்
திறந்தழையுஞ் சீதளியிற் சீதளிநா யகன்மலர்த்தாள் சிந்தை சேர்ப்பாம். (உ)

சிவகாமியம்மை.

கரத்தானைத் தோட்டெழின்ம கரத்தானை யறம்வளர்த்த கமல நாண்செங்
கரத்தானை யருணிறைசா கரத்தானைத் திருத்தலமென் கவினுர் மாந
கரத்தானை ஞானபஞ்சாக் கரத்தானை யிலங்குசிவ காமி யைச்சே
கரத்தானை மதிமறைச்சி கரத்தானை மலர்த்தாளைக் கருதிவாழ்வாம். (ங)

நடேசர்.

பை தூக்கி வருமரவப் பணி தூக்கிச் சடையின் திசைப் பயங்கொ ளுலு
மை தூக்கிக் கரத்திளமான் மறி தூக்கி மதி தூக்கி மகியங் தூக்கிப்
பொய் தூக்கித் தளரு திடைச் சிவகாமி காணவெமைப் போல்வார் தம்மைக்
கை தூக்கி யாளுகைக்கோர் காறூக்கி நடித்தவரைக் கருத்துள் வைப்பாம். ( )

சிவகாமியம்மை. (வேறு.)

தத்துவநேர் கண்டுசுத்தி கண்டு தன்னைத் தான்கண்டு தற்சத்தி தனையுங் கண்
டாங், கொத்தசிவங் கண்டுகலந் தூரிய போகத் தூற்றிடுபே ரின்பத்தை யுணர்
வி லேமுங், கைத்தலநெல் லியிற்கண்டு கலப்ப வெம்மான் சௌரிநடங் கண்
டுமனங் களிப்பா ளாகிச், சித்தமகிழ் தெண்மையளிக்கு மன்னை யெங்கள் சிவ
காம சுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம். (ரு)

தட்சிணாமூர்த்தி. (வேறு.)

தடவிருக்கம்* மறைமுடிவு தாமுழுதாஞ் சேட்டெனாத்துந் தம்முனையப்
படவிருக்க நால்வருக் நஞ் சித்தாந்தத் தனிப்பொருளைப் பகர்ந்து தேறக்
கடவிருக்க வின்பொருளொன் றருட்குறிச்சின் முத்திரைக்கை காட்டிஞான
வடவிருக்கத்தமர்ந்தருளுமறைப்பொருளினைறைப்பதுமமலர்த்தாள்போற்றி.

---

§ திருமாத-திரும்பாத † பால்கதிர்-உமாதலன் * தட இருக்கு

வன்னியடிவிநாயகர்.

எவரெனினு நினைப்பவர்விக் கினந்தீர்த்தல் லார்க்கதனை யியற்றும் வாய்மை
திவள்பெயர்தன் றனக்கேயாய்ச் சிறப்பவொளிர் மறைப்பொருளைத் தெய்வ
வானம், புவிதொழுமன் னவபுரியிற் புண்ணியனை வன்னியடிப் புனிதவாழ்
வைக், கவுளமத களிற்றினையெங் கற்பகத்தை யற்பகத்திற் கண்டுவாழ்வாம்.

சுப்பிரமணியர்.

அருதமாற்†றெறுவனற்க ணவதரித்தெம் பவமிரித்தற் கனூதி தொட்டே
திருகுமரன் மையையகற்றிச் சிவந்தமைப்ப வந்தருளுஞ் சேய்தன் கண்ட
கருகுமரன் குமரனென னிருபயத மாத்திரத்திற் காண மேவு
மொருதமரனிருசரணமுளத்திலுநஞ்சிரத்திலும்வைத்துவந்துவாழ்வாம்

வீரபத்திரர்.

அருமறைமுற்றுணர்ந்தாலு மருளினடங்கார்கெடுவாதுமெய்யென்ற [டும்
றெருளமுற்றுங் கோரமதேகிருவுருவாய்ப்போந்து மகந்தெறன்மேற்கொண
டருமுறைமற்றடங்கினர்க்காங்கருளறெளிவுறவயற்குவலவனுருக்,
திருவளித்தமறக்கருணையறக்கருணைப்பெருங்கடறாள்சென்னிசேர்ப்பாம்.

வைரவர். (வேறு.)

துயரா‡ வந்தனை யருள்கெனத் துதித்தவர் சுகமார்ந்
துயரா வந்தனை யகற்றியவ் வூறுசெய் தவர்பாற்
பயரா வந்§தனைப் புரிந்தவன் சயந்தனைப் படரு
மயரா வந்தனைக் காண்டலு மாற்றினேற் பணிவாம். (௧௦)

திருநந்திதேவர். (வேறு.)

ஆயுமரன் கயிலைமுதல் வாயிலமர்ந் தகம்புறமு மவனே தானே, யாயுமடை
வார்தமைத்தன் னடியுறவைத் தூட்புகுத்து மரிய காவற், றூயபணி தலைக்
கொண்டோன் மெய்ப்போத முணர்த்தருளுந் தவமுங் கொண்டு, சேயனை
யுமண்ணியராச் சேர்த்தருளு நந்தீசன் றிருத்தாள் போற்றி. (௧௧)

விட்டுணு.

பாயும்விடை யாயொருபார் பைங்கொடியாய்ப்பாணமாய்ப் பரன்மேற் கொள்
ளுநந், தூயவுரம் பெற்றானைத் துலங்குமவன் றிருநடமே தொழுமுன் னோ
னை, மாயனை மாயனை மாயனை யாண்முலையுண் மாண்பினனை, யாய
வரன் சீதளியி னமர்ந்தருளெம் பெருமானை யடியிற் றாழ்வாம். (௧௨)

---

† அருதம் மாரன் ‡ துயர—துயருறுதலால். §ரவம். ஒலி.

இலக்குமி. (வேறு.)

வேரி சத்தி னருளின் விரியுஞ்செவ்*
வாரி சத்தின் மருவு மடந்தைமு
ராரி சத்தித னல்லரு ளேக்கம்
பாரி சத்தின் வளரப் பரசுவாம். (கங.)

சரசுவதி. (வேறு)

ஆலிய கமண்ட லத்தோன் றூலுவி னமர்ந்திட் டன்பர்
சாலிய கமல வேணித் தற்பர னருள்பெற் றுய்வான்
கோலிய கமமெய்ந் நூல்கள் குறித்துண ரறிவு கூட்டும்
வாலிய கமலத் தன்னை மலரடி மனத்துள் வைப்பாம். (கச)

தமிழாசிரியர். (வேறு.)

அகத்தியல வருந்தமிழ்மா மறைமுதனூ லாய்ந்துதமி ழுலனி மாக்க
ளகத்தியங்குமிறப்பொழிந்கின்படைவுறச்சந்திளங்கொ ற லளாவுங்வெற்பி
னகத்தியனூ லகத்தியந்தம் தமர்ந்தருளுந் தமிழ்க்குரவ னகிலம்போற்று
மகத்தியனை யகத்தியனை வகலவறி வகலநினைந் தடியிற் றூழ்வாம். (கரு)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

நாதனுமை நாப்பணின்று நாருருவிற் காழிவந்து நயந்த ஞான்று
மாதியவன் பொருள் பிதுரார்ச் சிதந்தனக்கா தலையுணர்ந்து மமைதியாய்ப்பச்
சீதரனுக் கானுருவ சித்திதந்த புத்தமுறைத் தீயே னுள்ள
வீதுமொளிர் மணிவிளக்கை வித்தகனை நித்தலுமுள் விரும்பி வாழ்வாம். ()

திருநாவுக்கரசுநாயனார்.

பார்த்தளவேமனஞ்சோர்ந்துபனைத்துநளன்வருணன்முதற்பற்பலோரைக்
கூர்த்ததுணைகொடுகுரம்புதுயிற்றியலைகடந்திடுமக்குரிசிலுண
வார்த்தெறிநீரமிழ்சிலைதன்னருள்வாக்கினையினலம்பியாக
நீத்தமுங்கீர்நீத்தெனமையும்பவக்கடனீத்திட்டவர்தாணினைந்துவாழ்வாம்.(கஎ)

சுந்தரமூர்த்திநாயனார்.

ஆக்குதலுங் காக்குதலு மாமிரண்டுங் வல்லானென் றமர்ந்துந் தன்சேய்
நோக்கெரியி னீறுயுங் கையறு நால் வெள்கவொரு கொடியிற் றூன்சொல
வாக்கினொரு சேயினுயிர் வெளவுகரா வாவியினீர் வருவி தீங்கோன்
காக்குமவன்பணிவுறவெண்கரியுகைத்தோன்விரைமலர்த்தாள்கருதிவாழ்வாம்

---

*வேரியானது சத்தாயுள்ள தனது இன் அருளைப்போல விரியும் செவ்வாரிசமென்க.

மாணிக்கவாசகசுவாமிகள்.

ஆசுரர்சை வந்திலைநீத் தொருமூவ ரிடைப்பலியா தகன்ற மாறன்
மாசினுளங் குலைவுறப்புத் தொருங்கொழித்தாங் கரசடிமை மருவக் கொண்
றேசுபெறு முபநிடத சிந்துநுகர்ந் தரியதமிழ்த் தெய்வ வேத [டோன்
வாசகமாம் வரதமணி மழைபொழிசம் வர்த்தமுகின் மலர்த்தாள் போற்றி.

சண்டேசுரநாயனார்.

தாதையுனக் கொருநாமே மைந்தவென்றூண் டெந்தையரு டகையி னோன்
றன், வேதமெலாமாங்காங் கவிதந் துரைப்பவுயர்ந்தபொருள் விதமூன்றாய,
பாதகமேசோறு தாப்பற்றி னோன் றனைப்பணிவோர்பைம்போதாதி,யாதுமொ
ருபொருடனக்கென் றீட்டாமே பூசைகொள்வோ னிணைத்தாள்போற்றி. ()

அறுபத்துமூவராதியோர். (வேறு.)

திருக்கைலை தனி லாரு ரரிச நோக்கிச் சிவைமகிழ வழைத்திடவந் துலகி
னோரைத், தருக்குறுமா சைவநெறி நிறுவத் தானோர் சலம்புணர்த்திந் நிலம்
புகுத்தச் சார்ந்த நம்பி, யருக்கணியோன் றூதாதி பணிசெய் வாக்கி யவண்
முதல்கொண் டியற்றுதொண்டத் தொகையின் மேவி, யிருக்குமவ ரியல்பு
ணர்தற் கியாமா ரன்னோ ரிணையடித்தா மரைகணித மேத்தி வாழ்வாம்.(௨௧)

நம்பியாண்டார்நம்பிகள். (வேறு)

பொல்லாத விபமுகற்குச் சண்டீச பாகமுமோர் பொற்பி னூட்டும்
வல்லாள ருதிசைவ மரபின்மணி யடியர்தொகை வகைசெய் வாழ்வு
வில்லாருந் திருமுறைபன் னொன்றாகக் கோத்தருளும் விமலன் வானிற்
செல்லாரும் பொழினாரைத் திருநகரி னம்பிகழல்சென்னிசேர்ப்பாம்.(௨௨)

சேக்கிழார்நாயனார்.. (வேறு.)

திருவருள்வா ரித்தருவான் குன்றையுறீஇ மரபிற் சேக்கிழார் கண்மணியா ய
னபாயன் வினாக்க, டாவிடைதந் திளம்பருவத் தமாத்தியமேற் றமணூற் சா
ர்பகற்றி யுலகுமுதல் கொடுமெய்நூ லுரைத்தல், வருண்முறைமன் றந்த
ணர்பூ சிப்பவாங்கேற் றியாசிரட்டக் கவரிமுவா யிரர்வேத மோதி, வரமதமா
வூர்ந்துதிரு வருண்மருவு §கிருபா வாகீச பானுவையுட் கொண்டிருண்மாற்
றிடுவாம். (௨௩)

மெய்கண்டசிவாசாரியர். (வேறு.)

அருமறையின் சிரத்தெளிவாஞ் சித்தாந் தப்பே ராழிக்கடைந் தருட்போதவ
முத மீந்த, மருமுதலைக் கறைமிடறு நெற்றிநோக்கு மறைத்தருளி வெண்
ணெய்நகர் வந்த வாழ்வைப், பரசுறுமே ழெழுபெரியர் பாங்கு சூழ்ந்து பணி
வுறத்தன் மயமளித்த பால ரூப, குருமணியை யவர்மணிமெய் கண்ட நாம
குலமணியை மலரடியைக் குறித்து வாழ்வாம். (௨௪)

---

§ கிருபாவாகீசர்-அருண்மொழித்தேவர்.

அருணந்திசிவாசாரியர்.

புலவேடர் புகுந்தாசு புரியு நெஞ்சப் புலத்துயரைம்†பொறிவாண்மெய்ப் புலக்கை யேந்தி, விலகாமற் றவமொழிய வீட்டிக் காம விலங்காதி தடிந்தருளாம் வேலி கோலி, வலமாரு மன்புவித்திச் சிவமார் போக மல்குபர முத்தி நலம் வாய்ப்ப வாய்மை, நலமாருஞ் சிவஞான சித்தி தந்த நாதனருணந்திபத நயந்து வாழ்வாம். (௨௫)

மறைஞானசம்பந்தசிவாசாரியர்.

குலமறையோர் சிகாமணியைப் பாத்து வாச கோத்திரஞ்செய் தவப்பயனைக் கூறும் வேதத், தலைபழுத்த கனிபிழிந்து நீத்த சாரசைவ சித்தாந்தத் தனிப்பேரின்ப, நிலையமுதந் தனையடைந்தார்க் கருளி மேனுக்கு நிரீக்கணத்தா லளித்தருளு நிமல வாழ்வை, நலநிறையு மறைஞான சம்பந்தப்பேர் நாயகனைச் சேயடியை நயந்து வாழ்வாம். (௨௬)

உமாபதிசிவாசாரியர்.

எளியேன்யான் குடியாருக் கெழுது சீட்டென் றேகவெரு வசனத்தாற் றுழ்த்தி யேற்றி, விளியாத பரமுத்தி கொடுக்க வென்னும் வியங்கோளின் வேண்டுகோள் விளங்க வேத, மளியாதின் றேலமிட வயன்மா றேட வரியபிரான் றனிக்கவிசெய் தன்பு கூரு, மொளியாரு முமாபதிமெய்ச்சிவன்றாள்போற்று முழுவலன்பர் கழல்களன்பி னுவந்து வாழ்வாம். (௨௭)

பட்டினத்தடிகள் (வேறு)

அருந்துறவாண் வெண்காட் டடிகளங் கமல னன்றூட்
டருந்தனி யிலிங்க மேற்ற சற்குரு தாவின் ஞானப்
பெருந்தகை மருத வாணர்ப் பிள்ளையாப் பெற்ற வாழ்வு
திருந்துபூம் பட்டி னத்தெந் செம்மறாள் சிந்தை சேர்ப்பாம். (௨௮)

அரதத்தாசாரியர். (வேறு.)

திரிபுரத்தார் சிவநியம நீத்த தோடஞ் சிந்துறமால் வந்துநித்தா மெனமுற்றோன்றிப், பரதவித முணர்த்தவரு பொது நூறாறும் பதிசிவமென் றஞ்சவியாற் பகர்தல் காட்டித், திருநயன வைணவர்க்கு நேமிநாமத் திறந்தெரித்தாங் காதத்த னெனும்பேர் தாங்கி, யெரியிருப்புப் படியேறி யவர்கோள் வீட்டி யிலகுசைவ நாட்டியரு ளிறைதாள் போற்றி. (௨௯)

தேவசிகாமணிதேசிகர். (வேறு)

அவனியின்மும் மலர்க்கருள வவருருக்கொண் டருணையில்வந் தமர்ந்துமேனோர், புலியுருவென் றுள்கியிடர்ப் புகாவகைதன் சீர்ப்பெயரே புனைந்துதற்சேர், பலர்பெயர்முன் விகாரமுறப் பண்ணியவர் விகாரமெலாம் படுக்கும் வாய்மைச், சிவகுரவ சிகாமணியாய்த் திகழ்தேவ சிகாமணிதாள் சென்னி சேர்ப்பாம். (௩௦)

கடவுள்வாழ்த்து முற்றிற்று

ஆக திருவிருத்தம்-௩௪.

---

† பொறி-எழுத்து.

பாயிரம்.

அவையடக்கம்.

மாதொரு பாகத் தெந்தை வந்திசெய் நந்திக் கோத
மேதகு சனற்கு மார முனிக்கவன் விளம்ப வன்னோ
னோதுற வியாதற் கன்னோன் சூதனுக் கோது மூவா
றேதமில் புராணந் தம்முட் காந்தமிக் கிலங்கு மாதோ. (க)

அத்தகு புராணத் தீச சங்கிதை யதனு ளோங்கு
மெய்த்தகு திருத்த லத்தின் மேன்மையவ் வடநூ றன்னை
யித்தமிழ் நாட்டி னுள்ளார் யாவரு மெளிதி னோர்ந்து
புத்திமுத் திகள்பெற் றய்வான் றென்மொழிப் புணர்த்து கென்னு. (உ)

இறைவன்மெய் யன்பர் கூற விவர்சொலு மினைய மாற்ற
மறிவிலா வெனக்கீ தாற்ற லரிதெனு மெண்ண மாற்றிப்
பிறவிநோய் மருந்தீ தென்றே பேணுமா றுளத்தை யுந்தி
நிறைமகிழ் தரலா லன்ன நிலைமையே கடைப் பிடித்து. (ங)

அனையமாண் வடநூ றன்னி லறைதல விசேட மாதி
தனைநிகர் வழுதியாதி சந்திரன் கதையீ றாய
வினைதெறு கதையொன் பானுஞ் சருக்கமா விருத்த யாப்பி
னனிமிகு பெரியர் நோக்கி நகைமலர் முகத்த ராக. (ச)

இன்றமிழ்ப் புணர்த்தா நின்றே னித்தல மேன்மை தன்னைத்
தென்றமிழ் முனிவன் றானுஞ் செப்புத லரிதென் றோது
மென்றிம னறிவி லாத வேழையே னியம்ப வெண்ணி
நின்றதென் னறிவி லாமை வெளியிடு நெறியே யாமால். (ரு)

ஆயினும் புல்லு நீரு மருந்துமா னவற்றை மிக்க
தூயதீம் பால தாகச் சுரந்தளிப் பதுபோ லென்றன்
வாயசொற் பொருள்கண் முற்று மனக்கொடு வழுநீத் தான்றோர்
மேயசீ தளிநா தர்க்காங் கினியவா விளைப்ப மாதோ. (சு)

வேறு.

மறையுமளப் பரியபிரா னமர்ந்து வாழு மாண்புகொடெம் பெருமக்கண்மது ரவாக்கி, னிறையுநவ புரிமேன்மை யாது மோரா நீசனேன் சொலத்தொடங்க னிலைபி லாச்சிற், றுறவிபொன்று பற்றிடினுங் குலையு நாங்கூ ழுயர்சேடன் முடிப்புவிமுற் றேருதா னேன்று, பொறைபுரிந்து நிலைபெறுவான் றணிந்து சென்னி பொற்புறமேற் றாக்கியெழல் போலு மன்றே. (எ)

குன்றெதிர்கூப் பிடுமாபோ லோங்கு விந்தக் குன்றடக்கு தமிழ்மலயக் குன்
றக் கோமா, னன்றுரைத்த இன்றுரைத்த சூதன் வாக்கை யடியேனின்
றுரைத்தனனீ தமலன் காதை, யென்றிதரு குணநாடிக் குற்ற நாடி மிகை
நாடி மிக்கக்கொளு மேன்மை யோர்க, ணன்றிதெனக் கொள்வரன்றி நவையே
யாய்வார் நயக்கவிகளி யற்கவிக்கு நவில்வா ரன்றே. (அ)

இணைதவிரு மியற்றமிழ்நூற் புலவர் கற்பார்க் கெடுத்துக்காட் டிலக்கியங்க
ளியைபு தோன்றச், குணமருபா வினமன்றே குற்றம் யாவுங் குறித்துணரு
மிலக்கியமுங் கொளுத்தற் கிந்நூன், மணமுடைய தாகலிற் சொல்வாக்கி யா
ர்த்தம் வாக்கியைபு தொடையிசைகண் மற்று மெல்லா, மெணவரிய குற்ற
முடைத் தென்று தள்ளா தேன்றுகொள்வ ரெனுந்துணிவா லியற்றி னே
னால். (௯)

மாற்றமொன்று சொலச்சொலித்தம் மகவம் மாற்றம் வயங்காமை யுரைப்பம
கிழ் பிதாக்கண் மாணத், தேற்றரிமேலற் குணர்த்தியவன் றொண்டநாதன் றி
ருவால வாயமர்மெய் யப்பனெம்மா, னூற்றுபணி கொண்டடியென் முடியிற்
சூட்டு மாறுமுக நாவலர்கோ னவன்றாட் கன்பே, போற்றுவழி வந்தவிமற்
சரமெய்ச் சீலர் புந்திமகிழ் வுறுவரென் சொற் புன்மை நோக்கி. (௰)

வேறு

காண்டகு புத்தூர் வடசொன்மான் மியத்தைச் கவின்கொள்செந் தமிழ்மொ
ழி பெயர்த்துச், சேண்டவழ் மதிசேர் வேணியன் றேவ சிகாமணி சிற்சபைப்
புரியுந், தாண்டவ ராய சீதளி நாதன் சந்நிதி தனிலரங் கேற்றித், தேண்டரு
ம் பெருமை பூண்டனன் காரைத் திகழ்சொக்க லிங்கதே சிகனே.

பாயிர அவையடக்கம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௧௧.

திருநாட்டுச்சிறப்பு.

பொது.

திருக்தரு புரத்திற் சிவபுர மனுவிற் செப்புமைந் தக்கர நூலி
னுருத்தரு நிகமா கமமிய வுள்ளி னுமாபதி மதங்களிற் சைவ
மருத்தியீ சனுக்காந் துதிகளி னருட்பா வாம்பணி களிற்சரி யாதி
திருத்தியம் போலச் சிறந்தது பாண்டிக் கோரா சிங்கநன் னாடு. (௧)

எம்மைநீ யொப்பாய் கௌரியை யுலோபா முத்திரை யிழையு§மென் றீசன்
பொய்ம்மையின் மாற்ற முகமனென் றெனையோர் புகன்றிடா தாண்டுசெய்
செயலான், மெய்ம்மையே நாட்டு முனியைமேற் கொண்டக் கைலையே வி
ழையுமா மலய, நன்மலை யதனைத் தன்னிடைக் கொண்டெம் நாட்டினுஞ்
சிறந்ததிந் நாடு. (௨)

இறையிலக் கணஞ்சொ லியைபினா லுவம னெய்தினா நால்வர்வாக் கியஞ்செய்
நிறைபலற் புதத்தா லினிமையென் பொருளே நிலவுறீஇ யோகரு டிப்பே
ரறைதலாற் கொங்கு மதியுல கன்பி னைந்திணை திலையடி யார்முன்
மறையருள் வாக்கி தலின்வட சொலினா மாண்டமிழ் வளர்வதிந் நாடு. (௩)

எரிமணி மகுட பங்கமுற் றேகி யெழிலியை யருள்கென விரந்தாங்
கரிபெறீஇ யாஞ்ஞை வழி மழை பொழியு மாடல்சா லரசினர் முனிவு
பரிவகலாத புரேசர்தாம் பாண்டிப் பதிகமுன் னும்பல பாவுள்
வரிசையின் விதந்து புகழ்ந்துசொல் வழுதி மரபினர் புரப்பதிந் நாடு. (௪)

குருக்களெவ் வெவர்க ளவர்க்கெலா மூல குரவனா யமர்ந்த ருளால
விருக்கநன் னிழலோன் சீடனாய்ப் பணிவு மேன்மையும் புகன்றருட் பாக்க
டிருக்காஞ் சிவப்ப வெழுதிய மொழிந்த சின்மணி வாசகப் பெருமான்
பெருக்கருணீதி யமைச்சிய னடாத்தப் பெற்றதிக் கொற்றநன் னாடு. (௫)

அரனமர் தலங்கள் பற்பல வுளவெத் தேயமு மாயினு மிதன்பின்
விரிவுற வமைத்த புதியன வவைகள் வின்மைசா றொன்மைய திதுவென்
பரிசுணர் சான்றோர்ப் பாண்டிநன் னாடே பழம்பதி யாகவென் றெமையாள்
வரதநன் மணிவாக் கடிகண்முன் பரசு மகிமைமிக் குடையதிந் நாடு. (௬)

கயிலையிற் பரம குரவன்வாய் மலர்ந்த கட்டளை மறந்தமை கருதாப்
பயிலுறப் புகன்ற சாபமேற் கொடுபா டாணத்தின் படிவுறு மியக்க
வயில்விழி மடவா ரறுவரும் யாண்டு மகற்றருந் தீங்கெளி தகன்று
நயனுறு மட்ட சித்தியெம் பெருமா னல்கிடப் பெற்றதிந் நாடு. (௭)

கூடலா லவாய் பூவணஞ் சுழிய றிருத்தலங் கானைகுற் றால
மேடக மாப்ப னூரிரா மேசம் பராசலம் பிரான்மலை சாலி
வாடியே வாத புரிபுன வாயின் மங்கையே பெருந்துறை பாவஞ்
சாடுமூர் முதலாத் திருவருட் பாக்கொ டலம்பல நிறைந்ததிந் நாடு. (௮)

குலத்தினிற் பொறையிற் றிருப்பணிச் செயலிற் குணத்தினின் மானத்திற்
கல்வி, வலத்தின்மெய் வாக்கி லெவற்றினுஞ் சிறந்த வணிகர்கள் சென்னி
நா டிகந்து, நிலத்தினி லுயர்ந்த தானரு ணிறைந்த நீதிசேர் கௌரியர்புரக்
கு, நலத்தினி லுயர்ந்த தெனக்குடி கொண்டு நயந்துவாழ் வுறுவதிந் நாடு. ()

§ என்ற வென்னும்-பெயரெச்சத்தகரந் தொக்குநின்றது.

இளைப்பகற் றகரங் கணேசமா நகர மிரணிய புரம்வை ரவப்பேர்
வளப்பதி நேம மதுகமா புரம்வே லவன்புரி குரைபொன் மாற்றா
ரளப்பிலிவ் வொன்பான் சிவாலயங் களுமவ் வணிகரா கமவழிப் பூசை
கிளப்பரு நிதிகொண் டங்கமூன் றுஞற்றக் கிளர்வுறப் பெற்றதிந் நாடு. (க0)

வேறு.

மன்றிறைவன் திருவருள்சா ரந்தணரு ளொருவர் மற்றவனைப் பெட்டகத்
துள் வைத்த†வுமா பதியார், குன்றைமுனி பதவணக்க மேயமல மோக்கங்
கொடுப்பதெனை வழுத்துபுக ரிதஞ்சொலருண் மொழித்தே, வன்றரு§ நார்
மன்னுசிந்தை நற்றுறைப்பன் மாந்த ரவர்போற்றும் பார்மனுதொன் மைப்
புகழ்பூண் டதுசேர்த், தென்றமிழ்நா டென்பதுமுற் றப்பலிடை விதவாச்
செப்பிநிக ழொப்பனைசெய் திப்பியநா டதால். (கக)

வேறு

இன்ன போல்வன பற்பல வற்புதத் தியற்கை
யென்ன நாட்டிடை யில்லன வுள்ளன வீசன்
றன்ன லீலைகண் மேன்மேலே யாகவே சார்ந்து
மன்னு கின்றன விதற்கிணை யாங்கனம் வகுப்பாம். (கஉ)

தலைமை பெற்றுள நால்வகைச் சாதிக டத்த
நிலையி னீங்கலா நியமநல் லொழுக்கொடு நிலாவி
யலகில் பன்னிதி களுநிறை யகரங்க ளவையும்
வலனை யாவுருப் படுத்தவ ணுலவிறை மயங்கும். (கங)

எங்கு மாலய மெங்கணு மகோற்சவத் திட்ட
மெங்கு மாமறை யெங்கணும் பிராவிட வேத
மெங்கு மாமக மெங்கணு மெய்கண்ட நூல்க
ளெங்கும் வேள்விக ளெங்கணு மவர்செலு மிரதம். (கச)

எங்கு மாநதி யெங்கணு மெண்டைவா ழகல
மெங்கும் வாவிக ளெங்கணுஞ் சூழ்மலர்ச் சோலை
யெங்கு மன்றல்க ளெங்கணு மியமியம் பியற்சி
ரெங்கு மாதவ ரெங்கணு மடாலயச் செறிவு. (கரு)

எங்கு மோதன சாலைக ளெங்குநீர்ப் பந்த
ரெங்கு நீதியன் றெங்கணு நூல்பயில் கழக
மெங்கு நீர்வய லெங்கணு நிறைபசும் பயிர்க
ளெங்கு நீள்விளை வெங்குநெற் போர்களின் பிறங்கல். (கசு)

† பெட்டு அகத்துள்வைத்தனென்பதுமொன்று.
§ நார்மன்னு சிந்தைப்பல நற்றுறைமாந்தர் போற்றும், பார்மன்னு தொன்மைப்புகழ் பூண்டது பாண்டிநாடு என்பது பெரிய புராணம்.

வேறு.

தண்டலை கற்ப தாருத் தண்டலை கவிழப் போயுந்
தண்டலை யுறும லண்டத் தண்டலைச் சார்ந்து நிற்குங்
கொண்டலைத் தீப தாருக் கொண்டலை யெல்லை யாக்கும்
வண்டலை மலர்சேர் யாறு வண்டலை யொதுக்கி யேகும். (கஎ)

ஓதனக் குவையி னோங்கு முவளக மடால யங்கள்
கேதனக் காடு சூழு மாடங்கள் கெழுவு மின்பங்
கோதனத் தங்கண் மேவும் புறவினன் னெறியிற் கூறுஞ்
சாதனத் தியையும் யோகர் முயல்செயல் சாலை யங்கள். (கஅ)

மாதவர் கார்கோ ணுப்பண் மாதவப் போழ்ந்த சீய
மாதவழ் கடாத்த முக்கண் மாதவ னோப மான †
மாதவ னாழி தான்கொண் மாதவப் பாகம் வாம
மாதவற் பூசிப் பார்கண் மா§தவத் துடக மெல்லாம். (ககூ)

சாற்றிடிற் பொருளி லாரைத் தனதனிற் குறைந்தா ரின்றே
லேற்றசு பன்னி மாரை யிகந்திருப் பவரு மின்றாற்
போற்றுமித் தன்மை யாலே புரவலர் முனிவர் பான்மை
தேற்றிவே ளாண்மை யாரு மாற்றுவர் திகழு மாந்தர். (உய)

மழைவளம். (வேறு.)

வேத வாகமத் துணிபொருள் பசுபதி விமலன்
‡காத னாயகி யாகசெய் கனங்கொளிந் நாட்டி
னோது மேதகு பொதுச்சிறப் பெதைத்தெரிந் துரைத்தாஞ்
சீதமாமுகின் மழைவளஞ் சிற்சில மொழிவாம். (உக)

பாலின் வேலைமுன் மதித்திட மதித்திடப் படர்வெண்
மாலின் மாலினம் வாரிபோய் வாரிமிக் கருந்தி
யாலின் மெய்கறுத் தகன்றவம் மாலென வகன்று
சூலி யாலவன் சொன்னிற மின்னிவிண் சூழ்ந்த. (உஉ)

எம்மி னங்கணன் மாடமாய் முற்பக லெழுந்து
தம்மு ளொன்றினின் றோங்குமித் தண்ணடை சார்தும்
வம்மெ னாவிளித் திடலின்வாய் விட்டுவல் விரைவ
வெம்மை யாங்கணுந் தீர்த்தருள் வெம்மையின் சாலம். (உங)

---

† தவனோபமான ஆழியென்றியையும் தவனன்-சூரியன்.
§ தவம்-காடு. ‡ காதல்-மகன்.

ஈசர் தம்முடி யெம்மின நான்குமுன் னிகப்ப
மேசில் கூட மா யியைந்தன வென்பவிம் மலைமே
லாசி லம்முடி வதிருவா னேற்பமென் றடுத்து
மூசு தன்மையி னேற்றுவெற் படைந்த சீமூதம். (உச)

மூல மாகிய பகுதியின் முக்குணத் தொகையின்
மேல வானின்முன் வெண்மையின் கருமையின் னிலைமை
சால வேற்றுவா னேற்றுவான் றடத்தினிற் படிந்த
நீல வாடைபூ மகண்முலைக் கொண்டுறு நிலைபோல். (உரு)

தனது வெம்பழி பாற்றுசுந் தாப்பெறுந் தகையா
னினிய நாட்டினைத் தெறப்படர் மறப்பசு வினைக்காய்
புனித நந்திவெற் பென்றரி போற்றியாட் டுதல்போற்
றனித வானமக் கிரியினிற் றரைகான் றனவால். (உசா)

ஏக மாயெழுந் துவரிநீ ரொடெலாந் திரவி
மீக விந்துவித் தூத்துவாய்த் தொருங்குநீ டிரித்த
மேக மாணிலை மீளையினை வெற்பமர் விபினை
மேக லந்துமோற் பான்றனைத் [illegible] யும். (உஎ)

வெற்பி டங்களிற் பொழிந்தன வெண்ணனைப் பரும்புங்
கற்பி டங்களிற் பொழிந்தன கனியளம் பிணருப்
பொற்பி டங்களிற் பொழிந்தன புனலர சமரு
மற்பி டங்களிற் பொழிந்தன வமைவிலார் கொடைபோல். (உஅ)

யாரும் யாவுமின் குளிர்ச்சியொத் துறசெயு மெதிரி
யாரு மன்றலி னருட்கொடை தெரியவாங் கெவர்க்கு
மோரும் வாசக தீக்கையென் காதல்யாக் குதவி
நேரி லின்பருள் கௌணியர் குலமணி நிகரும். (உகூ)

விரியும் வெண்டுகில் போர்த்தெனக் குளிர்க்குவெள் ளருவி
பரவும் வெற்பெலா மன்னது படர்ந்திழி யசைவு
மரவ முங்குளிர் பின்னரு மாற்றொறு தூடற்கண்
வருந டுக்கமு மதிற்படு மொலியென வயங்கும். (௩0)

சோதி மென்கொடி படர்தரத் தூயவெண் பிறைதான்
மீதி லங்க வம் பணிபல சூழ்தர விளங்கும்
பூத ரந்தனி னின்றிழி யருவியப் புராரி
சீதமாமுடி நின்றிழி கங்கையிற் றிகழும். (௩க)

வேறு

ஏற்றுவெற் பதனி னருவியாய் நதியா யிருநிலத் தொருகுலப் புனலே
பாற்றெரு குகுளங்கா லோடைமுற் பலவுட் பரம்பியவ் வப்பெயர்த் தாகி
நாற்றிசை பரவச் செலும்ப ருயிர்க ணலமுறப் பலவுரு நயக்குங்
காற்றினி யருளாஞ் சத்தியை யடுத்துக் கருதுபல் பெயர்கொளல் கடுப்ப ()

இடபநன் மலையின் றெழுகுமி னீத்த மிணையில்சீர் நவபுரித் தென்பாற்
படநடந் திலக மணிமுத்த நதிப்போ பகாதரப் படர்ந்திட வடபால்
விடுசிலை பெனும்போ நதியுமொன் றதன்பால் விரவிவந் திரண்டுமொன் றாகி
நடவுமாற் சிவமுஞ் சத்தியு மொன்றாய நலந்தரக் கலந்துறு நயம்போல் ()

பிரசன வனன மலர்முகந் தலையும் பிறைதெனு வருதலாற் பாரந்
தருமிகு நரமைந் தறனிறை பாணி தாங்கலாற் கயமுகன் குகன்மா
திரமுறு சீமா மையின்மரு வுறலாற் றிருக்கைகா மயிலையேந் துதலால்
வாரணம ரமலை யமலையின் வரலான் மலையுமந் நதிப்பிர வாகம் (நச)

அம்பிகை யிடத்தா னம்மல கலைவா வலைதரு மேனத்தின் கோட்டால்
வம்புறு முலைமுன் னுழுதரு மாரபான் மலையுமான் மணிமிடற் றவனை
யும்பரங் கரக முறப்புர வுதவா லோங்கிமா நலந்தரு மாபாற்
கம்பலை நந்சா காத்திறு லுமையைக் கடுக்குவ வடுக்கலங் கலுழி. ()

மாறரு நீரான் மலரினுந் தனத்தால வழங்குபா ரதிகொளு வாயா
லேறில பேரா மதத்தினில வரலா லிரணிய கருப்பூனை யிழையும
பாறுகைந் திடலாற் பாலன முறலாற் பரவுபாற் றிருலமா றிறத்தா
ன்றுத ன முவம யுமவா தரலா னரணன பொலுமந் நதியே. (நசு)

மேதகார் கலியின் முகந்துமெய தருமில விரைந்தி புவியெலாம விரிந்து
தாகமா சிடமவே றிலாமையா லொடிச சலதிசேர்ந் தொன்றிய தாங்கே
யேகமா யெங்கு நிறைந்துமெய திரண்டாங் கின்னுயிர்க் கருளவுவ வவற்றின்
றேகமே தான்கொண டுறினுநம் பரன்றன திறத்தினவே றுருந்தமர் செய
[லின்.

நலதரு தழலாய் முரம்பையே மருவி நணபகற் காலையாம் பாலை
சிலைமுகில பெருநீர் பொழிதலு முழுதுஞ் சிதைந்தது தீமையே யுருவாய்
மலிபுகழ் நிறையிந் நாட்டின்முன் னொருகான் மாசுறப் படரமண் கரழிக்
குலமணி திருவாக கமுதமா மழையாற் குலைந்தொருங் கழிந்ததே போல.()

கோதைய ருரைக்கொவ் வாதுடைந் தனபோற் குயில்கள்வா யடைப்பன்குல
ளைப், போதுகண் காட்டத் தள்விக ண்ணைக்கப்ப புன்மயி லினமுனம்பொரு
ந்துங், கீதமொழிந்து காதரந்நிறைந்து கிளிமிக வெகுவுறக் காணு, வீதரு ம
வர்போற் சம்மியா கங்க ளிலங்குபொன் சொரிவனு யாண்டும். (நக)

குறிஞ்சி.

வென்றிமால் விடையோன் வீற்றிருப்பதூஉ மேவுதன் றூய்பிறந் தகமு,மன்
றலார் கோதை வள்ளிநாயகியை மணந்ததூஉங் கனந்தரு வரைக, ளென்றவா
ஞ் சையிற்றே வெயினர்சீர் விழாக்கொண் டேத்தும கோத்திரக் கிறையாய்க்,
குன்றுதோ றாடல் புரிந்தெழமை யானுங் குமரவே ளமர்தருங் குறிஞ்சி.

அருவியுண் மூழ்கி நீறணிந் தெண மற் றதுபர வுறப்பெறீஇ யளியாம்
வான்விழி மணிபூண் டசைவுற றோற்கும் வாய்மையான் வறப்பினும் வளமே
தருவரை யினங்கண் முருகருள் சார்ந்து சதமகற் பொரவெழுந் தனபோன்
மறு[illegible] வானிற் காத்தமர்க் கழைக்கு மாறென வரையசைந் தொலிக்கும்.

இறவுள ராண்டை வனங்குறித் தார மெரிமணி யாதிதொட் டெறிதன்
மறையுப நிடத மியாவுமெண் ணில்லா வாய்மையாற் பதியிலக் கணங்க[ளும்
னறைபொருள் சிவனே யெனக்குறித் தென்னெஞ் சகன்றிடா நாவர சாற்
விறலுழ வாரத் திருப்பணி யதனை விழைதர நினைப்பிக்கு மாங்கே. (௪௨)

ஆரநீள் காண்மே லாம்பல்வெண் மருப்பார்ந் தமைதரு மிதண மெயினர்
நாரியர் குரலார் பலாசனந் ‡ தூரப்ப நண்ணியா யோவென விசைத்தாங்
கேரிய லரித மாதனந் தாள மெறியவு மினத்திசை குவித்துச்
சார்சிறை யினங்க ளுங்கனி யமலை தாமென வணிமையிற் சார்வ. (௪௩)

வெள்ளிடை வெயிலிற் றண்ணிழல் காணு வெகுண்டுபாய்ந் தவனியின் வெண்
டுள்ளுறக் கீண்டு சென்றுசென் றிபமாங் குயர்கனி நீழல்புக் குரங்கு, [கோ
மள்ளிருண் மலர்தான் வேறுகண் டளவி னப்பகை தெறும்வகை யாற்றித்
தெள்ளுநன் னெறியிற் சென்றர னடிக்கீழ்ச் சிவானந்த மடுக்குநர் செயலின்.

பெருவலி மறவர்கயமுனிக் குலங்கள் பிணைத்துவிட் டேனலின் பெரும்போர்
சரிவுறப் பாய்பி யவற்றினை லாகு தணைத்தியத் தானியங் கவர்வா
ரருமணி யிடற்றேன் மாயையைப் புணர்த்தி யாருயி ரிடைபுண ரழுக்காங்
கருமலமகற்றித் தூய்மைசெய் தவற்றைக் கவர்ந்தடி யிருத்துதல் கடுப்ப. ()

அருவரை மிசைக்கீ ழிழிவது மருவி யாங்குமே லெழுவது மருவி
குரவரி குறியாய் மலர்வதும் வேங்கை குறவர்க ளடுப்பதும் வேங்கை
தெரிவைய ருவப்ப மலர்வது மசோகஞ் சேர்ந்தவர் சிந்தையு மசோகங்
கருமுகி னிகருங் குறத்திய ரளகங் கார்முகில் பொழிவது மளகம். (௪௬)

மலைவருங் குறவர் மாற்றமுங் கடிய மாதர்க ளோதியுங் கடிய
கொலைவரு நிலைய விழிகளுங் கொடிய கோப்பமை நாப்பணுங் கொடிய
மலர்தழை நாக நிதம்பமு நாகம் வகையணி நிலமு நாக
நலநிறையினிய மொழிகளுங் கிளிக ணயமுறு புயமும்வண் கிளிகள். (௪௭)

---

‡. பலாசனம்-கிளி.

முல்லை.

இனிதுறப் படைத்தல் புறந்தர லழித்த லென்றிவற் றிடைத்தொழில்செய லா,னனிமகிழ்ந் ததனை யுயிர்க்கெலாம் பொதுவாய் நவிற்றலா லிடையனாற் பொதுவ, னெனவுரை தருமா லப்பெய ருடையா ரிந்நிலத் தவரென வெண்ணு, முனிவற வனைய நிலக்கிறை யாகி முதமிகப் பயில்வது முல்லை.

வானுறு மண்டர் தாமொரு பாலை மதித்தமு தளித்திட வாழ்வார்
கானுறு மண்டர் மகளிர்தாம் பாலைக் கடைந்திழு தனோநவ நீதந்
தானுணத் தருவா ரன்றியும் பிருந்தை தனைமணந் துவத்தலுந் தருமா
லானபா னரலை யோபுவி வனமோ வாங்கவற் கார்வமிக் களிக்கும். (௪௯)

காசையாங் கொருபாற் செருந்திமற் றொருபாற் கடிமலர் செறிந்துநின் றிட
தேசமர் பலாச மிடைமதி முடிமேற் சேர்வுறத் திகழ்கரு முசுவொன் [ப்பூந்
றூசறு நிழற்கீ ழுறங்குற வமர்த லரியயற் கிடையனல் வெற்புங்
காசறு மிரண்டுந் தருவிடு மேனத் தெகினத்தின் காட்சியுங் காட்டும். (௫௦)

மறைத்தகார் முகிலைத் தாரத்தலுஞ் சூறை வயங்குமோர் சோதியந் தாரு
மறைத்தகா ரெழினி வாங்கலுந் தனியின் வயங்கு மாதீபமே மானு
மறைத்தனீத் தொளியை வயக்குமச் சூறை மாணவ ராணவ மாய [வயங்கும்.
மறைத்தனீத் தவர்மெய்ப் போதமன் விளக்கு மாண்மையோ ரென்னவும்

பொதுவனோர் புதல்வன் வங்கிய மிசைத்தோர் புடையுறப் புதுமதி சிகை
மேற்,பதிவுறப் புதுப்பூந் தளவமேற் படர்ந்து பாதியா வரிப்பவோர்சிகிமேற்
கதுவுற வமர்பூங் கடுக்கையிற் றொருவாக் கற்றைவே ணியனுமை யோடும்
விதிதவா றாயர் குழலிசை கேட்டு விடையிவர்ந் தணியுறல் விழையும். (௫௨)

பன்னிற வேனல் சாமையெள் ளிறுங்கு பகருநீன் மாடமுற் காதி
மன்னுதா னியங்கள் பலநவ மணியின் வரையின மெனத்திகழ் தருமிந்
நன்னில மாக்க ளொன்றுமீ தியங்கி ரவிமுதற் கோள்களுக் கிரங்கி
யன்னவைக் குரிய மணிகளி னிளைப்பாற் றுதன மமைத்தன ரென்ன. ()

வேறு.

ஆய்ச்சியர் குழலங் காசை யவரிடை யாயர்க் காசை
பூச்செறி கடுக்கை யாசைப் புதுநிறம் விரியு மாசை
காய்ச்சுபால் கடைதந் தேங்குங் கலிதிசை யெட்டுந் தேங்குந்
தூச்செறி தளவு நாறுந் தூரெலாங் கீர நாறும். (௫௪)

முலைவரு குடத்தி னார முலைவரு குடத்தி மார்தம்
பலினிரை தளவை நேரும் பாந்துகா தளவை நேரு
மலர்விழி களவை யேயு மாண்குழல் களவை யேயுஞ்
சொலுநடை பிடியை யாருந் துவளிடை பிடியை யாரும். (௫௫)

மருதம். (வேறு)

மகவினைப் புரிந்தாங் கவியெம்மக் குரவு மன்றயல் லாதியெவ் வுயிர்க்குந்
தகுமுணவளித்தச் சிலைநிலையுறுத்துந் தகைத்தெனவமர்க டலைவன்
மிகுவளம் பொலிய மழைவளம் புரிந்து மேவியார் பொலங்கும் வீழ்ந்து
வகையுற வணங்க நனியுள மகிழ்ந்து மன்னிவீற் றிருப்பது மருதம். (௫௯)

அணிவளைப் பதுமங் கதுபக முருகலர்ம்பைப் பிளைப்பவ ரணிக [ம்
டிணியொளி சிந்தா மணிமுகற் பொருளாற் சிவணிறு முயவணைப்பைச் சிறக்கு
பணிலமென் பழனப் பயிரிறைச் யார்மிட பச்செனப் பாசகுசீ தளமாய்க
கணியையம் புணர்ச்சிஞ் சீரிதென் றூடல்க கண்ணன்னயாழ் தருந்தகை மருதம்.

மேதியுக் குழகக் கேடிசெலும் வாளை விண்செலு மவாவகலி மிடற்றின்
மோதமுப் புடைக்காய் வீழ்த்திய வாவி முழுவது மறைத்தமத் தெங்கு
போதமிக் குடையர் தமக்கிடர் சிறியர் புரியினு மவாக்கிடர் புரியா
தேதமற் றவர்பின் செயாவகை தடையாங் கியற்றுறு மியற்கையே போல.

அளியினங் குழுறு மொளிபசெங் கமல மலர்மைந் தொருப்பல வலர்ந்து
தெளியத்தண் கமல மேவொளிரா காட்சிசெலத் தாா்களமாகின்
றுளமிகு மன்பியோர் ருத்திரமபுகழுற வுருத்திர பசுபதிப் பெயர்வாய்க் [கும்.
தொளிரு மெய்யன்பர் பல்லுரு வெடுத்தாங் குற்றனர் கொல்லெனவோங்

கண்ணுறூர் முன்ன ரிலாங்கலி கமுகைக் கமுகெனுர் மற்றது காணு,நண்ண
லங் கரும்பைக் கரும்பெனுர் காணு ரதனைநெல் சாலியென் றறையா,ரெண்
ணுபின் னையதை முன்னதா மகிழ்வ ரெய்திற்றே பெரிதெனு மவர்போ
லன்னுபல் சமயத் ததுவது பெரிதா நயக்குநறு மயலவர் போல. (௬0)

கழைமணி நிலங்கோய் கைக்களிற் றுலவைக கதிரமணி மலையடு வயிரத்
தழைமணி நிலங்கிய் களிற்றுவென் மருப்புத் தருமணி மாசுணங் கான்ற
விழைமணி முகலை பலமணி வரன்றி வேங்கைசுக தகருமுன் காய்த்து
மழைபடு சினைமேற் றெருகளவாரிக் கொண்டு வருநிறை மணிமுத்த நதியே.

மலைபடு நறவு முலைபடு சீரம வண்டயி ரியூவன் புனக
குலைபடு கழையி ரதனை வாரிக் கொண்டிரைந் துயரியுட் புகுத
லலைபடு மணிமுத் தாறுதான் கடல்க ளாகுமேற் சென்றுவர்க் கடலி
னிலைபடு முலகத் தொழிலாடைய வியாதுமது சேர்கொடை புரிகென விரைகரும்.

விடுசிலை யாறு மணிமுத்த நதியும் விரைந்திரு பான்மய புரிதா
னிடையுற நடந்து குணக்குறீஇ யொன்று யேகுதல் சிதளி யிறையைந்
தொடிசில காமி யிருவர்பா லுயிர்கள் சுகமுறத் தோன்றருட் டுருக்கே
நடவுமொன் றுகி யெண்பதல் லாது நமும்பிறி துறைப்புதொன் றிலையால்.

† ஆ-வண்ணியமென்னும்பொருட்டிய வடமொழி. [illegible]

திருநாட்டுச்சிறப்பு.

உரப்பிர வாகங் கானுபு மள்ள ருள்ளமிக் குவகையர் இணையி
னிரைப்பொடு வறுமைப் பகைமுடித் திடுகூழ்க் கிதந்தர மடைதிறந் தியக்க
வரைப்பறு கால்க ளிடைப்புகுந் தனைய வான்பயிர் வளர்க்குமந் நீத்தங்
கரப்பறு வழுதி படைக்குநீ ரளித்த கண்ணுதல் கமண்டலங்கடுக்கும். (௬௪)

அலப்படைபுயங்கொண்டளை முதற்பாடி யயின்றவ னயந்தமுன் னவன்போ
னலப்படு கரிற்போய்த் திருத்தலத் திறைசெய்கடனினைந்தனர்மடிப்பவர்போ
னிலப்பட வொருகா லூன்றுபு தூக்கி நின்றொ ருகாலுகத் திருபால்
வலப்பகட் டெருத்தி னமைத்தனர் பூட்டிவரம்புற வுழுவரான்மள்ளர். (௬௫)

வேறு.

அலநதிதேய் வுறக்களம ராழமுற வுழுவாரவ் வகிதமேற்று, நிலவூரியபொ
றையெனுங்கா ரணப்பேர்தா னிடுகுறிபோ னிகழ வாய்ந்த, நலமதனுக்கிசை
யாகனி பலன்றருமக கழனிகளி னயமுறுங் கெண்ணிப், புலனுறப்பின்னிதஞ்
செய்வார் போல்விரைந்து பரம்புகைத் தொப் பமைசெய் வாரால். (௬௬)

வால்வளைகள் சால்வழிச்சென் றுழுவர்காக் குதவிபுரிவயல்க டோறுஞ்,சேல்
வளையங் கணத்தைநவ நீதமெனப் பதப்படுத்தித் தேவர் கோமான்,கால்வளை
யுழளத்தினராய்க் களமர்நன் றுட் கொண்டுவிதை கரத்திற் கொண்டு,கோல்
வளைக்கை யுழத்தியர்கள் குரவையிட வித்துவிழாக் குலவச் செய்வார். (௬௭)

தெளித்தவிதை கான்முளையைக் கான்முளையிற் கண்டுழவர் சிறப்ப வுள்ளங்
களித்தரிய தொழில்புரிய விதழ்விரிந்து வளர்ந்துமர கதத்தி றென்ற
வளத்தகடு பதித்ததெனப் பாவாற்றி நிரைத்ததென வம்ப லோர்கள்
கிளந்தொருநாட் டிங்களென வுழவர்களற் புதமதெனக் கிளர்வ சாலி. (௬௮)

உளமகிழ வொருவாம லூடனூட்டி வளர்த்தாலு மொருப தாண்டி
னலவுறிற் றம் புதல்வியரைத் தம்மனையி னகல்விக்கு மறிஞர் போல
வளருமிளஞ் சாலிகள்பேர்த் திடும்பருவ மருவுதலு மள்ளர் மாதர்
விளைவுறுநாற் றங்காலிற் கடிவினையைக் கடிவினையம் விளங்கச் செய்வார்.

தத்தமநற் பயனுதவா வேலையிடங் களில்வாளா சார்ந்து நின்ற
வுத்தமநற் கோள்கணற்பார் வையிலேறுமே காதசத்தி லூறுமா போலக்
கைத்தலத்திற் பறித்துநட வுழுஞ்சாலி வளர்ந்தொன்று கணக்கின் றாகும்
வித்தகர்கைத் தானமெனப் பின்றருபல் வளன்குறியால் விளங்கக் காட்டும்.

வயலுழுவர் பதம்பகரக் கடைசியர்கண் முதலவய வங்க ணேருஞ்
செயலெலவனும் முரங்காண்டு மெனத்திருகு சினஞ்சேக்கு சிந்தையார்போற்
பயமருவு நீலமுன்னு மருவலரைப் பாற்றியசெல் பரிசி னோராய்
வியல்வளைவென் றிடுமொலியின்மகமுழங்கு கழனியெங்கும்விரவினரால்.

உலகமொருங் கருடாதை யொளிர்குரவன் வேறியனென் றுயர்ச்சி பூண்ட
தலைவன்மலர்க் கட்குடியன் சாற்றுமவன் றுதையிடைச் சாதி யாசை [ன்ப
வலிகொடுசெய் செயல்பலவெம் மகபதிவெள் ளாம்பன்மிசை வரத்த னை
நலனிலதென் றெவறிகழ்வரென்பார்போன் றுறுகள்ளு ணயந்தாரன்றோர்.

களதனத்தை நிகர்வதியட் காண்டுமெனச் சினந்திருகிக் களமர் மாத, ரினவ
ளைக்கை யாற்சாய்த்தாங் கீர்ம்பிழிசார் குடஞ்சாய்த்திட் டிலங்கு வள்ளம், த
னையும்வசி யார்போழ்ந் தகையையினம் மதுவாக்கித் தங்கைக் கொண்டாங்
கனையமதுச் சிறுதுளிதொட் டயலெறிந்து வாய்மடுத்திட் டயில்பமன்றே.

போதுகெறு மொழிகேட்டோர் போதலெனல் வருதலுக்கும் பொருளென்
றோரு, மதுணர்வி றார்போல மொழிந்தார்பாற் புகுவர்மயன் முறிந்துதீசி,
மாதிரகின் றமைழுத்தார்பால் வரக்கருகி யவாசிநெடு வழிச்சென்றாங்கோ,ரோ
திமநேர் கண்டெனையின் டுறவினிக்கி பெண்கொலென வுரைசெய்வாரால்

தகாமினை முலைத்திமிர்வார் தாளவடங் குழற்சூழ்வார் தங்கை வாகுகி
முகுரமதன் புறநோக்கி முகந்தோன்று திறப்பணித்தா முந்திற் றெறகொல்
பகர்மினைக் கலவ்யெதிர் படர்குரவ் வாடியிற்றம் முகமுன் பாரா
நதுமதியென் றைதழி நயப்பர்முகந் தோன்றிலதென் னலிவு சோர்வார்.

தொல்லுணர்வற்றின்னனம்பல்சொல்விளம்பிச்சொல்விளம்பிதுய்த்தமள்ள
மெல்லியர் பற்பலசெயலும் விகற்பமுறக் களியாட்டின் மிக்கா ரேனு [ர்
மொல்லுவதீ தெனக்கலைவீட் டுறப்புக்கா ருணர்வடக்கி யோகக தத்தைக்
கொல்லுபுமற் றதைவளர்த்துச் சிவபோகம் விளைவிக்குங் குரவர் போல. ()

விளைவுபெற விதியுடைய வியன்பயிருக் கிடப்புரியான் விரவி விம்முங்
களைமுழுதாங் கட்டதனைக் களித்தெழுந்து பலன்றரச்செய் காட்சி யாங்கே
வளர்வுறுநல் விதிப்பசென மறைமுதனூல் புகல்சைவ மாண்பி னோங்கத்
தளர்விறிய வெணப்புனமதந் காடிரி றாடம் பெரியர்செய றன்னைக் காட்டும்

கடைசியர்கா லொப்புணரா வெதண்டனபோ லுழக்கவழி கமல மாதி
மிடைமலர்க டமைக்கரத்தின் வீட்டுதல்கண் ணுதலோன்முன் விளம்பி
யாங்குப், படைகரத்திற் பரித்துலவிப் பாரதமாப் படைஞர்தமைப் படுத்தப்
பார்த்த, னடுசிலைகொண் டனையருட லழிதாக்கொன் றங்குவக்கு மமைதி
போலும். (எஅ)

கடைசியர்கண் மலருமிரு கமலமுதற் காட்டவிரு கமல மன்ன
நடையினரு கடையவிரு நயக்கமலம் வயற்கமல மொன்றை வீட்டு
மடலபிம னொருவனுயி ரகற்றிடவொவ் வோர்செயலோ ரொருவ ராற்றித்
தொடைநிகழ்ப் புயவீரர் தொடர்ந்துபலர் தடிந்தவினைச் சூழ்ச்சி போல.

வலமிருவா ளவுணரிறை வாளவுருக் கண்டிரிந்த வானோர் போல
வலவனளை யுட்புகுவ வைந்துமொடுங் கினவாகி யாமை மாய்வ
குலவுமினவ ராலிரிவ கொழுங்கயலி னெழுங்கயலிற் குதிப்ப மாதர்
நலனிறைசானுவைமுனுறுப் பவைக்குடைந்தே யிரிவவென நயப்பமள்ளர்.

பிறந்தகத்திற் றணந்துசெலீஇ யணைந்தகத்தி லணைந்துமருஉம் பேதையாரிற்
சிறந்தநட வுறுகாலி தண்பறியா வன்றியெனத் தெண்ணீ ரொன்றும்
விறந்ததுணை யொருகணமு மொருவறமெய் மருவுறநன் மேனி காட்டிப்
புறந்தான்முற் றொழிலுறக்கொண் டறந்திகழுக் கருப்பமுறீஇப் பொலிவ மா
தோ. (அக)

கருப்பமுறீஇ வளர்சாலி வலாரிதரு வரப்பேற்றூற் கருக்கொள் காலும்
பொருப்பமுறழ் முலைஞெமுங்கப் புருடர்தமைப் புணரமகிழ் பூவை மார்
உருப்பமுற வாகிநிறை நலனொழிக வுருமையுட னுறுதலாக [போ
விருப்பமுறத் தழுமனகத் தடன்கலந்தே கருவீன்று விரிவ மன்னோ. (அஉ)

பூதிநிறை யரனுருவம் புரைதரவெண் ணிறமருவிப் பொருப்பன் மாது
பாதியுமால் பாதியுமாய் நிறைதருமப் பரனுருவிற் பசந்து பின்ன
ராதிபல னியலெழில்கூ ரரியதிரு மேனிநிற மதுபோற் சேந்து
பதிலகச் செறிந்தெழுந்து விளங்குறுதண் ணெற்கதிர்கள் விளைவ மாதோ.

இலகுபொரு ளணிபடைத்தே மெமக்கெதிரின் றெனவிறுமாந் திவறன்
மைக்கோர், திலகமென மருவுபுதுச் செல்வரெனத் தலைநிமிர்ந்து சிவன்ற
றாளைத், நலகமென வுணர்ந்தடங்கி யுயிரொனினுங் கொடைபெரி தென்று
றுதி வாய்ந்து, தலைவணங்கித் தாலுவக்குந் தகையரெனத் தலைவணக்கஞ்ச
ல்வ சாலி. (அ௪)

வேறு.

பிரிவினிற் கனலா வனலுமிழ் பிறையைப் பேதுற வங்கையிற் பிடித்த
பரிசெனக் குயங்கை கொடுகடை சியர்தம் பவளவாய் வள்ளைபா டுறநீள்
விரிகதி ரரிந்து பொருசமர் புரிந்து வெற்றிகொள் வீரர்வெங் களத்திற்
பரிமுக நிரையம் பொடுநிலங் கிடத்தும் பான்மையிற் றரைப்படுத் திடுவார்.

வேறு.

அரிபடுத்த வரிகடமை யாடவர்க ளரிவையர் களரிய வாரஞ், சொரிதரக்கொ
ண்டேகியிவை சூழ்ந்துபல வரைகளெனத் தொகவப் பூமி, வரைநிலங்கொ
லெனக்குவிப்ப மற்றவ்வா னிமிர்ந்துறலவ் வலாரி தங்கட், கருள்பலமுற்
றவர்க்குணர்த்திப் பெ றன்மரபென் றுழவரவ ணமைத்தல் காட்டும். (அசு)

மதிறைவற் கிவைபகையென் றிறும்புகளின் றலைதடிந்தாங் கினிதுமள்ளர்
மமுறுவவ் வரிதொகுபோர்க் கதிர்முடிக டமைநிலத்திற் கதுவச் சாய்ப்பா
மைவுறுமச் சிகரியுறு மம்புதங்க ளதனொடுங்கி யுடைந்து சூழ்ந்தாங்
மைதருமந் நெற்சூட்டி னிடைச்சூழக் கவரிபிணைத் தியக்கு வாரால். (அஎ)

உடலினுயிர் வேறுபடுத் திடலன்றும் மிறைதொழிலீ துருற்ற நீவிர், கடவி
ரென்றங் குரைத்திடல்போற் களமர்புகல் பாட்டினுளங்களித்தம் மேதி,நட
வுறுநெற் றட்டினைமுற் றழுக்கியவை யொழிந்ததற்பி னயர்தாங் கன்றோர்
படையொழியப் பலாலதிரை புடைந்தொதுக்கி நெற்றிறள்கள் பொருப்பிற்
சேர்ப்பார். (௮௮)

சேர்த்தங்கொங் குழிப்பதடி செயற்காலி னொதுக்கிமணித் திரள்கள் கூப்பி
ச், சீர்த்தகரு மூர்க்காணித் தெய்வதமற் றவர்க்குரிய திறத்தி னல்கி, யார்த்
தியுள மிகவளர்தவ் வளவையினி லாறினொன் றரசர்க் கீந்தாங், கோத்தி
னமைந்த சியசாலி யினைச்சகடத் தியக்குபுதம் மிடத்திற் சேர்ப்பார். (௮௯)

வேறு.

செறிக்கவை தம்முட் சிலமுத லோடு நிகழ்வுறச் சேர்த்தனர் பலதாங், குறி
த்திடு தெய்வம் விருந்தொக்கல் பிதிரர்கொளவெனவமைத்தனர் சிலவு, மறி
த்திடு விதைக்கென் றமைத்தனர் மேலும் வயங்குமத் தொழின்முயன் றிடு
வார், சிறத்தலை கருமமலந்தின்முக் கியமாங் கண்ணிய வினைச்செயற்
பொருட்டும். (௯0)

ஒண்கதி ருயர்போ ருறுமுகி லுழவ ரோதுசா தாரகமோ டெகளும், வண்கதி
வாலை மருவுக மடமென் வான்முதல் வயப்படை தாங்கித், தண்கழ னிகளாங்
தந்திரத் தலைவர் தம்மொடுந் தண்டலை வேந்த, னெண்கொள் போர்க் கோ
லத் தென்றுன்னின் றிடலா லெறுழ்க்கலி யெய்தலீண் டிலைபோல். (௯௧)

இரும்புவி யெவர்க்கு மிடர்புரி யிரவிக் கியல்பதி யெதிற்கைவில் வினமாங்
கரும்புகள் களமர் கருவியங் கரக்கொற் கணக்கில கண்டமாய்க் களத்தி
னரைந்துரு வழிந்து மனந்தர மனலா லடப்படு மடாதுசெய் தவர்பின்
பரிந்துளம் படாது படுவரென் பழமை பலித்தெனப் பாலையர் பகர்வார். ( )

செழுவிய கரும்பின் சாறடு தூமஞ் சேண்புகுந் தம்புதஞ் செறிய
வுழவர்நம் முடலுக்குறு நிசெய் தனரென் றுவகையி னன்றியோர்ந்துளார்போற்
பொழிவழும் மழைக் கொன்றுமாங் கபுத்தி யுருவ மாநவ புரியிற்
றழுவுசில் லறமும் பலபல னுடன்ன தருமெனல் காட்டிடுறுந் தகைபோல். ( )

நெய்தல்.

சுதரக் குறையு மேனைய பொருள்போ லெஞ்சுறு திருநில முழுதுஞ்
சீதளம் புரிவா னிறையவாய் மடுத்துஞ் சிறிதுந் தான் குறைவுறாச் சீர்த்தா
மாதரந் தருநம் மூர்திபற் பலசா ராழிசூழ் நிலைய தென்றமர்ந்து
நேதகு வருணன் புரந்திறை யாகி நிலையுறப் பெற்றது நெய்தல். (௯௪)

ஆங்குறை நுளையர் புன்னைநன் னிழலே லயவிரொளி மரகத விதானந்
தேங்குநித் திலம்பொன் றுவர்முத லவற்றாற் றிகழ்தரு சினகர மாகப்
பாங்குறு சுறவின் மருப்பவ ணிறுவிப் பரிந்துபல் இளையொடும் பயிற்று
மோங்குறு சிறப்பேற் றலையர சவர்க்கவ் வுலவைநின் றுன்னியாங் குதவும்.

பந்தவர் சேரங்கின் பாங்குசெல் லமலை படவினிற் கடல்புகுஞ் சும்மை
விரவுறு சாலம் வீசகம் பலைபன் மீன்கவர்ந் தீர்த்திடுந் துழனி
திருமிவந் தவைதண் கரைசொரி யரவந் தெரிவையர் கொடிகளோப் புறுசீர்
தரமென வுணங்கல் குவால்செயா குலத்தாற் சலதிபற் பலவெனத் தயங்கும்.

அலையெறி வளைதன் றலையுறத் துகிர்சென் றூங்கொரு பாங்கினிற்படரக்கும்
கலைமதி கிரணமுழுவதும் போர்ப்பக் கவினிருன் மற்றொரு பாலி
னிலவு புன் னைக மிந்துசே கரன்ற னேமியங் கைக்கொளு நிறையார்
தலைவியோர் பாலி னிலவிவாழ் வுறுமத் தவளநீற் றுருவமே தகையும்.(௯௭)

வரநதி பலசூழ் தாமிகு நாலை வாயுதித் தாயதின் மறித்தும், விரவுறு புனித
மருவலின் விதலைமிலைந்தனை னைமையிகழ் விமல, னாலையுற் றியானோற்
குவமினி யமல னமை முடிக் கொளுமென நயந்தாங், கரியவெண் டுகள்போ
ர்த் துரியகண் மழைகார்த் தமருமாங் கலர்ந்தமுண் டகங்கள். (௯௮)

அருமறை முதலா மெத்துறைப் பொருளு மொருதுறைத் திரட்டியாங் களி
க்குங், குரவர்தஞ் செயல்போ னலிரண் டெனுங்க குபங்களி னுறும்பொரு
ளவையும், விரிதரு மிடத்த கலத்தகத் தமைத்து விரைசெல விற்கொளு
விரிநீர், கரையினிற் றிகழ்நா வாய்களா லளிப்பக் களித்தினி துவப்பவக் க
ரையார். (௯௯)

குயின்மழை வளத்தின் விளைதரு முறுபைங் கூழெலா மம்மழை யிலையேற்
செயலற வாடு மினைதரு முணவெஞ் சேர்க்கைபெற் றேபயன் செயுமவ், வி
யல்பின வதனாற் றலைமைகொ ளுழ மினையென வெய்தொளு தென்றுப்
பெயல்வளம்வேண்டாதியலுமுப்போங்கல்பெருகுறக்குவிப்பாருமணர்.

பாலை.

தனக்கென நிலமொன் றுறப்பெறு தென்றுந் தங்குறு மாலைய தொன்றோர்
வுணற்கருந் தழற்றும் பாலையென் றொழித்த லொல்லுமோ வுண்மைதேர்பெ
ரியோர், மனக்குறு மேனுங் குற்றங்க ணீக்கி வருகுணங் கொண்டிடப் புறுக
வெனக்கழ றுவரா லத்தகு பாலை யிடைக்குணம் பலசிலவிசைப்பாம். (௧௦௧)

வாகைதான் பெறவேண்டு நர்களெவ வெவரும் வந்தனை தந்துதம் மனத்த
வாகைமேற் கொளவாங் கருளுமம் பணத்தி வாகையீ தால்வயக் குதலின்
வாகைபாற் சூழ வாங்கன முறையு மறவர்தங் குலம்புரிந் திறைஞ்சும்
வீரகையா லையத்தி னமர்ந்தினி திருந்து வாழ்வுறப் புறப்பதப் பாலை. (௧௦௨)

தனநிற வலைய வளிமுரன் மலர்க டாங்குபு கன்னிகா ரங்க
ளினமுற நிற்றல் களவொழுக் கத்தி னியன்றிடு தலைவரோ டெழில்சால்
வனமுலை மகளி ரணிகளை மறந்தும் வருவதில் வழியவர்க் கீது
மெனவிலை பகர்வோர் கொப்பணி யணியங் கோந்துபு நின்றிட லொய்யும்.()

செவிலியர் தாய ரிகுளையர் குழுவிற் றினம்பயில் செயனினைந் தொருகாற்
றவரொடு மாங்குத் தனிபுகு மடவார் தாம்வெருக் கொடுதியங் குறலிப்
புலியிடை யுறினும் போக்குது மனைய புன்கணென் றுன்னியோ குரவங்
கவிரித ழியர்பற் பலர்தமைத் தாங்கிக் கவினுறத் திகழுமக் கடத்தில்.(௧0௬)

அரியவா மலக மீந்துதம் பலங்க ளாங்குறு மவர்விடாய் பசிநோ
யிரியவாங் காங்கு ணியளித் திடவு மெய்தரு தமைப்பல தென்னைப்
பாளுகர் கபோத மவணிருந் தொலிசெய் பரிசினை யுணர்ந்திடார் பதிகர்
தெரிவையர் வயாவே தனையொலி யென்னுச் சென்றவட் காணுநர்திகைப்ப

திணைமயக்கம்.

கணிமல ருகுத்துப் பாடியின் மனைகள் கனகமா ளிகையெனக் காட்ட, வணி
மலர் செருந்தி செறித்தலெற் பெல்லா மாடக வரையென வூற்று, முனும்
வரைக் கிளையொன் றிறுத்துமென் பாற்போ யும்பலொன் றும்பலே மாறெ
ன், றணுகிநின் றேச்சத்துண்ணெனவலமீர்த்தாங்குறுங்களமரின்படைய.

கவரிதண் கழைவாய் மென்றுகொண் டேகிக் கணிநிழற் களிறெனை வுறங்குந்
துவரமற் றதன்வாய் வழிமது நுகர்ந்த சுரும்பின மெய்தற்பூஞ் சுரும்பிற்
குவளையிற் குறிஞ்சி பயிற்றுவ கிரையா லுலேந்ரு மாம்பலிற் பமரந்
திவள்சுனை மலர்சூழ் பிரமரம் பயிலச் செவ்வழி பயிற்றுவ செறிந்து (௧0௭)

கழைவெடித் தொளிய நிலத்தில முகுப்பக் கபோதகம் பரலென நுகர்வ
தழைதரு கோங்காங் கருவியா மகட்குத் தையல்கூர் காதணி தருவ
வுழைமறி மேதி செருந்தலி னுகைப்ப வொழுக்குபான் முலேப்புதல் வளர்ப்ப
தெழிகடன் மூழ்கி யுறுமவர் பாற்பொன் றேக்குவ மேக்குயர் செருந்தி. ()

பூதிசேர் மாலி னுருவெனப் பொடித்தூம் பூவைமேற் கைதைபுன் மேய்மான்
சீதம்வேட் டமரி தளிப்பரி யெனப்போந் திரள்கனி யுகுத்துவேம் பிதழிப்
பாதலத் திலிங்கம் பலவெனக் காட்டும் பைந்தட வாளைமீன் றுழை
மோதவா சினிமா வரம்பையி னிரத மூரிநீர்ப் புலவினை முருக்கும். (௧0௯)

திரையெறி தாளம் பூகத முகையிற் செறிதர வேற்றுமை தெரியார், புரை
தபக் கொழித்துச் சிற்றிலாங் கிழைப்பர் பொய்தலாற் றுழத்தியர் பொலிபூ
மருதவண் கிளைகள் குரவநன் மலர்மேன் மாதர்கைக் கிளையென வயங்கு,
மெருவைமீ னுகணெற் போருறீஇக் கழுக்குன் றிடைக்கழு கென்னுமா றி
லங்கும். (௧௧0)

எண்ணுபு குடத்திற் கயல்விழி யுடனுங் கேகிநெல் லியங்கனி வாங்கி, நண்
ணுமத் தொகையின் பரத்தியர் மாறி நல்குவா ரிருகயல் குடத்திற், கண்ணு
றூர் திகைப்பர் குராமலர் புன்னு கந்நிழ லுகுத்துறப் பாத, குண்ணயிர் து
மைமுன் போற்றனி யுருள்பல் லுருக்கொடுற் றனள்கொலென் றுவப்பு. ()

அக்குருவிற் படர்ந்த கறிக்கொடி யிதழி யணுகுற வதிற்றள வகிலிற்
புகுதா மதமாக் கன்னலை முறித்தப் பூங்கொடி மிசையிழுத் தேக
மிகுகய லூடு பாய்தர வலைசேர் வெள்வளை வீழ்ந்தவை யிறக்குந்
தகைமைகா ருகர்நெய் தொழில்புரீஇக் கலைகடறியின்வே ரூக்குத றகையும்

அரிபிர மாதி தேவரெண் ணிறந்தோ ரானிக ரகத்திய ஞதி
யிருடியர் நந்தி கணமுருத் திரர்க ளானைப்பல கோடிய ரிறைஞ்சும்
விரிதரு கையிலை யொருவிமுன் விமலை மேவுறு திருத்தல மென்னும்
புரிதனக் குயிரா யமைந்தவிந் நாட்டின் பொற்பெவர் புகலுதற் கெளிதே.

திருநாட்டுச்சிறப்பு.
முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-கக௫.

திருநகரச்சிறப்பு.

பொது.

வேதநெறி வியாதனுரை யீரொன் பானில் விடையவன் மெய்ப் புராணங்க ள் விளம்ப வற்றி, ஞேதுறுசீர்க் காந்தமதன் வகையு ளீச னுயர் பெயர்ச்சங் கிதைமேன்மை யுற்றவா போன், மேதினியிற் றமிழ்நாடு மதனிற் பாண்டி வியனாடு மன்னதிற்சீ தலமு மேலா, மேதகலத் திருநகரச் சிறப்பு முற்று மியம்புநர்யார் அறிதறிந்தாங் கிசைக்கின் றேனல். (க)

வேறு.

திருநகரச் சிறப்பெனநூல் செயுங்கவிஞர் முனந்திகழத் தீட்டு வாரத்
திருநகர்யா தெனவுணர்காற் சொற்பெய்தே யறிவுறுமச் செயல தாகுந்
திருநகர மெனுமதனைப் பொதுநீக்கித் தனதாக்கொ டிறத்த திந்தத்
திருநகர மெனிலிதனுக் கிணைநகர மெங்கேனுஞ் செப்ப லாமோ. (உ)

வேறு.

பல்கு மேனைய தலமுத லுலகெலாம் பரம்பிப்
புல்குறும் பொரு ளெவையுந்தன் பெயர்சிரம் புனைந்து
மல்கு மேன்மைபெற் றிலகுற மற்றவைக் கதனை
நல்கும் வாய்மைவண் மைத்திறத் ததுதிரு நகரம். (௩)

புல்னிற் காணுந ரெவர்க்குமா தாரமாய்ப் பொலிந்து
பலமிக் கீதலாற் சிகரங்கள் திகழ்பல பண்பால்
வலமுற் றெங்கணு மருவியின் சீர்நிகழ் மாண்பா
னலனிற் கூர்திருக் கைலைபோல் வதுதிரு நகரம். (௪)

எவர்க்கும் ஆதாரமாய், மாதாரமாய் எனவும், சிகரங்கள்-கோபுரங்கள், மலை யுச்சிகள் எனவும், இன் சீர்த்து எங்கணும் மருவி எனவும், அருவியின்சீர் எங்கணும் நிகழ் எனவுங் கொள்க. தாரம்-வெள்ளி. சீர்-ஒலி.

திருத்த குஞ்சுடர் வலமுறச் சூழ்தலாற் சிவனார்
காத்த வில்லென த்தரித்தலா னாடகக் கவின்கூர்
தாத்தி னூற்கன முறுதலாற் பொன்னிறை தரலால்
வரத்த மேருவை நிகர்வது வளத்திரு நகரம். (௫)

ஒளிவலியுறப்பாம்புதலால், சூரியசந்திரர்கள்வலமாகச்சூழுதலால், சிவனார் ஒளியுடைய இல்லாகவசித்தலால், கையின்கண்ணதாகியவில்லாகத்தரித்தலால், நாடகம்-ஆடகம். கனம்-பெருமை. மேகம்-பொன். இல்க்குமி-பொன். எனக்கொள்க.

நீடு பாண்மைய நேமியின் மேதலாய் நிகழ்பொன்
னாட ராதியர் மதித்துறு தம்பமாய் நயந்து
வாடி லின்புற வவர்க்கமு தந்தரு மரபாற்
பீடு சாலுமந் தாம்பொரும் பெருந்திரு நகரம். (௬)

பாண்மைய நேமி-தன்மையுள்ளபூமி. பாற்கடல்;மதித்துஉறுதம்பம்-கருதிவரும்புகலிடம், கடையப்பட்டுள்ளமத்து. அமுதந்தரும்-மிர்தமின்யைத்தரும், அமுதத்தைத்தரும்எனக்கொள்க.

வேதன் மாலரி யாதிய விபுதர்கள் விமலன்
பாத சேவையின் செவ்விபார்த் தடிக்கடி பணிந்து
வீதி சூழவும் புயம்வணம் விளங்குகற் பகப்போ
தாதி நாறுமா லெங்கணு மத்திரு நகரம். (௭)

வாடு றாதபொன் னரித்தொடை யாதிய வயங்கு
மாட கஞ்செறி விமானங்க ளாடல்வெண் களிறு
பீடு சான்றவெள் ளெகினம்புள் ளரசிலை பிரியா
நாடு மன்புறஞ் சூழ்வன பெருந்திரு நகரம். (௮)

வேத கோடணஞ் சிவாகம கோடண மதுசங்
கீத கோடண மிடறுதோ றுயோகஞ்சங் கியோயாழ்ச்
சீத கோடணந் திராவிட வேதமா தியவி ர
னைத கோடணை நயந்துமல் குறுந்திரு நகரம். (௯)

தலத்தின் மிக்கன தருமங்கள் பற்பல சான்ற
வலத்தின் மிக்கசெல் வத்தொகை யாவையு மலிந்த
பலத்தின் மிக்கவின் பத்திறம் பல்குவ பயில்வோர்
நலத்தின் மிக்கமோக் கம்பெறும் பெருந்திரு நகரம். (௧௦)

குன்றி ருஞ்சிறை குறைத்தவ னிறைத்தபொற் கோயிற்
சென்றி லாங்கலி தீஞ்சுவைச் செவ்விளநீர்தான்
றன்ற லைச்சுமந் தளிப்பன தாளினீர் மிக்கு
நன்றி யோர்ந்துகொ ணனிபலன் றருமென நயப்ப. (௧௧)

திரையன் மென்கொடி செறிதாத் திரையெறி வளைமேன்
மருவ வானிமிர் பூகத மருத்துணு வலது
தெரித ராவிமை யோருண வோதனத் திரளை
யரிய பாகடை யளித்திடல் போன்மென வமரும். (கஉ)

சூல டிப்பல விருங்கனி வேரிடைச் சுமந்து
ஞாலம் விள்ளுறக் காண்டலும் வலிமு . நயந்தாங்
கேல வந்துபார் கீண்டெடுத் தின்சுளை கவர்வ
சாலு மையிருற் புதையல்கண் டெடுப்பவர் தகைய. (கங)

தீய ரும்பியாங் கிளந்தளிர் செறுந்துள சூத
மீயி லங்குறு மாங்கனல் வெற்பென மிசைபோங்
தூய வெண்மதி நிழற்றுஞ்சு கவரிமுன் றுருவிப்
போய வன்னமு மேனமு மாமெனப் பொலியும். (கச)

வேறு.

மாரண கவிகைச் காம்பின் வண்குருத் தெழுந்து திங்கட்
சாரலின் றிலங்கு வாழைத் தண்கனி கவர்ந்து மந்தி
யாரகன் களிப்ப காதற் பிணையினுக் காசா னன்பர்
சீரிய கரத்தி னல்கு சிவலிங்க தான மான. (கரு)

களியளி முரலுங் கன்னல் கண்முத்த முதக்குந் தோற்றம்
வளைதனு வாய வனங்கன் மாட்டுறீஇ யுலகர் யார்க்கும்
தளரிடர் புரிந்த பாவஞ் சாடுகென் றமலற் போற்றி
யொளியதன் கண்ணீர் சிந்தி யொருங்குகோன் பியற்ற லொக்கும். ()

ஆடவர் மாதர் மாறி யாடுபொற் சுண்ண மாதி
யூடினர் கலன் களாதி யுஞற்றுசிற் றிலிற் குவித்த
பீடுறு மணிக ளாதி சிறாரொடும் பிணங்கி நல்லார்
வாடியோச் சணிக ளாதி மறுகெலாங் குப்பை யாமால். (கஎ)

மைந்தர்க ளுகைக்கு மாம்பல் வயப்பரி மதம்வி லாழி
சந்தத நீத்த மாகித் தயங்குன் னியமத் தோடிச்
சிந்திய குப்பை யாவு மரிக்கொடு செல்லு நாளுங்
கந்தர மின்றி யீண்டுங் கலந்தெதன் வெள்ள மென்ன (கஅ)

ஆழ்வன சுகோ ததிக்க ணங்குளா ருள்ள மேயாம்
போழ்வன தத்த மின்னார் நகில்களாற் புருடர் மார்பே
வீழ்வன பொழிலிற் செம்மன் மிதுசுவைக் கனிக ளாதி
தாழ்வன வகழி வாவி யோடைமா தடமுன் னுவ. (கக)

வாடுவ கதிற் கிளைத்த மின்னனார் மருங்கு லன்றேற்
றேடியா தலரைக் காணக் கவிகையோர் சிந்தை யாகு
மோடுவ நகரி னெல்லை யுறுபவர் பாவ சால
மாடுமஃ தன்றே லூரு மிரதயா னங்க ளாவ. (உ௦)

இன்மையென் றியம்பு மாற்ற மில்லறத் தன்மை யென்னப்
புன்மையா ராம மாட மாதியிற் புணரு மேகந்
துன்மதி சிகரி யிஞ்சித் துன்னுமிந் தென்ன வின்ன
சொன்மய விலா தியற்சொ லாகவே துணிவர் கேட்போர். (உக)

வஞ்சமென் றுரைப்பின் யாரு முதற்குறை மாற்ற மாக
நெஞ்சுறப் பவஞ்ச மென்னும் விதிதமே நிறுப்பர் கேட்போ
ரஞ்சமோ திமமே வேட்கை யருமக மியற்றல் கூற்றஞ்
செஞ்சொலே கோப மாலிந் திரப்பெயர் முன்கொள் செந்தாம். (உஉ)

மாதர்க ணல்கு ரூமு மாதரும் வாமந் தாமு
மீதுசெல் யோக ருள்ளு நோற்பவர்க் கருளமேவுஞ்
சீதளி நாதர் வாமஞ் சிவநிய மத்தார் செய்கை
வீதிகழ் தடியும் போற்று மிக்கவ ரம்பை யேயும். (உ௩)

கண்ணும்அல்குலும்-மிக்க அரத்தையும்சர்ப்பபடத்தையும்எயும். மாதர்அரம்பையெயும் மாதர்-அழகு. அரம்பை-தேவப்பெண். வாமம்- அரம்பையெயும். வாமம்-தொடை. யோகர்உள்ளம்-மிக்கவர்அம்பையெயும். அம்பு-பாணகதி. சீதளிநாதர் வாமம், மிக்கவர்போற்றும்அம்பையையெயும். எய்தல்-பொருந்தல். சிவநியமத்தார்செய்கை, மிக்கவரம்பையெயும். வீகிகழ்தடிவரப்புக்களையெயும். வீ-பூ. தடி-வயல்.

கவிதரு விடைய நீத்த முனிவர்காத் திரங்க ளுள்ளங்
கவிகையர் கரங்கண் மின்னார் கருத்தொடு முறுவல் காக்கள்
கவிகள்செய் கவிக ளோதுங் காமர்மா ணாக்கர் நெஞ்சங்
கவினுறு மிவையோ ரெட்டுங் கற்பனை யகாவி னேரும். (உ௪)

காத்திரம்-கற்பங்கள்நையஆவிநேரும். உள்ளம்-கற்பிதப்பொருள்களில்அவாஇன்மைநேரும். கொடைஞர்கரங்கள்-கற்பகங்களையுமயவாதவில்நேரும். கருத்து, கற்பைஅல்லாதஅவாவுடன்நேரும். முறுவல், கற்பு அனையவாய்வில்நேரும். காக்கள்-சல்பணையவாவிநேரும். கவிகள்-கற்பனையவாய் இனிமைநேரும். நெஞ்சம்கற்பனவற்றைநயந்துவில்நேரும்.

கம்பலை யுந்து மேல்லை கம்பலை யுந்து நீடு
மம்பலை கண்ணார் மைந்த ரம்பலை யகற்றி வாழ்வ
ரும்பலை யுருட்டி யாடு மும்பலை யினங்கைக் கொள்வார்
வம்பலை முலைக்கோ டாயர் வம்பலை யனைக்கும் வீதி. (உ௫)

கம்புகளை அலையால்உந்தும்எல்லைகளில்கம்பலையுள்நீடும். உம்-உந்தாயது கம்பலை-ஒலி. அம்பலை—பழிச்சொற்கள் உம்பல்இனம்-அழகியசேயினம். கோடாயர்—கைத்தாயர். தாயர்கொள்வாரென்க. வம்பல்—திசை.

சந்திர நிலாவு மாடஞ் சந்திர நிலாவும் போர்ப்பத்
தந்திர மறைசொல் பூத தந்திர நாத னோர்ந்து
வந்திர வசன்ற வெய்யார் வந்திர மாய வுள்ள
மந்திர மேவு நீற்றின் மந்திர மேனி மானும். (உசு)

சந்திரம் நிலாவும்—பொன்னாற் செய்யப்பெற்று விளங்கும். பூததந்திரன்—பூதசேனையன். ஓர்ந்து உவந்து எனப்பிரிக்குக. உள்ளமந்திரம்-உள்ளக்கோயில். நாதன்மேனி எனக்கூட்டுக.

செப்பரும் வளஞ்சா லின்ன திருநகர்ப் பொதுமை யாய
வொப்பரும் வளத்தின் மேன்மை யுற்றுணர்ந் தெவை யுரைத்தா
மிப்பெரு நகர்ப் புறத்து மிடையினு மகத்து மேய
வப்பெருஞ் சிறப்பி னுள்ளுஞ் சிற்சில வறைய லுற்றாம். (உஎ)

புறநகர்.

கானகத் துதிக்கை யாலுங் கந்தர நேர்த லாலுந்
தானமா மருவி யாலுஞ் சைலநேர் தான மாக்க
ளானவை முத்தி றத்த வளப்பில செறிந்து மல்கி
வானுய ரோளி பல்ல நகர்ப்புற மருவு மாதோ. (உஅ)

விண்டொடு புழைக்கை நீட்டிக் கற்பக விடப மாட்டிக்
கொண்டலை வளாரி னெச்சிக் குஞ்சர மழைபெய் விப்ப
மண்டுமப் பெயனீ ரன்ன மத்தமா மதப்பே ராற்றை
வண்டெழுந் தலற வோட்டி வாரியில் வீட்டு மன்றே. (உகூ)

ஆருயிர்க் கிதமே யாக வுவைக்குறு போக மூட்டிச்
சேர்புதன் வசம தாகச் செலுத்துறுந் திரோதை மானக்
கார்செறி வனம்வெற் பாற்றிற் களுல்கரி யீட்டிப் பாகர்
நேருண வூட்டி யாணை நெறிச்செல வியக்கு வாரால். (௩0)

கரிபதங் கறைகள் கோடு கைக்கொளு முலக்கை யன்ன
சொரிமணி வல்சி காலிற் றுயல்செவி சூர்ப்ப மாக
விரிபுகர் நிறந்த விட்டின் விரவுவார்ப் பொருவா வோளி
யரிவைய ருலக்கைப் பாட்டி னெற்குறுங் களம தாமால். (௩க)

பரிமுக நிரைகள் சாலிப் பழக்கதிர் நிரைக ளாகத்
தரையுறச் சொரிவி லாழித் தண்டுளி சாலி முத்தா
மருவநேர் நிறுவு மந்தி கைந்நிரை வரம்பிற் கன்னல்
பொருவுமந் துரைகள் சாலி விளைநிலம் போலு மன்றே. (௩உ)

சூழுறுந் தரங்க மாகக் கோடரத் தொகுதி பல்ல
வீழுறு பேண மாக விலாழிகூ[illegible]ங்க ளங்குக்
காழ்மரக் கலன்க ளாமீ காமர்கள் வலவ ராக
வாழிபற் பலவங் குற்றுங் கமருமந் துறைய னேகம். (௩௩)

கந்துகம் வன்னி கோட கம்பரி யிவுளி பாட
லந்திக முட்ட மங்க லம்பயில் பஞ்ச கல்யா
ணந்தெய்வ மணிக்க ளத்தி னயந்தரு குதிரை யாதி
யந்தமில் பாய்மா நூல்சொன் மரபெலா மமைந்து சூழும். (௩௪)

மண்டலம் வீதி யாதி மரபினி லோடிச் செல்ல
தண்டலி லிடப மல்ல மயூரஞ்சார்த் தூலம் யூகங்
கண்டிடு கதிய பாணஞ் சசமுதற் கதியுங் கொள்வ
கொண்டல்சிம் புள்சங் காதிக் குரலின ருந்த மெல்லாம். (௩௫)

பரவுநற் சுழிக ளெல்லாம் பயில்வுறப் பெற்று நூறு
விரலுயர் வுடைய மாவின் மென்றளிர் நாவ செய்தன்
மருமலர் விழிய வன்ன மலர்மணம் வாய்ந்த மெய்ய
விரவுபல் லணிய கிள்ளை விதம்பல மேவு மாங்கே. (௩௬)

ஆடகச் சில்லி கோத்த வயிரவச் சவிர்மா ணிக்கப்
பீடிகைப் பரப்பு நீலக் கான்மிசைப் பிறழ்கோ மேத
மூடுற வமைந்த தேர்கண் மொழிதரு மைம்பூ தங்கண்
கூடுற வடுக்கி மேன்மே னின்றெனக் குலவு மாங்கே. (௩௭)

பாருல கனைத்துங் கொள்ளும் பரப்பதா விரிந்த விவ்வூர்த்
தேரினைப் புலவர் நோக்கித் திரைக்கடல் வைய மேயிவ
வேரிய விரத மென்று விசைத்தகா ரணத்தால் வாய்த்த
பேரினம் பற்றி மற்றும் பெற்றன பிறிதொன் றின்றால். (௩௮)

இடத்தினில் வைய மென்ன வியைந்தவிவ் வொன்றோ வேலை
முடித்தலை யாலவ் வண்ட முகட்டையுங் கடந்து காலாற்
படித்தலை கிழியச் சென்று பாதலங் கிடைக்கும் பண்பா
லடுத்தவா னாமுந் தம்மு ளொன்றுமா றமைந்த தேர்கள். (௩௯)

மலர்விழி யிமைத்தல் செய்யார் வஞ்சிசூழ் குஞ்சி சோரா
ரிலகுமுன் கால்பின் னேக்கா ரிரும்படைத் தடக்கை சோரார்
குலமக வென்ன மான மொன்றையே குறிப்பர் மேற்சென்
றலமரப் பகைகள் சாடும் வீரராங் களப்பி லாதார். (௪௰)

இம்பரின் வீர ரேயன் றெதிர்த்தவ ரிமைத்த லில்லா
வும்பரே யெனினு நோக்கா லொப்பினு மஞர்சுட் கன்றோர்
செம்புரை மார்ப மேற்பச் சிறுவரை சிலைமுன் கோட்டித்
தும்பைவேய்ந் தடுபோ ராற்றித் தொலைத்திடு மாற்றன் மிக்கார். (௪௧)

அத்திர சத்தி ரங்க ளாமிரு தொகைய வாகிப்
பத்திர முதலீ ரொன்பான் வகையவாய்ப் பரம்பு கூர்மைப்
பொத்திர குலங்கள் யாவும் புரையறச் செறிந்து மல்குஞ்
சித்திர கருவிச் சாலை திகழ்வன வனேக மாங்கண். (௪௨)

கரும்பொனை யிரும்பொ னாகக் காண்பவர் செயற்கு மேலா
யிரும்புசெம் பதுமராக மெனச்சிவை முகம் பழுத்து
வரும்பரி சழலிற் காய்ச்சி மறித்ததை வெண்பொ னென்னத்
தரும்பல கருவி யாங்கே சமைத்திடுங் கொல்லர் பல்லோர். (௪௩)

அச்சுரு ளார்பூ ணாணி யாதிய வமைப்பார் பல்லோர்
கைச்செறி குந்த நேமி கப்பண நாந்த கந்தோல்
வச்சிரந் தோம ரஞ்சூல் வளையுடம் பிடிதண் டாதி
நச்சழற் படைக ளாங்கு நவிற்றுகிற் பார்கள் பல்லோர். (௪௪)

ஓடுரு துடுப்பி னங்க ளொருங்குகூட் கிடப்ப தென்னென்
றூடுமா செய்மைக் கண்டோ ரலத்தகக் கொழுக்க ளாற்றி
மாடுறப் பரப்பு வார்கண் மற்றும்பஃ றொழில்செய் மாக்கள்
கூடுபு புரிவார் முற்று மினைத்தெனக் குறிக்கொ ணாதால் (௪௫)

இடைநகர்.

இந்நக ரிடைவா ழுள்ளா ரியாவருஞ் சீத ளீசன்
றன்னடி பணிந்து நாளுஞ் சார்தலை யவரூர் போற்ற
லென்னது கடமை யென்றே யியைந்தரண் புரிந்த தேய்ப்பப்
பொன்னகர் மேலும் பொங்கர் போய்ப்பொழில் பிறவுஞ் சூழும்.(௪௬)

தாதகி கன்னி காரஞ் சண்பகம் வழை செருந்தி
மாதுளை நாரங் கஞ்சம் பிரமா வகுள நீபஞ்
சாதியாண் குரவு கோளி சந்தகி னறவஞ் சாலம்
பாதிரி ஞாழல் கொன்றை பலவுமற் பலவு மேவும். (௪௭)

அயலுறு குயில்க டாமு மரிவையர் மொழி பயின்றந்
நயனுறு தடைத்த வாய்ப்பின் றணுபு சின்றே ளுள்கிப்
பயிலுறு மேலுமன்ன பான்மையி னென்று லன்றே
ரியன்மொழிக் குருகி மாழ்த மைந்தரை யிகழ்வ தெங்ஙன். (௪௮)

கிள்ளையின் மாலை பூவை கோகிலங் கிளர் மராளை
முள்ளன புட்க ளெல்லா மோடுவ போது கொய்வா
னள்ளொழின் மகளிர் போதக் காண்டலு மலைசூழ் ஞாலங்
கொள்ளுநன் மௌலி வேந்தர்க் கண்டரி குறும்பர் போல, (௪௯)

பன்னியுள் ளுவப்பக் கோங்கின் முகையினைப் பறித்தங் கிவான்
முன்னியோர் புருட னங்கு மொய்குழ லொருத்தி கொங்கை
தன்னையங் கையாற் பற்றி யுணர்ந்துபின் றளர மேலு
மன்னவன் கவலச் செய்வா ரவ்விரு மடந்தை மாரும். (௫0)

செருந்தியி னருமென் போது செறிந்தில கலர்ந்த கோங்கி
னரும்பினைத் திதலை பூத்த வாயிழை முலையென் றங்கே
விரும்பியோர் மகன்றொட் டீர்ப்ப மென்முகை யதுகைம் மீது
வரும்பரி சுணர்ந்து நாணி மறைத்தது மாதர்க் கீயும். (௫௧)

சைவலங் கமல நீலங் கைரவந் தரளம் வள்ளை
மொய்வளை குமிழ்கல் லோலஞ் சுழிவரால் கூர்ம முன்சார்
மெய்வளர் தடங்கள் பல்ல வினங்களேற் றேனை மேவப்
பெய்வளை யவர்கள் போந்து பெட்டுநீர் குடைவ ராங்கே. (௫௨)

நீளைநேர் மாதர் பல்லோர் நிறைதரு படீர மாதி
வாளைபாய் தடங் கலர்ந்து கலங்கலாய் மல்கப் புல்லிப்
பாளைநேர் கூந்தல் பூப்பப் படிந்தனர் கரையிற் போந்து
மீளவு மூழ்கச் செல்வார் பங்கமெய் விரவிற் றென்னு. (௫௩)

கொந்தலர்க் குழலி னார்தங் குடங்கையி னடங்க வைத்துப்
பந்தடித் தாடுந் தோறும் பணைமுலை படத்தை நீக்கி
நந்தமக் கணிகள் பூட்டி நயந்தெழில் புணர்க்குங் கையாற்
கந்துக மடிபட் டேங்குங் காட்சிநன் றென்று காண்ப. (௫௪)

இட்டிடை யணங்கி னல்லார் செம்மணிக் கழங்கை யேந்தி
யொட்டிவிண் வீசியாட வுறுங்கனி யெனவான் கிள்ளை
கிட்டியா றலைப்பார் போலக் கவர்ந்திடக் கெட்ட தன்றோ
பெட்டறும் மொட்ட மென்பா ரன்றென்பார் பிணங்கு வாரால். (௫௫)

தேங்குசெங் கமலப் போதிற் றேங்குயின் மிழற்றுந் தேமாப்
பாங்கடை நதியின் வார்ப்பப் பான்மலர் கமுகு தூர்ப்ப
தூங்கிசை மறைக ளோதித் துடுவையா னறுநெய் வார்த்திட்
டாங்குவெண் பொரிக டூவி யங்கிவேட் பவரின் மாதோ. (௫௬)

அகநகர். (வேறு.)

முரலிசைவண் டெழுதுழக்க முறுக்கவிழ்ந்து நறவெள்ள முளரியாதி
விரிமலர்க ளொழுக்கமது வேலையென லாயளப்பின் மேதிதம்பாய்
தாவுகளும் வாளைசெருத் தலின்மோதக் கன்றுநினை நந்தம்மேதி
சொரியயத்தாற் பாற்கடலாய்த் துலங்குமயி னகர்மதிக்கு புகழின்றோற்றம்.

வேலையென விசும்பணுகி வீழ்ந்தருந்த வெங்கரங்கை வெற்பீதென்று
வாலினடித் தப்புனலம் மலர்க்கிடங்கிற் பெய்விக்கு மாண்பக்கேணி
ஞாலமுணற் குதவாத நாலையன்றோ நீகவர்ந்து நல்கவேண்டும்
பாலதுனக் கத்தொழிலெம் பாலிலையென் றுடன்கவரும் பான்மைபோலும்.

கண்ணுதல்செய் தொளிநடங் கண்டனந்த னாதியருங் கண்ணனாதி
விண்ணவரு மண்ணவரும் யேறெவரு மொருங்கொன்று மேவாநிற்ப [த்தாய்
வெண்ணருமுற் றுலகினுஞ்சா ரெப்பொருளு நிறைந்தமைய யாமென்சேய்
நண்ணுதலென் றண்டமதி னயந்திவணின் றதுகொலென நலக்குமாரல்.()

அடியதனாற் பிலமேழென் பவைகடந்தப் பாற்செல்லு மமைதியாலு
முடியதனாள் வானுவக முற்றுமளந் தப்பாற்சென் முறைமையாலு
நெடியமதி லொளியவளை நேயக்கதை காம்பரிக்கு நெடுமால்வேதன்
படியகல்வான் றருடிமிர் பானுருவ மென்பதலாற் பகர்தலென்னே.(௬௦)

ஐம்பொறியே முதலாய வகப்பகையு மெல்லைபுதுக் தளமேயநீக்குந்
தம்பமதாய் வயங்குவதித் தனிநகர மெனினுமுறை தகுநூல்சாற்றுஞ்
செம்பொருடே ரக்கமென்மாத் திரையேயா யகழ்புரிஸை திகழப்பெற்றுங்
கும்பர்புகு மப்பதணத் துறும்பொறிகள் செயுந்தொழிலங் குலப்பிலாத.(௬௧)

உலகமுத லுலகேழு மொருங்குகடந் தேகுதலா லும்பர்யாரு
மலரவர்த முலகினின்று மாங்குவெளிப் போய்வருதற் கமையப்பெற்றுங்
கிவர்தருபன் மணிவாயி லேழிலகு கோபுரமவ் விஞ்சிமேவித்
திவளுறுநாற் றிசையினுமச் சிகரநல மினைத்தெனயார் செப்பவல்லார்.(௬௨)

வேறு.

இனையமா நகரிற் சாபயோ சனந்தா னெய்திவா னிடத்தமர் சயந்த
னனையவி ழலங்கற் புயாசல வடிக நாயகன் றனக்குரை வாய்மை
தனையராம் பையர்தம் போகத்தான் மறந்து தங்கினு முணர்ந்திவட் சார்வான்
மனமுறவழைக்கும்பரிசெனச் சுதன்மை மருங்கசைவுறும்விலோதனங்கள்.

செம்மணி மாட மைம்முகில் போர்த்துச் சிவனுருக் காட்டிடு மெதிரே
மைம்மணி மாட மவற்றெருழப் புகுந்த மாயவ னுருவமும் வளஞ்சேர்
பொன்மணி மாடந் திருமக ளுருவும் பொற்புறத் திகழ்மர கதமா
நன்மணி மாட மிமகிரி பயந்த நங்கைதன் னுருவமுங் காட்டும். (௬௩)

ஆடக மரித மாதன மாதி யணிநிறத் தசலமுற் றடைந்தாங்
கேடல ரிதழி வேணியஞ் சீத ளீசனை நேசமிக் கிறைஞ்சி
நீடலர் காத லாற்பிரி யாற்றா நிர்த்துநின் றனவென நிமிர்பன்
மாடமிக் கிருபான் மிடைறறு கனகம் வயங்குமற் றவற்றையார் வகுப்பார்.

பரத்தையர்வீதி. வேறு.

மானவர் முனிவர் யோகர் வானவர் வண்கட் டைய
தானவ ராதி யானோர் யாரையுஞ் சாம்பி நெஞ்சம்
போனவா றறியா ராகிப் புலம்புகொண் டிணையத் தங்கள்
பானலங் கண்ணாய் வெல்லும் பரத்தைய ரிருக்கை சொல்வாம். (௬௬)

மனனமர்ந் தெம்பால் யாரு மகிழ்ந்தினி தளிக்கா நின்ற
தனமதே யறமாஞ் சோகந் தணத்தியா மளிப்பக் கோள்வல்
லனதனந் தம்பா லீட்ட லாம்பொரு ளிதய மொத்த
வினிதுறு மின்ப மாம்வீ டிணைவிழைச் சதுவே யென்பார். (௬௭)

வேறு.

பலதர மொருவர் கனதனங் கொடுக்கிற் பலதரங் கனதனங் காட்டி
யிலகுவை மறித்தாங் கிவைபுற வெழிலான் யாரையு மபக்குவ ரில்லார்
வலியவந் துறினு முகத்தையு நோக்கார் மைந்தரை வசித்துளத் தெழுந்த
கலகமார் காம சாகரத் துலாவுங் கடமெனுந் தடமுலை மடவார். (௬௮)

விழிவலை வீசி மைந்தரைத் தூண்டின் மிகப்புநோக் கதர்செயல் புரிவார்
கழிமனை வாயின் மறுகெதிர் நிற்பார் கால்வழிச் செபன் மனம் விடுப்பார்
மொழியிசை தருவார் முலைப்பட நெகிழ்ப்பார் மூடுவா ராடைதம் மருங்கி
னழுவியாங் குடிப்பா ரிவைமுத லியர்செய் நாடக நவிற்றரு மம. (௬௯)

இசையுமெய் யன்பே கட்புன றருமென் றியம்புநூன் மறைமொழி சிறிதும்
பசையிலிம் மடவார் தம்விழி வலையிற் பட்டுறு மைந்தராங் கொருநாணசை
தமி லிருத்திச்செலினும்பின் போய்த்தந்நயனநீர் பெருக்கிநின்றதனையசை
வின்முன் பிரிந்தார் தமைநினைந் தழுதாங் கவருமங் குறவெதிர் மொழிவார்.

இருள்வலி கடந்த வருள்வலி யினர்பா லெய்தினர் மலச்சிமிழ்ப் பவிழ்த்தே
யரியமெய்ஞ் ஞான மளித்துடல் பொருளோ டாவிதாங் கவர்குல ரிவர்தங்
கருவிழி யதனாற் பிணித்துளூர் தமையுங் கலந்தனர் போகமுங் கவர்ந்து
மருவுமம்மூன் றுங்கவாவர்தாமொன் றும்வழங்கிடார்திறமையார்வகுப்பார்.

சூத்திரர்வீதி. (வேறு.)

உலகமேவிய வுயிர்ப்பசி யொழியவெஞ் ஞான்று
மலநிலாவிய வுழுதொழி லாற்றியவ் வளத்தா
னலனுலாவுபற் பலபொரு ளீட்டுவர் நாலாங்
குலநிலாவுவே ளாளர்தம் மறுகணி குறிப்பாம். (௭௨)

நாளுமீட்டுறு பொருளெலாந் திருத்தளி நாதன்
றாளினன்பருக் களித்தலே விரதமாச் சமைந்தார்
நீளிடைச்சிவ னன்பரைக் காணினெக் குருகிக்
காளகண்டனே யென்னுமுட் கருத்தொடும் பணிவார். (௭௩)

அடிகணைற்றிரு மாளிகை யோடருள் வாக்கென்
றிடரிலன்பரை யுயர்த்திய மௌனியரேஞ் சிறியேங்
குடில்கள் புன்சொலென் றிழித்துமுற் றங்களைக்குறையாப்
படியில்பூச்சிய னைச்சிய மாற்றங்கள் பகர்வார். (எச)

படருமன்பொடு குரவர்தம் மடியிணை பணிவார்
விடையிறைனடி யருச்சனை விடாதுசெய் திடுவா
ரிடையறாதுமெய் யன்பருக் கின்னமு தளிப்பார்
கடையினின்றவர் உரையையே மேலுங்கா முறுவார். (எரு)

நேருமொவ்வொரு வருடவர்த் தனைப்பல நிதியுஞ்
சேரவீந்துமுன் மகம்புரி செயலின்மட் கலத்திற்
சாருமாமுனிக் கருக்கியந் தந்தவேந் தொப்பார்
பாரிலின்னரைச் சூத்திர ரென்றிடப் படுமே. (எசு)

அண்டர்நாயக லிகிதமு நம்பிடா தயில்வேல்
கொண்டவுக்கிர வழுதிமு னிவர்குலத் தினர்சொல்
விண்டவேதத்தி னம்பிமால் விடுத்தன னென்று
மெண்டருமிவர் மகிமைநா மியம்பலாந் தகைத்தோ. (எஎ)

வைசியர் வீதி.

அணிகொ ணம்பிசொ லம்மையா ரமர்நீதி யன்பர்
கணிகொண் மூர்த்தியா ரியற்பகை யார்கலிக் கம்பர்
தணிவி லின்னனோர் தங்குலத் துறத்தவம் புரிந்த
வணிக ராவண வளஞ்சிறி தறிந்தவா வகுப்பாம். (எஅ)

மறைக ளோதுமெய்ச் சிவார்ச்சனை முதனிய மம்போ
லுறையும் பற்பல பொருள்களீட் டேக்கமிக் குடையார்
குறைவி னன்னிதிக் குபேரராங் களவிலார் குலவி
நிறையு மோர்நகர் போலுமவ் வணிகர்சூழ் நியமம். (எகூ)

எழுலோ கமுமெனப் பொருள்களுந் தழீஇ யிமையோர்
வாழுந்தம் முலகில் பொருள்கொள வரும்வளஞ் சேர்
பாழி யாவண மேருவி னமரர்முன் பயில்வே
லூழிநாயகன் கொண்டபே ருருவமே யொக்கும் (அ0)

வரைதரும் பொருண் மாவணம் வழங்குபல் பொருள்க
ணரைல நற்பொரு ளுடைப் பொருளெலா நணுகும்
புரையில் பீடிகை நவமணி பலவொளிர் பொலிவா
லிரவி முற்கிர கங்கள்சூழ் வானென விளையும். (அக)

பரமகாட் டையா மனுவள வெனினும்பைம் பொருளை
யிரவி * யேரோன வீட்டுவ ரிதற்கெதிர் மறையா
வரன தாலயப் பணிமுத லறங்களுக் களிப்பார்
பொருளின் வாஞ்சைய ரென்பதெங் கிவரிடைப் பொருந்தும். (அஉ)

தனதன் முன்னா ரொடுசெலீஇ யிலர்தனப் பெருக்கி
னனித நோக்கலி னருளினுற் பட்டினத் தடிக
ளென வுதித்தமை யிவர்குலத் தென்றிடி லினையோர்
புனித மாண்மிய மளப்பவ ரெவர்கொலோ புகல்வீர். (அங)

இராஜவீதி. (வேறு)

தரை யெலாம் புகழுமாதி சந்திர வழுதி முன்னோர்
மரபினி லுதித்தோர் மூன்று வையமுஞ் செல்லுங் கோலா
ரன்மகி ழீண்டிராச தானியா யமர்ந் தோர் வாழும்
வரைபுரை மாட மாலை மறுகணி வகுக்க லுற்றும். (அச)

இறையெனக் குடிகளீயு மிறைப்பொரு ளொருபா லோங்குந்
திறல்செழு வேந்தரீயுந் திறைப்பொரு ளொருபா லோங்கு
முறைதிறம் பினரென்றீட்டு முறைப்பொரு ளொன்று பின்னுன்
மறையவர் நாளுமோது மறைப்பொருண் முழங்கும் வாயில். (அரு)

மூதரு மனுநூனீதி மொழிகுந ரொருபால் வாய்மை
மேதகு சிவபுராணம் விரிக்குந ரொருபான் மேவிப்
போதுநோ ரைந்துறுப்பும் புகலுந ரொருபா லாசி
மாதவ ரொருபால் வேத்து மருவுமத் தாணிவாயில். (அசு)

அணியணி யிரதமேறி யருக்கனுஞ் சமழ்ப்ப வுய்ப்பார்
வணர்மதி ‡ யுலவைமாலை மாலுமுட் கிடவுகைப் பார்
குணனமை துரங்கமாந குலனுமெய் குலையவூர் வார்
திணியவின் முதலவிஞ்சைச் செல்வவேந் திளைய மைந்தர் (அஎ)

செய்களி றரசர்திண்டே ரொதுங்குறச் சிறுமணித் தேர்
நைவுற வுருட்டிச் சிற்றில் பேதையர் நலிந்துவீசும்
பெய்மணி யாரந்தட்ப வூடிப்பின் சிறார்க ளன்னோர்
கைதரு ணேற்றுப் பின்னைச் செயற்கெதிர் காட்டுவார்கள். (அஅ)

சிவனருள் வலியால் யார்க்குஞ் செய்கிடற் கரியசெய்கை
புவிமதி மரபினோர்கள் புரிந்தன ரென்று வாய்மை
யுவமையி லாலவாயின் மாண்மிய முதனூ லோத
லிவர்களை யென்னிலெண்ணு லியம்புதற் கெளிய ரேயோ. (அகூ)

---

* இரவி-மலை. ‡ உலவைமால்-கோடுள்ளமேகம். அது யானை.
பிந்தினமால்-இந்திரன்.

பிராமணவீதி. (வேறு.)

தழுவுமங் கலங்கள் பற்பல பொலியச் சசாதியின் விகோத்திரத் துதித்த
வெழினல நிறைசா லேந்திழை வதுவை யிலங்குற வெய்துநாள் வேட்ட
வழலினை நாளு மோம்புறு மௌபா சனமங்கி கோத்திர மாதி
யொழிவறப் புரியும் வைதிக மறையோ ரொளிமறு கணிசிறி துரைப்பாம். ()

அரனருள் சுருதி வழியிரௌத மாநெறி யனையநான் மறையை
முரணுறு மிருதி வழியகன் மார்த்த மாநெறி யென்றுற மொழியு
மிருவகை நெறியாம் வைதிக முறைநின் றீசனே பேசரும் பொருளாம்
பிரமமென் றுணர்ந்தாங் குயர்சிவார்ச் சனமே யுயிரினும் பேணுறு மனத்தார்.

அங்கியை யான்மா ரோகணஞ் சமிதா ரோகண மவைபுரிந் தேனு
மங்குறு தென்றும் வளர்ப்பவ ரனைய மன்றலின் வேட்ட தீயதுவே
தங்கடே காந்தத் தியல்சமக் காரந் தனக்குரித் தாமெனி லதனை
யிங்குயி ரளவு மிடையறு தோம்பு வாரென விசைப்ப தென்யாமே. (௧௨)

பிரதமை தொடங்கித் தெரிசத்தின் முடித்துப் பின்னுமம் முறையென்றும்
பேணுந், தெரிசபூ ரணம்பல் பலிகளோ தனத்தாற் செயத்தகும் வைச்சுவ
தேவம், பரவுறு தாலி பாகமுன் னாகப் பகர்ந்தசற் கருமங்க ளனையுங், கிரி
யைமந் திரம்பா வனைகுறை யாமற் கிளருமன் புளமுறப் புரிவார். (௧௩)

ஈங்குறும் யாகத் தவிநுகர் வோர்க ளிமையவ ரிம்மகப் பொருட்டா
லோங்குநீர் பொழிவ தம்புத மிதனுக் குதவில வொன்று மூவங்கி
பாங்குறு நாமிப் பயோதரக் குதவி பண்ணலே கடனெனும் பரிவா
லாங்கிடை யறுமவ் வெழுமகத் தூம மம்முகி லளாவுமென் றுான்றும். (௧௪)

வைகறை யெழுந்து நியதிகள் புரிந்து மகம்வளர்த் தலகினை வளர்ப்பார்
தெய்வநான் மறைமுன் னூல்களென் றோன்றுஞ் சிரவணஞ் செய்துதீங் க
றுப்பா, ருய்வகை விழையு மாணவர் தம்மை யோதுவித் துட்டுக ளொழிப்
பார், பைவிரி பணிப்பூட் பரமன்மான் மியங்கள் பற்பல பரிவோடும் பகர்வார்.

ஏகமுத் திறத்து விதப்பனை யாவு மிரிதவொரு மாத்திரை யமைய
மாகுத லயலிற் செலாமனச் சதுர ரம்பஞ்ச மதற்றெறு சினத்தோர்
லோகநஞ் சடுத்த வேதமாசந்த மிடற்றர னட்டமா ரடிக்கே
மோகர்மா னவங்க ணிதசம தமங்கண் முயன்றரன் பான்மயங் குறுவார். ()

அரிதினி லாதி சந்திர வழுதி யந்தர்வே தியின்கணீ ராறு
வருடமன் பணிசெய் தழைத்துட னால வாய்ச்செல வரும்வழி யருள்கூர்
தரவெதிர் போந்து விப்பிர னெனச்சீ தனியரன் றகைந்தில ணிருத்தும்
வரமிகு மறையோர் வழிவரு மினையோர் மாண்பெல குரைக்கவல் லுநரே.

சிவாசாரியவீதி. (வேறு.)

உருவருவோ ரிருநான்கி னனந்தலையவ் விருதிறனு முறநின் றூனும்
பரனைமுகோற் பணராய கௌசிகர்கா சிபவிருடி பாத்து வாச
குரவர்கௌ தமரெனமையா ளகத்தியர்தங் கோத்திரத்திற் குலவப் போந்த
வரமுறுமா சிவமறையோர் வாழ்நியமத் தணிசிறிது வகுத்து மாதோ. (௯௮)

மேதகைய சிவாகமஞ்சொ னித்தியநை மித்திககா மியங்க ளென்று
லோதுமொரு மூன்றினுக்கு மொருவாத வதிகார வுரிமை தன்னை
யேதமறப் பூரணமா யுற்றோர்கள் பசுபடுத்தாங் கியற்றும் வேள்வி
வேதவிதி யெனினுநிதஞ் சிவாக்கினியா கமவிதியே விழைந்து செய்வார்.

ஆனியங்க டோறுமான் மார்த்தபரார்த் தம்மெனநூ லறையும் பூசை
யானியங்க வருமொருவற் கவன்சொல்சிவா கமவிதிக ளாய்ந்தொன் றேனு
மானியங்கண் மருவாம லாற்றுநர்சி வாங்கியினெய் பாயசாதி
யானியங்க வினபுரிவா ராகுதிகள் விலக்கியண வயர்த்துஞ் செய்யார். (௧00)

முத்திறத்த தத்துவமுப் பானூறுங் கடந்துயர்ந்த முறைமை தேற [றுங்
வத்திரம்பன் னிருமுழத்தொல் வொன்றாக வொருமூன்று மருங்கி லொன்
கந்தவிசை யுத்தரிய மாயொன்று முத்தமாங் கத்தின் மீது
பொத்துமுட்டி னீடமா யொன்றுமுறப் புனைந்துஞற்றும் புனித சீலர் ()

கோதிலக்க மணியாறு கோத்திடுமாற் றுயர்சாத கும்பத் தாய
சோதிதிக ழாறுகட்டி யோர்மணிச்சுந் தரவேடங் துலங்கப் பூண்பா
ரோதிதனூற் சடத்துவசோ தனைபுரிந்து பக்குவர்க ளவர்க்கு மேலா
மோதியளித் திருவாகற்றுந் தீக்கைபுரிந் தொன்றுறச்செ யுரிமைதோன்றும்.

ஈசான முதலைந்து வத்திரங்கொள் சதாசிவமா மிலிங்க பூசை
நேசாரப் புரிபவர்கள பீனநேத் திரங்கடியி னிலாவு காகந்
தேசாரம் புயவாசஞ் சேகரகோ சிகமலர்ப்பூஞ் செங்கைக் கொள்ளு
மாசார மெனவைந்து வத்திராதா ரணமிவர்க்கே யமைந்த மன்றே. (௱௩)

வேறு.

தயங்குறு துவைபா யனமுனி தருவே தாந்தசூத் திரத்துண்மை தெளியாச்
சயங்குலாஞ் சிவாக மத்தெளி வாஞ்சித் தாந்தத்தோ டொவ்வுறாச் சிலர்பா
டியங்களை வேண்டா ரொதுக்குபு நீல கண்டபா டியுமொன்றே யிறைசொ
னயங்கொளாகமத்தோடொத்ததென்றதையோலந்தரப்புகன் றுரைவிரிப்பார்

போக்கறு நிகமா கமமிதி காசம் புராணமுற் றுளமுறப் புகல்வார்
தாக்கற விழைந்தார் தாசர்புத் திரர்சா தசர்க்கியல் சமயமுன் னுய
தீக்கைசெய் தரிய சரியையா திகளிற் செலுத்துவ ரிவர்நின நியம [வார்.
மாக்கொளுஞ் செயல்கண் முடித்தபி னொருபாங் கமர்ந்துதத் தமிலிலை யாய்

அத்துவி தார்த்தம் யாதெனை வுரைப்பா ரதற்கிரண் டன்மையே பொருளா
வொத்துரை தருவாரொன்றெனலமையாதோவெனவுரைப்பர்பண்ணோசை
மெத்திய கனிதீஞ் சுவையென விறைவன் வேறற யாண்டுமே வுதலாற்
சுத்தநான் மறைக ளேகமென் றதத் துவிதமே சொற்றிடு மென்பார். ()

என்றிடின் மறைக ளேகமே துவித மின்றென லென்கொலென் றிசைப்பார்
நன்றுநீர் மொழிந்தீர் பதிப்பொரு ளொன்றே யிரண்டல நவிலுறு மேனைத்
துன்றிய யாவும் பசுக்களென் றுணர்வான் சொற்றதா லருமறை யேக, மொ
ன்றுணர்வில்லாரொன்றெனிஞென்றென் றுரைப்பவர்யாவர்மற்றென்பார்.

தத்துவ மசிமுன் னான்குமே தாந்தத் தனிமகா வாக்கியங் கொண்டே
நித்திய பதார்த்தம் பதிபசு பாச நிகழ்த்துமிம் மூன்றென வுரைப்பா
ரொத்தவிம் மூன்றுஞ் சலதிநீ ருவர்போ லுட்கிடை யீதுண ராதோர்
சித்தமான் றுரைப்பி னுரைக்கமற் றவரத் தீநெறிச் சேறலென் னென்பார்.

அப்பொரு ளனாதி நித்திய மாகி லாவிசேர் மலமழி விலையா
லெப்படி யுயிரா னந்த மேவுறு மற்றென்ப ராணவ மலமனேக
வொப்பில் சத்திகடா னுடையதச் சத்தி யொழிந்திடுங் குருவரு ளோக்காற்
றப்பிலவ் வான்மாச் சிவனடி நிழலிற் றனிநிலை த்தின்புறு மென்பார்.(௧௦௯)

மேவிருண் மனையி னமர்பொரு ணயன விடயமா காமையிற் றுயர்ந்தோர்
தீவமொன் றுங்க ணுற்றிடு காலைத் தெளிவுறீ இ யின்பமே திளைப்பா
ராவரித் துளமுன் னிருள்வியா பகம்போ யவ்வலி யடங்கிய தல்லாற்
சாவடைந் திலதா லிதுகொடு துணிக சார்மல நித்திய மென்பார். (௧௧௦)

ஒன்றென வுரைப்பி னுறுமிடர்ப் பாடோ வொன்றல பற்பல வுளவாம்
பொன்றிய விகார பிரமத்தி னுயிர்கள் போந்தவென் றுரைத்த லோருணர்
துன்றிய வவற்றை மலமுற லூனஞ் சொலுமவை லீலையென் றிடிற்று
னன்றிநோக் குநர்வே றின்மையிற் பிரமக் கவ்த்தொழி லுண்மையோ வூனம்

அல்ல தூஉம் பிரமமொன் றுபற்பலவா யமைந்ததென் றுரைத்தலோ வூனஞ்
சொல்லுறு மாயோ பாதியா லென்னிற் சுத்தசே தனமதை மாயை
புல்லுறு திதனாற் போந்ததோ வூனம் புவியினிற் கடநிரை யிடையோ
ரெல்பல வாகத் தோன்றலிற் பிரம மனேகமாத் தோன்றுமென் றியம்பில்.

பிரமமொன் றொழிந்த யாவுஞ் சூனியநீ பேசலாற் கடமதிற் கண்டோ
ரொருவர்வே றின்று மாதலிற் பிரம முண்மையோர்ந் திலதெனு மூனம்
வரமுறு காய மொன்றுபற் பலவாய் மட்கடா காயமா வதுபோ
லுரைசெயிற் பலவா யேகமென் மேற்கோ ளொழியுமஃ தய்விலா வூனம்.

இன்னபல் லூன மெய்தவும் வாளா வியம்பலென் னொன்றென விசைப்பார்
சொன்னநாம் வெவ்வே றுரைத்திடி னன்றோ தோய்ந்திடு மின்புறு மென்பா

ரன்னமுட் பொருளும் வியாபக வியாப்பி யத்தொடு வியாத்தியா மென்
பார், துன்னுகண் ணொளியா ரிருள்கதி ரிரவி தொகுமிவைக் குவமனென் றுரைப்பார்.

இவைமுத லாக வுண்மைநூல் விசாரம் யாவுஞ்செய் திறைவனென் சிவனே
பவனொழிந் தேனை யரியமுத லானோர் பசுக்களா மடிமையென் றுரைப்பா
ரிவர்களோர் திலிங்கத் துயரறி விலிங்க மென்னிலா ரிவர்திற னிசைப்பா
ரவர்சிறு ரேனை மறைச்சிறார் மறுகி லாடுறுஞ் செயல்சிறி தறைவாம். ()

இன்றியற் றுதுஞ்சத் திரமக மென்பா ரியற்றின செருனலின் மகப்பேர்
துன்றுகா மேட்டி புரிகுது மென்பார் துலங்குவில் வட்டமே சதுர
மென்றமூன் றங்கி குண்டங்க ளமைப்பா ரெச்சமே றெடிருக்குவிக் கியைப்பார்
சென்றுபுற் சமித்தே யாதியிட் டிடுவார் செய்வினை வரன்முறை செய்வார்.

நிச்சலு மிவ்வா றக்கினிட் டோம நிகழ்த்துறு வாசபே யந்தான்
விச்சைகொள் சோட சாகமே சோமம் விச்சுவ சித்துமுற் புரிவார்
நச்சுறு களத்தோன் பதிட்டைமா சாந்தி நவபஞ்ச குண்டங்க ளமைத்தே
யச்செயன் மரபி னுற்றுவார் பூர ணாகுதி யாதிகள் புரிவார். (௧௧௭)

அங்கண்மா ஞாலத் தமணிருள் பாற்றற் கலரியிற் காழியி னருளிற்
றுங்கமெய்ஞ் ஞான வடிவுகொண் டெழுந்த தோன்றன்முற் சான்றவ ரீங்குத்
தங்குசீ தளிநா தனைப்பணிந் தரிய தமிழ்மறை புனைந்தன ரென்பார்
பொங்குமிந் நெறியோ ரடிகள் யாம்வாழப் போந்ததென் றன்புரைபுகல்வார்.

நீண்டசீ தளியின் வெண்ணிறப் பன்மீ னிலவுசெங் கமலத்தோர் பசுமீன்
காண்டக வமைந்தாங் குறுதிற நோக்கிக் காழிமா மணியெதி ரண
ரீண்டெரி யிடுமே டெரிந்துவெண் ணிறம்பெற் றியைந்ததுமெய்ப்பிரானெடு
மீண்டுமுன் னையினும் பசுமையிற் றிகழ்ந்த விதத்தையுங் காட்டுமீ தென்பார்.

மாளிகை மீது வயங்குபொற் குடமுன் மருவுறப் பின்னொரு மகட
னீளிரு காமுங் குவித்தரன் சிகரி நேருறப் பார்த்துநின் றிடக்கண்
டாளிபன் மயிலை யரன்முனெம் மண்ண லக்கமர் பொற்குடத் தெழுப்பும்
வாளிருங் கட்பூம் பாவைமுற் போந்த வகையினைக் காட்டுமீ தென்பார். ()

வானுறு மகனி கவர்தர நிறுத்து மாளிகைக் கோனிரை மருங்கே
நீனிற முசுக்க ளமர்தர நோக்கி நிலைதபு மமணரை யருளான்
ஞானசம் பந்த ரவர்செய்பா தகங்க ணலியும்பின் விரிந்தென விரங்கிக்
கோனுதிக் கழுவே றிட்டமை போலக் குலவுமித் தோற்றமென் றிசைப்பார்.

திருக்கோயில்.

மறைச்சிறு ரிங்ஙனுடுறுந் தாள வாலுகம் பாப்பிய மறுகு
சிறப்பொடு சூழ நாப்பணெம் பெருமான் சீதளிச் சினகரந் திகழ
நிறைத்தசா னவிசூழ் மணிகரு ணிகைப்பேர் நிகேதன மீதென நினைந்தே
யுறைத்தபே ரன்பார் காசிக்கே சூம்ப ருடங்கிழிந் தாங்குறீஇ யுவப்பார். ()

தந்திர மறைக ளவைதெளித் துரைத்த சமயசந் தானமா குரவர்
தந்திர விடமெய்ச் சுருதிக ளேனைச் சார்புநூன் முற்றுணர்ந் தயல்வா
தந்திரக் கிரியாச் சைவமே நிறுவிச் சாற்றுபஃ றீக்கைசெய் தருளீ
தந்திர வகற்றா சிரியர்வாழ் மடங்க டன்புறஞ் சூழுமக் கோயில். (கஉந)

திரவிட மாரி யக்கலை தேற்றுஞ் சீடர்தங் குழுக்களெண் டிசை*ய
திரவிட மாரி யக்கலூரி கள்பஃ றேவச மூகமுற் றெறுபத்
திரவிட மாரி•யக்கனு யுணர்த்து சிவனரு ணீதிய ரமர்க
திரவிட மாரி யக்கறு சிகைமன் றகம்புறந் திகழுமக் கோயில். (கஉச)

திருவள ரேழொன்பான் றனி தொகையொன் பானென நம்பிமுன் செப்புங்
குருவள ருண்மை நாயன்மார் பூசை கொண்டருள் புரிமடா லயமும்
பொருள்வள ரன்ன சாலைநீர்ச் சாலை புண்ணிய முனிவராச் சிரமந்
தருவள ருத்தி யானமுன் னுவ தன்புறஞ் சூழுமக் கோயில். (கஉரு)

ஒருதினம் போலப் பரிதிநேர் சேய்ப்ப வுருவினை யுவன்பரி மிதிப்பப்
பரிவுகூர் நேமி சீதளி நாதற் பணிந்துரைத் தலையொரீஇ யருளா
லிரவிதேர் பன்னு ளேகினு மெட்டா வியல்புபெற் றருணிலைந் திறைவன்
றிருமுனர்ச் சூழ்ந்து பணியினின் றிடல்போற் றிருமதில் சூழுமக் கோயில்.

மாயையிற் றோன்று மளப்பறு மண்டம் வரும்பொழு தலற்றொடு மலருஞ்
சேயபொன் மேருப் பலப்பல செறிந்து திருத்தகு நிமித்தகா ரணனும்
பாயசீ தளியான் பாங்குநின் றொளிரும் பரிசெனப் பன்மணிப் பரப்போ
டேயபல் லுருக்கள் செறிந்தகோ புரங்க ளெண்கடந் திலங்குமக் கோயில்.

திருமதி லுடனுய்ச் சேணெலாங் கடந்து திகழ்தரு மடுகுமா ளிகைகள்
கருமணி கண்டன் றிருவிழாக் கொண்டு கருணைதந் திடவெழுந் தருளும்
பருமணி வசந்த மண்டப மிமையாப் பாவையர் சமழ்ப்புற நடிக்கும்
வருமுருத் திரநற் கணிகையர் நிருத்த மண்டப மோங்குமக் கோயில்.

புரிசைசூழ் பூகத்தி னிலங்குமீ சான புவியிற்பல் புவனமும் பூத்த
கிரிசைவாழ் கருவி லாதிமண் டபங்கள் கெழுமிய விழுமிய மணியின்
வரிசைசூழ் விமான மாதிபல் லுறுப்பு மன்னிமா லயனரி முதன்மா
கரிசைமா முனிவர் மிடைநிவே தனத்தைக் கவினுறக் கொண்டதக் கோயில்.

மந்திர ரூப துவாதச நாம மநுவுந் துதிதரு மரிமகன்சு
மந்திரங் குறுசா பந்தெறு காரி வாழ்†தேவ சித்தமென் றுரைநா
மந்திர மாமண் டபமுதற் பணிகண் மன்னுற மயன்முன மமைத்த
மந்திர மடுத்த வடதிசை மேவி வயங்குறத் திகழுமக் கோயில். (கந0)

---

*அதிர விள்தம் ஆரியம் கல்லூரி உபத்திர விடம்ஆர் இயன், கதிர்அவ்விடம் ஆர்இயக்குஅறு, எனப்பிரிக்க.

†காரிவாழ் மந்திரமெனக் கூட்டுக. காரி-வைரவர்.

அலைதரு தளிர்பைந் தழையரும் பலர்பிஞ் சரியகாய் நிகரப தார்த்த
நிலையென வபரி பக்குவர்விபரீ தங்கொளு நிலைமைய தேனு
மலைமறை கனியிற் றெளிபொரு ளரிதுள் ளிலகியுய்த் துணர்தர வீச
னுலகினர்க் களித்த நான்மறைச் சாலை யொலிதின மலியுமக் கோயில். ()

ஈசனெம் வாக்கி னெழுமறை போலன் றினிமையே பெயர்கொ டென்மொ
ழியா, னேசினம் மபேதர் வாக்கினு முதிப்பித் திட்டதம் மறைவடித் தெடுத்த
தேசுடைத் தெனவம் மறைக்குறு சுரம்போற் பண்வகுப் பித்தவா திறம்பா
தாசற வோதுந் தமிழ்மறைச் சாலை யரலமீக் கூருமக் கோயில் (க௱உ)

அகமுற வுலக ரறியொணு நிலைத்தா யரன்பதி யெனல்வெளி மலைபோற்
றிகழ்தரு சமய விசேடநிர் வாண தீக்கையா தியசமக் காரத்
தகை யதிகார சத்திநி பாதர் தாமினி துணர வீசான
முகனிடைத் தோற்று சிவாகம சாலை முழக்கமம் பாங்குமக் கோயில். ()

வேறு

பரவுசிவா கமங்களினிடை யொளரவா கமநூற் பாசவிமோ சனபடலத் திரா
றுசூத் திரமா, யரியவட நிழற்குரவன் மலர்க்கரத்தின் மேற்று யகிலசிவாக
மத்துணிவா மத்துவி தானந்த, மருவுசித் தாந்தத் தெளிவாய் நந்திபரம் பரை
யின்வந் தொளிர்மெய் கண்டபிரான் வண்டமிழின் வகுத்த, கிரமுறு மெய்ச்
சிவஞான போதமுன்னி ரேழுசிர வணசாத் திரசாலை திகழுறுமக் கோயில்.

வேறு.

ஈசனே பதியாம் பசுக்களென் றிம்ப ரிசைத்தனன் வியாச ரூபத்தா
லாசற யான்செய் தவத்தினு லன்றே னருட்கையா லெடுப்பவு மடியேன்
மாசறு வெரிநி லிருப்பவும் பெறுமிவ் வடிவினல் வானுல கெவைக்கும்
பேசுவ லெனமா லெழுதலின் மேற்போய்ப் பிறங்குமான் றுவசமக் கோயில்.

முந்துறு சரியா தியசதுட் பாதர் முராரியா தியசுரர் முனிவோர்
தந்திர நிகம பாடகர் நால்வர் தமிழ்மறைச் சிரவணப் பெரியோர்
புந்தியி னினைந்த பெறவரும் புதியோர் போதுதோ றுங்குவந் துவந்து
வந்தனை புரியு நந்திமண் டபமுன் வயங்குறத் திகழுமக் கோயில். (க௱௬)

பிரதமா வரணந் தீசன்மா திரத்திற் பேச்சிறந் தமைந்திடு பெரியோர்
வரதமா வரண நீத்தொளி ருளநான் மறைமுடி யாதியா மகிமா
விரதமா வரணத் திரையமுந் தகித்தோ னிமாத்திரி குமாரியா னடன
பரதமா வரணன் வேவுசிற் சபையெப் பவனமும் விளக்குமக் கோயில். ()

வரதம ஆவரணம், மகிமாஇரதமா, மாபரத நடனவரணன் எனப்பிரிக்குக.

சமயமா றலைக்கு மிறைவிசெய் திடுபூ சனைகொளும் பரமனெம் பிரபஞ்'
சமயமா றலைக்குஞ் சீதளி நாதன் சார்ந்துவாழ் கருவிலா தியவிஞ்
சமயமா றலைக்குஞ் சிவாகம மோர்ந்த சான்றவர் விரும்புமண் டபபுஞ்
சமயமா றலைக்கு ணப்பல பணிக டயங்குறப் பொலியுமக் கோயில்.(க௱அ)

பிரபஞ்ச மயம்மாற, விஞ்சமயம்மாறு அலைக்கும், புஞ்சம் ஐயம் மால்தவு
ஐக்தணம், எனப்பிரிக்குக.

கருத்தரு விடைய வாதனை யகற்று கண்ணுதால் கமழ்கொன்றை யெனப்ப
கருத்தரு விடைய வாதனை யகலங் காட்டிவீற் றிருப்பவ மான
கருத்தரு விடைய வாதனை யகத்திற் கண்ணுகன் றேற்கருள் கருணி
கருத்தரு விடைய வாதனை யகமாக் கருணைசெய் திருப்பதக் கோயில். ()

பகர் உத்தருவிடை, மால் நகர் உத்து அருவிடை, கருத்து அருவிடு ஐயம் வாதம் நை எனப்பிரிக்குக.

[யுருவாற்
அடுத்துவேண் டுநர்க்கே யநித்தியப் பொருளே யளிக்கும்பொற் றருவினை
கடுத்துள தெனினுஞ் செய்மையிற் றன்னைக் காண்குநர்க் கும்பல முழுதுங்
கெடுத்து நித்தியமா சுகமருள் செயலாற் கிளர்தவத் தருவினை மிகக்கீழ்ப்
படுத்துமே லோங்குஞ் சுவன்னக விருக்கம் பச்சிமத் திலகுமக் கோயில். ()

தலவிருக்ஷம்.

அரக்கர் மாமுனிவ ரசுரர்சீ ரனையரா லரிட்டம்யா தியாதுறுங் கொல்லென்
றிரக்கமுறு நூயரு மச்சமு மல்லா லின்பிலற் பாயுள்வேங் தமரும்
விருக்கமுஞ் சருவ சத்திமா னிந்தன் விமலனுஞ் சதாசிவன்மேவு [விதழி.
மிருக்கையா மெமக்கு மேலுற லெவனென் றெழுந்துபோய்த் தாழ்த்து மல்

வியத்தமவ் வியத்த மாநிதா நகத்தின் வீற்றிருப் பவன்சிவ னென்று
உயத்தரு சுருதி யுரைத்திடு மதிரி சியத்தினை மாநிலத் தெவர்க்குந்
தியக்கற விட்ட விலக்கணை யாகத் திரிசிய முறத்தெளித் திடல்போ
னயத்துணர் சூழ்ந்து பூவுற லொன்றங் நாதன்மாட் டிலகுமவ் விதழி. (கசஉ)

திகழ்மறை புகலத் துவிதவாக் கியத்தின் செம்பொரு டெரியுர னின்றி
யகமிகு மவிச்சை யாற்றிரித் துணர்வார்க் கன்னது மமலமா மோக்கத்
தகைமையு நிதரி சனத்தினு லுணர்த்தா சாரியன் போன்றதா தளைந்து
நகைமது நுகர்ந்து களியளி யினஞ்சார் நாண்மலர் பொதுளுமவ் விதழி. ()

ஸ்ரீதளீசன். (வேறு)

தலத்தினுயர் திருத்தளியான் சததமனத் திருத்தளியான்
பிலத்தமர்மா திடப்பணியான் பிணியெமைத்தோய்ந் திடப்பணியா
னிலத்தினயர் கனவிடையா னினைப்பினுஞ்சேர் கனவிடையான்
கலத்திறூறு கங்கையினன் கமலசிவ கங்கையினன். (கசச)

மணிப்பணியா மாசுணத்தான் வண்டவள மாசுணத்தான்
கணிப்பகன்மெ யம்பரத்தான் ககுபமணி யம்பரத்தா
னணிக்கைலை யங்கிரியா னடியவர்க்கீ யங்கிரியான்
றணிப்பில்பகை திருத்தலத்தான் சார்ந்தபணி திருத்தலத்தான். (கசரு)

மெய்யாகிய அம்பரத்தான். அம்பரம் சிதாகாசம். ககுபமாகிய அம்பரத்தான். ககுபம்—திசை. அம்பரம்—வஸ்திரம். பகைவரைத் திருத்து அலத்தான். பலராமனுகிய விட்டுணு.

வேணியினுற் கந்தரத்தன் விடமருவு கந்தரத்தன்
காணயில்வேற் கந்தரத்தன்கழிதலையா கந்தரத்தன்

மாணகரங் கந்தரத்தன் மாண்மையிலங் கந்தரத்தன்
பேணுவில்புங் கந்தரத்தன் பிறங்குதாங் கந்தரத்தன். (கசசு)

நாற்கந்தரம் நாலுமேகம். கழிந்த தலைமாலைகளை மார்பிற்றரித்தவன். மாண் நகர்அங்கு அந்தரத்தன் இலங்கு அம் தரத்தன். வில்லாகிய புங்கம் தரத்தன். தரம்-மலை. தரங்கம் தரத்தன், தரம்-சிரசு

தறைபுகழிச் சீதளியான் சார்ந்துறையிச் சீதளிதான்
மறைமுழக்கின் வாணியமர் மலர்மகன்றன் ஞவாகு
நிறைகமலை யுறைதலினு னெடியன்மணி மார்பாகு
மிறைவியமர் திடுதலினு லீசனிடப் பாலாமால். (கசஎ)

வேறு.

மையேந்து மணிமாட மதுரைநகர்ச் சதுரன் மருவுபழி யஞ்சியசுந் தர நாதன் வாய்மை, மெய்யேந்துன் பறப்புரிந்த லீலையறு பானுன் கிடையொன்ற னிப*ஞன வெழின்மறை யோன்பதியாய்த், துய்யேந் † துய்த்தரு ஞபரஞ்சோதிமுனி வரன்முன்சொல் லாடற்புராணமதிற் றெல்லுலகம்போற்றச், செய்யேந்து திருப்புத்தூ ரென்றுவிதந் துரைத்த சீர்த்திமிகப் பெற்றுளதிச் செல்வளம் பதியே. (கசஅ)

தீங்கரிய வெங்கள்விம்மு வெறியார்ந்த சோலை திங்களொடு திளைக்கின்ற திருப்புத்தூ ரென்றுந், தேங்கொள் கொன்றை திளைக்கின்ற திருப்புத்தூ ரென்றுந் திகழ்நெய்த லாம்பல்கழு நீர்கண்மலர்ந் தெங்கு, மோங்குசெய்கண் மல்குபுத்தூ ரென்றுமடை மைஞ்ஞையொழியாது தெருவுதொறு முலாவு புத்தூரென்றும், பாங்கொடிவை முற்பலவாய்க் காழிவரு சேயின் பவளவாய்த் தமிழ்ச்சுருதி பரசியதிப் பதியே. (கசகூ)

திருந்துவயல் புடைதழுவு திருப்புத்தூ ரென்றுந் தோராரு நெடுவீதித் திருப்புத்தூ ரென்றும், புரிந்திடுபைம் பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே புனக்காந்தள் கைகாட்டக் கண்டுவண்டு சொடைமை, தெரிந்தினிசைத் தென்காட்டு திருப்புத்தூ ரென்றுஞ் செப்பிவைமுற் பற்பலவாய்த் தீவினையே னுளத்தும், பரிந்துமலர்ப் பதமளிக்கும் வாகீசப் பெருமான் பவளவாய்த் தமிழ்ச்சுருதி பரசியதிப் பதியே. (கரு0)

வேறு.

இன்னவா பரசி யுலகமெய் யுணர்ந்தே யின்பவீ டெய்துவா னுளத்திற்
றுன்னவா வுந்த நிலம்புரி தவத்தாற் சூலிதன் றுணையா லவன்றன்
மன்னவா ரருளே யுருக்கொடு வந்தோர் வழுத்துமிந் நவபுரி மகிமை
பன்னவா யனந்தம் படைத்துள வனந்தன் பல்லுக மொழியினும் பலியா.()

திருநகரச்சிறப்பு
முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-௱0அ.

---

* ஒன்றன்கிபன்— ஒன்றுக்குக் காரணன்.

† துய்வம்—சுத்த இன்பம். ஏம்கடைக்குறை.

புராண வரலாற்றுச்சருக்கம்.

வேதநெறி வாயிதென விரிந்தமையி னளந்துணரு மேதை யில்லார்
பூதர்பலர் வைதிகசை வத்தயலிற் புக்குலைதல் பொறாது முக்கட்
டாதை கழல் பணிந்துரைத்தப் பரனருளா னரிதனமி சத்தால் வந்திம்
மேதியின் மறைநான்காய் விரிவகுத்துப் பெயர்வேத வியாச னென்றே. (க)

வேறு.

கொண்ட மாமுனி யாயதன் குருபரன் பாத
புண்டரீ கத்தை மனத்தினுஞ் சிரத்தினும் புனைந்தோ
னண்ட நாயக னமரர்க ணாயக னீல
கண்ட நாயக னருள்வழி யொழுகுமெய்க் கருத்தோன். (உ)

தூய நீற்றொடு கண்டிகை துதைந்தொளிர் மெய்ய
ஞாய கன்றிரு வைந்தெழுத் தேசொலு நாவோன்
மேய தொல்கதை யொன்பதிற் றிரட்டியும் விமல
மாய நான்மறை யாதிமுன் னாலுமாய்ந் தறிந்தோன். (ங)

தான றிந்துள புராணமெய் யன்பினர் தமக்காங்
கான வன்பொடு சென்றுசென் றறைதொழி லதுவே
மான வாழ்வென மனக்கொளு மாண்புறு சூத
ஞான மாமுனி யொருபக லைமிசத் தடுத்தான். (ச)

அப்பெ ருந்தவ னணுகுத றெரிந்தன ரறவோர்
கைப்ப டுங்கனி நெல்லியிற் கலையெலா முணர்ந்த
வைப்பெ னுந்தவ மாமுனி யீங்குவந் தருள
வெப்பெ ருந்தவ மியற்றின மென்றுகொண் டெழுந்தார். (ரு)

எழுந்த மாதவர் யாவரு மெதிர்புகுந் திறைஞ்சி
யழுந்து மன்பொடு மழைத்துவந் தாசனத் திருத்திச்
செழுந்தண் மாமல ரருக்கிய மாதிய திருத்தி
மொழிந்து பற்பல முகமனும் பூசனை முடித்தே. (சு)

முன்னர் நின்றன ரெங்கைநின் வாக்கினின் முளைத்தாங்
கின்ன யந்தரு முதுமொழி யமுதமுண் டிருந்தும்
பின்னு மம்மொழி யமுதமே நுகர்ந்திடப் பெரிதுங்
துன்னு மாசையெம் முளத்தக லாதெனத் தொழுதார். (எ)

அனைய மாதவர் யாரையு மாயிடை யிருத்தி
வினையை வென்றொளி ரந்தணீர் நும்முளம் விரும்பு
மினைய தொன்றுல குயிரெலா மிறைசிவ னருள்பெற்
றனைய வின்புறு மேதுவு மாகுமா லதுவே. (அ)

என்ன நுள்ளந்து மிக்கெழு மிச்சையென் றனையோன்
பன்ன லந்தருச் தளிப் பரமனைப் பாங்கின்
மன்னு மன்னனையை மனத்துவைத் தொருப்படு சமாதி
துன்னி நின்றபின் முனிவரர்ப் பார்த்திது சொல்லும். (௯)

அண்ணன் மாதவி ரருள்பெறற் குரித்தது வேயென்
றெண்ணு மாக்கதை யொன்றுள தம்மெலை ரேனும்
வண்ண மாண்செவிக் கொளினுடன் மாசெலா மிரிக்கும்
துண்ண மோக்கமும் போகமு மெளிதினிற் சேர்க்கும். (௧௦)

ஆய மான்மிய மகனிலஞ் சமதிலே யடைய
மேய தென்மலை வீற்றிருந் தருள்புரி மேன்மைத்
தூய மாதவன் முன்னொரு காற்றனைச் சூழ்ந்து
பாய மாதவர்க் குரைத்தன ரங்கது பகர்வாம். (௧௧)

என்று கொண்டிமா முனிவிர்கா ளினையமான் மியத்தை
யொன்று முள்ளத்தோ டுவந்தனிர் கேட்குதி ரென்று
நன்று கூறுவான் றொடங்கியெ நற்றவச் சூத
வென்றி மாமுனி குறுமுனி யிசைத்தவா விளம்பும். (௧௨)

உலகு போற்றுசா னவிமுத னதிகளி னோங்கிக்
குலவு மாண்கொள்கோ தாவிரி நதிக்கரைக் குழுமி
யிலகு யோசனை யாறைந்தி னெல்லைத்தா மிடங்கொண்
டலகி லாவளஞ் சால்வன மொன்றுள தறவீர். (௧௩)

இருது வாறுமோய் வொன்றிற்கே யுரியவென் றியைந்து
வரைகொள் கோடுநீர் நிலங்கொடி யாவுமவ் வாம்பின்
றிரவு நண்பகற் போதுமெப் பருவத்து நீங்கா
துரிய மென்மல ராதிகொண் டுறுபல முதவும். (௧௪)

சிறக்குங் கந்தமூ லங்கடேன் றிகழ்கனி யாதி
நிறைந்த வவ்வனத் துறுபகை நீங்கிமா வாதி
யறத்தின் மேவுறுங் கவிப*யா டோபந்தூர்ப் பிச்சம்
விறக்கும் பாவமோ யாதிதுன் பொழிக்குமவ் விபினம். (௧௫)

நிலம்ம் விளையுநீ வாரமுன் னும்பயிர் நிலவும்
புலம்ம் விளையுமா முனிவர்வா ழுடசங்கள் பொலியும்
பலம்ம் விளைமகத் தமரர்தங் குழுநிதம் பல்கு
நலம்ம் விளையுநான் மறையொலி யாங்கணு நவிலும். (௧௬)

---

*ஆடோபம்- ஆடம்பரம்அது ஈண்டு மிகுதி.

அரனை யொத்தநன் முனிவரா ராலயஞ் சூழ்ந்து
விரியும் பன்மல ரங்கையி னெடுத்துமேற் றுமம்
வரமுறப் புனைந் தளித்துவண் மலர்த்தலை வணங்கிச்
சரியை யாளரைப் போன்றன பூருக* சாலம். (௧௭)

நனைய ளாவிய மகரந்த கந்தநாண் மலர்கள்
கனிக ளாதிதேன் மஞ்சனங் காட்டியங் கிற்றி
லினிய வோமதூ மத்தளி யெழத்திகழ் தருக்கள்
புனித பூசனைக் கிரியைசெய் மாக்களைப் புரையும். (௧௮)

ஏக மேவுகான் மீமெழுந் திளந்தளிர்க் கனன்மே
லாக மாமதி நெக்கபுத் தமுதெனை வலர்த்தேன்
மீக மழ்ந்தொழு குறவுா னுருக்கண்டு விமல
யோக மாக்கள்போ னிரந்தபல் விருக்கமங் கோங்கும். (௧௯)

அலர்க ளாதிதம் முறுப்பினை வேறுசெ யகிதந்
குலவு நீர்தரு மிதம்புரி குநரெனக் குறியா
துலகில் யாவர்க்கு நிழலளித் திருவினை யொப்பி
னிலவு ஞானியர் போன்றன நிகழ்தரு நிகரம்.† (௨0)

இன்ன வாகிய பல்வள மிவையுமிவ் விபினந்
தன்னின் மாதவர் கருக்கர்சா பாலிகுண் டினரே
மன்னு றுங்கௌ தமர்முத லினர்மருஉ மவையி
னன்னர் மாநதி சேர்கட லுண்டுரு றுறதன். (௨௧)

விந்த மால்வரை தனைக்காத் தடக்கியவ் வீறு
சிந்து மாதவச் சிந்துமா முனிவரன் சேர்ந்தான்
புந்தி யார்வமுன் பெருகநேர் புகுந்தடி வணங்கி
யந்த ணாளராங் குவகைகூர்ந் தாசன மளித்தார். (௨௨)

ஆய பாத்திய மருக்கிய மாசம னீய
நேய மோடளித் தனையர்நற் றுதிசெய நிமல
நாய கற்பொருங் குறுமுனி குசலநேர் நயந்து
வாய வன்பினன் மகிழ்வித்து வினவுற வகுப்பார். (௨௩)

முனிவர் புங்கவ காசியின் முத்தமண் டபத்தி
லினமி லங்குமா முனிவுர்கேட் டுவப்புற வினிதாண்
டனக சோமசுந் தரனென்று மமர்ந்திருந் தருளும்
புனித வாலவாய் மாண்மிய மாதிநூல் புகன்றாய். (௨௪)

...ன தானன மதியமு தெனுமுறை நிறைய
...ன பாகமார் தரநனி மாந்தியுங் கருத்தி

* பூருகம்—மரம் † தருநிகரம்—மரவரிசை.

லின்னு மாதா மமைந்தில தாதலி னெந்தாய்
நன்னர் மாக்கதை மீளவுங் கேட்பது நயந்தாம். (உரு)

பாரி லேழ்நடத் தலங்களின் மகிமைமுன் பகர்ந்து
தேரு மன்னவற் றொன்றதா யுயர்ந்திடுந் திருப்புத்
தூரின் வைபவ மந்தண மெனச்சிறி துரைத்தா
யாரு மங்கதை முழுதுமின் றருடியா லைப. (உசு)

என்று ரைத்தனர் கேட்டகத் தியமுனி யியம்பு
மன்ற லத்தல மகிமைமற் றுள்ளவா வகுத்த
லென்ற ருலியை யாதுணர் வானிறை சிவனே
நன்று கேட்டனி ராதலி னறிந்தவா நவில்வாம். (உஎ)

வேத மாண்பொருள் வியங்கியம் வெளிப்படத் தோன்ற
நாத னருள் வழிப்புரா ணங்களீ ரொன்பான்
மேத குந்திறத் துதித்தன வவற்றினுண் மேலா
மோது காந்தமு லிரண்டுசங் கிதைகளை யுடைத்தால். (உஅ)

யோதன் மாதவன் சங்கரன் புகல்சனற் குமாரன்
சூத ளுதவன் பெயர்த்தலவ் வாறுமத் தொகையு
ளாதி சங்கர சங்கிதை தனையுமைக் கருளும்
போத வண்மடி யினிலெமை யாளுடைப் புனிதன். (உகூ)

ஆய சேந்தனெங் குருபரன் வீற்றிருந் தருளித்
தூய சங்கிதை யன்னது கேட்டனன் றொழுது
நேய மிக்கெழப் பரவுமென் பாலரு ணிறைவாற்
சேயெ னக்குரை செய்தனன் கேட்டவா தெளிய. (ஙo)

அனைய சங்கிதை யினைபுல கின்புற வறைந்தே
னெனது நாமமும் பெற்றதச் சங்கிதை யிதனு
ணினிது லங்குமா திருத்தல மாண்மிய நலந்தா
ணினிது சொற்றிடப் படுந்தொகை வகைவிரி யிசைப்பாம். (ஙக)

காண்ட முந்தலந் தீர்த்தமே மூர்த்திநற் கைலை
பூண்ட மேன்மைகள் கௌரிபோர்ப் பொதுநடந் திருப்போர்த்
தாண்ட வம்வடு கன்கதை சீதளித் தகைமை
மாண்ட வாகிசந் திரன்கதை யெனவொன்பான் வகையாம். (ஙஉ)

இவ்வ கைப்படு மொன்பதிற் றிருஞ்சிறப் பமைந்த
தெய்வ மாண்மிய நிறுத்தவா விரித்துரை செய்து
மெவ்வ முற்றெருங் கிரித்தரு ளெங்குரு நாதன்
செவ்வ யிற்படைக் குமரன்முன் செப்பியாங் கென்றான். (ஙங

புராணவரலாற்றுச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ஙசக.

தலவிசேடச் சருக்கம்.

தேச மிக்ககோ தாவிரி தீரத்தின்
வாச மிக்குறு மாதவிர் கேண்மினென்
றீசன் மிக்கமர் சீதலத் தெய்துசீர்
நேச மிக்க முனிவ னிகழ்த்துமால். (௧)

சொன்ன மால்வரைச் சூழல வாசியின்
முன்னு நாவலந் தீவினின் மூவகைத்
துன்னு கண்டத்தொன் றாகித் துலங்குசீர்
பன்னு மேன்மைப் பரதகண் டத்தினில் (௨)

பாண்டி நாட்டிற் பரவுறு மாலவாய்க்
கீண்டு மூன்றரை யோசனை யீசன்பேர்
பூண்ட திக்கின் மனோகர பூமியாய்
நீண்ட கொன்றையங் கான நிலவுமால். (௩)

எல்லை யொன்றரை யோசனை யெய்திடு
மெல்லை யின்றும்பர் யாவரு மேத்துறு
மெல்லை யில்லுயிர்க் கின்னுயி ராஞ்சிவ
னெல்லை யில்விழை வெய்துறு மிவ்வனம். (௪)

இன்ன மால்வனத் தெய்துஞ் சிறப்பினோர்
முன்ன மேனகப வங்களின் முற்றிய
துன்ன கம்முழு தாந்தொலைத் தின்பமே
மன்னு வாரிதன் பேர்முன் னுழத்துவம். (௫)

வேறு.

பிரம தேசமே திருத்தலந் திருப்புத்தூர் பேணுஞ்
சருவ சித்திமா நகர்சம்மி யாககாந் தார
மருள்செய் தென்சிதம் பரத்தொடு மாரக்கு வதக்கான்
கிருத மாலையங் கானெனப் பெயர்பல கிளப்ப. (௬)

வேறு.

எண்ணிலாப் புவனத் தியாவரு மென்று மிதயமுன் னுருப்பட விறைஞ்ச
மண்ணலார் கைலை மலைதணந் துலக மளித்தரு ளன்னையாங் கௌரி
யுண்ணசை யூக்கப் போந்தது மவண்மற் றுரகபூ டணனருட் குறியை
மண்ணுறு மணந்த கோடிசூ ரியரின் வயங்குறக் கண்டிறைஞ் சியதும். (௭)

மூவுல களந்த வீரடிக் குரிசின் மொழிந்தவா வினவிமொய் யளிசூழ்
பூவரு மடந்தை யடைந்தது மீசன் பூசனை புரிந்தது மென்றுந்
தாவில்சீ தளநீர் நளினத்தி னமர்ந்து சபரியை புரீஇத் தரிப்பதுவு
மேவுசீர் வடுகன் காசிசீ சைலம் விடுத்துவேள் விளம்ப மேவியதும். (௮)

அன்னவன் யோகவாதனத் தமர்ந்தே யம்லனு வாணைங்கள் யாவு
முன்னவ னருளாற் புரந்திடும் வரத்தை முற்றுறப் பெற்றதுந் திசையின்
மன்னவர் பேறு பெற்றதும் திருப்பேர் வாவியி னெண்டிசை மாட்டும்
பன்னுறு சோதிச் சுயம்புலிங் கங்கள் பாங்குற வமர்ந்திலங் குவதும். (௯)

அன்பொடு மாதி சந்திர வழுதி யமல னெங் கருளிய வாறே
யின்பமீ தூர வாயிரத் தெழுநா றிணையிலா வேதியர் பதிட்டை
தன்பொரு ளீந்து புரிந்தது மிந்தத் தலத்திலென் றுரைப்பர் மாதவத்தி
ரென்பல வுரைத்த லணைந்தனும் விரித்தாங் கியம்புத லரிதரி திதன்சீர் (௧௰)

நித்தலும் வேதம் யாவுமுற் றொருங்கு நின்மல பூமியென் றுரைக்குஞ்
சித்திசெய் காசி யருகிலந் தருவே திசையில்வீ டொன்றையே குறித்த
வித்தக மறையோ ரத்தல மிகந்து விளம்பரும் விருப்பின ராகி
யித்தலம் வதிவா ரெனிலிதன் மகிமைக் கீதலாற் சான்றவே றென்னே. ()

வேறு.

இத்தலம் பூதலத் திருப்ப வீங்கிதை
வைத்தலந் தருதலம் வேறுவாஞ் சித்தல்
கைத்தலத் தமுதுகா சினித் தலத்தினி
லுய்த்தலந் ததன்புற நக்க லொக்குமால். (௧௨)

எனைய தலத்திருந் தியற்று மாதவ
மேனைய தலத்திருந் தியற்றுந் தோத்திர
மேனைய தலத்திருந் தியற்றும் வேள்விக
ளேனைய தலத்திருந் தியற்றும் பூசனை. (௧௩)

எனைய தலத்திரும் தியம்பு மந்திர
மேனைய தலத்திருந் தீயுந்தா னங்க
ளேனைய தலத்திருந் தியற்று நல்லற
மானசீ கலத்திலொன் றனந்த மாகுமால். (௧௪)

கவின்கொ ளித்தல மான்கௌரி தாண்டவ
முவந்துசெய் தானமென் றும்பர் மாலய
னவந்தெறு முனிவர்மா நுடர்க ளாங்குதம்
பவந்தெற வதிந்துபல் பலனு மெய்துவார். (௧௫)

இத்தல நினைவர்சா லோக மெய்துப
வித்தலத் தடைவர்சா மீப மெய்துப
வித்தலத் துதிப்பர்சா ரூப மெய்துப
வித்தலம் வதிவர்சா யுச்சி யத்தரே. (௧௬)

சிலைக ளெலாஞ் சிவலிங்கந் திகழ்தருநீர் நிலைகளெலாஞ் சிவதீர்த் தங்கள்
கலைக ளெலாஞ் சிவஞான மாந்தரெலா முருத்திரர்கள் காணுஞ் செய்கை

நீலைக ளெலாஞ் சிவபணிகள் விருக்கமெலாங் கற்பதரு நிகா மாடத்
தலைக ளெலா மிப்பதிபூ லோகசிவ லோகமிது சாத மாமால். (கஎ)

எனைத் துணைய மகிமையும்வாய்ந் திலங்குதலம் பொருளுயிர்முன் னியங்கி [நிற்கு
மனைத் திலுக்கு முபபதமா யவ்வவற்றின் மகிமையெலா மமையத் தன்னுண்
முனைத் துறுபல் பொருள்காட்டி முந்துபெய ரதுவதுவே மொழி யியற்பே
ரெனத்துதிப்ப விளங்குறுமித் திருத்தலத்தின் மகிமையெவ ரிசைக்கவல்லார்

தலவிசேடச்சருக்கம்
முற்றிற்று.
ஆ திருவிருத்தம் - ௩௫௯.

தீர்த்தவிசேடச்சருக்கம்.

திருத் தலச்சிறப் பென்றனு
லுரைத்த லாவதன் றுறுவர்கா
ளருத்தி யோடவ ணமருமா
திருத்த மேன்மையைச் செப்புவாம். (க)

மூத ருந்தவ முனிவிர்கா
ளாதிநா ளமலன் றன
பாத மீது பணிந்தனர்
பூத நாதர்கள் போற்றுபு. (உ)

உலக மெங்கணு முள்ளவா
யிலகு தீர்த்த மியாவையுங்
குலவி யிவ்விடைக் கூடிநின்
றலகிலா நல னுடிநேர். (௩)

பாலளிக் குறும் பண்பதிவ்
வேல்லை யென்றுளத் தெண்ணுபு
ஞால மூழ்கி நயம்பெற
வால மார்களத் தண்ணலே. (ச)

வாவி யொன்று வகுத்தியாற்
ருவி லித்தலந் தன்னிடை
மேவு மாறெண வேண்டவப்
பாவை பாகன் பரிந்துளம். (ரு)

சூலவே லினிற் சூன்றுதா
னேல்லை யொன்றங் கியற்றுபு
ஞாலும் வேணிநற் கங்கைநீர்
மேலு மாங்கு விடுத்தனன். (௬)

அந்த வேதுவி னத்தடங்
கந்த மார்சிவ கங்கையென்
றிந்த மூவுல குந்தொழச்
சுந்தரப் பெயர் துன்னிற்றால். (௭)

ஆய மாசிவ கங்கையி
னேய மார்தர நேர்புறீ இத்
தோயு மாந்தர்க டென்பெலா
மாய வின்பொடு மன்னுவார். (௮)

இத்தடத் தினை யெண்ணின்மற்
றெத் தடத்தினு மின்றிஃ
தித்த மத்துயர் தீர்த்தமே
யத்த ஞணமெ யறவிர்காள் (௯)

அன்ன வாவியி லமரரும்
பன்னு பாதலர் பிறருமவு
நன்னர் மூழ்குபு நலமெனலா
மன்னி வாழ்ந்தனர் மாதவீர். (௧௰)

யானு மப்புன லெய்தபு
மான வன்பின் மகிழ்ந்துதோய்ந்
தான வெண்ணமுற் றாக்கியே
மீன மின்னல மெய்தினனன். (௧௧)

வேறு

நீந்த நாகலர் தான்றமா தீர்த்தந் தோய்ந் தியங்குட
வேந்தா வந்து சார் ஏராசர சீவர்கள் வானோர்
தந்தலைக் கொடி வணங்கியே தம்பணி கேட்ப
முந்து மான்சிவ கணத்த ராய் வாழ்குவார் முனிவீர். (௧௨)

நன்னி நோக்குரா் இலைதம் மெய்யுறு நலத்தோ
ரன்ன மார்சிவ கங்கைப யங்கையா லள்ளி
யுண்ணு வார்படி குநர்பெறு பலமொன்றுக் கொன்றாக
கெண்ணின் மேம்படும் விரிப்பதெ னுண்ணறி வினர்க்கே. (௧௩)

தேச மிக்கெழு மப்புன றேய்ந்ததன் றிருத்த
மீச னார்திரு முடிமிசை யெடுத்தினி தாட்டு

நேசர் தாம்பெறு பலத்தினை நிகழ்த்தலென் னிமலன்
வாச நாண்மல ரடியவர் காணியாம் வாய்மை. (௧௪)

இன்னு மத்தலத் திலங்குறு மருட்கௌ ரீசன்
றன்ன துத்தர திசையினிற் கௌரிமுன் சமைத்த
மன்னு தீர்த்தமொன் றவடிருப் பெயரினால் வயங்கும்
பின்ன ரத்தடங் கமலையாற் சீதளிப் பெயர்த்தாம். (௧௫)

ஆய தீர்த்தத்தெண் டிசையினு மாதிரத் தந்திபர்
மேயத் தோய்ந்தனர் வலியுறீஇத் தாலந்தற வெம்மை
நேய மாபலன் மூழ்குநர்க் களிப்பன வாக
வேய தம்பெய ரனையநா லிரண்டினுந் திசைத்தார். (௧௬)

எண்ணு மப்பெருஞ் சீதளி வாவிநீ ரென்னும்
வண்ண வெங்கனல் பருகினார் தீண்டினார் மனத்தில்
கண்ணு கிற்பவர் படிந்தவர் கண்டவர் தம்பா
லண்ணு பாவதூ லத்தையெஞ் சாவகை நசிக்கும். (௧௭)

அன்ன தீர்த்தத்தின் மகிமைதா னளப்பரி தெவர்க்கும்
பின்ன ரோதுதுஞ் சிற்சில விரித்தெனப் பெருநீர்
முன்ன ருண்டமா முனிவரன் முத்தமிழ் முழங்கு
நன்னர் மாமலயத் தமர்குரு பரனவின் றனன். (௧௮)

தீர்த்தவிசேடச்சருக்கம்
முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் - ௩௭௭.

மூர்த்திவிசேடச்சருக்கம்.

பவகங்கை நீத்துரிய பரமசுகம் பெறநினைவோர் படியுந் தெய்வச்
சிவகங்கை சீதளிமா தீர்த்தகலஞ் செப்பினமேற் சிறந்த நோன்மைத்
தவகங்கை யூர்ந்திடுமா வயற்கரிய பிரானிமைவான் றன்பா லன்றுற்
பவகங்கை யேற்றமுடிப் பரனருட் டிருமகிமை பகர்வா மன்றே. (௧)

அகண்டைக சுயம்பிரகா சப்பொருளாய்ச் சச்சிதா னந்த மாகித்
திகழ்ந்துயிருக் குயிராய சிவமுலகு புத்திமுத்தி சேர்ந்து வாழ்வா
னகங்கொடுமா சிருட்டியா ரம்பமதிற் கொன்றை தூன்று மடவி தன்னி
லுகந்தொருபொன் னிதழியடி யொளிமயமா யருட்குறியா யுதித்த தாங்கே

அவ்விதழி யடியின்முளைத் தருண்மூல விலிங்கந்தன் கிளைக ளாகச்
செவ்விதின்யாம் பூசித்த சிவக்குறியொன் றரியீச திசையின் மேவும்

தெய்வவருட் குறியொன்று யிவையுறுமத் தளிப்புறம்பிற் றிகழு ஞானப்
பௌவநிகர் சீதளியின் பச்சிமத்திற் குறியொன்றாய்ப் படர்ந்து மேலும். (

உலகிருநான் கினிலெண்கோ டொப்பவருட் குறியெட்டா யுலகம் யாவு, ம
லகுமொரா லிடைப்பூத்த வெழில்வல்லி படர்ந்தேற வியைந்திட் டிச்சை
குலவமுகிழ்த் தறிவுநா ளரும்பாகச் செயல்பூத்தெங் குறையைக் காய்த்து
நிலவுமருள் பழுத்துலக மெலைக்குமொரு கற்பகமாய் நிற்கு மாதோ. (௪)

இப்பரமன் றிருநாமம் பிரமதேசப் பிரிய னவபுரீசன்
செப்பரிய கௌரீசன் பிருகுபூ சிதனமல சீத ளீசன்
வைப்பெனலாந் திருத்தலமா நகரீசன் பராபரன்மால் வணங்கு நாதன்
றுப்பிதழ்வாய் வசுந்தராபூ சிதன்முற் றெழுவழுதி மூன்பு தோன்றும். (௫)

சிவமறையோ ரேகேச னென்றுரைப்ப நால்வேதஞ் செப் பனேக
முவமனிலாத் திருநாம முடையனா யகன்றனக்கீண் டோது நாமஞ்
செவிபுகுதப் பெறுமவர்தந் திருவாயாற் செப்புமவர் சிந்தை செய்வோ
ரெவரவர்கண் மூன்றுலகுக் கிறையாகிப் பிறவாத வின்பஞ் சேர்வார். (௬)

எண்ணரிய திருநாமஞ் சீதளியாற் குள்ளனமற் றிசைத்த தென்று
ணண்ணுவதன் றதுநிற்க வெம்பெருமான் கௌரிநட னவிற்ற லாலே
புண்ணியமை வத்தலங்க ளெவற்றுநல புரிமேன்மை பொருந்தல் போன்முக்
கண்ணுடையா னருட்குறிக ளெவற்றினுமிக் குறியதிகங் காட்சி மிக்கீர். (

அப்பரனை யப்பதியி லருச்சித்தோ ரம்பிகைமா லவனி மாது
செப்பரிய சேந்தனறைச் செங்கமலத் திருமாமெனண் டிசைக்கு நாதர்
குப்புகழ்ச்சி கொளும்பிருது குசகேசன் குலமறையோர் குழுமு வானோர்
வைப்புறுயான் வைரவன்முன் வருசேன மாசுணமுன் வரம்பி லோரால்.

வேறு.

இத்தனிப் பெருமான் றன்னைப்பூ சித்தோ ரிறைஞ்சி நின்று
பத்தியிற் கனிந்து முன்னர்ப் பரவுநர் யாவ ரேனு
புத்திமுன் னுகர்ந்திட் டிச்சை போகமேற் போக வீற்றின்
முத்தியின் புற்று வாழ்வர் திண்ணமே முனிவிர் காணோ. (௯)

காலையிற் சீத ளீசன் கழலிணை வணங்கப் பெற்றோர்
மேலைநான் மறைக ளோது மறமெலா மினிது மேவிச்
சாலுமா தரவின் வாழ்வர் நண்பகற் சார்ந்து போற்றுஞ்
சீல ரெப்பொருளு மேன்மேற் செறிந்தினி திருப்பர் திண்ணம். (௧௰)

மாலையிற் றிருத்தலத் தெம் வரதனை வணங்கப் பெற்றோர்
பாலுறு மின்ப முற்றும் பருகுவ ரருத்த யாம
வேலையிற் பணியு மேலோர் விமலனுண் மல ரடிக்கீ
ழேலுற வமர்ந்து வாழ்பே ரின்பமுற் றிருப்பர் மாதோ. (௧௧)

மாலையிற் றிருத்தலத்தெம் வரதனை வணங்கப் பெற்றோர்
பாலுறு மின்ப முற்றும் பருகுவ ரநந்த யாம
வேலையிற் பணியு மேலோர் விமலனன் மலர டிக்கீ
ழேலுற வமர்ந்து வாழ்பே ரின்பமுற் றிருப்பர் மாதோ. (கக)

சீதளி நாதன் கோயில் சென்றுமுன் பணிந்து நின்றங்
கேதமி றுதிகள் பல்வே றிசைக்குந ரெய்தும் பேற்றி
லாதிதன் மலர்வாய்ப் போந்த வாரண மன்பி னோதுங்
காதலர் பத்துநூறு கதித்திடும் பலன்மேற் கொள்வார் (கஉ)

அம்மறை நான்கி னுள்ளு மதிகமா மெசுர்வே தத்தைச்
செம்மைகொண் மனத்த ராகிச் செப்புந ரயுதஞ் சேர்வர்.
பொய்ம்மையி லதனி னுப்பட் பொருட்டுநற் காண்ட மோதுந்
தன்மையர் சாதநா றாயிரமடங் கதிகஞ் சார்வார். (கந)

அருத்திகொ ளன்ன காண்டத் தாற்குறு வணக்கம் வாய்ந்த
வுருத்திர மன்பி னோது முவவொரு கோடி சேர்வர்
கருத்துறு மறைக ளென்னுங் கன்னலிற் கோது நீத்த
திருத்தகு மருளை யாகுந் திராவிட வேத மோதும். (கச)

தொழுதகு மன்பர் பேற்றைச் சொல்லுதற் கியானு மாற்றேன்
முழுதுணர் பரமன் றானு மொழிவனே லளவின் றென்பான்
கெழுதகு முனிவிர் கேண்மின் கிடைத்துமுன் றொழுதுமென்று
வழிவரத் தொடங்கு வாரும் வந்தடி பணிந்தா ரொப்பார். (கரு)

இன்னன புரிவார்க் கெந்தை யிங்ஙன மருளல் சொற்றும்
பொன்னமர் தலத்தெம் மீசன் பூசோப கரணமாகப்
பன்னுறு தூப தீப பாசன மணி யிழைத்த
மின்னுபொற் குடங்க ளாட்டும் வியன்மணிக் கலச மேலும். (கசு)

இன்னிசைக் கண்டை யாதி யியம்பல வெழிற்பொன் றூடை
வின்னிரைக் கலங்கள் சொன்ன வில்வமா லிகைமுத்தாரங்
கொன்னுறு மணிசெய் கண்டி கோளகை குண்ட லங்க
ணன்னர்மெய்க் கவசந் திண்காழ் நறுங்குற டிரிஞ்சு தேய்வை. (கஎ)

ஆதிய வளிக்கு மன்ப ரலர்பல தொடுத்த லங்கல்
போதுதோ றமையச் சாத்தல் புலரியி லெழுந்து மூழ்கிச்
சோதனிப் பணிமெ ழுக்குச் சுடர்விளக் கிடங்க டோறு
மேதக விடுத னந்த வனமவை விதியாற் செய்தல். (கஅ)

இவைமுதற் புரியு மன்பர் திருத்தலத் திறைவன் கோயி
னவமுறக் கிலங்கள் போக்கி நவமணி சாத கும்பந்

திவள்சுவை யிட்டி கைம்முற் பொருள்கொடு திருந்தச் செய்து
நவபுரி நாம மேன்மேல் விளக்குற நலஞ்செய் மேலோர். (௧௯)

எஞ்சலில் பொருள்க ளாட்டற்கியைவன வன்பி னீந்து
மஞ்சனம் புரிவிப் போர்கள் மௌவன்மென் முகையின் வான்மை
யஞ்சுவை யோத னம்பற் பலவகை யபூப வர்க்கம்
விஞ்சுற நிவேதிப் போர்க ணறும்புகை விரவச் செய்வோர். (௨0)

இயம்பல வியக்கு விப்போ ரிரும்பொனுன் மணியாற் செய்த
நயந்தரு திருத்தேர் மீது நல்விழா நடத்து விப்போர்
வியத்துறை யிவர்முன் னுப மெய்த்தொண்டர்க் கெந்தை யீயும்
பயன்றனை மெம்ம னோராற் பகர்தலெங் குணர்வான் மிக்கீர். (௨௧)

வேறு.

இத்தகருண் மூர்த்திநல மின்னுமள வில்லனவென் றியம்ப ஞானம்
வந்தமுனி வரர்தலந்தீர்த் தம்மூர்த்தி நலங்கேட்டு மகிழ்ந்தோ மெந்தாய்
முந்துமைபோ் நடம்புகன்று யவள்பொருட்டா் நடம்புரிந்தான் முதல்வ
னென்று, லந்தரியாண் டிந்துமுடி யடிபணிந்தெதன் வினவினராங் கமல [மூர்த்தி
எவ்விடைத் தருளினு னவ்வகையி னுவப்பித்தா னெவ்வா றிந்தத்
திவ்வியமா தலம்புகுந்து திருக்கருதன் பேர்நடனந் தெரிசித் திட்டாள்
வெளவுமுழு துண்டமரர் பயந்தீர்த்த பெருமானே பகரா யென்ன [ருன்.
வெவ்வமின்மா தவமுனிவீர் கேண்மினென வான்முறையா லியம்ப லுற்

மூர்த்திவிசேடச்சருக்க முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம்-௪00.

திருக்கைலாயச்சருக்கம்.

சிலைய மாதவ நிமிர்ந்தொளிர் செம்பொனன் மேருச்
சிலைய மாதவன் விழியெனக் கொண்டவன் றிருமுன்
மலைய மாதவன் றனைவின விடமிதென் றுயர்வான்
மலைய மாதவன் கைலையின் சிறப்புரை வழங்கும். (௧)

மேருச்சிலைசிலை எனக்கூட்டுக. அமா-இடைக்குறை. அம் ஆதவன் விழி. மலை அமாதா அவன்றனை.

திருத்த னுயக னுதிய தேவரெம் முளத்தைத்
திருத்த னுபக னிரங்கெனச் சேர்ந்துநின் றேத்துந்
திருத்த னுயகன் மலரயன் றேடரு முடிசேர்
திருத்தனுய்க னிருப்பது திருக்கயிலாயம். (௨)

உளத்தை திருத்து அனாய். எத்தும் திருத்தன் ஆய் அகல் மலர் அயன் தேட அரும் முடி சேர் திருத்தனாய் அகன் எனப்பிரிக்குக. திருத்தனாய் தீர்த்தத்தையுடையனாய். அகன் தன்னிடத்து.

சிந்து மாதவ னாமெனாற் கீறற்குத் திமிரஞ்
சிந்து மாதவன் போலிய றேற்றுவித் துளங்க
சிந்து மாதவன் ஞானவாக் கருள்செயுங் கருணைச்
சிந்து மாதவ னிருப்பது திருக்கயிலாயம். (௩)

சிந்துமாதவன்-குறுமுனி. திமிரம் சிந்தும் ஆதவன் உளம் கசிந்து மா தவல் கருணைச்சிந்து உமாதவன் எனப்பிரிக்குக. மா-கருமை அது ஆணவ இருள்

சித்த ரங்கமா றுணர்ந்தரு மறைமுதற் றேர்ந்த
சித்த ரங்கமா லகன்முனி வரர்துதி செயுங்காட்
சித்த ரங்கமார் முடியா னுயிர்க்கருள் செயற்கிச்
சித்த ரங்கமா னிருப்பது திருக்கயிலாயம். (௪)

சித்தர் அங்கம் ஆறு உணர்ந்து, தேர்ந்த சித்தர் அங்க மால் அகல், காட்சி தரங்கம் ஆர், செயற்கு இச்சித்து அரங்கமான் எனப்பிரிக்குக. அங்கமால் தேகவாஞ்சை, அரங்கமான்-சிற்சபையில் நடிக்கும் மகான்.

சிகர மாயிரஞ் சூழ்கன சிமயமுன் யாவுஞ்
சிகர மாயினு மால்பத மாதிசிந் திடினுஞ்
சிகர மாயிருங் கங்கையெம் பிரானருட் செயலாற்
சிகர மாயிருந் தொளிர்வது திருக்கயிலாயம். (௫)

சிகரம் ஆயிரம்-அனேகமலையுச்சி. கனசிமயம்-பொன்மலை. கனம் பொன். யாவும் சிகரம்-மலைகளெல்லாம். சிகரம் ஆய் இரும்கங்கை-சிரசில் ஆய்கின்ற பெரிய கங்கையைத் தரித்த. சிகரமாய்-உயர்வாய்.

தஞ்ச கந்தரம் புடவியின் வாழுயிர் தமக்கே
யஞ்ச கந்தர விடத்தருண் மாதென வமர
நஞ்ச கந்தரம் வைத்தருள் சீகண்ட னருதோற்
கஞ்ச கந்தர னிருப்பது கைலையஞ்சைலம். (௬)

தஞ்சு உகந்து அரம்-தஞ்சமாக விரும்பிப் பாதலம். தோற்கஞ்சுகம் யானைத் தோலாகிய சட்டை.

காவு லம்பதி நம்பிமா லாதியர் நணுகி
மேவ லம்பதி வுனாற்றிவெள் ளிபத்துற வேண்டப்
பாவ லம்பதி கத்தினாற் பணிந்துசெல் பாற்றாற்
காவ லம்பதி கங்கையன் கைலையஞ் சைலம். (௭)

மே வலம் பதிவு-விரும்புகின்ற பிரதக்ஷணம் வணக்கம். பா வலம் பதிகத்தினால்-ஞானவல்லபமுள்ள பதிகப்பாவினால். காவு அலம்பு அதி கங்கை. காவுதல்-தாங்குதல்.

மீத லங்கணன் கணிசெய வெழுதலின் விளைவுற்
றீத லங்கண வயறிகழ் *மகோதையெம் பெருமா
னோத லங்கண வுலாத்தமிழ் ஞானநூல் கேட்டுக்
காத லங்கண னிருப்பது கைலையஞ் சைலம். (௮)

ஈதலையுடைய வயல். ஓதல் அங்கு அணவு உலா.

சுதி யளித்தன விதழியந் தொடையரன் ஞான
நிதி யளித்தன தருட்கையி னன்பர்க்கு நிகழ்தற்
பதி யளித்தன மனமகிழ் வுறத்தரீஇப் பரம
கதி யளித்தன னிருப்பது கைலையஞ் சைலம்.

தன இதழி-பொன்னிற இதழி. ஞானநிதி அன்னி. தற்பதிமனம், அ
ளித்து அன்ன மனம் என்றிரிடத்துங் கூட்டுக. தன்னிடத்திற் பதிகின்ற
மனம் அளியையுடைய மனம் என்க. அளித்தன்மையுடைய எனினுமாம்.

அனக னம்பர நிருத்தனம் மேயென வழைப்ப
வினக னம்பர னவனையப் பாவென விளித்தா
டனக னம்பரற் றொழுத்தலை யாற்செலுந் தகைத்தாற்
கனக னம்பர மாறொழுங் கைலயஞ் சைலம். (௰)

அம்பர நிருத்தன் வில் நகன் நம்பரன் ஆகிய அவனை யென்க. தன்
அகன் நம்பு அரற்றொழு. அம்பர கனகன்-பீதாம்பரன்.

என்னை யாளுடை நாவர சீண்டுல குய்வான்
மன்னி மேல்வரக் கருதியே தன்னைமற் றவர்க்கு
முன்னை யாற்றினிற் காட்டியுள் விழைந்தவா முடித்துத்
தன்னை நாமமப் பதிக்கரு டகையதச் சைலம். (௧௧)

கரிய கண்டனை தாணையாற் கடிதுவந் தழைத்துப்
‡பெரிய தேவருட் கொடுபுகுஞ் சேரலர் பிரான்சொ
லரிய நான்மறை யாகமத் துணிபொரு ளமைந்த
திரு வுலாத்தமிழ் மணநனி யுலாவுமச் சிலம்பு (௧௨)

பரவை கேள்வர்சென் னெறியின்முற் பகர்ந்தருள் பதிகச்
சுருதி யாங்கணும் பன்முறை துதிக்குந ரிசைகேட்
டரவ மாதியு மசலமாய்த் தன்மயமாகி
விரவு தன்குண மடுத்துற விளங்குமவ் விலங்கல் (௧௩),

சிறிது பாணித்த மாலையுங் கரியவ னெனச்செய்
திறுதி யாற்றமுன் னடர்விடத் தினையெதிர் காத்திற்

---

* மகோதை-சேரர்நகரம்

‡ பெரியதேவர்-திருநந்திதேவர்.

குறுகி யேற்றரு ணம்பிரா னெனமுதற் சொடுசொன்
மறையின் வாய்மைநற் பதிகமொன் றுடையதம் மலையே. (௧௪)

கச்சி யோற்றமர் மாற்கா ஞரைத்தவா கருத்தி
னிச்சை யாற்சிவ ரூபமீந் தவ்வுல கேற்றுஞ்
செச்சை மாலைவேள் கௌணியர் சிகாமணி செப்பும்
விச்சை வேதவாய்ப் பதிகமூன் றுடையதவ் வெற்பு (௧௫)

இருந்த வாறடிப் பெருவிரல் சிறிதிறை யூன்ற
முரிந்த ராவணற் குய்வழி மொழிவியா சத்தாற்
றிரிந்த மாநிலந் திருந்தவுட் கொண்டிறை செலுத்த
வருந்த கைக்கொள்சொல் வேந்தர்மூப் பதிகமவ் வரைக்கே. (௧௬)

புடவி யாங்கணு முளசிவ தலமெலாம் புகுந்தா
ளுடைய பிள்ளையு நம்மையா ளரசுமுன் னுரைத்த
திட முறுந்தமிழ் மறைப்பதி கம்மெலாந் திகழத்
தொடரு மன்பொடு போற்றுசீர் படைத்ததச் சுரும்பு. (௧௭)

வேறு.

ஆயிர விரட்டியான மருப்பயி ராவணந்தந்
நாயக மாக்கொண்டென்று நண்ணுவெள் ளிபம்பல்கோடி
பாயவச் சிகரியாண்டும் படர்ந்தன மிடைந்துசூழ்வ
தூயமெய்க் குடிலையேயத் தோலின மாவமாதோ. (௧௮)

வெள்ளிய கரியசெய்ய விளைழதகு பசியபொன்மை
கொள்ளிய னிறத்தவின்ன கோடர மளப்பில்கோடி
யெள்ளிய லகன்றசீர்த்தி யிறும்பத னிடங்களெங்கும்
வள்ளியன் மறைகளேயவ் வடிவமாய் வதிவவாங்கண் (௧௯)

ஆடகச் சில்லிசேர்ந்த வயிரவச் சினங்களார்ந்த
கோடக நிரைகள்பூண்ட கொடிஞ்சிபன் மணியின்மாண்ட
பீடக விடைப்பதாகை பிறங்குசந் தனம்பல்கோடி
சூடக முன்கைபாகன் றொல்வரை யதன்பாற்சூழும். (௨௰)

பூதம்பல வொன்றேயாகப் படைத்தவர் பாணிசென்னி
விதம்பல ரரிணமெண்கு வியாக்கிர மறுகுபூட்கை
கதம்படு மரிமுன்போகில் கவிநா ராதியாமற்
புதம்படு முகத்தராகிப் பூமகன் முகுந்தனாதி. (௨௧)

தேவர்க ளாற்றன்முற்றுஞ் சிந்திடுந் தகையான்றோர்
மேவுறு பதங்கண்மற்ற விதிக்கவோ ரொருவர்வல்லா

ராவயிற் சூழ்வர்யாண்டும் பூதர்க ளனந்தகோடி
யோவிலப் பூதநாத ருவகையின் மிடைவர்பல்லோர். (உஉ)

கருமமெய் முனிவர்மாதர் கருவமுற் றகற்றுவான்கொ
ளானுரு நோக்கிமால்கொண் டிணைவிழைச் சமர்ந்தமாற்குத்
தருசுதும் பின்னொன்று சாற்றியாங் கவன்பாற்றந்த
வானூறு மையன்மேவி வாழ்பத மாங்கோர்பாங்கர். (உங)

பயன்மிகு வடுகன்வீர பத்திர னாதியோர்தம்
வயமிகு பரிவாரங்கண் மருங்குநின் றேவலாற்ற
வியனா சிருந்துவாழும் விரிமணி மாடமேய
நயன்மலி பதங்களோங்கு நவிரமற் றதன்கணோர்பால். (உச)

கிரிசையி னமிசமாகக் கிளர்ந்தெழு மனந்தகோடி
வரிசைகொள் சத்திமார்கண் மருவிவா ழிடங்கள்பல்ல
வரியயன் வலாரியாதி யமரர்க ளமரவாங்கண்
விரிதரு மிடங்கள்பல்ல விளங்குமப் புறம்பின்மேவும். (உரு)

இயவுளர் பதினெண்பாலார் யாவருமீண்டி யென்றும்
வியலிடந் தோறுஞ்சூழ்வர் வேட்டன யாவுநல்கும்
பயன்மலி காமதேனுப் பற்பலகோடி தத்தஞ்
சயமிகு விடைகளோடு தழீஇக்கொடு வதிவவாங்கே. (உசா)

கற்பகம் பாரிசாதங் கவின்கொள்சந் தானமிக்க
பொற்புறு மந்தாரந்தான் புகலரிசந் தனப்பேர்
விற்பயில் விருக்கமொவ்வொன் றனந்தமாய் விரிந்துபூத்தவ்
வெற்பில்வந் திரப்பாரின்றி விளங்குவ வளவிலாத. (உஎ)

வரையதன் பாங்குசிந்தா மணிக்குவா லளப்பிலாத
மறைநிதி யளப்பிலாத வளைநிதி யளப்பிலாத
புரையறு பதுமராகப் புதுமணிமுதலவொன்பா
னிரைமணி பரல்களாவத் தலமெலா நிலவுமன்றே. (உஅ)

சாதரும் பத்தினூலுந் தயங்குபன் மணிகளாலு
மேதமில் வேர்பாரானை யிணர்தளிர் முகையலர்ந்த
போதுகாய் கனிகளாதி புணர்ந்துள தருவனேக
மீதிகழ் வல்லியோடும் விரிபொழி லாகிமேவும். (உகூ)

வகுளமா வருக்கைகோளி வழைபுன்னை கன்னிகாரங்
கதுபமாண் செருந்திசந்து கணிகுரால் பாடலந்தெங்

ககருநா ரங்களூழ லசோகுசண் பகந்தமாலம்
புகலுமின் னவைமுன்னான பொழில்கண்மேற் பொழிலனக்கும். (௩௦)

அகனிலம் பளிங்கரண்பொன் றன்மரகதச் சோபானந்
தகுமா தனத்தாற்சந் துபதிந்துயோ சனைவிரிந்து
வகையபன் மலர்கள்பூத்து வயங்குறு மனேகமெல்லை
புகலரு மமரிதன்னாற் பூரித மாகிமன்றே. (௩௧)

மாலதி சாதிமௌவன் மயிலைமுற் கொடிகடாங்கிச்
சாலதி சுகந்தம்வீசு தண்பொழில் கதிர்கண்மாய்க்கும்
பால்நிவ் வசலமேனும் பரந்தசெம் மணியுந்தானு
மேலதிண் கதிர்விளைத்தவ் விருசுட ரின்மைவீட்டும். (௩௨)

பூத்தரு தாதினாற்பொன் மலையினைப் பொழிநருவி
னீத்தவர் தானைபோர்த்த நிலையினைப் பதுமராக
மாத்தகு மொளியாற்பானு வந்துபோ மலையமானுஞ்
சோத்தமா லயன்செய்தாங்கட் சூழுமத் துணையில்வெற்பு. (௩௩)

புறம்புசூழ்ந் திடுமண்டத்தும் புதியபல் சுகந்தம்வீசுந்
திறம்புரிந் தரியகாலச் செய்தியா னன்றியென்று
மறம்புரி வாரினரா மம்பல னளிக்குமந்தப்
பறம்புசூழ் நெறிவிளங்கா பண்ணவர் தமக்குமன்றே. (௩௪)

பத்தியி னடிசூழ்வானோர் பார்த்திழி யருவியோட்ட
மத்தலை நின்றதென்னென் றதிசய முறவவ்வெள்ளிக்
குத்திரம் வேள்விவீதி கோத்திரத் தருகியோடி
மெத்திய வெப்பமாற வீழுத லொழியுமாங்கே. (௩௫)

கோததிர மதிற்சுவேத குஞ்சர மமுதவாவி
சேத்திர ளமருங்காம தேனுவெண் மாடமாதி
காத்திர விடயமாய பரிசத்தாற் காண்பதல்லா
னேத்திர விடயமாகப் பிரித்துநேர் காணொணாதால். (௩௬)

முனிவர்பூ வெடுப்பவெட்டா விடபத்தை முரண்மால்யானை
யினிதுகை நீட்டித்தாழ்த்தாங் கெடுத்தபின் விடுத்துச்செந்தே
னணிமழை மலர்பூமாரி நல்குமா வர்த்தமிக்க
புனித சங்காரித்தங்கள் பொழுதொன்றிற் பொழிதல்போல. (௩௭)

மாதவ ருடசந்தோறும் வாலதிச் சாங்கந்தானே
சோதனி யுபாங்கமாகச் சூழ்ந்துவை கறைமுற்காலத்

தாதர முறைப்பநாளு மலகிடும் பணிமேற்கொள்வ
பூதர மதனில்யாண்டும் புல்லின மளப்பிலாத. (௩௮)

அலகிடு மிடங்கடோறு மலகிலா நிரந்தமங்கண்
வலனுறு காமதேனு மபசல மதனுனீவப்
பலமுகச் சிவபூர்த்தாதிற் பண்ணிறக் கோலஞ்செய்வ
குலகரி யருவிமொண்டு குழுமிநன் முன்றில்வார்ப்ப (௩௯)

கேசரி யருவியாடிக் கெழுவுதஞ் செயன்முடங்கு
மாசரி முனிவர்பின்னல் வள்ளுகி ருளர்ந்துலர்த்தற்
காசரி தங்கணீட்டி யத்தொழில் புரிவவேர்க
டேசரி வெயிலுணக்கு மருத்துவர் சிவணமாதோ. (௪௦)

நளிர்சுவைத யேல்லைகீர நாலேயே புரையுமேனு
மொளிதிக ழுவரியேய்க்கு முற்பலத் தெழுமென்றூதி
னளிகள்செவ வழிசெய்செம்மை யம்புய மலரினோர்காற்
களிமதுக் கடலைநேருங் கவினுமக் கைலைப்பாங்கர். (௪௧)

அமரிபூ ரிதவலந்தை யளப்பில கீரவேலை
விமலன்பின் னுளில்யார்க்கு மளித்திட விழையிற்செய்த்தா
யமருநம் வரவுதாழ்க்கு மண்மிப்பல் லுருவமாக
வெண்மையளித தருளயாழ்து மென்றவ ணிருத்தலேய்க்கும். (௪௨)

மாடுபஃ றடத்தவாளை வாவிவான் கிழித்துக்கற்பஞ்
சாடிமா டங்கடாக்கிச் சலமலர் மணிபொன் வீழ்த்தல்
வாடிலா வர்த்தமேசம் வர்த்தசங் காரித்தங்கள்
பீடுறு புட்கலாவர்த் தம்மழை பெய்வமானும். (௪௩)

வேறு.

பூதிநிறை மெய்யர்விழிப் புனல்பெருக விருந்தசையா
தோதியர்நோற் கின்றூர்க்கண் டுறுபகலின் மதிச்சிலைதான்
சீதளநீர் பொழிதலென்கொல் செப்புகெனச் சிலம்பிதன்மெய்ச்
சோதியினென் றிறைதருவார் துணிபுணரா வாதிகள்போல். (௪௪)

வேறு.

சரியையே முதல்மூன்றுந் தனித்தனி புவியிற்றங்கி
யரியசாற் சாலோகாதி பதந்தொறு மமர்ந்துவாழும்
பெரியர்முன் னெறியின்மேன்மேற் பிறங்குநன் னெறியின்மேவி
புரியநூன் மரபினின்றங் குவகையிற் பொலிந்துவாழ்வார். (௪௫)

மறைபாரா யணர்களோர்பால் வாக்கியம் வகுப்பரோர்பா
னிறைபொருள் விரிப்பரோர்பா னேதிநீத் தொழிப்பரோர்பா

லறைவெ ருள் சிவனேயென்று வளவையா னிறுப்பவோர்பாற்
பொறையரு ளடக்கம்வாய்மைப் புனிதமா தவர்கள்பல்லோர். (சசு)

ஆகம மிருபாவெட்டு மையமுன் ஞெபமுன்றும்
போகமுற் றுணர்ந்துதம்பாற் போந்தயர் பாசசத்தி
யேதுறப் பசுத்துவதனை யிரிந்தருட் சிவமேதாமே
யாகவைத் தருளும்போத காரியர் படங்கள்பல்ல. (சஎ)

வேறு.

மூற்றுணர் பரமன் ருத்திர வடிவின் மொழிந்து வேதத்தை யாகமத்தைத்
தெற்றென வுணரும் பாடிய வடிவிற் செய்து றவுயிர்களா மேஞேர் [தா
சொற்றநூல் களினம் மறைத்துணி பாய்ந்து துளங்கலெ னவன்செ யாகமத்
விற்றெனத் தேர்ந்து தெளிகவென் றுரைப்ப ரிவைமுடி வொன்றென வு
[ணர்ந்தோர்.

வேறு.

இந்த குங்கைலப்புறத் தின்னுமெண் ணிலவா
மெய்த் தருந்திரு வளனெலாம் விளம்புவா ரெவரே
யத்தனிப் பொருப் பளவதிற் சிருங்கங்க ளவற்றின்
மத்தியிற் றிருக் கோயிலின் வளஞ்சிறி தறைவாம். (சகூ)

ஓது தன்னகத் தமர்ந்தரு ளிறையென வொழியா
வேத னண்டமுட் புறம்பெலாம் விரிந்தா தியதாய்க்
கோதி லாதபல் வகைச்சிலை யுலோகங்கள் கொடிகண்
மீது பின்னு*குஞ் சம்பல விளங்குவதாகி (ருo)

நீடு வெள்ளொளி யாங்கணு நிறைக்குமக் கைலை
நாடு மேலவர் காட்சிக்கு விடயமாய் நாற்பான்
கோடி யோசனை யுந்தங் குலவதிற் பாதி
யாடு யோசனை யகற்சிபெற் றுடையதப் பொருப்பில் (ருக)

பாங்க ராயிர கோடிமா சிருங்கங்கள் பரம்பி
யோங்க நாப்பணிற்† கருணிகா காரமாயுவம
னீங்கி யையிரு கோடியோ சனைவரை நிமிர்ச்சி
தாங்கி யத்துணை யகன்றொரு சிருங்கமன் றயங்கும். (ருஉ)

ஆய தோர்சிக ரத்தின தடிசுலாய் முடிகண்
மேய லான்சிக ரம்பல வவற்றடி மேவிப்

---

* குஞ்சம்-லதாக்கிருகம். அது ஈண்டு முனிவர் வாசஸ்தானம்.

† கருணிகை-தாமரைப்பொகுட்டு.

பாய சேண்முடி சூழுறப் படர்வன வனேகஞ்
சேய வாங்கவற் றடிமுடி செறிவன வனேகம். (௫௩)

அன்ன வற்றடி சூழ்வன வவற்றடி சூழ்வ
வென்ன விவ்வகை போரொரார்சூழ் நிரைமுடி யெனையும்
பன்னு மேன்முடி யளவினிற் பதின்மடங் கதிகந்
துன்னி நின்றகீழ்க் கீழ்விரி தொகையின வாகி. (௫௪)

சிகரம் யாவையுங் கணிதநூற் றேர்ச்சியிற் சிறந்தோர்
புகலுமா பெருந் தொகையினு மடங்கிடா புள்ளூர்
தகைய வானவ ரிருவரித் தொகையெனத் தாங்கள்
பகர வெண்ணின்மால் பிரமன்பேர்ப் பொருந்திற பரிப்பார். (௫௫)

அலகில் கோடிமா சிகரங்க ளென்னவே யமைந்து
நிலவு மாங்கவை யெவ்வொரு சூழ்நிரை யினமொத்
திலகு மாடக மிரசித மிந்திநன் சிலைகள்
குலவு நீண்மணி மரகதங் கொழுங்கதிர் வயிரம். (௫௬)

படிக மாதிய வடிவமாய்ப் பஃறரண்டத் திருளுங்
கடியு மின்னவை யாவினு முயர்ந்துமுன் கழறு
முடியி னின்றதோர் முடித்திறன் யாவரே மொழிவார்
வடிவி ளொலது மாணிக்க மபத்ததாய் வபங்கும். (௫௭)

இந்த மாமுடி மேலதா யிலங்குறுப் பெவர்க்குஞ்
சிந்தை யாலுநின் றளப்பரி தாய்நெடுஞ் சேண்போ
யுந்து காஞ்சன மாமதி லொளிர்மணிக் கொடுங்கைப்
பந்தி யோடுமச் சிகரத்திற் சூழ்ந்தொளி பரப்பும். (௫௮)

இருங்கவின் கொளு மன்னுத னுச்சியி னிலங்கி
விரிந்த கோடியோ சனைத்துணை வியனிடத் தாகி
வரங்கொள் கோடிமா மேருவின் வயங்குகோ புரநீள்
‡பிருந்த மோடுறு வாயில்கள் பிறங்குவ தாகி. (௫௯)

அணி யுறுத்திய பஞ்சரத் தினங்களா லமைந்த
திணிய வாவர ணங்களோங் கிலங்குறு சீர்த்தாய்
மணிகொ ளேமகல் லாரமல் கேமவான் றடங்க
ளிணையி லேமவுய் யானமுன் னிலங்குவ தாகி. (௬0)

கருது தாங்கடார் தனித்தனி வாழ்பதங் களிறு
யிரமடங் குயர் வளத்தவா யிமாசலே யெழிற்குஞ்

‡ பிருந்தம்-கூட்டம்.

சாரூபன் குகன் மாலய னரிமுனோர் சதத
மருவி வாழ்வுறு பதங்கண்மன் வயங்குவ தாகி. (௬௧)

கோல மேருவை யொத்தவர் குடிலமா முடியோர்
சூல டங்கதண் டங்கரம் பரித்தவர் துலங்கு
நீல கண்டத்தர் கராளதந் தத்தினர் நிலவும்
பால நேத்திர ராலயாய் நாகலா பரணர். (௬௨)

வேறு.

ஆயபல் பூதநாத ரளவிலர் சூழ்வதாகி
யேயமா வலங்காரங்க ளனைத்துமார்ந் துலகமெல்லாம்
வாயவற் புதங்கொண்மேனி யுருத்திர கணிகைமாதர்
மேயபல் குழாங்கள்சூழும் விளங்கமிக் குடையதாகி. (௬௩)

ஆன்றவ ரகத்துமென்று மமர்ந்துவீற் றிருப்பதாகிச்
சான்றவர் துதிசாரூபந் தாங்குருத் திரர்பல்கோடி
தோன்றல்கள் சூழ்வதாகிச் சொல்லினும் விரைவினெங்கு
மேன்றுசெல் விமானகோடி யெங்கணுஞ் செறிவதாகி. (௬௪)

கிளருயிர் நிரமாநீல ○கிருதசோ பானத்தாலுந்
தெளியொளி மணிகளாற்சித் திரித்த||குட் டிமங்களாலுந்
தளர்வில்பல் வயிரத்தம்பந் §தத்தகாஞ் சனத்தபித்தி
யொளிசெயு மிந்துகாந்தத் துலப்பில விடங்கத்தாலும். (௬௫)

சவிதிகழ் பதுமராகச் சாளர வரிசையாலு
மிவைமுத லளவிலாம விலங்குறுப் பினங்களாலுந்
தவலறத் திகழ்வதாகித் தாளமத் தளங்களாதி
திவியமா வியம்பவிக்கும் பல்கணஞ் செறிவதாகி. (௬௬)

வரையறு மணிவித்தார மண்டபஞ் செறிவதாகி
யுரைசெய்தம் மதிகாரங்க ளொழிந்தவ ரளவிலாத
வரியிர வேந்திராதி யமரர்சா யுச்சியத்திற்
புரிவொடு சண்டசாமீ பம்முறீஇப் பொலிவதாகி. (௬௭)

தந்தொழி னிகழ்ச்சியாவுஞ் சாற்றிய வாங்குச்சார்ந்த
விந்திர னயன்மாலாதி யிமையவர் முனிவரேனோர்

○ கிருதம்-செய்யப்பட்டது.

|| குட்டிமம்-கற்படுத்தநிலம்.

§ தத்தம்-தப்தமென்னும்வடமொழி தற்பவமாய்ப் புடம்வைக்கப்பட்ட வென்னும் பொருட்டது.

வந்துசா மீபத்தெய்தி யுட்புக வணங்கியேத்து
நந்திமண் டபமுன்மேவி நலம்பெறத் திகழ்வதாகி. (௬௮)

ஆயிர கோடிசோம சருக்கரோ டங்கியொன்றாய்
மேயின வென்னயாண்டும் விமலதே சுடையதாகி
வாயிக மாதிமூன்றுக் ககோசர வடிவமாகிச்
சேயவென் னறிவுக்கெட்டா வளம்பல செறிவதாகி. (௬௯)

செழுந்திருச் செம்பொற்கோயி லொன்றுசேர்ந் திலங்குமாங்கே
யழுந்துறு மிடரினீங்கி யாருயிர் யாவு மின்பந்
தழுஞ்சிவத் துவப்பேறெய்தச் சகளமா யகளமாகி
யொழிந்திடா தியாண்டும்வேறற் றுறைபொரு ளொன்றுதானே. (௭0)

திருவரு ளதனாற்பால சந்திரன் றிரைசெய் கங்கை
மருவுறு மிதழிவேணி மாணிக்க மகுடமாண்பும்
பொருவருந் தூவெண்ணீற்றுப் புண்டர நுதல்வனப்பு
மரிநில வனன்முக்கண்ணு மாககுழை யணிந்தகாதும். (௭௧)

அருமறை யாகமங்க ளாதிமெய்ந் நூல்கணந்தி
திரிபுரைக் குபதேசிக்குஞ் சீர்நிறை திகழ்செவ்வாயு
மரியுறு வெண்மைமாற்றிக் கருமையன் றளித்தவாலம்
விரவுறு களனுநாக பூடணம் விளங்குமார்பும். (௭௨)

ஒருதிரு முகனுநான்கு புயங்களு மொழியாதென்றும்
விரிதரு கருணைநோக்கு மேருவி னருவிமானு
முரனமர் மநுமுன்னூலு முனைமழு வபயமொப்பில்
வரதவண் கரனும்யாத்த திருவரைச் சருமமாண்பும். (௭௩)

இருவினை யொப்புவாய்ந்து மலபரி பாகமேய்ந்து
திருவருள் பதியப்பெற்றுச் சிவத்துவ விளக்கமுற்று
மருவினர் மருவுகின்றார் மருவுவா ராயவெண்ணில்
பெரியவர்க் குலகநாடு பிறங்கிய நகரியாகி. (௭௪)

உறைதரு மனைகளாகி யுலாவரு வீதியாகி
நிறைமலர்த் தடங்களாகி நீண்மலர்ப் பொழில்களாகிக்
குறைவிலுய் யானமாகிக் கோதிலுப் பரிகையாகி
மறைமுழங் காசுமேவத் தாணிமண்ட பங்களாகி (௭௫)

சித்திர மணிமன்றாகிச் செய்மணி யணிகுன்றாகி
நித்திய நிதிகளாகி நிரந்தபன் னதிகளாகி.

• பத்தரு பெரியர் யாருந் தனித்தனி யமர்ந்திட் டாங்கே
சுத்தவத் தவிதா ரங்கந் தோய்வுற விரித்த வாகி. (எசு)

வேறு.

அரவணையான் சிந்தித்தே தாவிடுவவாகியுருமறையான் சென்னிதனக் கணி
ய வாகிச், சரவணத்தான் கைதொழுது சார்வ வாகிச் சார்ந்தார்க டமக்கெல்
லாஞ் சரண மாகிப், பரவுவார் பாவங்கள் பறைப்ப வாகிப் பதினெட்டுக் கண
ங்களுஞ்சீர் படிப்ப வாகி, விரவுநெறி வினையார்கள் குறுகா வாகி விழைந்து
குறைந் தண்டத்தாலரக் காப்ப வாகி. (எஎ)

அரும்பித்தசெய்ஞ்ஞாயிறேய்ப்ப வாகியழுகெழுத லாகாத வருளே யாகிச்,
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்வ வாகிச் சோமனையுங் காலனையுங் காய்ந்த வா
கிப், பெரும்பித்தர் சேர்ந்துபிதற் றவன வாகிப் பிழைத்தார்கள் பிழைப்பறி
ய வல்ல வாகி, விரும்பித்தங் கையாலன் புடையா ரிட்ட விரைமலர்க டாம்
விரித்து நிறைவ வாகி. (எஅ)

ஒருகாலத் தொன்றாகி நிற்ப வாகிழூழிதோ றூழியுயர் வுடைய வாகிப், பரி
யோடு பற்றுமுனி மைந்தற் காகப் பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்
த வாகிப், பொருளாளர் பொன்னுலகாய் நிற்ப வாகிப் புகல்விசும்பை யூட
றுத்துப் பொலிவ வாகி, வருமாசு மறுக்குமொ மாண்ப வாகி, மந்திரமுந் தந்திர
முமாய வாகி. (எகூ)

உருவிரண்டுமொன்றோடொன் றொவ்வா வாகியுருவமெனக் குறித்துணர
வொண்ணா வாகிப், மருநூபூலும் பல்சிலம்பு மார்ப்ப வாகிப் புகழ்வார்கள் பு
கழ்தனைய வல்ல வாகி புரைமாலை யெல்லாமு முடைய வாகி புரையாழி யா
லூசாரப் படாத வாகி, யவ்வமாத்தி ரையிலடங்கி யமர்வ வாகி யகலமனைகளிற்
பார்க ளில்லா வாகி. (அ௦)

• அணியனவுஞ் சேயனவு மல்ல வாகி யடியார்கட் காரமுதப் பெருக்கே யா
கிப், பணிபவர்க்குத் பாங்காக வல்ல வாகிப் பற்றற்றார் பற்றுநின்ற பயனே
யாகி, மணியனைய பொன்னனைய மாண்ப வாகி மருந்தாகிப் பிணிதீர்க்க வல்
ல வாகித், திணியரக்கன் றனதாற்ற லழிப்ப வாகிச் செப்பருமற் றெப்பொரு
ளுஞ் சேர்வ வாகி. (அக)

வேறு.

இன்னன பலவு மாகி யிருநிலத் துயிர்க ளெல்லா
மன்னல முற்று மேவி நயப்புறப் போந்த வாக்கின்
மன்னெனை யாண்ட தெய்வ மாசிலா வீணை யாதிச்
சொன்னலம் பெறமுன் போற்றுந் துதிக்கிலக் கியமாய் நின்ற. (அ௨)

மலர்தரு தூய செந்தா மரையவர் மருவ வாய்மை
நலனிலா மனைமக்க செய்ய நற்றுணைப் பதமுமேவி

யிலகெழி லருணன் மேனி யிமையர்தெமை யாளு மண்ண
லுலகமுற் றொருங்கு வாய்த்த வுமையருட் சத்தி யோடும். (அ௫)

ஆயிர கோடி ஞாயி றுங்சொருங் குதித்தா லென்னப்
பாயொளி கான்று மீது பணிமதிக் கவிகை காப்ப
மீயுற மணிவி தானம் விரைகமழ் மென்போ தார்ந்து
மாயிருங் கண்ம டங்குன் மடங்கின மிமிர்ந்து தாங்கும். (அ௬)

ஆரதன பீடத்தம்ப ராருயிர்க் கின்ப மேவ
வீரிதரு கிரீடை செய்து வீற்றிருந் தருளு மென்று
வோமிகு மலையத் தெம்மான் வழங்கின னிமையத் தன்னை.
பாவனைக் பணிந்§வி ருவும் பரிசினைப் பகர லுற்றான். (அ௭)

திருக்கைலாயச்சருக்கம்

முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-௨௮௭.

கௌரிதாண்டவச்சருக்கம்.

எம்மையா ளுடைய கோன்வீற் றிருந்தருள் கைலை மேன்மை
பொய்மை தீர் தவத்தீர் முற்றும் புகல்வதெற் கியலு மோமே
லம்மையண் ணலைவி ருவி சுவபுரி யடைந்து கோற்கச்
செம்மை பஞ் சடிலத்தெம்மான் செய்நடச் சிறப்புச் சொல்வாம். (௧)

அ[illegible]திருக் கைலை தன்னி லண்ணறன் னிடப்பான் மேவுஞ்
[illegible]தியெம் மன்னை யோர்காற் றனித்தெழுந் திறைஞ்சி நின்று
புத்திரத் திகளை யன்பாற் போற்றிவே ண்டுநர் தமக்கு
[illegible]திய முதல்வ ருனை நியமங்கொ ணிமல மூர்த்தி. (௨)

[illegible]னக மேலான் வேதன் றன்னகம் வீட்டு மேலாய்
[illegible]னக வாசா மங்கைச் சொன்னகங் கணம்ப ரித்தோய்
[illegible]னக மதிகொன் வேணி யின்னக மிதழி வேய்ந்தோ
பென்[illegible] மெனவே யிந்த மன்னகத் திருந்து வாழ்வோய். (௩)

ஆரண முதல்வ போற்றி காரணக் கரியாய் போற்றி
வாரண முரித்தாய் போற்றி மாரண சூலி போற்றி

§ பணிவிருவுர்-பணிந்துவிருவும். வரிப்புனைந்து என்பதுபோல.

பாரண காரண போற்றி காரண பரம போற்றி
பூரண புனித போற்றி தாரண புயங்க போற்றி. (௪)

என்னநின் றேத்தி யன்னை யிறைவநின் னடனம் பல்வே
றுன்னுறு மியலை யொன்று முவற்றிய லிடநதேர் கில்லேன்
பொன்னணி பன் மன்றின் முன்னீ புரிநடம் புரிந்து நோக்கி
நின்னரு ளொருவு றாது நின்றனை முயலகை கூர்ந்தேன். (௫)

கமலத்தி னறுந்தேன் மாந்திக் கடிமலர் பின்னுந் தேடும்
பமரத்தி னின்ன டத்தின் பாலுளம் விரும்பு மேலுஞ்
சமலத்தாக் கறிவொ ணாதாய் தாண்டவ பேத மின்ன
நிமலநத் தலங்க ளின்ன வென்றிவை நிகழ்த்துகென்றாள். (௬)

கிளந்தசொல் வினவி யெம்மான் கிரிசைகே ளுலகம் யாவும்
வளந்தரு நமது கூத்தின் மயமென வுணர்தி யானி
னுளந்தவ மகிழ யாமு மொப்பிலா நடனந் தில்லைக்
களந்தனிற் புரிகாற் சாம கானநீ யாக்குச் செய்தாய் (௭)

வேறு.

தயங்கிய சாம கானத்தி னின்றுஞ் சரிகம பதநியேழ் சரங்கள்
வயங்குறு சட்ச ரிடபகாந் தாரமத்திம பஞ்சம மதன்மே
லியங்குதை வதமே நிடாதமென் பெயர்க ளியைந்துமா யூரமே யிடப
மயங்கிர வுஞ்சங் கோகிலந் துரக† மாம்பல வோசைபோன் முறையே. (௮)

மூன்றன்பி னொன்று மொலித்தெழுந் தனவா லோதுமவ் வேழ்சுரங் களினு
னன்றுநம் மிடையே யெழுவித நடன நலம்பெறத் தோன்றின நளிர்பூ
மன்றலங் குழலா யுலகுயி ரோர்ந்து வழிபடீஇ யின்புற மதித்தே
யினிநீ கேட்டி யிவற்றெழு பெயரு மடங்கலு மிசைத்துமென் றியம்பும்.

மாதவர் பரவு மானந்த நடனம் வயங்குறு சந்தியா நடனங்
காதலி நின்பேர்க் கௌரிதாண் டவமே கவின்பெறு திரிபுர நடன
மோதுமா காளி தாண்டவ முனிதாண் டவமொடு முலகசங் கார
மேதகு நடன மெனுமிவை யெழுநாம் விதந்தன னும்மென றுணர்தி. ( )

வேறு.

பிரமகற் பங்க டோறும் பேணுநர் பொருட்டா லித்தத்
திருநட மேழுஞ் செய்துஞ் செப்புமத் தினங் கேண்மோ
வரவுமம் புலியும் போற்று மருட்டில்லை யம்ப லத்திற்
பரவுமா னந்த தாண்ட வஞ்செய்வோம் பைம்பொற் பாவாய். (௧௧)

† ஆம்பல-ஆறனுருபு விரிந்த யானையின் றிரிசொல்.

இவர்மணி மாடக்கூட லிரசித சபையி னின்று
தவாடி பாவச் செய்துஞ் சந்தியா தாண்ட வஞ்செம்
பவளமெல் லிதழி யின்பேர்ப் பரவுதாண் டவத்தையென்றுஞ்
சிவமிகு திருத் தலத்திற் சிற்சபை யதனிற் செய்வோம். (௪௨)

‡அத்திரி கூட வெற்பென் றறைதிருக் குற்றா லத்திற்
சித்திர சபையிற் செய்வோந் திரிபுர தாண்ட வம்பூங்
கத்திகைக் குழலி யாலங் காட்டினிற் காளிதாண்ட
வத்தைநன் கியற்று கிற்போ மிரத்தின சபையின் மாதோ. (௪௩)

தாம்பிர சபையிற் றேவ தாருமா வனநெல் வேலி
யாம்பிர பலதலத்தில் லாற்றுது முனி நிருத்தங்
காம்பிரங் குறுதோ ளீசவ காரதாண் டவநனை யாவுங்
கூம்பிர வதனி னின்று குலவுற வியற்று கிற்போம். (௪௪)

இவ்விய னடன மேழு மொந்திழா யியற்றி டங்கள்
செவ்விதி னுரைத்தா முன்றன் சிந்தையி லார்வ மிக்க
தெவ்விய னடன மோது கென்னவென் போர்க டங்கா
ணைவ்விழை வுற்றே னன்ன தலமெவ னருள்க வென்றாள். (௪௫)

அன்னையாங் குரைப்ப வெங்கை யருள்செயு மமலநா முன்
மன்னடம் புரியு மால வாய்மது ராபு ரிக்கு
முன்னூறு வடகீழ் பாலின் மூன்றரை யோச னைத்தாய்ப்
பன்னுமெல் லையினுண் டோர்பொற் பதியது யிதழிக கானம். (௪௬)

அயவனஞ் சகல தேவ சேவித மாகு மாங்கே
இவ்விய நமது ரூப சிவக்குறி யுருதி யாகி
மெய்வ்வெய வுபதரீக விலகுமான் றதிலெஞ் ஞான்று
மைவவிழி யிமய மாதே மன்னிவீற் றிருந்து வாழ்வோம். (௪௭)

என்றிவை யருளி னேந்தி யெம்பிரா னியம்பு மேலு
மன்றிசெய் பிரணவார்த்த நாமனை யுணர்த்தி யம்பா
னின்றொளிர் கொன்றை யிற்போ னிலங்களிற் றலங்க டம்மின்
வென்றிகொ ளித்த லத்தினமக்குள விருப்பு மேலாம். (௪௮)

மதிநுதற் பவளச்செவ்வாய் மதாரிக் கயற்கட் கோங்கின்
கதிர்மணி யாரக்கொங்கைக் கனங்குழைக் கௌரி கேட்டி
விதியரி புடவி நாகர் விபுதர்கள் பிருகு முன்னோர்
கதியளி மூலக் கானிற் சூழ்ந்தெமை யருச்சிப் பாரால். (௪௯)

---

‡ அ-சட்டு.

சகலகா மியங்க ளுக்குந் தவமொன்றே யேது வாகும்.
வகையுயிர்ப் பயிர்க ளோம்ப வருசரி யாதிக் காலிற்
றகையரு ணன்னீர் பாய்ச்சுந் தலைவிநீ யாங்கட் பூசை
பகர்தவம் புரிதிநின் பேர்ப் பயனடந் தெரித்து மென்றான். (உ0)

அத்தனன் மொழிவி னுவி யன்னையுள் ளுவகை கூர்ந்து
நித்தன தருளின் மேன்மை நினைந்தவ னடியிற் றாழ்ந்து
பத்தியி னிறைஞ்சி நீங்கா விடைபெறீஇப் பரவு மக்கா
னத்துறை மதிக்கெ ழுந்தா ளகிலமு நலம்பெற் றுய்வான். (உக)

பொன்னரி மாலை யாதி புதுமலர்த் தொடைய லாதி
நன்னரி னணிந்து சாம்பூ நதத்§தடர் குயின்ற தண்டிற்
றுன்னரி வயிரத் தாற்றிய நலங்கதித் திலமேல் வேய்ந்த
பன்னரி தாய சோதிப் பசுங்கொழில் விமான மாங்கே. (உஉ)

அமரரிற் சிலர் தாங்கி† யந்திகங் கொணமுன் னிற்க
வெமையளித் தருளு மன்னை யிறைவனை யகத்திற் றாங்கி
பமரமெல் லோதி யார்ப்பப் பாதநூ புரங்க ளார்ப்ப
விமைகதிர்க் கலாப மார்ப்ப வியம்பதி னெட்டு மார்ப்ப. (உங)

மாதவர் முனிவர் போற்ற மற்றவர் மகளிர் வாழ்த்த
வேதமில் விபுதர் யாரும் புட்கலா வர்த்த மேய்ப்பப்
போதரப் பொற்பூ மாரி பொழிதரப் புவனம் வாழக்
காதலின தன்க ணோரா கணித்துவீற் றிருந்தாண் மன்றே. (உச)

வானிம கரன்பாற்பானு மண்டலத் திறைவன் போலத்
தூனமர்ந் தருளா முனி தரிசனத் துணர்த்து வாள்போன்
மேனகித் திலவி மானம் வீற்றிருந் தருளு மன்னை
தேனல ரல்கல் வானோர் காவினர் செலச்செல் வாளால். (உரு)

அன்னையாங் கெழுதன் முன்ன ரகிந்திகை கமலினிப்பேர்
மின்னனார் முதல னேக சேடியர் விரவிச் சூழ்ந்தார்
சின்னமெக் காளந் தாளந் திமிலைசல் லரித டாரி
யின்னிய முள்ள வெல்லா மியக்கினர் கணங்க ளெல்லாம். (உசு)

பன்னிறக் கவிகை தாங்கிப் படர்குநர் பல்லோ ரம்பொற்
றன்னுகாற் கவரி வீசிச் சூழ்குநர் பல்லோ ரங்கை
மன்னுகோ டிகங்க டாங்கி வருகுநர் பல்லோர் தண்கான்
முன்னுறு சிவிறி வீசி முடுகுநர் பல்லோர் சூழ்ந்தார். (உஎ)

---

§ அடர்-தகடு. † அந்திகம்-சமீபம்.

தூங்கால் விசைகள் பாடுஞ் சூதர்மா கதர்கள் பல்லோர்
மங்கல மெடுத்துப் பாடும் வந்தியர் பல்லோர் போந்தார
வங்கிய முதல கோட வகிமுதற் கருவி யேந்தி
யங்கிசை யெழாலி னின்ப வமுதம்பெய் தனேகர் சூழ்ந்தார். (௨௮)

மேயநான் மறைகள் வீற்று வீற்று நின்றி சைப்பார் பல்லோர்
தூயவம் மறைக ளாலே சுவத்தியோ துநர்கள் பல்லோர்
சேயதங் கிரங்க ளோதுஞ் செம்பொரு டிரட்டி நேர்நின்
றூயபன் னூதிக ளாங்கே யன்பொடு பகர்வார் பல்லோர். (௨௯)

புயனிறக் கோகி லங்க போதக மராளம் பூவை
பயின்மொழிப் பலாச னங்க ளாதிய பறவை தத்த
மியல்பின் வாழ் பஞ்ச ரங்க ளேந்தியவ் விசையி சைப்பித்
தயில்விழி யரம்பை மாத ரளப்பில ரடுத்துச் சூழ்ந்தார். (௩0)

திரிமருப் பரிண மோவாத் திறல்கெழு மேட மிக்க
கருமுக வாதி தத்தங் கைக்கொள் பொற் றொடரி னோடு
மருவுறக் கொண்டு செல்லும் வானவ ரன்ன மாக்க
டருதொழி லருமை காட்டிச் சார்ந்தன ராங்கட் பல்லோர். (௩௧)

வீரமே யுருக்கொண் டன்ன விசையையே சயையங் கையிற்
சேரமா விடப மீது திகழ்தரு பொற்கோ றாங்கி
நேரிரு பாலுஞ் சூழ நெருக்கினை யொதுக்கிச் செல்லத்
தாரணி முழுது முய்வான் றண்ணரு ளூக்கச் சென்றாள். (௩௨)

இத்தகை யோடு செல்லு மெம்பெரு மாட்டி யாங்குச்
சித்தமீ தன்பு கூரச் சீறடி பணிந்து போற்று
நித்திய முனிவர் வானோர் கிற்குரர் நிறீஇப்பல் வாயி
லத்தலை யொருவிக் காத மளப்பில கடந்து சென்றாள். (௩௩)

வேறு.

என்னகத்தென் னிருந்தவத்தா லினிதமர்ந்தா ளிறைமணஞ்செய் தெழுந்த
காலைத், தன்னகத்துச் சார்ந்தருளுந் தனையையினுந் தாயகஞ்சார் தையலார்
போன், மன்னகத்து வகையோடும் வந்தனளென் மகிழ்வெள்ள மனங்
கொள்ளாமற், றுன்னகத்திற் சொரிதலெனத் தூயருவி துலங்கிமயத் தோ
ன்றக் கண்டாள். (௩௪)

எனையகன்ற பிரிவாற்றா னென்றுளை விளர்த்துடல மின்னல் கூர்ந்தான்
றனையணுகி மாற்றுதுமென் றருள்கூர்ந்து வருமவள்போற் சமீபத் தெய்தித்
தனையவன்கண் டகமகிழ்ந்தாங் கந்நிறம்போய்த் தன்னிறமே பரவச் சார்ந்தா
னினைவரிய சுயம்பிரகா சத்தெவையுந் தன்மயமா நிகழ்த்தும் பூவை.

ஆங்ககன்று தேவர்தினைத் தொருபாதி யமரர்நா ரங்கட் பாதி
பாங்குபெறப் பூசனைசெய் கேதாரம் பணிந்தேத்திப் பவள வேணி
தாங்கியமா நதிசுலவு வீற்றிருக்கு மகிலேசன் றன்னைப் போற்றித்
தேங்குபுகழ்ச் சீசைலம் பணிந்துகா ளத்திமலை சென்று சேர்ந்தன். (௩௬)

காளத்தி மலைக்கொழுந்தைக் கற்பகத்தை யற்பகத்திற் கனிந்துட்கொள்வோர்
நீளத்தம் பவத்துழலும் பிணிக்கெழுந்த வருமருந்தை நேர்கண் டேத்தி
மீளத்தன் றனக்குலகு தனக்குவடு வினைத்திடவுள் விழைந்தோன் கண்ட
காளத்தன் றனையிறைஞ்சிக் கம்பமகன் றம்மை யுளங் களிப்பச் சென்றான்.

இன்னனபல் விடங்கனெலா மியனெறிக்கண் டினிதேத்தி யிமைப மீன்ற
வன்னைதிருத் தொண்டைநா டகன்றடியர் தொகைக்குவிரி வகிலம்போற்றப்
பொன்னவையி னுலகெலா மென்னுமுதல் கொண்டியற்றும் புனிதர் பல்
காற், பன்னுறுசீ ரனபாயன் மரபினர்தந் சீர்நாட்டின் பாங்கு சேர்ந்தான்.

அந்நாட்டிற் காருயிரா யமலமதா யருண்மயமா யண்டமெங்கும்
வின்றாட்டி மறைதகா வித்தைதிக ழிடமிதென விதந்த சீர்த்தாய்ப்
பண்றாட்டிற் குரியபவித் திரமாம்பொன் னம்பலத்திற் பரமன் மேவி
முன்னாட்டின் புலியரவுக் கியற்றுநடங் கண்டிறைஞ்சி முதமீக் கூர்ந்தான்

அப்பதியி னேகியிளஞ் சேய்மணத்தி லெவ்வெவர்க்கு மமல மோக்க
மப்பதிய வருள்பதியு மம்மகலைக் கருண்முலைப்பால வள்ளத் தீந்த
வொப்பதிக மில்பதியும் வயித்தியனார் மண்மருந்தீந் துயிர்க ளேனுயின்
வெப்பநிறுத் துடல்வளர்ப்பச் சேபாசு புரிபதியும் விழைந்து போற்றி. ( )

சாயன்மயி லுருக்கொடுமுன் றான்போற்று பதியும்பல் தலங்கள் பாங்க
ராயதனி யினமாக வங்கணிடை யமர்பதியு மாறார் கும்பத்
தேயவிருந் திருப்பதியு மாலூரமு மால்புரமு மிகந்து மேலாந்
தூயபதி யிதுவேயென் றிறைவருமூ லப்பதியுந் தொழுது போற்றி. (௪௧)

படர்வேணிப் பரித்தகன்றிப் பதமுதனீர் பரித்தனன்கொல் பரமனென்னு
தொடர்பாக நீரூறுந் தொல்பதியுந் தாயெனவோர் தொடிக்கை மாதி
னடர்கூத வினைபுரிந்த வரன்பதியு மற்றுமடைந் தாங்காங் கேத்திச்
சுடர்வேற்கை வழுதிதிரு நாட்டிமய மலையுயிர்த்த தோகை போந்தாள்.

பத்தனமெய் வெவற்றினுமின் பந்தனஞ்சார் வளங்களெலாம் பல்குஞ்சீர்த்தா
நத்தனய னுணர்வருமர் நிலைமையொரீஇ நத்தனமென் னடைப்புன் மூ*
முத்தனமென் முகாம்புயத்தான் முத்தனத்தான் முத்தனத்தமுளரித்தோன்
†யத்தனக வருண்மேனி யத்தனகம் மதிவேணி யண்ணன் முன்னான்.

---

† அத்து—செந்நிறம். * ஆதம்—விருப்பம்.

வளர்கைலை மலைதணந்து வந்துதனை மணந்தருளும் வகைமூ வாண்டி
னிளமகவாய்ச் செழியர்குல மீடேற வுலகமெலா மின்ப மேற
வளியொடுதான் முடிகவித்தாங் கரசபுரிந் தருள்பதியை யடைந்து நாதன்
குளிர்மலர்ச்சே வடிபணிந்து குலவுமிமா சலையுமைகை கூர்ந்து போந்தாள்.

சேவணத்தன் சேவணத்தன் றிருவடிபார் கிளைப்பகிலங் கிளைப்பச் சென்ற
மாவணத்தன் மாவணத்தன் சமழ்ப்பமறை யவரைமுன் வந்து நீட்டு
மாவணத்த ஞவணத்த னிச்சொலா சோதுமொழி லண்ட மேவும் [தாள்
பூவணத்தன் பூவணத்தன் பொன்னடிபோய்ப் புரிந்திறைஞ்சிப் புறம்போந்

சே-வண்ணத்தன்-சேவில்அண் அத்தன் கிளைப்ப-வந்து என்றியையும்.
சென்றமிருகத்தன்மையன். மா வண்ணத்தன்.

வேறு

ஒருவாத நகவேச முடியோது பதியாய வுமைநாதனைக்
கருவாத நகமோர முயிரோங்கி யொழிவானுள் கரைவாசக
மரு*வாத நகமோது பெருமான்மு னவதார வளமேவிய
திருவாத நகர்நாத னடிபேணி முதமோடு சிவையேகினள். (௪௬)

வேறு

இத்தக வுடனிந் நாட்டி னிற்சில புரிகள் வேட்கை
யுபத்திட முழுது மேத்தி யுத்தம னுரைசெ யாற்றிற்
புத்தல ரிதழி பூத்த பொற்புறு விபின மாட்டி
னுத்தமி யணிக ணோக்கி யுற்றன ளடியர் போற்ற. (௪௭)

அண்ணிய வமலை கேட்டங் கலர்க்குழன் முகிலின் கூட்டம்
வண்ணமாய்க் கோப வீட்ட மணிநகைத் தளவி னீட்ட
கண்ணுறக் கண்டு தோகை நடிக்கநன் னிமித்த மாமிங்
கெண்ணிய கருமம் வாய்த்தற் கெனவிரைந் தேகி னாளால். (௪௮)

அரிச்§குர லளியின் றாரி யணியமர் கணியி ருல்க
டொரிக்குநற் றரம தாளம் யாழ்முழ வாகத்தீப
விருக்கமோர் கானின் றூடல் விழைந்தபிற் கண்ணு ளாகச்
சரிக்கையெம் மன்னை நோக்கிச் சாற்றரு முவகை கூர்ந்தாள். (௪௯)

வனமகள் கிள்ளை மாலை மகரிகை பணித்தா முந்தீங்
கனிகள்பன் மணிப்பொற் பூர கடங்களா முதல தாங்கி
கனிமுக மலர்ந்து பூத்தூய் நாண்மல ரடியிற் சென்னி
குனிதர வணங்கி யேற்ப வுவகையுட் கொண்டு சென்றாள். (௫௦)

---

§ குரல், தாரி, கணியிருல்கள்—எதிர்நிரனிறையாய், தாளம் யாழோசை, முழவங்களைக்குறிப்பித்தன் கணி—வேங்கைமரம் தாரி—இசை அரி—தவளை கணி பிரமனைக் குறிக்கும்.

அருளிலா வுலோபர் செல்வ மவரனு பவக்கு மாகா
மருளுமா பிறரா றகொள்ளப் படுமெனல் வயக்கி யாங்குக்
கருமுசு வொன்றி றுத்த கைத்தளிர் வளார்கொண் டக்கள்
வெருளிய வடித்தி றால்கள் பிழிந்திடு விதநேர் கண்டாள். (௫௧)

பிழிமதுக் கடக்கொள் பூக மடலுறப் பெருக்கு மந்தி
தழுவுபல் குருளைக் கீத ரன்புரி யறத்து ளொன்றாய்க்
கழியிவ றன்மை யோரைக் கடிந்தவர் பொருள றத்தின்
வழிபுகுத் துய்வு காட்டு மாண்பினர் செயலாய்க் கண்டாள் (௫௨)

ஊடிய பிணவி னுள்ள முவப்பவா சினியின் றேற
லோடிய கனிகீண் டங்கை யொழுகிய விரத முன்னின்
றீடில்பொற் சுனைகண் மந்தி யீந்திறைஞ் சிடலை யானனேர்
நீடுகைச் சொன்ன தானஞ் செய்பவர் நிலையிற் கண்டாள். (௫௩)

உழைவயா நலிவு நோக்கி யுழுவையுள் ளுருகி முன்போய்
விழைமருத் துவஞ்செய் தீனும் வெண்மறி நாளத் தோடு
தழுவிநாத் தைவந் தாசு தவிர்த்தமு தருத்து மேன்மை
யிழைநுசுப் பிமயப் பாவை யினிதுள முவப்பக் கண்டாள் (௫௪)

குளிர்கொளும் விடம்பெ றக்கா கோதரக் குருளை பானு
வினவெயி லிடைசின் றாட வின்னலுற் றனவென் றெண்ணிக்
களிமயில் சிறைக விப்பக் கலுழன் றொழுக்கு பாலார்
களிர்கமு கிதழ்கொ ணர்ந்து நயந்துட னூட்டல் கண்டாள் (௫௫)

வேறு

இவ்வ கைப்பல மாக்களங் கேயபுள்
செய்வ கைப்பல செய்கையு மேனைய
தெய்வி கத்த சிறப்பு மடைந்துளோ
ரெவ்வ நீக்குமை கண்டுகண் டேகுவாள் (௫௬)

அம்பொற் கொன்றை யலரிதழ் மல்கலாற்
செம்பொற் பூமியத் தானமத் தேவியை
யிம்பர்க் கண்டமு தாயுண் டிமைப்பிலா
தும்பர்க் கொத்தன ராங்குறை யுத்தமர் (௫௭)

உருப்புத் தூர்ந்துயி ரின்புற வுள்குவான்
விருப்புத் தூண்ட விரைவொடு மேகினன்
கருப்புத் தூரிற் கழைகிள முத்தமிழ்
திருப்புத் தூரெனுஞ் செவ்வி வளத்தகம் . (௫௮)

ஆப கானன மேவிய வன்னைதான்
றாய மாதவஞ் செய்யத் தொடங்குமு
னேய மாதவஞ் செய்துந ரிம்முறை
வாய காவ னிறுவன் மரபென (ருகூ)

வேறு

உலகினுக் குணர்த்து வாளா *யும்பலான் வம்ப லாற்றிற்
செலுபுதன் சத்தி யாய சேட்டையை வரமையாதி
யிலந்தசத திக்கோ டமுத னைறரைக் குரோசத் தெல்லை
நிலவுறு கம்மை யூரி னிறுவினு னிமலை பின்னர். (சு0)

தெக்கணத் தனிற் குரோச மொன்றரை சென்று முன்னாண்
முகக்கணன் சிதறி யெட்டு மூவிரு மகளிர்க கோதப்
புக்கண வால்சேர் பட்ட மகனைகயிற் பொருவில் காளி
யிக்கண மிருக்கென் றேற்றி யிருத்தின னாயகன் றனை. (சுக)

செப்புமொன் றரைகுரோசத் திடைப்பிர தீசி யாசை
பொப்பில வாலவ காட்டி னுழைவிழிப் பூட்கை கெங்கைத்
துப்பிதழ்க் தகலைக நீஞ்சொற் றுடியிடைக் குமாரி தன்னை
யிப்புவி யமர்தி யென்று வியாசலை நிறுவி னாரல். (சுஉ)

வடதிசைக் குரோச மொன்றின் னெடுமறைப் பதியின் மன்னிக்
கடிசெய வாறு கோடி கன்னிமார் தமைநி றுத்தி
யிடைமல ரிதழிக் கானின் மீளவும் புகுந்தெம் மன்னை
படிதொழ விருபா லாசை யிலிங்கமும் பணியச் செல்வாள் (சுங)

பூருவ திசைகுரோச மொன்றினிற் பொழில்கள் வானிற்
சேருமு கிற்றொ ழிற்செய் தெனகரைப் பதியின் மேவிச்
சாருவ போகம வீசு தருதரு சயம்பி லிகை
நேருநீ தியுன்பு கூர நிலமுறப் பணிந்து போற்றி (சுச)

குலவிப வாசை வீதி கோத்திரங் †கவவி யூதித்
தலைபமர் ‡பெரிசை பென்னுந் தண்பதி யதனின் மேவி
யலைசிகர் மிடற்றெம் பெருமா னருட்சுயம் பிலிங்கந் தன்னை
நலனிறை யன்பிற் கண்டு நயந்தடி பணிந்து போற்றி. (சுரு)

யாமிய திசைக்கு ரோச மொன்றரை யெல்லை யேகித்
தேமல ரளிகள் கீதஞ் செய்பொழிற் கோயிற் பட்டி
யாமுகன் பதியின் மேவு மருட்சுயம் பிலிங்க மூர்த்தி
தாமலர் புரைமென் றாளிற் றலையுறப் பணிந்து போற்றி, (சுசு)

*உம்பலான்—இந்திரன் †கவ்வியூதி—இரண்டுகுரோசம்,
‡பெரிசைபூர்-பெரிசையென மரீஇயது,

நிருதிதன் றிசையிற் கவ்வி யூகியி னிலவுங் கோட்டித்
திருநகர் மணிமுத் தாற்றின் றென்கரை யதனின் மாயோன்
வருமக பதிக தம்ப முனிமுனோர் வழிபட் டேத்துஞ்
சுருதிசூழ் சுயம்பி லிங்க மூர்த்தியைத் தொழுது போற்றி. (௬௭)

மேற்றிசைக் குரோச மொன்றின் விளங்குநற் காரை யூரிற்
போற்றுசீர்ச் சுயம்பு வாகப் போந்தருள் கணேச மூர்த்தி
யேற்றுசண் டேச மூர்த்தி யிருவரும் புடையின் மேவ
வீற்றிருந் தருள்சு யம்பி லிங்கத்தை விழைந்து போற்றி. (௬௮)

பச்சிமோத் தரத்தின் பாலோர் குரோசத்திற் பரவு நல்லூ
ரிச்சையி னேகி யாங்க ணிலங்கருட் சுயம்பு வாய
விச்சைமா வடிவி லிங்க மூர்த்திமுன் மேவி யன்பா
னச்சிமென் மலர்க டூவி நலனுறப் பணிந்து போற்றி. (௬௯)

உத்தர திசைக்கு ரோச மொன்றினில் வேத வோசை
நித்தலும் பரவி யோங்கு நெடுமறைப் பதியில் யாமு
மத்தகு பிருகு நாகர் குசகேச ராதி யோரும்
பத்தியி னிறைஞ்சி யேத்தும் சுயம்புவைப் பணிந்து போற்றி. (௭௦)

வடகிழக் காசை யின்கட் குரோசமொன் றரையின் மாயோ
னிடாகன் றின்ப மேவற் கெண்ணியங் கிறைஞ்சி யன்பா
லடைவினிற் பூசித் தேத்து மரிபுர மதனின் மேய
படரொளிச் சுயம்பு மூர்த்தி பதமலர் பணிந்து போற்றி. (௭௧)

இன்னண மிமய மீன்ற விடுகிடை யிணைத்த கொங்கை
யன்னமென் னடைப்புன் மூர லளிமுர லலங்கற் கோதை
தன்னுமர் காத லான்றன் சயம்பிரு நான்கும் போற்றிப்
பின்னரவ் விதழி துன்னும் பெருவனம் புகச்சென் றாளால். (௭௨)

மலைமகள் வரவு நோக்கி வனமகள் மரக தத்த
நிலவுநீன் மணிகால் யாத்த பொற்றொடை நிரைவி தானந்
துலவுற வமைத்தல் போலக் குளிர்தளி ரிடைவ ண்டேது
மலர்துண ரலங்கு கொன்றை யடவியி னகம்பு குந்தாள். (௭௩)

ஆங்குறு மிமயச் செல்வி யனுதியா யவனி யெங்கு
மோங்குபல் சயம்புக் கெல்லா மூலமா யுன்னி யாங்கே
பாங்கினர்க் குதவு மூல விலிங்கமப் பசிய கானிற்
றேங்கொளி விரிப்பக் கண்டா ளன்புளஞ் செலுத்தச் சென்றாள். (௭௪)

உருவெனு வருவ மென்ன வோதொணு துபய மாகித்
திருவரு ளாகி ஞானச் சிதானந்த மாகிச் சிந்தைக்

கருணிறத் தாது முற்றும் வலித்தருள் காந்த மாகி
யருமையி னேக மாகி யமர்ந்ததிங் கேன்றோ வண்ணால்- (எரு)

என்றினி தன்பின் வாய்மை யின்னன பலமுன் ஞேதி
மன்றலங் கோதை பாத மரையளி நிரையிற் சூழ்ந்து
துன்றிய*நமந்து பல்காற் றுணைவனோ டலர்வா சம்போ
லொன்றுத லுருவி னுங்காண் புறத்தழீஇ யுவகை கூர்ந்தாள். (எசு)

பண்டுநற் கணங்கள் வேண்டப் பரன்கழுக் கடையாற் கணட
மிண்டுறு பவமுற் றோட்டி வீடருள் சிவகங் கைப்பேர்
கொண்டமர் வாவி யன்ன குறிக்கெதிர் குணக்கிற் றோன்றக்
கண்டுசென் றனைய தீர்த்தக் கரையின்மேற் கௌரி நின்றாள். (எஎ)

நின்றரு ளமலை பாத நேருநீஇ யனந்த ஞேதி
வன்றிற னுகர் வீழ்ந்து வணங்கின ரெழுந்து நின்றா
ரன்றவ டிருநோக் கன்னோ ரடைந்திடப் பெற்றா ரற்றா
னன்றிசெய் வாக்கை யுற்றார் நயந்தருந் துதிகள் சொற்றார். (எஅ)

மூலகா ரணியாய்த் தோன்று முக்குண ரூபி யாகிச்
சாலவின் பருளு ஞான சத்தியா யிச்சை தானு
யேலுறு செயலி யற்று மிறைவியா யிறைவர்க் கேயுங்
கோலங்கட் கிசைய நிற்குங் கோறதொடி போற்றி யென்றார். (எகூ)

போற்றிய காற்று ணுக்கொள் புயங்கர்க டம்மை யம்மை
யாற்றுநல் லருளி னுக்கி யகிகணீ ரலந்தை யீதி
ஞேற்றதேன் னெண்ண மென்கொ னுவலுதி ரென்ன வன்னோர்
பாற்றக வுடை யனந்தன் பதம்பணிந் தினைய பன்னும்- (அ0)

வனர்திகழ் முகிழக் கொங்கை வரிவிழி வளைக்கை வாழ்வே
கனர்திகழ் கண்டர் பாத முடிக்கொளக் கருதி நாயே
னினந்திக ழடியர் போற்றுங்†கமலையி லிறைவற் போற்றி
மனந்திகழ் தாமுன் னேற்ப மதிமுடி யெதிர்வர் தென்பால். (அக)

காண்டகு மலர்த்தி ருத்தாள் காட்டினன் களிகூர்ந் தெந்தாய்
சேண்டவழ் திங்கள் வேணிச் செல்வநின் றிருத்தாள் சென்னி
பூண்டிட விழைந்து னேனுற் புரிந்தருள் புனிதவென்றே
னேண்டகு தவநீ யின்னு மியற்றுதி யெய்து மென்றான் (அஉ)

* நமந்து- பெயரடியாகப்பிறந்தவினையெச்சம்.

†கமலை—திருவாரூர்

இனியெ வரேற்ப தென்ன வெந்தைவா சுகிகார்க் கோட
னினைபுநந் தாண்ட வத்தை நின்றெதிர் காண்பான் கொன்றை
வனமிசை மடுவி னேற்பார் மற்றவர் நாப்பண் மேவி
நனிதவம் புரிதி யாங்கு நாமுமை பொருட்டுப் பின்னாள். (அங)

கௌரிதாண் டவஞ்செய் வோமக் காலைநின் மருட னம்பொற்
றிவியகுஞ் சிதத்தாள் சூடச் செய்துமென் றருளிச் செய்தா
னவனரு டலைக்கொண் டிங்ங னடைந்துநோற் கின்றே னன்னே
யெவமகன் றின்புற் றேனின் னிணையடி யிறைஞ்சப் பெற்றேன். (அச)

அன்னைநீ யீண்டுப் போதற் கருந்தவம் யாது செய்தேன்
முன்னுருந் சிதத்தாள் சென்னி முடிக்கொள நோற்ற தல்லா
லென்னையிங் கருள வுன்னி யெளிவந்த கருணை யென்னே
பொன்னல ரிதழி வேய்ந்தோன் புரத்தொருங் கமரு மின்னே. (அரு)

அண்ணனின் பொருட்டிங் காட லறைந்தவா றுனைக்காண் பேற்று
லெண்ணியா னேற்ற பேறு மெய்திய தின்றே யென்பா
னண்ணுகார்க் கோட னுதி நாகருங் குலமு முய்ந்தா
மண்ணுமுற் றுய்ந்த வென்று வணங்கிநின் றிலைவது திப்பான். (அசு)

வேறு.

விரிதலைக்கான் செயலொளிமாய் விசும்புநெய்ப்பி லறல்பானு விதுமுன் மாயு
மிருளரன்முன் வலியின்மல மெத்தென்று விதழி முதல் யாவுமோட்டிப்
பானுருவிற் பாதிகொள்பான் மைக்கிணங்க வவன்சடைநாற் பயோதரத்தி
னிருமுகினீ பகிர்ந்தணிந்த தெனவகிர்கொண் டிலங்களகத் தியல்பு போற்றி.

இருளினைநின் றுணையின்யா மிரிப்பவினம் பற்றிவெருண் டெம்மை வாட்டு
மிரிசைகின தோர்தியெனக் கிளத்தவரு மிருசுடரைக் கெழுமு சீற்றந் [ங்
திருகுபுதன் காற்பிணித்த செயல்காட்டு மிரண்டணியத் தேச மென்ன
வருதாள வாதனநன் னுதலணிகள் வயங்கோதி வனப்புப் போற்றி. (அஅ)

இருகுயினுப் பட்டடித்தொன் றென்றுமழி யாதிருந்தா லேய்ப்ப காய
பொருவரிய சிந்தூரப் பொடியொழுக்கு சீமந்த ரேகை போற்றி
பருமதிசா பக்கிரங்கித் தாதைமேன் முனிவுகொளீஇப் பாதி யாகி
வருமலவிற்றன்பால்வைத்தருளினள்கொலென்னுநுதன்மாண்பு போற்றி.

இருபுறத்தி லொதுங்கிவகுப் பெய்துகுழ லங்குரித்தற் கிடங் களாக
வருகிரைக்கொ ளிரண்டால வாலமே யிடைமறைந்த வகையா தென்னி
னருகிலைத்தாம் விந்துமதி மண்டலத்தி னிறைந்தெழும்பு மமுத மேலே
பெருவறப்பொங்குதலினெனப்புகன்றஃதேகிறுத்துமிளிர்புருவம்போற்றி.

காமிசைநாந் தரித்திடுநற் கழைச்சாப மலர்ச்சாய கங்க ளாதி
வாமுறக்கொண் டேற்றானை யெரித்தானை மற்றுமொரு மதனை நம்பான்
மருவுறவைத்திடுதுமியன்வலியடைந்துவெல்கவெனவகுத்தாள்கொல்லென்
றுரைசெயவப் பாமனுளங் கவர்ந்தொளிருந் திருவிழியி னுருவம் போற்றி.

ஆயமுத் தாங்கொளிய வணிநீல வாதனத்தி னமர்ந்திட் டாங்கு
மேயநடு வியன்கறுப்பு மிளிர்மணியுற் வெண்டாள விதானம் வேய்ந்த
சேயமணிச் செய்தொடையிற் றிகழ்கடையுஞ் செவ்வரியுஞ் செப்பும் வாயிற்
கேயவிரைத் தோரணத்தி னிலங்கிறைசார்ந் திருநோமத் தெழிலும் போற்றி.

குலவளிகட் குணவளியாக் குறித்தனுக வேறுற்விடாக் கொடிய வாகி
நலனறுசண் பகமிழித்து நபனவளி யருகமா நபங்கூர்ந் தென்று
மிலகுகரோற் பலத்தளிக ளெழுந்தாடிக் களிகூர வியல்பிற் றாகி
யுலவுநளிர் மணங்கமழ முயிர்ப்பெறியுந் திருநாசி யுருவம் போற்றி. (கூ௩

விருப்பூரந் நாசியின்மூர ற்கிடைந்த பரிபவத்தால் விழுமமீக்கூர்ந்
திருப்பூர வாற்றாது நான்றிறப்ப நேருற்றுங் கொளிர்முத் தோடுங்
கருப்பூர மாதிவிராய்க் கமழ்வீடி கைபிற்பொலிந்து கருப மெட்டுந்
திருப்பூர மணங்கான்று செவ்வாம்பல் வெள்ளாம்பல் செயும்வாய் போற்றி.

முல்லைமுறுக் கவிழ்ந்துடைய முருந்துவமை நினையுமேன் முதற்க யற்க
ணல்லுகா மிகாமாய்ப் பிறந்தகத்து நீத்தலுறீஇ நலியத் தன்பாற்
புல்லுபத முருவழியப் புதுவயிரஞ் செம்மணியாற் புனைந்து வைத்தா
லொல்லுமெனவியற்கைசெய்லொளிகான்றுமிளிருநகையொழுங்குபோற்றி.

அானுருவ நின்பாலே யாகுமெனல் பிரத்தியக்கத் தறிவித் தாங்குப்
பாவுமுத்தி புத்திவிழை பவர்க்கருளும் வலத்திடத்தப் பாமன் சாயை[பால்
விரவுறக்காண்டருப்பணமாங்கபோலமுங்கட்கயலொடுபோர்விளைப்பத்தன்
வரிமகரங்கொண்டெனவப்பெயர்ப்பணிகொடிருச்செவியின்வனப்பும்போற்
[றி

இருகார்க ளிருதனுக்க ளிருகிடைக ளிருவளைக ளிருச கோர
மொருகாம ரூபிவிம்ப மொன்றுபிறை யொன்றுமுகி லொன்று மௌவ
னிரைமேவு மாமதியொன் றுள்தாகி யொருவாறு நிகர்த்தி யாண்டுந்
திருவாருங் கருணைதொடர் பின்றியெழுந் திருமுகமண் டலச்சீர் போற்றி.

பணிலமெலா மிகவலறிப் பயமருவி யுடல்வெளுத்துப் படருற் றேங்கத்
தணியகல்பூ கதங்கண்முத்தஞ் சிந்துபுவிண் விரைசெலவிற் சென்று நின்றுந்
தணிவில்சதா கதியலைப்பத் தள்ளாடித் தலைவிரிந்து நடுங்கச் சாடி
யணிதிகழ்மூ வரையுமடுத் தமைந்திலகு திருக்களத்தி னழகு போற்றி.

நீண்டளவே சிறுதிவலை திருப்பூட்டு மங்கலமுற் சிதைக்கு மாற்றல்
பூண்டவிட மொருங்கயின்றும் பூதேசன் மாதேவன் புரையின் றோங்கற்

ஈண்டுகிய மாயோக ரூடியின்மங் கலநாம மியல்பிற் றுங்கி
மாண்டருபல் லணிக்காசாய் மலிதருண மங்கலநாண் வண்மை போற்றி.

அருந்தவஞ்செய் தானுமிணை யாதுமென்ன வடுக்கலுறீஇ யமர்ந்து வேய்தான்
வருந்தவிய லாதுனக்கு மதித்ததனை வருந்தலமை யென்று மாற்றந்
தருந்தகைமி னப்பெயர்கொண் டதுதணியத் தனக்குவமை தானே யாக
விருந்தவிருந் திருத்தோளு மிமையபுறுபன் மணிப்பணியி னெழிலும் போற்றி.

வளைதலுறு யாத்தலுறும் வல்லகியின் றண்டிரித்து வயங்கு செச்சைக்
கிளர்நறுந்தார் வாடுதலிற் கீழ்ப்படுத்து கூர்ப்பரத்தின் கெழுசீர் போற்றி
யளகமலை யரண்புகுந்தம் புயங்கோட லிலங்கென்று மமர வோட்டி
வளர்புவன போகமெலா மகிழ்ந்தளிக்குந் திருக்கரத்தின் மாண்பு போற்றி.

வித்துருமம் வகிர்ந்துநுதி வியன்வயிரம் பதித்தாங்கு விளங்குஞ் செய்ய
கைத்தலமார் விரனிரையு மன்னவற்றி னுகிர்நிரையின் கவினு மேன்மை
வைத்திலகுமேற்கோளாய்வாருண நூலிதன்பாலேவந்ததென்று [போற்றி.
வித்துவமெய்ச் சிரோமணிகள் விரித்துரைப்ப வொளிர்வரையின் விதமும்

இன்பாலி யெவைக்குமொரு வீசனுகர் தாவெழிற்பே ரின்பவாரி
தன்பால வமுதநிறைத் தொளிர்மேல மூடிகொள்பொற் றசும்ப ரென்ன
வன்பாச மறப்புடவி வந்தருளெங் குலக்காழி மணிக்கு நல்கு
மன்பாரு மிருஞானத் திரட்சியென வமைந்திலகு மம்மம் போற்றி. (௧௦௫)

சொன்னமலை மணிச்சிகரந் தொடுத்திழியு மருவியெனச் சுணங்கு பூத்த
வன்னமுலைத் தரளவட வனப்புங்கீழ் மலைத*னின்மேன் மலைச்செல் வானிற்
றுன்னவரி துருவக்ஷத் திரச்செலவி னடுத்தோன்று தோற்றம் போல
மன்னியவத் தரளவட மத்தியிற்செம் மணியார வனப்பும் போற்றி. (௧௦௪)

விண்டுவைமாத் திரங்கொள்வட தளிர்விலக்கி மூவர்முதல் விபுத ரோடு
மண்டமெலாந் தனில்வகித்தப் பவஞ்சமறி வறிவிலபாத் தமைத்ததேகொண்
மண்டுசரா சரம்பிரித்த வரம்புகொலென் மயிரொழுங்கும் வகைமூன் றுவி
கொண்டமைதேற்றுதல்போன்மும்மடியிலகுதிருவயிற்றின்கோலம்போற்றி

தற்பொறைகொள் வாளரிமுற் சமமென்ப முழுநடக்கிச் சுத்தா யாண்டு
நிற்பினுமிக் கன்பினருந் தவர்க்கலது நேர்தோன்று நிமலன் பன்று
ளற்பினெறிந் தோல்வேணி யாதிபுனைந் தாற்றுதவத் தாலன் ஞற்கே
பொற்புறுகைப் பரிசத்தாற் புலனாகி யுளதாகு நுசுப்புப் போற்றி. (௧௦௬)

தேவரொவ்வோ ருறுப்பாமவை திகழ்த்தோச் சிறவூர்ந்த சிவனை யங்க
மாவதொரு தட்டானே வேறுமென வதுகொண்டாங் கணிக ளார்ந்து
மேவுறுசீர்க் கடிதடமும் வென்றுறீறுத் துரோமநிரை விசயத் தம்பந்
தாவறநேர் குழியின்வலஞ் சுழியினமர் திருநாபித் தலமும் போற்றி. (௧௦௭)

* இன்—ஈண்டு நீக்கப்பொருட்டாய ஐந்தனுருபு.

சற்றினுற்பா தந்தாலென் றீற்றினுவப் பின்றியினைந் தீர்வா டன்றே
லாற்றுருபஃ றுணியாகி யதனுரிபட் டார்ந்தையுற வாம்பை வீட்டித்
தோற்றுபுழைந் தூசலினு டொறுமலைந்து தண்டமுறச் சுண்ட மாட்டி
மாற்றுயர்பொன் னுற்றோர்க்குவாழைநிறுத் தாங்கொளிர்கவானும்போற்றி.

பங்கமுருச் சலமருவிக் கால்கவைப்ப வோடியலை பதுங்கித் தன்னை
யங்குறினைந் தினைந்தலவ னதனுலை நடுங்குகுளி ரடைந்து நாளுந்
தங்குதலி னதுபெயராய்ச் சார்ந்திழியப் பவனனெண்டந் தாக்கி லோடத்
துங்கமிகு மியலெழிற்குத் துணைவேறின் றுளிர்சானுத் துணைகள்போற்றி.

கண்ணிணையாற் கயல்புகுதுங் காரகமே தன்பாடி காவ லாக
நண்ணிவரா லலைந்துவெள்ளத் துள்ளுண்டு நிலையின்றி சலியவாவந்
திண்ணியர்முன் னில்லாது பின்னின்று பிணிப்புண்டு தெறமேல செய்வன்
கண்ணினவம்புக்கிடனுய்க்கடைப்படவென் றோங்கிநிகர்கணைக் கால்போற்றி

எத்துணையு முணர்ந்தாரு மியற்கருவி யாலளந்தே யீதல் போல
நித்தியமா ருயிரொவைக்கு நிகழ்கன்ம பலதொர்தட்டி னிறுவிப் போக
வத்துவொரு தட்டினிறீஇ வழங்கியசின் சிற்பததா மரைக டம்பால் [ற்றி.
வைத்துளபொற்றராசுகொலென்வகையமைந்தமணிப்பாட்டின்மாண் புபோ

அறனிறைநின் றைந்துமட மடக்குபுநோற் றுனுங்கா துமென்றுங்
குறுகமடப் புறவடியு முளமொருங்க நோற்றல்புற வுறுப்பி னுளுங்
குறிதரவைந் தும்மொருபாற்கொண்டனகொலெனச்சாரங்குலியுமாங்க
ணிறைதாளமவற்றினுநிரைத்துவைத்தாங்கிலகுமுகிர்நிரையும்போற்றி.

பழுதுணங்கல்குவிதன்முதற்பளகொன்றுமின்றியண்டப்பகுதியாவும்
வழுவில்வியாப்பியமாகமலர்ந்தருட்டேன்பிரவகிப்பமணந்தெஞ்ஞான்றுங்
கழிபுலவிக்காலான்செங்கரத்தொளியும்புறங்கொடுப்பக்கடிந்துகண்ணீர்
மழைபொழியுமன்பருளமலர்த்தடஞ்சார்திருவடித்தாமரைகள்போற்றி.

அண்டர்பிரான்புலவிதணிப்பான்றொழுமப்பதமறையோனுமாளம்
பண்டுமுடியண்டமெலாம்பறந்துழன்றுங்காணுதுபரிந்தின்னுட்
கண்டனமக்கண்ணுதல்சேகரமெனமாமறையெகினங்கலித்தல்போல
வண்டாளமாமறைநூபுரமிசைக்கு

ஆரமரிகண்டுகனியான்பாறேன்கழைமுதல்வேம்பாகவீணை
சாரியைசார்பெயராகச்சாரிகையேகாளகண்டந்தத்தைவேயின்
சீர்கொடியதாகவரன்றிருவருட்பாவினிற்போலத்திகழ்பேரின்பஞ்
சாரவருள்பழுத்தொழுகுதண்குதலைமழலைமொழித்தகுசீர்போற்றி.

பேட்டனமும்பிடியுமலர்ப்பிரமனூர்பெருங்கானிற்பேதுற்றோட
வாட்டுமெழில்வாய்நடையுமயிலுமைந்துமசற்சுமப்பவைத்தவாய்மைச்

சேட்டியலுந்திருந்துமியற்றிருமேனித்தெய்வமணச்சீரும்போற்றி
தேட்டமெலாஞ்சிறப்பவருள்சிவகாமசுந்தரியென்றிருப்பேர்போற்றி.

வேறு.

என்றரா விறைதுதிப்ப விமாசலை யெம்பாலன்பா
னன்றுநீ புகன்ற விந்த நற்றுதி யினிது வந்தே
மொன்றிய வன்பி னோது மூவரெவ ரவரி வற்றை
மன்றவிங் கினிது வாழ்ந்து மறுமைவீ டடைவர் திண்ணம். (ககஎ)

அனந்தநீ யமல னங்கா ளறைந்தவா றடுத்திவ் வெல்லை
நனந்தலை முன்ன ரேபோ னயந்துநோற் றமர்தி யெம்மா
னினந்தர வனந்த ரம்போந் தெதிரணி யாங் கருளு மென்றுத்
தனந்தனி நின்றோர் காணுந் தற்பரை யெயிப் பின்னர். (ககஅ)

பங்கய மலரிற் சேக்கும் பகவன்மா லாதி வானோர்
தங்கரஞ் சென்னிகூப்பித் தாழ்ந்தருச் சனைசெய் தேத்தி
யெங்களை யருடி யன்னை யென்னநின் றிரப் பநாளும்
மங்கல மளிப்பாள் பாங்கர்க் கூளியர் வதன நோக்கி. (ககூ)

ஈண்டுநா மீசன் பூசை யியற்றுதற் குரிய வாக
வேண்டுப கரணம் யாவும் விழைதரக் கொணர்மி னென்றுத்
தூண்டின டன்பால் யாவுந் தோற்றிவைத் தருளும் வாய்மை
பூண்டவெம் பிராட்டி யாவி போற்றிய புரிந்தீ தாற்றும். (கஉ௦)

தவமதற் குரிய வங்க நானமே தருப்ப ணாதி
யவைதமக் கேது தீர்த்த மாகுமென் றமலை யெண்ணி
பவன்மலர்க் கரத்தின் மேவும் பாசினை நினைவிற் கொண்டா
ளவிர்மழுப் படையாங் கெய்தியடியினை யிறைஞ்சிற் றம்ம. (கஉக)

அப்பர சதனால் யாவு மாடினர்க் களிப்ப தாய
திப்பய தடமொன் றாக்கிச்சிவன்முடிச் சசிமேற் சிந்தை
வைப்பவக் கங்கை யாண்டு வந்தன ளன்ன வாவி
யிற்பய னிறைத்துத் தூய்மை யியற்றிட விமயப் பாவை. (கஉஉ)

அத்தகு மெல்லை தன்னி னருளினுன் மாபி னாடி
நத்தெறி திரைநீர் வைப நவிற்றிய காட்டு வாளா
யுத்தம முனிவர் வானோ ரிரவிமுன் னவர்க்குள் ளோகை
பொத்தவம் மனுக்க ளோதித் தருப்பணம் புரிந்து பின்னர். (கஉங)

கூந்தலை வேணி யாக்கி மாவுரியுடையாக் கொண்டு
வாய்ந்தபை ங்குசையி னுய பவித்திர மலர்க்கை பூண்டா

ளாய்ந்தசா பாலத் தங்கி யாதியா யைம்மு கத்திற்
போந்தவும் மனுக்க ளால்வி யூதியுத் தூளுஞ் செய்தாள். (௧௨௪)

உத்தம வங்க நெற்றி மார்பக முந்தி சானு
கைத்தலங் கண்ட முன்னுக் கவினிறை யங்க மெங்கு
மெய்த்திரி புண்ட ரீக மணிந்தனள் வேத கொப்ப
முத்தியைந் தெழுந்து சான் முற்முறை செபிக்க லுற்றாள். (௧௨௫)

வேறு.

தேவிமுன் னருள்பணி சேக்குஞ் சென்னியர்
சேவடி யிணைமலர் சேக்குஞ் சிந்தையர்
மேவிய பரிசனர் குழாங்கள் வீற்றுவீற்
றுவரு பொருளெலா மடைவி னீட்டுவார். (௧௨௬)

போகித னுலகினிற் போகி யைந்தரு
வாகமுர் மணிநிதி யருந்து தேனுமுன்
னாகிய* தெவ்வி மீண் டவனி புக்கவ
ஞேனைய நெருபுடை யுறவிப் பார்சிலர். (௧௨௭)

மயனமுற் கூவியொண் மணிபொன் னுதியாற்
பயனிறை வட்டகை கரகம் பாசனம்
வியனுறு மஞ்சன கடமுன மேதகு
நயமிகு பொருள்பல நவிலகிற் பார்சிலர் (௧௨௮)

ஐந்தரு வாதியி லாரங் கண்டிகை
யுந்தொளிக் கோள்கை யோதுகங்கண
முந்துபொன் மகுடங் குண்டலமுன் னுபவு
வந்தணர்கவர்ந்தவண் மலிவிப் பார்சிலர். (௧௨௯)

திரானுறு நந்தைப்த் திரைசு சீலையே
சுரபிசு மநசை யின் பெயரிற்றுய்யகோ
புரமுறு மைவகைக் கபிலை போதா
நிரையுறக் கொணர்ந்தவ ணிரைவிப் பார்சிலர். (௧௩௰)

உலகிலெண் ‡ணும்பரி னும்ப ரிம்பரி
னிலவுபஃ றீர்த்தமு மிராம்பு பொற்றத்
பிலகுவாய்த் துகிலொடு மணிக்கிருத்தியாங்
கலவநடக்கிவண் ணன்விப் பார்சிலர். (௧௩௧)

---

*தெவ்வுதல்—கவர்தல்.

‡உம்பர்—ஈறுபோலி.

கந்தமிக் கூட்டிய தைலஞ் சொரி
தந்தவெண் பொடியரி சனத்தின் வண்பொடி
யுந்துமா மலகத்தி னுலர்ந்த வொண்பொடி
வந்தவ ரேனோர்புடை யுவிப் பார்சிலர். (௧௩௨)

அரனமர் சிவபுரக் கணியு தாயகே
புரமதிற் கொணர்தரும் பொருவி றேனுவின்
பாவுறு பஞ்சகவ் வியமும் பாதனைக்
தூனுறு மாயிடை யுறுவிப் பார்சிலர். (௧௩௩)

மாபுளி யமைத்தவான் கீழும் வண்டவிர்
கிருதமொண் மதுச்சருக் கரையிக் கேழ்கிளர்
பொருள்களோ டொருங்குறப் புணர்த்த நல்லமு
தரிறப வமைக்கு நரங்க ளேனோர்சிலர். (௧௩௪)

முக்கனி யுடன்மரு த முறைசெ யைந்தமு
தக்கடம்ப லிநிறைத் தமைப்ப ரோர்சிலர்
தொக்க வான் பய நறுந் துகிலி னுல்வடித்
தொக்கநற் கடம்பல நிரைப்ப ரோர்சிலர். (௧௩௫)

தயிர்நெயி னிறைகடஞ் சமைப்ப ரோர்சில
ரயிர்முதி ரிக்குத கம்ப லார்சுவைச்
செயிரறு கனிகளி னிரதந் தெங்கினீர்
வயினிறை பொற்கட முவிப் பார்சிலர். (௧௩௬)

நறுங்குற டொிஞ்சிய தேய்வை நானஞ்சால்
புறங்கருப் புரம்புழு கொவிய குங்குமம்
பிறங்கிம சலமுகற் பெய்து சால்களிற்
றிறங்கெழு கலவைகள் சேர்ப்ப ரோர்சிலர். (௧௩௭)

சொற்படு கூரியதூய வாலரிப்
பற்பல வகைய செம்பாகச் செய்கையி
னற்புத விதவமு தபூப வர்க்கங்கள்
பொற்புற வமைத்தனர் புலவ ரோர்சிலர். (௧௩௮)

அவ்வகை யுறுக்களுங் கடவு ளின்றருஞ்
செவ்விய வயினியுஞ் செய்ய மாமணித்
திவ்விய பரிகலந் தனைத்துஞ் சீர்ப்பட
துவ்வயின் முடிவைத் துவப்ப ரோர்சிலர். (௧௩௯)

உயிர்ப்பினுஞ் சுருட்கொண் மெலி வெண்பொன் பாக்கதி
யத்தகற் பூரமிலவங்கஞ் சாதிக்காய்

முயக்குறு மேலந்த்க் கோல மேழுக
வியத்தகு வாசங்கண் மிகுவிப் பார்சிலர், (கசய)

தொண்டகந் தமருகம் படகந் தூரியந்
திண்டிமம் வளை கிணை திமிலையானகந்
தண்மைத் தளமுழா தக்கை தண்ணுமை
கண்டமுன் னியம்புநர் கருவ்வ ரோர்சிலர். (கசக)

ஆடக நவமணி யாதி யாற்புரி
தோடவிழ் பூகத மரம்பை தோரண
நீடுறு கழைநிரை நிறுவி யாங்கணும்
பீடுறு மணியெலாம் பிறக்குவார்சிலர். (கசஉ)

கற்பக மலரிழை யாதி காமரு
பற்பல பொருளிற்பூம் பந்தர் நாட்டியாங்
கற்புத மணிமல ரலங்க றூக்கமேற்
பொற்புறு விதானங்கள் பொலிவிப் பார்சிலர். (கச█)

அலகிடன் மெழுகுத லாங்கு வெண்சுதை
யிலகுற வொழுக்குத லிவைவிப் பார்சிலர்
புலனெலா மிபசலம் பொழீஇந றும்புகை
பலமல ராதிகள் பரப்பு வார்சிலர். (கசச)

மரபுளி வருமலர் மாலை யிண்டைதார்
நிரைநளு மவ்வன நிலாஞ்சு வன்னக
விரைதளிர் மலர்கள்கூ விளம்பைந் தூர்வைமு
னுரைசெய்பல் பொருள்களு முறுவிப் பார்சிலர். (கசரு)

ஒன்பது கண்டமு முரைசெய் தீபமு
மன்புவி முழுதினும் வயங்கு மாண்பொரு
ளென்பன யாவையு மீட்டி யாயிடை
யன்புள மகிழுற வமைவிப் பார்பலர். (கசசு)

வேறு.

இன்னன பலவு மிவர்செய லாக விறைவி முற் செபமுடித் தெழுந்து
தன்னமர் காதற் சிதளி நாதன் சபரியைக் குறுந்திரவி யங்க
ளென்னவு மமைந்த வகையெலா நோக்கி யிலங்குமத் திருத்தளி நாதன்
முன்னுற வடாது முகத்திருந் தென்று முடிவிலாப் பூசையின் முயல்வாள்.

கருத்துறப் பிராணு யாமமுஞ் சகளீ கரணமு மியற்றிமுன் னிலங்கும்
பருத்தபன் மணிச்செய் வட்டகை களிற்சேர்ப் பாத்தியா சமனமர்க் கியநீர்

திருத்தக வமைத்துச் சிவார்க்கனைங் காண்முற் றிகழ்தரு துவாசபூ சனைக
ளருத்தியின் முடித்தா ளகில முந் தனையே யருச்சித்தாங்கருள்பெற நின்றாள்.
ஐவகைச் சத்தி யந்தரி யாக மாற்றியா தனங்கற்பிப் பாளாய்
மெய்வகைச் சத்தி யாதிசத் தியந்த மேதகப் பூசித்துப் புவன
முய்வகை யமர்ந்த வருட்குறி சூழ மூர்த்திதி வேசன முஞற்றிப்
பெய்வளைக் கரத்தாற் றண்டமே முண்டம் பிறங்கிடும் வத்திர பங்கி. (கசக)
மும்மையும் புரிந்தாங் கிலிங்கவா கார முன்னுறு தொருபது கரங்க
ளோமுகம் பதினொந் தருள்பொழி விழிக ளோங்கலே யாதிய வமர்ந்த [செய்
செம்மைகொள் வேணி யெண்ணிரண் டாண்டிற் றிகழ்பளிங் குநவபாவனை
தெம்மையா ளுடையான் வித்தியா தேகத் தினைக்குறி யிடைநிய சித்தாள். ()
நேத்திர நியாச மைம்முகங் களினு நிலவுறப் புரிந்துபன் மலர்கள்
சேர்த்திமென் கரங்க ளஞ்சலி யாக்கிச் செப்பியைந் தெழுத்தை யச்சிவனைக்
கூர்த்தமெய்ஞ் ஞான னந்தநிட் களவி யாபியாய்க் குறித்தவஞ் சலியை
மீத்திகழ் துவாத சாந்தத்தி னளவு மெல்லென வுயர்த்தியவ் விமலன் (கடுக)
அலரிகாந் தியனுப் புருநடு வளவு மாங்குநின் றிறக்குபு கோடி
நிலவுகாந் தியனும் மெல்லெனவிதய நிறுத்தியவ் வஞ்சலி யதனுண்
மலரிரோ சகத்தான் வந்திலங் குறுபா வனைபுரீஇச் சத்தியோ சாதத்
திலகுமக் குறிமா முடியினுய்த் துலகின் பெய்தவா வாகன மியற்றி [கடுஉ]
திருமிகு மனைய நிட்கள சிவன்றன் றிகழ்சதா சிவனருட் குறியின்
பிரமரந் திரத்தா லிருதய கமலப் பீடசா லிடைசித்தினி தமர்ந்து
மருவிவீற் றிருப்ப தாகிய நினைந்து வயங்குதா பனசந்நி தான
முரியசந் நிரோத முஞற்றியைம் முடியி னும்மருக் கியங்களோங் குதவி []
ஆயுபின் னிதயா தியநியா ச புஞ்செய் தடியிணைப் பாத்தியம் வதனத்
தேயவா சமன முடியருக் கியந்தந் திருகர நிறைபுட்ப தான
நேயமோ டளித்தம் மாலிய முழுது நீக்கியோர் மருமலர் புனைந்து
வாயவண் சுகந்த தைலமுன் னுய மஞ்சனந் தரமனம் புரிந்தாள் [கடுச]
ன்னது நோக்கு கூளிய ரதற்கா மரியன திரவியம் யாவு
ன்னரங் கமைத்த சால்களி னின்று முழுமணிக் கலசத்தின் முகந்து
ன்னிரு கரத்தாற் றரத்தர வாங்கி விமலனூர் திருமுடி மீது
ன்னுமூவிரண்டங் குலவள வுயர்த்தித் துணைக்கர கலசத்தி னொழுக்கும் []
ஞ்சனம் பசுக்கொம் பக்கிரத் திழியும் வண்பிர மாண்மா வாக்கி
ஞ்சனம் பரமன் றிருவுளங் குளிர்ப்ப மலிதை லாதிகா மிடற்ற

மஞ்சனம் பலுக்கலங்கன்பினெவ் வொன்று வருமுறை வரிசையி னூட்டி
மஞ்சனம் படைக்குங் குழனடைக் கௌரி வயங்கிய வவற்றிடை யிடையே. []

விரைமலர் புனைந்து நறும்புகை சுடர்கை வேத்திய மாதிதந் தலர்சேர்
புரையகல் சுத்தோ தகமுட னூட்டிப் போற்றுமென் பாவொரு பதமென்
றுரைமறுத் திகழு முருத்திர மூலமுன முறவோதி யாங் கனைத்தும்
வரைபட வாட்டி யீற்றினிற் சாந்த மணிப்புனல் மணமலர்த் தோயம் (கடுஎ)

மறைபுக திரிசு பன்னாகன் கமைத்த வனம்விசே டார்க்கியோ தகமு
முறைமையி னூட்டி முடித்தபி டேக மொழியுமக் கணங்கழி முன்னம்
பொறையெழிற் றிருவொற்றுடையிட்டரம்புலர்த்தினள்புகன் றுதன் றனைத்த
வரிறையை யாட்டு நர்கட் கருட்புனலாட்டி யிருங்கதி யளித்திடு மியல்பை ()

யாவரு முணர்ந்தாங் கச்செய றனைநின் றின்புறக் கருதியிவ வுலகை
யெவிகன் றருளெம் பிராட்டிமஞ் சனஞ்செய் நீரடும் புலர்த்திய வளவே
தூவிய னீறு சாந்தமக் கதைபைந் தூர்வைகூ விளமணிந் ததன்பின்
மேவுபொற் கடிசூத் திரங்கௌ பீனம் விலையிலாப் பீதநேத்திரமும். (ாடுக)

நவமணி குயின்ற கோவைகை மகுட நன்மணி கண்டிகை யாருஞ்
செவியணி யுபவீ தந்தொடி யாதி திகழ்தொடை யிண்டைமுன் னணிந்தன்
பவிரில யாங்கம் வேண்டல்போ காங்க மருச்சித்தாங் கலர்நிறைத் தங்கைத்
திவியவஞ் சலியான் மும்முறை தூவிச் சிவாக ளாணவ வலியை. (கசு0)

வாட்டமெய்ஞ் ஞானம் வழங்கிய புரியும் வாத்தவாந் தூபதீ பங்கள்
கோட்டுபு குடிலை வரைந்தென வதன்பிற் கோதறு பூசனை புரிவோர்
சேட்டிள மதிசேர் வேணியெம் பிரான்பாற் சேர்தர முனையதற் போதங்
கூட்டுமூட் செயலை வெளியறி குறியாக் குயிற்றுமா நிவேதனம் புரிவான் ()

கூவிய நாங்கட் பரப்பிய வுணவின் குவான்மு மூ துங்கா மலர்நீர்
நீளுறு புரோக்க ணம்நூன மியற்றி நீர்க்கண முதலிரு நான்கென்
றுளுமச் சுமக்கா ரம்புரிந் தவற்றி னமைவுறும் விடத்துவ மகன்று
வேரிலா வமுதத் துவம்பெறு மறமுற் கூறியப் பாவனை குயிற்றி (கசுஉ)

இன்னுரை மனுவோ டெம்பிராற் கூட்டி யிலகுபா னீயமு மீந்து
பன்னுமா சமனூர்க் கியமளித் தினிய பாகிலை யுடன்முக வாச
முன்னளித் தரிய புகைசுடர் கோட்டி முதியமா தீபமுன் னெவையு
மன்னுற செவ்த வந்தரப் புரிபா னிதமலி தீபமும் வயக்கி (கசுங)

அருட்டிரு நீற்றை யல்கையா லள்ளி யணிந்துதர்ப் பணநிழற் கவிகை
சருட்டியா லவட்டங் கவரிவீ சனமுற் சொல்லுப சாரங்க ளெல்லாக்

தெருட்டியபுரிந்துசெம்பொற்பாசனத்திற்றிருத்தியாங்கமைத்துடவிளர்கைதப்
பொருட்டிரு நாம மாயிரம் புகன்று புசர்தனன் சேவடிப் போதில்.

செங்காத் தொளியான் முன்னிற மறைந்து செந்நிற மாகவோ ரொன்று
விந்திதத் தோடு சாத்தின ளமலை யெம்மனோர் மும்மலந் தியல்பை
யங்கினி தடக்கிச் சிவமய மாக்கி யடிநிழற் புகுத்துபே ரருளை
யெங்களுக் குணர்நி தரிசன மாபி னிலங்குறக் காட்டுத விழைய. (௧௬௫)

விமலைபின் னறுகக் கதைகண்மா லூரம் விரைமலர் காமலர்க் காந்த
டமிலுற நிறைத்தாங் கஞ்சலி புரிந்து தருமியற் பவித்திரஞ் சாத்தி
யமலவைந் தெழுத்து மழுத்திய வுளத்தி னன்புறு செபமினி தாற்றிக்
கமைகொளச் செபமுங் கன்மமு முயிருங் கண்ணுதல் வாதமென் காத்தில்.

ஐயவேற் றருள்கென் றங்கைநீ ரலரோ டளித்தன ளெத்தனந் தாளுந்
றுய்யமாண் சிவாங்கி வினைமுறை முடித்துத் துதிசத வுருத்திர மாதி (௬)
செய்யன புகன்றிம் முறையின்முப் போதுந் தினந்தொறுஞ் செய்துல குயிர்
ளுய்யநற் சானம் யோகமே சாந்தி தாந்திக ளுறத்தழீஇ நோற்றாள். (௧௬௭)

வேறு.

ஆன பாலினைப் பானையை யம்முலை வெண்ணெய்
மேன கக்கொளுஞ் செய்தியின் விரிந்தெங்கு நிறைந்த
மான மெய்ப்பர சிவம்வெளி வயங்குறக் காணுந்
தூந லச்செய லருச்சனை யென்பது ணர்ந்தோர். (௧௬௮)

அனைய தன்றியு மைம்புலப் பகைதெறு மறவீ
ரினிது கேண்மினீ ருலகுயிர் யாவையு மீன்ற
புனிதை யொப்புயர் விகந்தவள் பூரணி பொருவாத்
தனிதூ வாச்சிய மறைமுழு துணர்தாரத் தகையாள். (௧௬௯)

எம்மை வெம்மையும் புரத்தலே யியற்றொழில் பூண்ட
வம்மை யப்பர சிவத்தொடு மபின்னையா யனலம்
வெம்மை தண்மைநீர் விரைமலர் மணியொளி வியோமஞ்
சம்மை பால்சுவை பண்ணிசை முதலிய தொகைபேரல். (௧௭௦)

ஏக மாகிநின் றறிவிச்சை செயல்களா யினைந்துந்
தேக மாகிகொள் சீவரை யுய்விப்பான் சிறந்த
வாக மவ்வனந் தானுங்கொண் டன்னதற் கிசையப்
போக மோக்கங்க டருந்திரு நாமங்கள் பூண்டே (௧௭௧)

செழுவு மாசகல் கூட்டத்தப் பிரமவைக் கியமே
யுழுவ லன்புகொண் டுறுபசு பதிகள்சய் யோகர்
தழுவு மின்னன தத்தம நெறிமுறை சாற்று
மழிவி லாச்சிவ சாயுச்சி யம்பெறற் கமைந்த. (கள௨)

உத்த மோத்தம நிபஞ்சிவார்ச் சனையென வுலகோர்
கைத்த லத்திரு மலகத்திற் கண்டுளங் துணிந்து
மெய்த்த பத்தியிற் சீலத்தின் விதியினிற் புரிந்தே
பொத்து மாசறுத் தானடிப் புகுதுபே ரின்பம். (கள௩)

உற்று வாழ்வுறக் கருதியிவ் வொருபதி முதலா
மற்று மிப்புவி யிடைப்பல தலங்களின் வதிந்து
முற்று மந்திரங் கிரியைபா வனைவிதி முறையிற்
கற்றை வேணிபூ சனைபுரிந் தினிதுகாட் டிடவும். (கள௪

வேத வாகம புராணங்க ளாதிய வியனூல்
சாதுர் மாமறை யந்தங்க டன்னிகர் தாரு
மேதை யாகமாந் தம்மெனு மெய்கண்ட சுருதி
சீத நால்வர்வாக் காதிய திராவிட வேதம். (கள௫)

பன்னு மின்னமெய்ந் நூலெலாம் பதிப்பொரு ளொன்றே
யுன்னு மப்பதி யுமாபதி யேயுவன் றனே
முன்னு சாருவ வியாபக னநாதிமா முத்தன்
கொன்னு டைச்சரு வஞ்ஞதை யாதிய குணத்தோன். (கள௬)

அவனை யல்லவ ரரிபிர மேந்திர ராதி
திவியர் மானுட ராதியர் யாவருஞ் சீவ
ருவரி நீர்புரை வியாப்பியர் சிற்றறி வுடையோ
ரெவரு மாற்றலசா லனாதிமா மலபெத்த ரெனவும். (கள௭)

அம்ம லத்துவ நீங்கியவ் வான்மகோ டிகடாஞ்
செம்ம கத்துவ சிவத்துவப் பேற்றினைச் சேர்ந்தே
யம்மை யப்பனு யமர்ந்தரு ளவ்வா னடிக்கீழ்
மெய்ம்மை யுற்றுவாழ் பேரின்ப மேவுதற் குரிய. (கள௮)

சிறந்த காரண மகம்புற மிரண்டினுஞ் சிவனை
நிறைந்த வன்பொடு நாடொறு நியதியிற் புரியும்
விறந்த தொண்டனுஞ் சிவார்ச்சனை யென்னவு மேலா
யறைந்த வாருயிர் போலுமீ திவ்வழி யுறவீர். (கள௯

ஆவி நீங்கிய வாகமே யொப்பன வாக
மேவு மேலைய தவமெலாம் விபலமா யெனவு
மோவி லாதுபன் முறைமுறை கையெடுத் துரைத்தே
யாவு மீன்றவ ளியற்றியிங் கிலருறக் காட்டும். (௧௮௦)

நேரில் பூசனைப் பெருமையை விளக்கவு நிலையா
யாரு மம்மரி னுய்த்துணர் வின்மையி னானே
சோரு மாந்தரை மருட்டுவெஞ் சகத்தினை துணியே
மோரி னும்பிர மம்பிறி தில்லையென் றுரைத்தும். (௧௮௧)

பிலைய கண்டித மாம்பரி பூரண பிரமந்
தலையொர் மூர்த்தியிற் கண்டிதப் படுத்துதா பனமாம்
விலைய பூசனை புரிபவ ரறிவிலா வீண
ரெனவும் பூசகன் பூச்சிய மென்றிரு பொருள்கள். (௧௮௨)

இன்ற தாகலிற் பூசனை யாற்பயன் யாதோ
வென்றும் வானர கிருண்மல பந்தமே மோக்க
முன்றி கழ்பொரு ளியாவையு முயலிடத் துலவை
யொன்று காயவம் போருகங் கமடத்தி னுரோமம். (௧௮௩)

இலகு வந்தியின் மைந்தனே யிரச்சுசர்ப் பாதி
புலனு றுதவிப் பொருள்களிற் பொய்மையே யென்றுங்
கலதி வாய்பறை யாகநாக் கடிப்பறைந் தருணா
னலனு றப்புக ளியதிகண் மேற்கொடு நடத்தும். (௧௮௪)

வலிம னத்திலார் மாட்டுட லாதியை வருத்தி
யலைத லன்றியோர் பயனில வயனெறி யதூதி
ரிலகு விற்பய னுறுநெறி யிந்நெறி யெனவந்
நிலையர் தம்மனச் செலவினுக் கிணங்கவே நிகழ்த்தும். (௧௮௫)

போத காரிய ராய்வ மாதிகள் பொருந்த
வோதி யாவையும் வசித்தவ ருவந்தன ரளிக்கு
மேத யார்பொருள் கொண்டுபோக் கியப்பொரு ளியாவுங்
காத லாற்கொளா ரித்தலை நுகர்ந்துளங் களித்தே. (௧௮௬)

தீமை யொன்றிலாச் சிவனடி யவர்களிச் சிறந்தோ
ராமெ னுவுல கறிந்துவந் தடுத்திடற் காகந்
காம நீறுகண் டிகைமுதல் வேடமுந் தாங்கிச்
சேம மாதியுட் கரந்துநற் றெழில்வெளிக் காட்டி. (௧௮௭)

தாமுந் தம்புக னம்பியே சார்ந்தவ ரெவரு
நாம வெங்கிர யத்துறு தூன்னெறி நயந்தே
சேம நீருல கத்திடைச் சிற்சிலர் திரிவார்
தோழு ளாரிவ ரூழ்வலி சொல்லுதற் கெளிதோ. (கஅஅ)

இனைய பாதகர் வஞ்சக மார்க்கமெய் யெனவே
கனவி னுங்கரு தாமலெம் மன்னைதான் காட்டும்
புனித மார்க்கநின் றுலகுய்ய வீண்டிது புகன்று
முனிவிர் காளுமை யாங்ஙன முயறவஞ் செயுநாள். (கஅகூ)

ஆண்டு நூறுசென் றிடப்பிரி வாற்றொணு தவன்போ
லீண்டு மாதவங் காண்டல வெள்ளிவெற் பிகந்து
மாண்ட குங்கட மதிமகம் பருவம்பொன் வாரம்
பூண்ட நற்றினத் தறனிறை பிறைமுடிப் புனிதன். (ககூ0)

வேதன் மேதகு மாதவ ராதிய விபுதர்
மாதபோதனர் நந்திமுன் னோர்குழீஇ வயங்கும்
பாத சேவையர் நாவையர் துதியினர் பரவிப்
போத மால்விடை யூர்ந்துமை திருமுனம் போந்தான். (ககூக)

போதல் காண்டலும் பொள்ளெனப் புடவியி னெழுந்தா
ளாத ரப்பெரு வெள்ளமீர்த் திடமிதந் தமலன்
பாத மீதுறப் பலமுறை நிலமுறப் பணிந்தா
ளேத கம்பக மழையுட னனைந்தன ளிமலை. (ககூஉ)

உளத்தின் மிக்கெழு மன்பினப் பானரு ளொருவா
வளத்தின் வாய்மைகள் வழுத்திய மனக்கொளீஇ வருதன்
களத்தின் விம்மலுத் தழுதழுத் தலுமுறக் கனற்கட்
குளத்தி னூனவாய் குழறிய துதிபல கூறி. (ககூங)

மறைபி னந்தமு மொருசிறி துணர்வுறா மரபி
னிறைவ நீயிவ ணெய்திய வெய்திய தென்கொ
னிறைகொ ணற்றவ மெனக்கெனப் புவிதொழ நிகழ்த்து
முறையி னின்னன பற்பல வற்புரை மொழிந்தாள். (ககூச)

அடியின் வீழ்ந்துமுன் வேண்டியாங் கம்பகங் குளிர்ப்ப
கடன நாயக காட்டியிங் கருளென நயவா
கெடிது போற்றுபு நின்றன ளத்துணை நிறைநீர்த்
தடமு னேற்றிடு மனக்கனு தியரவட் சார்ந்தார். (ககூரு)

சார்ந்த நாகர்க ளாங்கரன் றாளிணை மலர்க்கீழ்க்
கூர்ந்த வன்பொடு பணிந்தெழுந் திருகரங் குவியா
வேர்ந்து நின்றனர் துதிபல புகன்றனர் நிமல
ஞார்ந்த தண்ணருள் வெள்ளத்துட் டிளைத்தன ராங்கே. (௧௯௬)

முன்னெ ழுந்தரு ளண்ணலக் கௌரியுண் மோத
மன்ன வவ்வனத் தழகிய சிற்சபை மாடே
மின்னி லங்குபண் மாமணிப் பீடிகை மீது
கன்ன லஞ்சொலெ மன்னைகண் களிப்புற நின்றான். (௧௯௭)

மந்த காசமு காம்புய ஞகியவ் வரத
வுந்து மற்புத வடிவுகொண் டருளிய வுன்னி
யிந்து கோடிநேர் மேனியி னைந்துதோள் வலத்த
மைந்த சூலமொண் மழுத்துடி சிலிமுகம் வாளும். (௧௯௮)

வாமம் வீசிய மலர்க்கரம் வன்னிநீள் பாசந்
தோமில் கேடகம் பிணுகமுஞ் சொற்றிரி சுபன்னங்
கோம ளந்தரு சுவன்னகங் கொக்கிற காதி
நாம மார்தரு மணிப்பணி விதுமுது நதிமுன. (௧௯௯)

கலவு றப்பெறு செக்கர்வே ணியுமிரு காதின்
வலமும் வாமமுங் குண்டலந் தாடங்க வனபபு
நிலவ பாற்கர நயனமு நெற்றிக்கண் முகிழ்ப்புங்
குலவு மாமணி கண்டமு மார்த்தின் கோப்பும். (௨௦௦)

மனுமூன் ஹூலுந்தோ லாடையு மறைச்சிலம் பார்ப்பு
நனியி லங்குருக் கொண்டமை காண்கென நவின்று
சினவு மாமுய லகன்புறம் வலப்பதஞ் சேர்த்தி
யனக ஞங்குறு மனந்தனை யணியுற வழைத்தே. (௨௦௧)

பாங்கு மாமணி ராசி*வி ராசித படமேற்
றூங்கு மாறுவா மாங்கிரி குஞ்சிதந் தரித்துத்
தேங்கு வாமசா னுவினிற்கரக் கோடனைச் சேர்த்தல்
வோங்கு மங்கிரி வாசுகி தனையுறப் பிணித்தே. (௨௦௨)

வனை மாப்பணி யாவையு மேனைய வுறுப்பிற்
கான மாப்பணி யாவணிந் தாடக மேருத்

---

* விராசிதம் - விளக்கம்.

தான மாவதில் வனத்தென வுரைத்திடத் தயங்கு
ஞான மாசபை நாப்பணின் றருளினை நாதன். (௨௦௯)

இந்துவின் காந்த பருப்பத மாக வெம்பிரா னிற்றுரு வால
கந்தர நீர்பெய் கந்தர மாகக் கவின்சடை தடித்ததாத் துடிக்கண்
வங்கெழு மோசை மணிமுகின் முழக்கா மலர்விழி பொழியருண் மழையாப்
பைந்தொடி யுமையா மோடதி குளிர்ப்பப் பவனமுற் றுயிரெலாந் தளிர்ப்ப

கொன்றையங் கானி லிருண்மலக் களைகள் குமைத்துயர் சிவானந்த போக
நன்றருந் துறநோன் பியற்றுமா தவரா முழவர்க ளயர்தலுந் தருந்த
வென்றுவெண் மதிமண் டலநிகர் தாள மெண்கண னிருகரம் பிடிக்க
நின்றுமால் குணில்கொண் டதிர்முழ வடிக்க நிரம்பிசை நாமகள் படிக்க. ()

ஐம்முக முரச மருணந்தி முழக்கத் தருவக மட்டைரு பகமே
விம்மிசை யடமே சந்திரி புடைசம் பையென விசைமறை விளம்புங்
கொம்மைநற் றாள மேழுமவ் வகையிற் குலவுறக் கௌரிதாண் டவத்தை
நம்மையா ளுடையா னம்மையுள் ளுவந்து நயனங்கள் களிப்புற நடித்தான் ()

களியுமை நயன வளிகளாந் நாடக் கப்பத கமலநன் மதுவை
யளியொலி யதன்கட் சிலம்பொலி யாகவருந்துபு களிக்கட லழுந்தக்
கிளர்மணி ராசி விராசித வாமாங் கிரிமுடி தரித்தர விறையு
ளளிமிக வேணி யொளியுவ ணையிற்போ யன்னதைக் கதிருல காக்க. ()

நீற்றொளி யினன்கீ ழிந்துமண் டலந்தா னிற்றலென் கொல்லென நிலவு
வீற்றுறு மீரைங் கரங்களெண் டிசையு மேவுற வுமைதிரு வுளத்தை
யேற்றுகட் கருணை நோக்கினு னிரப்பி யெழின்மிகு மனையதாண் டவம்பல்
வேற்றுமை திகழ நடித்தல்கண் டரிமுன் விண்ணவர் முனிவரர் தொழுதார்.

சனகர்முன் னால்வர் துதிபல தொடுப்பத் தகுமிரு வோரிசை மடுப்ப
வனத்பா ரிடர்சூழ்ந் தரவொலி யெடுப்ப வரம்பையர் மணிவிளக் கடுப்ப
வனமலர்க் கரத்தின் மலரொளி கடுப்ப வானவர் மலர்மழை யுடுப்பக்
கனகதுங் துபியந் தரத்திசை படுப்பக் கண்ணுதல் புரிநடங் கண்டாள். ()

சலதரங் கண்ட சாதகம் போலத் தபனனைக் கண்டதா மரைபோ
னிலமதி கண்ட சகோரம்போ லுவகை நிமிர்தர நெஞ்சநெக் குருகித்
தலைவரின் னடங்கண் டியான்புரி தவந்தான் சபலமா கியதனி யென்று
வலகிலா னந்த வெள்ளமூழ் ளமையா தாங்கெதி ரொடுத்தலே போல. (௨௧)

அரியநற் சிவாதி காமினி சிவாதி சுந்தரி யம்பிகை கௌரி
யுமைபிர சன்ன கோமள வதனும் புயத்தின ளாகியுள் ளுவந்து
வரசிவ கிருத சனனமா வுததி லங்கன மங்கள சொரூப
பரமகல் யாண மங்களப் *பிரத மாநடம் பார்த்திவை துதிப்பாள். (உகக)

வேறு.

ஓதும் பவாதி யட்டகப்பே ரொடுசோ தராதி யெட்டுருவன்
காதும் பவாம்பீ தியின்புழுகிக் கலங்குமு லகுக்கா தாரன்
நாதன் பவனே சிவன்கோடி ரவிசங் காச மேனியன்சொல்
வேதன் பவாய புவிமூர்த்தி விமல பரம சிவாயநம. (உகஉ)

விறல்கொண் மகாச லாதியவாய் விளசா ருவசா கரமூர்த்தி
யிறைகொள் சீத ளாம்புவரு டத்தா லிமையோர நரர்மிருகம்
பறவை முதல தருபூதல பயிர்முன் னிருபா லுயிர்புரப்போன்
முறைமை புரிசர் வாயவம்பு மூர்த்தி பரம சிவாயநம. (உகங)

பகர்மா சண்ட வெங்கிரண பங்கி களினுற் சகம்போக்கும்
தகையோன் ககன சரகிரக தாரா தாமன் கபாலகர
னிகமார் போக மோக்கமரு ளிறைய னளவாக் கருணைநிதி
தொகுமீ சான ரவிமூர்த்தி தூய பரம சிவாயநம. (உகச)

வலமார் வலாரிக் ககல்சுவர்க்க மருவ வருள்வோன் வேள்வியர்க்கப்
பல*தா யகனு பத்தெவர்க்கும் பாற்றி ன்வேயருநான் பசுபதிப்பேர்
நலனு லமைந்த சருவான்ம நாத னமலன் பசுபதியாம்
புலமார் யமான மூர்த்தியருள் பொழியும் பரம சிவாயநம. (உகரு)

உரமார் சண்ட மாருதத்தா லுலக முழுதோம் பாதாரன்
சரமார் பலபே தானிலத்தாற் சருவான் மாக்க டமில்வசிப்போன்
வரமார் தருமுக் கிரப்பெயரால் வன்னி சகனு யமர்ந்தருள்வோன்
முானு ருக்கி ராயவளி மூர்த்தி பரம சிவாயநம. (உகசு)

இயங்கு கடோர வன்னிரவி யிந்து விலோச னத்திரையன்
றயங்கு பாலாம் பகமதனுற் சம்ப ரவரி புரந்தகிப்போன்
பயங்கொள் கடோர வுருத்திரநற் படிவாற் பஞ்ச முற்றெரிப்போன்
முயங்கு முருத்தி ராயவன்னி மூர்த்தி பரம சிவாயநம. (உகஎ)

இரவி கிரக முதலமர ரினமா லிகையன் றனதொளியில்
விரவு சிருட்டி யுறவெளியாய் விரியு மண்ட ரூபங்கண்
மருவு முதனுப் பண்ணிறுதி மருவாப் பெருமைத் திருவுருவன்
வருபீ மாய நபமூர்த்தி வரத பரம சிவாயநம. (உகஅ)

---

*பிரதம்-கொடுப்பது. * தாயகன் - கொடுப்பவன்.

சகல பயிரு மாவமுத கலையால் விருத்தி தரப்புரிவோ
னகில வுலகுங்.ககனசர தேசா லொளிசெய் தருண்முதல்வன்
றிகழு மிதழி சானவிகட் செவிமுன் னமர்சந் திரமௌலி
தகைமை மகதே விதுமூர்த்தி தரும பரம சிவாயநம. (௨௧௧

வேறு.

பரவுசங் கரனே யொப்புயர் விகந்தோன் பராற்பரன் றணக்கிலை பணிவெண்
றூரிமையிற் கெளரி யகிலலோ கத்தி னுயிரெலாந் துயர்தரு மலநோ
யரியவீ தோதி யகற்றுற நினைந்தே யடிக்கடி யிறைஞ்சின டுதித்தாள்
வருபசுங் குழவிக் குறும்பிணி நீக்க மருந்துதா யருந்துமா போல. (௨௨௦

இவ்வியற் றுதிசெ யுமைமுகாம் புயத்தை யென்றுமன் விகசித மியற்றுஞ்
செவ்விய ஞானு னந்தசா கரத்திற் றிகழ்ந்தன வாதனின் றருளுந்
திவ்விய தேசோ மயசொரூ பகமா தினகர னென்றுரை யாடு
நவ்வியங் கரத்தோ னருண்மிக நோக்கி நங்கைகே ளென்றிது நவில்வான். ()

உலகெலாந் தழைப்ப நீநினைந் துமையீண் டுரைத்திடு பிருதுவி யாதிப்
பலர்புக ழட்ட மூர்த்திக ளுடனுய்ப் பவாதிமந் திரங்களோ டியைந்தே
யிலகியோ துநர்கட் கிட்டகா மியங்கள் யாவையு மீவதா யெமக்கீண்
டலகிலா னந்த மளிப்பதா யமைந்த வருந்துதி கேட்டுள மகிழ்ந்தேம்(௨௨௨

நீயுளம் விழைந்த வரமெவை யுரைத்தி நேரிழா யெனவுல கருளு
நாயகி மகிழ்ந்தெம் பெருமவீண் டுள்ள நயப்புற நின்னையான் றுதித்த
மாயிருந் துதியைப் பாதகம் பலவு மருவிய பதிதரே யெனினு
நேயமிக் குரைப்பி னவையெலா மொருங்கே நீங்கிமா புனிதரா யிடுக.

பின்னல கிலவாம் பல்பொருட் பெருக்கும் பெறற்கரு நன்மகப் பேறு
முன்னுறு யாவும் பெற்றுவாழ்ந் திம்பர் முகுந்தனு தியர்க்குமெட் டாத
நின்னடி நிழலிற் பின்னுற மருவி நித்தியா னந்தராய் வாழ்க
வென்னவ நீயித் தலத்திலென் னேடு மிடையறு திருக்கவெஞ் ஞான்றும்.

நின்புரி சடையி னின்றுமுன் னழுவி நிரம்புசா னவிநதி யொருவா
தென்பெயர் வாவி தனிலன வரத மிகபர மோக்கதா யகமாய்த்
துன்புறு சகல பாவமோ சனஞ்செய் தூயதா யமர்கவென் றமலை
யின்புற வுரைப்ப விறைவினு யுமைநீ யெண்ணியாங் காகென விசைத்தான்.

அறைதரு வியங்கோ ளிறுதிவாக் கியங்க.ளாலுமை விளுவிய தவைகள்
விறல்விதி வினையு மாயுயிர்க் குறுதி விளைத்துளந் தெளித்திடற் கென்ப

நிறையுமா தவத்தி ருமைக்கரு ணிமல னிலத்தினிற் றிலகமென் றுரைக்குஞ்
செறியுமவ் விதழிவனத்திலெஞ்ஞான் றுஞ்சிவையொடுஞ்சேர்ந்துவீற்றிருக்கும்
கண்ணுதற் சிவன்செய் திருநடங் கௌரி காமமுற் றினிதுகண் டமையா
லெண்ணுநர்க் கெவையு மருள்சிவ காம சுந்தரி யெனும்பெய ரேய்ந்தவ்
வெண்ணணைக் கொடியத் தளியினீசான விசும்பில்வீற் றிருந்தருள் புரிவா
ளண்ணறன் னோடிங் கிரீடைசெய் தென்று மமர்ந்துவீற் றிருந்திட மாதோ
இறையரு ணடனம் புரிந்தவத் தினத்தி னிலங்குகோ கிருதநீ பாதி
குறைவிலர்ச் சனைகள் சீதளி யாற்றுக் குளிர்தரு மகாவபி டேக
நிறைசுவை வருக்க நிவேதன வகைக ணிகேதனம் வலம்வரன் மறையோர்க்
கறுசுவை யுணாக்கள் கூவிளா மிதழி யாதியா லருச்சனை முதல. (௨௨௮)

புரிகுவர் விசேட தினங்களின், விசேட பூசனை பொருந்துமெய் யன்பாற்
றருதுந ரிரதோற் சவமுறை மைபிற்செய் தகமைய ரதுதரி சிப்போர்
குருவிமெய் யடியார்க் கமுதருண் மாகே சுரர்கடம் பூசனை தொடங்கும்
பெரியரின் னவர்பல் போகமு நுகர்ந்தெம் பிரானடி மலர்நிழல் பெறுவார்.)

என்றுரைத் தருளு மலயமா முனிதா ளிறைஞ்சுபு முனிவரொந்தாய்
நின்றுசீர்க் கௌரி தாண்டவங் கேட்டுச் சூழ்வினை யொழிந்தனங் கமலை
யன்றரி பாலென் வினவினன் மீடையா தறைந்தன னிவ்வனத் தவள்செய்
கன்றியென் சிவன்பாற் பெறுவா மென்னை நயந்தருள் கெனமுனி நவிலும்.

கௌரி தாண்டவச் சருக்கம்.

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௭௧௫.

———o———

இலக்குமிதாண்டவச்சருக்கம்.

திருத்தளி யமலன் வாமச் செல்விபேர் நடனு னந்த
மருத்தளி நுமது கேள்வி மடுத்தனங் கமலை மால்பாற்
கருத்தளி யுறவி னுயிக் கானிறைற் றிருந்து கண்ட
வுருத்தளிர் நடன மேன்மை யுறுவர்கா ளோது கிற்பாம் (௧)

கீரசா கரத்தி னுப்பட் கிளர்மணித் தீவின் மேவுஞ்
சாருவ போக மீக்கூர் சுவேதமா புரத்திற் சாலத்
தேருறுப் பமைந்தி லங்கு சினகர மதனின் மிக்க
பாருறு முடிய னந்த பரியங்க மதனின் மேவி. (௨)

காண்டகு சிரத்திற் செம்பொற் கதிர்மணி முடியின் றேசும்
பூண்டகுண் டலமு மெல்லாப் புவனமுந் திகழ்செவ் வாயு

மாண்டசெங் கமலப் போதின் மலர்விழி வனப்புந் தோளிற்
சேண்டவழ் கதிரை நக்குந் திகழுமங் கதத்தின் சீரும். (௩)

வாதகல் லபய மாழி வாரண மமைந்த நான்கு
காமுமா மறுவி னோடு கவுத்துவ மணிகொண் மார்பும்
விரவுறு சுவண வாச விளக்கமுங் கழல்க ளார்க்கு
மருவளா நறிய செந்தா மரையடித் துணையின் மாண்பும், (௪)

சிரநுதன் மார்பு முன்னாத் திருந்திய வங்க மெங்கு
மருவுமுத் தூள னந்தான் வயங்குபுண் டரங்கொ ணீற்றிற்
றிரைமறி கிர வாழி திருவுருப் போர்த்த லேய்க்கும்
பொருவிலா வெழிலு மீசன் விழிமணி புனைந்த பொற்பும். (௫)

கருமுகி லனையநீல மேனியுங் கவினுற் றோங்க
வரிவையர்க் கெடுத்துக் காட்டு முவமனா யமருஞ் செல்வத்
திருமகள் பொறையின் மிக்க நிலமக ளென்று செப்பு
மிருவரு மிருபான் மேவி யின்புற விருப்ப வேனை. (௬)

எண்டகு விகங்க ராச னெண்டிசைக் காவ லோர்மற்
றண்டர்மா தவரொண் சித்தி யாதியோர் பணிந்து போற்ற
வண்டயின் மதுவார் செந்தா மரைமலர் விழிமு கிழ்த்துக்
கொண்டறி துயில மர்ந்தான் குவலய முண்ட கோமான். (௭)

அனந்தலி னெழுந்தம் மாயோன் சிரமிசை யங்கை கூப்பி
நினைந்துதென் முகத்தி ருந்து நிமலதன் பொருட்டிக் கானிற்
கனந்தரு கண்டன் செய்த தாண்டவங் கருத்துட் கொண்டு
வனந்திகழ் கண்ணீர் பாயப் பதுமவா சனனாப் மன்னி. (௮)

ஆனந்த *பரித னா†ரா வதத வடவி மேய
வானந்தங் கிந்து வேணி வரதனை வாம பாக
மேனந்தம் வினைக டீர்ப்பனென் வீற்றிருந் தருளும் வான்மை
சானந்த முறழ்மி டற்றெங் கௌரியைச் சானித் தானால். (௯)

அனந்தர மிவ்வா றன்னோ னார்வமிக் குளத்தி னெண்ணுங்
கனந்தரு மலர்மென் கூந்தற் கயலிய னயன நல்கூர்
மனந்தலை யரம்பை யூரு நளிர்குளிர் புரையுஞ்சானு
வனந்தரு முகிழக் கொங்கை மலையர சளித்த நங்கை. (௧௦)

பூசனைத் தவந்தின் பேறாற் புதுமலரிதழிக் கானி
லீசனை நடனங் கண்டா னெண்ணியாங் கன்பர் தேர்ந்து

* பரிதன் - நிறைந்தவன். † ஆரேவதம் - கொன்றை.

பாசனை புரிய நல்கப் பாவையே யான்மற் றியானு
மாசனை யனைய மானுந் தோன்றிட மொன்றே யாமால். (கக)

பெட்டோன் வழிபட் டேத்தும் பிரியகா ரணியப் பூவை
தட்டகல் பிருகு பூமி தம்மொடு மங்கி ருத்தங்
கிட்டிமுன் காணப் பெற்றேன் கிளக்குமவ் வனத்திற் றனே
யிட்டமிக் கமர்கின் றேனு லமிசதந்தோ டென்று மன்னே. (கஉ)

அப்பரிச மர்கின் றேனுக் கங்கடந் தன்னின் மேலுந்
தப்பரு மார்வங் கூர்வ தென்றிவை தானே யெண்ணிச்
செப்புத லின்றி யானெய் சித்திர பானுச் சேர்ந்த
தொப்பவுண் ணெகிழ்ந் திருந்தா னுவணகே துயர்த்த செம்மல். (கங)

வேறு

மனநெகிழ்ந் துருகு மெய்ம்மலயிற் றிருவம் மாயவ னடிதொழு திறைஞ்சிக்
கனமுடைந் திரிய வந்தரத் தோட்டு காத்திர நேத்திர கமல .
மனனமர்ந் தெனைநன் மார்பகத் திருத்தி வரமருள் பரமகல் யாண
புனைதுள வலங்கற் கந்தமார் ‡கந்த பூதர சீதர போற்றி. (கச)

வாரண நேமி கதைசரா சனம்வாண் மலர்க்கரத் தெடுத்தருள் வரத
வாரணம் பரவு மாதவ போத வங்கண பங்கய வதன
நாரண முகுந்த கேசவ பதும நாபபா ரணாநவ நீத
பூரண முராரி வாரண சோகம் போக்கிய பாக்கிய போற்றி. (கடு)

குலமறை கவர்ந்து சலதியின் மறைந்த கொடியனைத் தடியமீனுய்த்தன்
செலுவினுட் கடனீர் முழுதடைத் துடனத் தெம்மடித் தம்மறை மீட்டு
மலரய னிடத்து நிலையுறக் கொடுத்த மாதவ யாதவ வரத
புலனெறி நீத்த நிலையின ரேத்து புராதன சுராதிப போற்றி. (கசு)

ஆதர நினைந்தாங் காதரம் பெருக வாதரங் கடைவுற வருளாற்
பூதரந் தனைக்கைப் பூதர மலரும் புவிநிழற் கவிகையாப் பொறுத்தே
காதர மோட்டிக் காதர நீட்டிக் களிப்புறத் துளிப்பெயல் கடிந்தோய்
போதரச் சுரர்முன் போதர விறைஞ்சும் புண்ணிய கண்ணிய போற்றி. (கஎ)

என்றுரைத் திறைநீ யஞ்சலி புரிந்த தென்னிவ ணுளாங்கொண்ட தென்னை
யொன்றுமுழு வுலகுக் கதிபனீ வணங்கு முயர்பொருள் யாதஃ துணக்குந்
தன்றுவா னவர்க்கு மூலகா ரணமாய்த் துலங்குறு மதனியல் சூழின்[த்தாள்
மன்றலிம் மிதமர் மென்றனக் கதன்சீர் வகையெலாந்தெரித்தி யென் றுரை

---

‡கந்தம் - தோள்.

பிரமர முரல முகையவிழ் கமலப் பெற்றியிற் பொற்றிரு மகடன்
வரிவிழி நோக்க மருவுற வாய்ந்து மந்தகா சத்தொடு வயங்குந்
திருமுக மலர்ந்து கருமுகி லனையான் றேங்கமழ் பூங்கடிக் கையங்கா [ம்
னரிதுமுன் னிகழ்ந்த சரிதமிங் குரைத்து மணியிழாய் கேட்டியென் றறையு
புகலுமுத் தொழிற்கு மூவர்க்கு முன்னோன் புந்திமுன் மூன்றுமுக்குணமும்
பகுதியுங் கடந்தோ னுளனொரு புருடன் பராற்பர தானவ னவனே
நிகரின்மெய்ப் பாதத் துவபர சிவன்மன் னித்திய னவனில்யா முதித்தேஞ்
சகளமா முருவிற் றனதரு ளாகுஞ் சத்தியை யிடத்தினிற் றரித்தான். (உ0)

அனையவள் விதழி யடவிமுன் னடுத்தா ளாங்ஙன மருச்சனை புரிந்தாள்
கனையிருண் மிடற்றெங்கண்ணுதற்பெருமான்காட்சிநேர்பெற்றனள்கதிர்கால்
பனிவரை யுயிர்த்த பான்மொழித் தொடிக்கைப் பவளவாயுமையவட்பார்த்துப்
புனிதனுள் ளுவகை நனியுற வருளிப் பூவைகேளீதெனப் புகலும் (உக)

பொன்னலர் கடுக்கை நமக்கதி காதல் புரிதலி னதனையிப் புவியின்
மன்னுறக் கிருத மாலையென் பெயரான் மலிவுற மலர்மகன் படைக்கு
மன்னநற் றருவை யலர்செறிந் திலக வடைந்துகாண் பவனெவ னவன்றன்
றன்னுறு சனன பாவமுற் றொழிக்குஞ் சாதமீதென் றுரை தந்தான். (உஉ)

அளிமுரல் கமலத் தணங்குகே ளுமைசெ யருச்சனைப் பயத்தினு லவட்கு
நளிர்மதி முடியோன் காட்டிய நடன நாகர்பூ மகன்சன காதி
தெளிவுறு முனிவர் பிருகுவா னருக்கர் திங்கண்முன் னிமையவ ரோடுங்
களிமிகு மவனி யாவொடுங் கண்டேன் கண்களாற்பெறுபயன்கொண்டேன்

அந்திலெம் பெருமான் பைந்தொடி யுமைகேட் டருள்வர மாங்ஙனமளித்தாங்
கிந்திரை யென்பாற் பிறக்கெலா மரிய வின்னருட் சிறப்பு நோக்கருளி
முந்துமச் சபையின னந்தலை யெனக்கூய் முகுந்தநீ யுகந்தநம் பூசை
சந்தத மியற்றி நந்தம தருகு தங்குகென் றங்கரு டந்தான். (உச)

மன்றலங் கூந்தல் வரிவிழி மலர்க்கை மணிமுலை மதிநுதால் கேட்டி
யன்றொர்நா ளிரணி யாக்கனென் றொருவ னசலமே யனையகாத் திரத்தன்.
வன்றிற லவுணன் வகிர்மதி புரையும் வக்கிர *தமிட்டிர னுளங்
கன்றிய மனத்தன் கொடுந்தொழி லுனே கைவிடாப்பொருளொனுங்கருத்தன்

அம்மற மிகுந்த வரக்கனேற் றடைந்த வருவா வலியினு லவனிக், கொம்மை
வெம் முலையைப் பாயலாச் சுருட்டிக் கொடுகுரை கடல்புகுந் தொளித்தான்
விம்மலுற் றயர்ந்தார் மண்ணவர் விண்ணோர் வேறொரு புகலிட மின்றி
யெம்மைவந் தடைந்தா ரிறைஞ்சின ரினைந்தா ரிதுபொறு துனமிக விரங்கி

மேலுயர் வரைக ளெவற்றினு முயர்ந்த மேருவி னெண்மடங் குயர்ந்து
வாலிய வுரோம முடல்செறிந் திருகண் வழங்கிடும் வடவனல் கதுவிப்

* தமிட்டிரம் - தந்தம்

பாலெல்லாந் தகிப்ப வெருத்தமேற் போதும் பற்களோ டிலங்கிடும் புதிய
கோலமாங் கோலங் கொண்டியா னண்டங் குலைந்திடக் குழுவொலி பரப்பி.
அவுணனுண் டேகு மவ்வழி யேகி பாழியு மளவெறழ வலைத்துக் (கோர்ங்
குவவுமால் வரைக ளனைத்தையு முருட்டிக் கொண்டுசென் றிரணியாக் கனை
துவமனில் பெரும்போர் புரிந்துயிர் செகுத்தாங் கொதுங்கிய வசுந்தரை த
னைமீட், டவமகன் றிருப்ப வராமுடி நிறுவி யனந்தர மப்புவி மகளை. (௨௮)

அவனுடைத் தந்தை பிருகுமா தவன்பா லரண்புகுத் தவுணனை யாவி
கவர்செருக் கறிவை மறைத்தலின் மான்று கதிர்வரு வாளவெற் புடைத்துப்
புவனியெண் டிசையு மலைத்தன னதனாற் புன்கணுற் றிமையவ ராதி [ய்தி
யெவருமெஞ் ஞான்று மிடுக்கண்டீர்த் தருளு மெம்பிரான் கைலைசென் ற
மணிமிடற் றிறைவன் றிருவடிக் கமலம் வணங்கியீ துரைப்பரெம் பெரும
தணிவிலா விரணி யாக்கனு லெமக்குச் சார்ந்தபே ரிடரினும் பெரிதாத்
தினியமா லென மாகிநின் றலைக்குந் தீங்கிது தாங்கிலே மெந்தாய்
பணியணி முடியெம் பரமவித் துயரும் பாற்றினை போற்றெனப் பகர்ந்தார்.

ஆயிடை யமலன் சேயினை நோக்க வயிலுடைத் திருக்கரத் திளைய
சேயவன் கமலத் தூயசே வடிகள் சென்னியிற் றுன்னிய விறைஞ்சி
நேயமிக் கெதிரே நிற்பநேர் நோக்கி நிமலன்மால் புரிதுயர் நீக்கி
மாயன்மற் றவன்கொள் செருக்கினைமாற்றிவருகநீமைந்தவென் றுரைத்தான்

தாதைதாண் மீட்டு மிறைஞ்சுபு குமரன் சடக்கென வெண்†களிற் றுருவின்
மேதகு செருக்கி னின்றவென் னருகு மேவலும் வெகுண்டியா னுருத்தவ்
வாதிதன்சேயொடமர்த்தனனிளையோனயிற்படை தூண்டியென்செருக்கைக்
காதிவெள்ளெயிற்றைக்கவர்ந்துசென் றீசன்கழலடிதொழுதுமுன்வைத்தான்.

கந்தரம் புரையுங் கந்தர னுங்குக் கடவுள ராதியோர்க் கருளி
நூந்தம்வாழ் பதியி னேகுதி ரென்று நொடித்தனன் விடுத்தயிற் கரத்தெங்
கந்தனை மனமு கந்தருட் கரத்தாற் கந்தமார் தரவினி தணைத்து
மைந்தநீ யீண்டுப் புரிசெயற் கிதய மகிழ்ந்தன மென்றுவாய் மலர்ந்தான், ()

கூற்றுறழ் தடங்கட் குவவுமென் முலைப்பூங் குழற்பிறை நுதற்றுடி நுசுப்பிற்
கோற்றொடி கேண்மோ வனந்தர மெனது கோலத்தின் கோலத்தை நீக்கி
மேற்றிக ழவனி மாதைவேட் டுவப்பான் விரும்பியச் சுவன்னக விபினத்
தாற்றுபு தவஞ்சீ தளியா னடிக்கீ ழருச்சனை புரிந்தவ ணமர்ந்தேன். (௩௰,

இருநில மகளு மென்னைவேட் டுவப்பா னீசனைப் பூசனை புரிந்து
மருவின ளாங்கெம் மிருவருட் கோளு மதிமுடி திருவுள மதித்தெம்

† களிறு - பன்றி.

மருகெழுந் தருளி னும்பூளக் கருத்திங் காகெனப் பணித்தன ளுங்கன்
பிருகுமா தவனு மணமுறை யவனிப் பெய்கனை தீனையெனக் களித்தான். ()

வதுவைநன் மரபின் வந்தவவ் வதுவை மணந்தியா னத்திருத் தலத்தின்
விதுவைமா முடியெஞ் சீதளி நாதன் வீற்றிருந் தருட்ளி வடபான்
மதுவையுண் டளிகள் குழல்பயில் குழற்பூ மாதொடு மகிழ்தாங் தருசிற்
பொதுவைபொற் கமலச் சேவடிப் பூசை புரிந்திருக் கின்றன னங்கே.(௩௬)

இவ்வகை யாங்ங னமர்ந்திடு நாளிவ் விறையவன் மறைநனுன் கலரோ
னெவ்வமின் முனிவ ரெவர்க்குமெட் டாத வியல்பின தாயதன் சொரூபத்
தவ்விய லனைத்து மெனக்குப தேசித் தருளின னயன்புரி நடமே.
மைவ்விழியெனது விழைவுமென் றுரைத்தான் மாதவன் மலர்மகள் வழங்கும்

நாதனே யெனைய ளுதரித் தவனி நங்கையோ டங்கெழி னடன
மாதரக் காண்ட லெம்முறை யமைக வருளினி யென்னிடத் துளதே
னீதவை கூர்ந்தந் நடனம்யான் காணு நெறியினை யுரைத்தரு ளென்று
வோதலு முதுகேட் டலகெலா முதித்த வுந்தியா னுவட்கிவை யுரைக்கும். ()

அரியன வாகு மசாத்தியப் பொருளு மருந்தவஞ் சாத்திய மாக்கும்
வருணனற் குனு பிருகுவுக் குரைத்த வாறிது கேண்மலர் மானே
யுரியவத் தவமோர் மூன்றவை மனம்வாக் குடம்பினு லுனுற்றுவ வாகுந்
தெரிவுறு மிவைதா மிலௌகிகஞ் சிறந்த தெய்விக மெனவிரு திறமாம் ()

இருவகை விரிக்கிற் றெய்விக மூன்றி லௌகிக மூன்றென விசைப்ப
வரியலௌ கிகந்தான் *பரார்த்தநிட் காம §மனசூயை யாகிமா னதமு
மருவித வசனஞ் சத்திய மாதி வாசிக மும்மும வாசங்
கருதுறு தீர்த்த சேவை ‡தானுதி காயிக மும்மென மூன்றே. (௪௦)

எய்தியா னுதி மனஞ்செபா தியவாக் கியாகமுற் காயமிம் மூன்றுந்,தெய்விக
மாமி லௌகிகஞ் செய்தே தெய்விகம் பின்செயன் முறையாந், துய்யலௌ
கிகத்தை யொழிந்துதெய் விகத்தைத் தொடங்கல்வே ரற்றிடு மரத்தின்,
பெய்கனிக் கிச்சை கொள்வது போலும் பின்னையீ துண்மையென் றுணர்தி

இப்பரி சுணர்ந்தா ரேவத வனத்தி லெய்திலௌ கீகதெய் விகமாந்
திப்பிய தவங்க ளிரண்டுநீ யன்பிற் செய்கெனச் செங்கண்மா லுரைப்ப
வப்பொலங் கமலை சம்புசா நித்தி யந்தரு மேதுவா மவைநான் [றும்.
றப்பிலா தியற்றும் விதியருள் கென்று தாழ்ந்துமுன் னிறைஞ்ச மால் சாற்

---

* பரார்த்த நிட்காமம் - பிறர்பொருளின் விருப்பமின்மை.

§ அனசூயை - பொறாமையின்மை.

‡ தானாதி - தானமுதலியன,

வேறு.

வனசை கேண்மதி யிவ்விரு வகையுமெய் யன்பி
னனகன் வெள்ளியஞ் சைலத்தெம் மண்ணரு ணினைந்தே
யினிது செய்திடத் தக்கதா மித்தகு வாய்மை
தனைம றந்தவர் தாமவற் றுறுபயன் சாரார். (௪௩)

பவள மெல்லிதழ்ப் பான்மொழிப் பைந்தொடி கேட்டி
யிவை யிரண்டொருங் கியற்றென முராரிமுன் னிசைத்தாங்
கவிர்ச ரோருகத் தமர்ந்திடு மனையவ ளவண்போய்த்
தவமி யற்றுதற் கமைவுறு வேடமுஞ் சாற்றும். (௪௪)

அவிந றுவுணு மலர்க்குழல் வேணிய தாக்கி
யொளிகொள் பூந்துகி லாமர வுரியினை யுடுத்து
வளரு மன்பொடு தரிப்பவர் பசுத்துவ மாற்றித்
தெளிவு றுஞ்சிவத் துவஞ்செய்வெண் ணீற்றைமெய் திகழ. (௪௫)

நிறையுத் தூளன மேதிரி புண்டர நெறியே
மறைமுற் கூறுசா பாலத்தின் வயங்குமைந் தாறென்
றறைம னுக்களா லணிந்துபின் சதவுருத் திரமந்
நெறியிற் கூறியப் பதந்தொறுந் தருப்பண நிகழ்த்தி. (௪௬)

பாத்தி யாசம னார்க்கிய மேநறும் படீரங்
கூர்த்த வக்கதை தூருவை கூவிள மிதழிச்
சீர்த்த மாமலர் முதலுப கரணங்கள் சேர்த்தி
யேத்து சத்தியோ சாதமா தியமனு வியம்பி. (௪௭)

ஆண்டு சீதளி நாதனை யருச்சனை யாற்றி
மாண்ட குஞ்சிவாக் கினிவளர்த் தமுதுநீ வார
மீண்டு பிப்பில மர்திய பொருள்களா னீற்றிற்
பூண்ட வாகம விதிமுறை யோமமும் புரிதி. (௪௮)

ஓது மன்பினர் விளைவெலா மொருங்கினி தருளு
மேத குந்திர லைந்தெழுத் தினைவிரை மலர்மேன்
மாது தாரக மசலைமா மாயைதன் பீசங்
கோதி லாதநின் பீசமுங் குலவு முன் சேர்த்தே. (௪௯)

மறைசொல் சம்புவைக் கிருட்டின பிங்கள வடிவி
னெறிம லர்க்குழ லுமையொரு பாகனு னினைந்தே
முறைகொ ணற்செபம் புரிகுதி முளரியஞ் சேக்கை
யிறைகொள் பொற்றொடிச் செங்கரத் திந்திரை யிவைநீ. (௫௰)

யாமு ரைத்தவா தேர்ந்தினி தியற்றினீ யினையுங்
காமம் யாவையு முடிக்குவன் கண்ணுதற் கடவுள்
வாம மாதவ னென்றவண் மாதவ ளிதழி
நாம வல்லியின் வல்லைசெல் கென்றுரை நவின்றான். (௫௧)

வேறு.

என்றுமா னுரைத்த யாவையுங் கமலை யிருசெவி மடுத்துளத் துவகை
துன்றநே ரிறைஞ்சி விடைபெறீஇ யிதழித் தலந்துபேர் முளரியிற் புலங்கள்
வென்றுநோற் றமலன் புரிகடங் காண்பான் விரைதரு நிறையவா வுந்தச்
சென்றுசேர்ந் தனைய வணப்பிர திசைத்திகை யிருகுரோசத்திற் றிகழும்.

அகலிகாரை நகர்தனிற் சயம்பு வாமருட் குறியினை யாம்பன்
முகவினைச் சண்டி சனிவிழி குளிர்ப்ப முன்னுறக் கண்டனண் முதமே
தகவுளத் தெழுமெய் யன்பினு லுடன்பூ தலமுறப் பணிந்துமுன் றுதித்தாள்
விகசித வருண வம்பயப் பொருட்டின் மேவிவீற் றிருந்தருள் விமலை.

காரையூர்ந் தவன்றனி ளவன்மார்பகத்தாள் காரையூ ரதனிலோர் தடந்தன்
பேரையூர் தரக்கண்டதனிடை மூழ்கிப் பிறைமுடிக் கறைமிடற் றிறைவ
னாரையூர் பதத்திற் சிவாகம விதியா லருச்சனை யன்பினாற் புரிந்தாள்
வாரையூர் முலைபா கனுக்கத னூற்சீ வந்திய நாதப்பேர் வாய்ந்த. (௫௪)

உரைத்த நூல்விதியா லரணடிப் பூசை யுஞற்றியக் கமலையாங் கிருப்ப
வரைத்தனுக் கோட்டிப் புரத்தெரி யூட்டு மந்தகா சந்தரும் வரன்மா
விரைத்தமர் போதின் மாதிரு காதுக் கின்னமு தொழுக்குவ தென்ன
நிறைத்துவம் புதஞ்சூ ழம்பரத் துடம்பி னிலவுறு மொழியிவை நிகழ்த்தும்

நித்தகல் யாண மங்கள ரூப நிலவுற வுலைவிலா துளத்திற்
பத்திமை யோடுநமை யருச்சனை செய்பவள் வாய்ப்பதுமை நின்றனக்கீண்
டத்தரு பத்தி யென்றுமே லோங்க வகிலமும் பரவுறு மிதழிக்
கொத்தலர் வீபினத் திமகரர் குலம்பல் கோடிசூழ்ந் தொளிர்வது போல.

முதிருட் சயம்பி லிங்கமொன் றெமக்கு மூலமா யிலகுமத் தலனிற்
றிதலைவெம் முலைநீ சென்றுசேர்ந் தவணச் சிவக்குறி தனையருச் சனைநூல்
விதிமுறை புரிதி யென்னலும் வணங்கி விரைந்தன ளவ்வண மேவிக்
கதிதரு வியனீர்ச் சிதுவி மேல்பாற் கவிழிணர்க் குவளைமு லத்து. (௫௭)

இந்திர ஞாதி யெண்மரு முலக மெட்டினின் றுங்ஙன மெய்திச்
சிந்திய வலியின் பெற்றுவாழ் வுறுவான் றிருந்திய வருச்சனை புரிய
முந்துநல் வரங்க ளளித்தது மேதை முனிவர ரருக்கரா தியர்செய்
தந்தபூ சனைகொண் டவரவர்க் குரிய தருவரம் பலவளித் ததுவும்.(௫௮)

ஆயதோர் சுயம்பு லிங்கமிக் கிலங்கி யணிமணிப் பிழம்பென வாங்கே
மேயவெண் டிசையுந் தனதொளிபரப்பி வீற்றிருந் தருள்வது கண்டாள்
சேயவா ரிசத்தி லிருந்துல களிக்குந் திருமக ளருகுசென் றமர்ந்து
பாயவன் பொடுமப் மாமனைப் பணிந்து பகர்சிவா கமவிதிப் படியே. ()

பூசனைக் குறியபொருளெலாந் தொகுத்தப் புராரிதன் றிருவடி மலர்க்கீழ்
மாசறு மினிய சபரியை புரிந்தாண் மனநெகிழ்ந் தரியன துதித்தா
ளாசறு கமலை யாங்குநின் றெருவா றகன்றுசீ தளிவட கரையிற்
றேசமிங் குறுநற் றவம்புரி கருத்தாற் சென்றுநின் றுங்கிது செய்தாள்

கருபயித் தாங்கொன் றவனியிற் பதித்தாள்கார்முகந் தனையாங்குரித்துத்
தொகுபலகிளைகொண்டெழுதருவாகித்துலங்குமாபெய்தனள்வளர்த்தத்
தகையபூ ருகமே யுடசமாக் கொண்டு தான்புரி தவக்கிட ருறுது
வகைசெயக் கருதி மலர்ந்தசெவ் வனச மலர்வரு தலைவியீ தாற்றும். ()

கவிர்புரை யதரத் தனையவன் முகுந்தன் கரத்தசெங் கரத்தசக் கரத்தை
யவனுற நினைத்தா ளஃதுணர்ந் தாழி யத்தடத் தகன்றிசை மேல்பாற்
குவலைய நேமி தீர்த்தமென் றுரைப்பக் குளித்தெழுந் தனர்மகட் குறுகிப்
புவிதொழு மடிக்கீழிறைஞ்சிமுன் னிற்பப் பூவையத்திகிரியை நோக்கா.

பரிதியைப் பழிக்கும் பரிதியிப் படிநாம் பயிறவ மானணம் பரிக்கென்
றரிதவ ணிறுவி நோற்றமர் காலை யற்புத மொன்றவட் கண்டாள்
வருமதன் வரலா றுரைக்குவங் கேண்மின் மாதவத் தீரொரு சேன
மருமலர் செறிசீ தளியுறு மீன்முன் வாயினுங் கவர்ந்துண வீழ்ந்து.(௬௩

ஓய்யென மீனொன் றெடுத்துவிண் ணேக வுறுகய னழுவுற வுடன்வீழ்ந்
துய்யுநீ ருடல நனைவுறப் பெற்றவ் வுருவமே திவ்விய வுருவாச்
செய்யபொன் னிறமுநேத்திரமூன் றுந்திகழ்புலித்தோல்விளங்குடையுங்
கையமை லபய வச்சிர சூல கந்தர கந்தரக் கவினும். (௬௪)

பணியணி வேணி மதிநதி யாதி பலவுமுற் றிலகுறு மீச
னணியசா ரூபம் பெற்றவா நோக்கி யாரைநீ யென்னவப் புருட
னிணையிலங்கீர்தோய்கலத்தின்முக்கால*மெய்திறனெய்தலினிசைப்பான்
மணமலர்த்திருவே மானவ தேய மன்னன்யான் மணிப்பிர காசன்.(௬௫

* எய்தல்—அறிதல்.

தாணியிற் றாணி குலத்திலவர் தானைச் சபரியை முப்பொழு தாற்றி
யரசுரி நீதி வழுவிலா தியற்றி யறநெறிப் பொருண்மிக வீட்டி
யுரியவெண் கவிகை நீழலி னுலக மொருங் [illegible]
புரவிதேர் பதாதி யளவில [illegible] துவிசயந் தரித்தேன்.

அளவிலாச் செல்வப் பெருக்கினாற் செருக்குற் றிரித்தலி சமருமக்காலை
வளரொளிச் சடையும் புலியத ளுடையு மலர்க்கர காரமு மயங்க
விளையருந் தவஞ்செய் மிருகண்டு முனிவன் மெய்ம்பசி பம்பமெய்வாடிக்
களையகற் றுணவு விழைந்துநண் பகலிற் கடிதென தருகுவந் தடுத்தான்.

ஈசனை யாதவழிபடற் பால ரீசன்மெய் யடியரென் றெண்ணு
வாசுசே ருளத்தா ரன்றியு மிகழ்வக ருங்பசி யுற்றடைந் தவரை
நேசமோடணைப்போம்பொழுதினுமழையார் நிறையுறத்தாந்தனி யுண்பார்
நீசரின்னவர்தீநரகினெஞ்ஞான் றுநிலைப்பரென் றறிந்துவைத்திருந்தும்.

போகலூழ் வலியா லவனடி பணிந்து போற்றிடா திருந்தன னதனைத்
தீகலூழ் சாபம் வல்லனே யாயுந் திருவளத் தடைத்திடா திருந்தா
னுகொடும் பதக னுயநான் றனிச்சார்ந் தயின்றுபின் வருந்துய ரறியா
தேகியம் முனிமுன்வருதலுமிருகண்ணெரியுகக் கொதித்தெனைநோக்கி

அரசநீ*யாச னகலின் னுமலி யாயினுந் தலைபணித் தகன்றுங்
கொருவுறும்வாந்தியனமெனவெமரீத்தொழித்தனர்பழித்தவிச்செல்வம்
பெருமித வாழ்வென் றதனையே யிறுகப் பேணுபு நித்தியப் பொருளாக்
கருதினையனைய செருக்கினாற் பசித்துன்கடைத்தலை யணுகியநமையும்.

வழிபடல்புரியாதொருதனிப்புகுந் தூண்மடுத்தெதிர்புகுந்தனைமடவோய்
பழிபித னனீ பருந்துருக் கொண்டு பசிக்கன றகிப்பவெங் மகங்கு
முழலுபு திரிகென் றுறுவர்கோன் சபிப்ப வுளநடு நடுங்கியவ் வுரவோன்
கழலடிதனில்வீழ்ந்தெந்தையெம்பெருமகடையனேன்பிழைபெரிதேனும்

ஐயநின் கருணை யதனினும் பெரிதா லப்பிழை தன்னையுள் ளடக்கித்
துய்யவக் கருணை மேற்படன் முறையே சொல்வதி யாதினி நாயே
னுய்யுமாறருள்கென் றுடன்பலதுதித்தவ்வுறுவர்கோனடிக்கிடந்தினந்தே
னையுறேலாசவெழுகவென் றுரைத்தானவைபினேனதுவினுமெழுந்தேன்

அஞ்சலி கரமென் சிரமுறநின்றே னறவர்கோனெதிரவ னெனைப்பார்த்
தஞ்சலி லருளான் மன்னகேண் முன்னு ளெறுழ்வலியசுரருஞ்சுரரும்
விஞ்சுபோர் புரிகாற்சுரருடைந் தகல்பால்வீரையின் முராரியையடைந்து
தஞ்செயலுரைத்தாங்கினைவுறவனையான்றனவர்தமையெதிர்ந்தடர்த்தான்

---

* அ–இன்மைப்பொருட்டு.

அரியிகன் றசுரர் யாரையுந் துமிப்ப வஞ்சபு சிலருடைந் தோடி
மருவல ரிதழி வனத்திற்றங் குரவன் மந்திரி தந்தையாம் வாஞ்சால்
பிருகுவி னுடைசத் தொளித்தன ரிருப்பப் பின்றொடர்ந் தாய்குறு மாலப்
பெருமுனி யாங்க ளுமுன் னரே புரத்திற் பிரிந்தமை தெரிந்துழை புகுந்தான்

வேறு.

புகுதலு முனிவன் பன்னி புகலுற்றார் தமைத்தம் மாவி
யுகுமிடர் வரினு மோம்ப லுத்தமர் மாபென் றோதுந்
தகுதியி னுறைத்து நின்றா ளாதலிற் றகைய மாலை
யிகலின்முத் தொழின டாத்து மிறைவரு ளொருவ னையும். (எரு)

திதித்தொழி றனதே யாயு மூழ்வினைத் திறத்தி னானே
விதத்தசத் துவகு ணந்தன் றொழிற்கலா தியல்பிற் சாரா
விதத்தினே கடலி னூருந் துயிலுதல் கரிய மேனி
வதத்தொழின் முதலி யற்கைத் தமகுண மருவ லானே. (எசு)

அனையமா றகையு நாரி யறவர்கோன் சுபன்னி யொன்றோ
வினையறு சூலியாக விரங்குவ தறிந்து மந்தோ
கனலெழ வாழி யோச்சிக் கற்புடை யவளைக் கொன்றான்
பினைவுறு மசுரர்க் கொன்றான் பெயர்ந்துடன் விரைந்து சென்றான்.

அந்தின்மா லேய பின்ன ரருந்தவப் பிருகு வாங்கு
வந்தன னிகழ்ந்த தோரான் மனைவிதா னவர்கண் மாட்சி
சிந்தைவெந் துயரின் மூழ்கத் தெரிந்திட ருழந்திச் செய்கை
யெந்தவெம்பதக ரானி கழ்ந்ததென் றுளத்தி னெண்ணி. (எஅ)

மாலெனும் பெயரை வாய்ந்து மயக்கமே யியற்கையாக் கொண்
டாலுறும் வஞ்ச னேயிக் கொலைஞனென் றகந்துணிந்து
சாலும்வெங் கோப சாபந் தந்தன னனந்த யோனி
மேலளா விலாப்பி றந்தை மேவிமா றுயர்க வென்னா. (எகூ)

அரிகரத் தமர்ந்த செங்கே ழரிகறை தோயு மாழி
விரிகறை யுறுக வென்னா விரிகறை மேலோன் கூறும்
பரிகா மிலாத சாபம் பரிகர வளையை மாலை
யெரிசுடத் தொடர்ந் தலைப்ப வெரிசுடர் மணிகொண் மார்பன். (அo)

கதிதரு காஞ்சி மாந கரத்தடைந் தமலன் றானை
விதிமுறை நமர்ந்து வந்த வினைவைவின் ணப்பஞ் செய்து
துதிபல கூறி வேண்டத் துவரிதழ்க் கௌரி கொங்கை
பதிவுறக் குழைந்த மேனிப் பரமனங் கருளிக் கூறும். (அக)

சாபத்தை நினைந்தினைந்து தளர்வுறு முகுந்த கேட்டி
யாபத்தை யகற்றி யின்பே யருள்கொன்றை யடவிசேரிப்
பாபத்தைத் தணிவித் தன்பாற் படர்தரு படரைத் தீர்க்குஞ்
சோபத்தை யொழிதி போதி யென்றனன் சுருதி நாதன். (அஉ)

அம்மொழி வினவி மாயோ னவ்வனத் தணித்தி னேகிச்
செம்மைசெ யீச னுரைச் சிவபுரத் தமலன் றன்னைக்
கைம்மலர் தூவிப் பூசை காலங்க டோறுஞ் செய்தே
யிம்முறை வருட மொன்றாங் கியல்புற நோற்றி ருந்தான். (அங)

தவமுவந் தமல னங்குச் சார்ந்தெதிர் சலசை கேள்வ
விவணடைந் தெம்மைப் பூசை யியற்றுதி யென்கொ லென்ன
வவனடியிறைஞ்சி மாயோன் விளைவெலா மடைய வோதி
யெவமுறு சாப மோசித் தெந்தையெற் புரத்தி யென்றான். (அச)

மாதவ னுரைப்ப வெம்மான் வருதிமா லெமக்கன் போரம்
மாதவப் பெரிய ராற்றல் வருந்துயர் புரிந்த வந்த
மாதவன் றன்னை லன்றி மாற்றொணா தெம்மா லென்று
மாதவ ழிதழி வேணி பிருகுவை மனஞ்செய் தானால். (அரு)

சிவபுரத் தமல னுள்ளஞ் செய்தலு மனத்திற் போந்து
தவநிறை பிருகு வெம்மான் சரண்முடிக் கொண்டு தாழ்ந்து
பவனெதிர் துதிய னேகம் பாவியொன் றினுக்கும் பற்றா
வவலனேன் றனையு மிங்கோர் பொருளென வகத்துட் கொண்டோய்.

இந்திர னயன்மா லாதி யிமையவர் முனிவ ரேனோர்
புந்தியின் வழிபா டாற்றிப் போற்றுபு சூழ்ந்து நிற்ப
வெந்தைநீ யாது மோரா வேழையாஞ் சிறிய னேனைச்
சிந்தைசெய் தருளிற் றென்கொ றெரித்தருள் பெரும வென்றான். அஎ

திறவில் பிருகு மாற்றந் திருச்செவி மடுத்து முக்கட்
பிறைமுடிக் கறைமி டற்றெம் பிரானருள் பெருக நோக்கி
யறனிறை பொறை முன்னாய் வருந்தவத் தங்க மெல்லா
நிறைவுறு முனிவ கேட்டி நீளோதன் கேள்வ னின்பால். (அஅ)

ஆற்றிய தீமை யம்ம வறைவதன் றதுகு றித்துச்
சாற்றிய சாப மேற்கத் தக்கதே யெனினு நம்மைப்
போற்றிய தொழின்மேற் கொண்டோன் புரப்பவன் புன்கண் ணுற்றாற்
பாற்றிய வருளல் யாவர் பாலதெங் கடமை யன்றோ. (அகூ)

அன்றியு மிவணை டைந்தே வருடமொன் றளவு நம்மைப்
பொன்றுரு வன்பி னேடு பூசிக்கு நியமம் பூண்டான்
நன்றுல களிப்பா னின்றே லகிலமு நலத்தி லீங்கி
வன்றுயர் பலவுட் பட்டு வருந்துறு மாத லாலே. (௯௦)

வேறு.

பவவினை புரிந்து வருந்துமால் சாபம் பாறுமோர் பரிசுரை யெனவப்
பவனருள் சிரமேற் கொடுமுனி யுரைக்கும் பங்கயக் கண்ணநீ யளவில்
பவமென லகன்றீ ரைந்துமட் டடைந்தப் பவங்களுட் டசரதன் மகவாம்
பவமதின் மனையை யிழந்துபின் னாளிப் பாரினிற் கானிடைப் பயில்க.

சக்கர நீயா தவகுலத் துதிக்குஞ் சனனத்தோர் முகூர்த்தமா மளவு
மிக்கபேரொளிபோய்க்கறையுருவடைந்துவிளம்பியசாபமேற்றெழுகென்
றக்கட வுண்மா முனிசெல வான்றா ளரிபணிந் தமலனை யடியேன்
புக்குறைதருமப்பிறப்பிடைமயங்காப் போதமீந்தருள்கெனப்புகன்றான்.

திருமறு மார்பன் பணிந்துரை வாய்மை திருச்செவி மடுத்தர னருளு
மரிநின தொருபான் பிறப்பினு ளொன்றே யனுக்கிர கம்பெறற் கமைவ
துரியநிக் கிரகம் பெறுவமற் றைந்து முவற்றினு மீற்றினி லருள்வோம்
பரிவுறேல் விழைந்தவாறுமெய்ஞ் ஞானம்பாலித்தன்பதம்புகவளித்தும்.

எனவர னுரைப்ப விறைஞ்சிமா லகன்றா னிவ்வரி பூசனை செயலா
லனகவப் பதிபி னரிபுர மெனும்போ தாயதப் புரத்தினி யாசை
முனமுறைத் தாங்குச் சேனமா யடைந்தம் முன்னவன் றன்னைமெய் யன்பாற்
றினமுமர்ச் சனையீ ரைம்பஃ தாண்டு செய்தவ னினிதமர்ந் திருப்பாய்.

இன்னண மாங்க ணமர்ந்திடு காலை யிரும்பசி யுடற்றநொந் தொருநாண்
மன்னுபொன் னிதழிவனத்தினிற் றிருப்பேர் வாவியின் மீன்கவர்ந் துண்பான்
முன்னுபு பறந்தம் முயற்சியா லுடல மூழ்குறப் பெற்றதன் பயனு
னின்னையான் முனிந்து புகன்றவிச் சாப நீங்குறப் பெறுதி யான்மேலும்.

செப்பருஞ் சிவசா ரூபமும் பெறுதி சேறியென் றுரைத்தனன் றிருவே
யப்பெரு முனிவ னருளிய வாறே யடைந்தனன் பருந்துரு வதனைத்
தப்புறு தனைய வரிபுரஞ் சார்ந்து தாணுவை யருச்சனை நாளுந்
துப்புற வியற்றி வழிபடீஇ யாங்கட் டேயநன் மனத்தொடு மமர்ந்தேன்.

அப்பதிக் கிறையான் பணிந்தத னாற்சேனனென் றொருபெயரடுத்தா
னப்புராத் திருவே சார்ந்ததன் வண்மா யுயிருறல் புதித
லிப்பருந் துருவை யடுத்தயான் பசிநோ யீர்ப்பவந் திக்கயற்
றுப்புணு வாகச் சலசரம் விழைந்து தோய்ந்தனன் வாய்ந்ததிப் படிவம்.

காழுயர் தவத்தோன் றனையிகழ் பதகன் கயலுணக் கருதுமா கொலைஞ
ஞூழிய நிரயக் குரியனே யாயு மரனருட் டிருவுரு வடைந்தே
னூழினும் வலிய யாவுள வேறொன் றுறவரு மேனுமவ் வூழ்முன்
சூழுபுத் தந்தன் பயனையே யெனநூல் சொற்றது வெளிப்படத் துணிந்தேன்

என்றுமா லகலத் தடத்தமர் சலசை யின்புற முன்புகன் றாங்கு
நின்றவா விமான மேலிவர்ந் தூரிய நிகரிலாச் சிவபுரம் புகுந்து
மன்றவாழ்ந் திருந்தான் யணிப்பிர காச மன்னவ னின்னது வனசை
நன்றுணர்ந் தினைய தீர்த்தமே யாவு நல்குவ தடனெனி தென்பாள். ()

சீதளி யதனுத் தரதடத் தனதன் றிசைக்கரு கடுத்தகீழ் பாலி
னுதாம் பெருக மாபினின் மூழ்கி யருக்கிய முதனிய மஞ்செய்
தேதமி லதன்பே ரிலக்குமி தீர்த்த மெனப்புகன் றியாமிய திசையிற்
போதுபு கௌரி பூசனைக் குவகை புரிகௌ ரீசன்முன் புகுந்தாள். ()

அன்புளஞ் செலுத்த வடுத்தன ளுலகி னருட்குறி யாவைக்கு மூல
மென்பது தோற்றுந் திருவுருப் பொலிவுமிலங்கொளியினங்களெல்லாந் தன்
முன்பொடுங் குறநீ ளொளிப்பிழம் பாகு மூலமுங் கோலமுங் கண்டா
டன்பர மிழந்தாள் சிவவச மாஞ டரையின்முன் வீழ்ந்தனள் சலசை.

பின்னொரு வாறங் கெழுந்தனண் மீட்டும் பிரானடி முடியுறப் பெருகன்
பின்னனி போற்றிப் பன்னுமஃ றுதிக ளியம்பியங் கரிதக ன்றேகி
மன்னிசிற் சபையெம் பிரானைமுன் பணிந்துவந்து காற்றிசையிலத் தளியுள்
முன்னருச் சனை-யான் புரிதரு மிலிங்க மூர்த்திதன் சேவடி பணிந்தாள்.

அனந்தர மனைய விலிங்கத்தின் வடபா லத்தளி யுள்ளினி தமர்ந்து
கனந்தரு குழவி புடவிமா துடனுய்க் கலந்துவீற் றிருந்தருண் முகுந்தன்
வனந்தரு கழற்கால் வணங்கினள் பிருகு மாதவற் கண்டுள மகிழ்ந்தாண்
முனந்தரு மாயன் வாய்மையை நினைந்தம் முதல்வன தாணையின் முயல்வாள்.

சீதளி யரனை மாதவன் முன்னாட் செப்பிய விருமுறை சிந்தித்
தோதுறும் விதிகள் யாவையுந் திகழ வுழுவலன் புளத்திடை நிகழ
மாதவ லரிய வுபகர ணங்கண் மலிவுற வீட்டுபு வாய்மைப்
போதமொ டரிய நூன்முறை நாடிப் பூசனை புரிந்தன ளனும். (௧௦௪)

நாடொறும் பூசை புரிந்தனந் தரந்தன் னுதனுண் டுரைத்தவா நயந்து
பீடுறு திருவைந் தெழுத்தையு முளத்தாற் பேணுநற் செபம்புரிந் தீற்றி
லாடுறு சிவாங்கி வ்திவழி யியற்றி யாண்டுமுந் நூறுநோற் றமர்ந்தா
டேடுமெம் பெருமா னுவந்துபங் குனியுத் திரம்புகர் வாரமுஞ் சேர்ந்த.

—யான்என் றது அகஸ்தியமுனிவர்.

கற்றினத் திடப மீதுமை யோடு நான்முக னாதிவா னவரை
புற்றிடு சனக னாதிவே தியர்யா ழோதிடு மிருவர்நற் கணங்கள் [யப்
சுற்றிட வெழுந்து தோன்றினன் கமலை தொழுதுளத் தானந்த விளை
பெற்றனன் மிடறு விம்மவன் புருவாய்ப் பின்னவன் றண்மலர் துதிப்
பான்.

வேறு.

வேத மலர்கா யத்திரியின் விளங்கு பொருணீ யேயென்ப
வீது தெளிய நின்னுமைத் திடையே யிலகும் பற்கநம
போத னரிமே லானகப் புகலு நாம வியாசத்தா
லோது தொழின்மூன் றனாற்றியுமே லனாற்று தொளிரு மொருவநம.

மலரோன் முதற்கீ டாந்தமென வருதா பரசங் கமரூப
வுலகி னுபாதி பேதத்தா லுணரார்க் கனேக ரூபநம
நிலவும் வலிசேர் தத்துவத்தி னிறைநோக் குடையார்க் கேகநம
நலனார் கௌரி நிருத்தநம நதியார் மதியார் மௌலிநம. (௧௦௮)

சுரர்க டிதிகொ ளரவநம துலங்கு முருத்தி ரேசநம
கரிய கால காலநம கவின்கொ ணீல கண்டநம
புரமுத் திறத்த வயிரிநம பொன்னார் சைல வில்லிநம
வரிதன னொருபா லழகநம வனல நுதற்க ணனகநம. (௧௦௯)

புருட பாவங் கடந்தமையாற் புகலவ வியத்த னாகின்றாய்
புருட னாக்கொள் புத்தியினாற் பொருவி லேக னாகின்று
மிருமை பெறுதி பெண்மையினா லினைய னெனவோர் வரியநம
திரியம் பகமுக் குணாதீத சீத ளீச சிவாயநம. (௧௧௦)

என்று துதிக்குஞ் சலசைமுக மினிது நோக்கி யெம்பெருமான்
மன்றல் கமழு மலர்த்திருவே வருதி யுனது துதிமகிழ்ந்தே
மொன்று முணர்வி னமைப்பூசை யுஞற்றி நோற்ற தெதுகருதி
யுன்றன் வேட்கை யாதுரைத்தி யருள்வோ மென்றா னுமைநாதன். ()

அந்தண் கமலத் தனிக்கோயி லரசி யதிகேட் டுவந்துரைப்பா
ளெந்தை யெமது பெருமானே யெமையா ளுமையாள் பொருட்டொருநீ
மூன்று புரிந்த திருநடன முறையி னீண்டென் பொருட்டினிது
வந்து புதிதி னியற்றுறையான் காண்பான் விழைய மனமென்றாள் (௧௧௨)

கமலை யுரைத்த வதுவினவிக் கருணை பொழியுந் திருவதனத்
தமல னினைத்த வுடனவையு மன்பர்க் கருளு மதுதொழிலோன்
விமல மனத்த திருவிரும்பி வேண்ட வருளா தொழியுங்கொன
மமல மகற்றி யெமையளிக்கு மூனவ னதுவே புரிகின்றான். (௧௧௩)

தெக்கி ணுபி முகத்தமர்வேற் செங்கைக் குமரன் றிருநந்தி
மிகக போத னரியவனி விபுதர் குலங்க ளிருடிகுழா
நெக்குள் ளுருகு மனந்தன்முத லுக ரனையோர் நெருங்கமறை
யொக்க முழங்க வப்பரன்முன புகுற்று நடத்தி னும்புதிதாய். (௧௧௪)

ஓத வரிதா யுணர்வரிதா யுன்ன வரிதா மன்னடமே
நாத முழங்க வியங்கள்பல நலத்த குரலின் விரலுளர்யாழ்க்
கீத முழங்க மிடற்றிசையுங் கிளர்ந்து முழங்க வொருநான்கு
வேத முழங்க வன்பர்துதி விம்மி முழங்க வெம்மிறைவன். (௧௧௫)

வேறு.

அருந்தவம் புரிந்த வனந்தன்மா முடிக்கோ ரணிகல னுயபொற் பதமும்
வருந்திறன் முயல கன்புறத் தூன்று மலருமீ ரைந்துசெங் கரமுந்
திருந்தொளி முகமண் டலமும்புன் னகையுந் தேவசா லந்தெறு கூற்றுந்
திருந்தொளிர் நீல கண்டமுங் கண்டத் திலங்குபொற் கலங்களி னெழி
லும்.

கொன்றைசெஞ் சடையிற் சூழ்ந்தொளிர் வனப்புங் குலவிளம் பிறை
யொளிர் வனப்பும், பொங்கறனி மேரு வருவியின் மார்பிற் புரளுமுந்
நூலொளிர் வனப்பும், வென்றிவெண் ணீறு பாந்தசெம் பவள மேனியி
னுறுகொளி வனப்பும்,மன்றலங்குழல்வெற் பனைபா னோக்கி மகிழ்
வுறுங் கடைக்கணின வனப்பும். (௧௭)

இவ்வனன பலவு மெண்டிசை களினு மிலங்குறத் திருநடம் புரிந்தான்
முன்னர்நின் றிருகண் களிப்புறக் காணு முளரியங் கொடியுள முருகத்
தன்னிரு கரங்கள் சிரமிசைக் குவியத் தரையுறப் பலமுறை யிறைஞ்சித்
துன்னிரு கண்க ணீர்மழை பொழியத் தொழுதுநின் றிவ்வரம் வேண்
டும்.

தேவநா யகனே யுமைபொருட் டன்னுட் செய்க்கட மென்பொருட் டிங்
யாவருங் காண நவமுற வியற்றி யென்குறை முடித்தனை யிதனுன் [நான்
மூவுல கிறைஞ்சு மிப்பெருந் தலத்தை முதலிலென் பெயர்கொளவருளா
ய்யாவரும் பெருமவுமைதிரு மணுள வடியனே னருச்சனை யாற்றும். ()

ஞானதரு ளுருவாய் மூலமா யிலகி நிலையுறு மிணையமா விலிங்கந்
தனையுநா ளேற்றங் கமர்தடத் தினையுந் தமியனேன் பெயர்முதற் சார்வா
னினிதருள் புரிதி யிவையொழிந் துலகி னிலகுறு முயர்பொரு ளெவற்
[றும்
வினைதெறு பரம வென்பெயர் முதலின் மேவிய வருடியால் விமல. ()

அன்றியு மெந்தா யித்தட நாப்ப ணன்பொடுன் பூசனைத் தொழிலே
யென்றுநான் புரிந்தாங் கிருந்திடு மாறு மினிதருள் புரியெனப் பணியத்
துன்றிய கருணை நோக்களித் தளிசூழ் சுரிகுழல் வரிவிழித் தொடிக்கை
மின்றரு நுசுப்பி னணங்குரைத் தாங்கு மேவுகென் றருளியவ் விமலன்.

கமலைகே ணின்னு லருச்சனை புரிந்து கருதியேத் திடப்பெறு நமைநீ
யமலமா கௌரி தாண்டவ மூர்த்தி யாகவே சந்தத நினைந்து
விமலையா யமர்தி யெமதுபொன் வேணி மேவுமா கங்கையா னிறைந்து
நிமலமுற் றுளதுங் கௌரியாற் பாசா னிருமிக்கப் பெற்றசீர்த் தியதும்.

அரிவைநீ யெமையாங் கருச்சனை புரிந்தே யமர்வது மாயவத் தடத்திற்
புரிவொடு முழ்கி நமையும்வந் திறைஞ்சும் புண்ணிய னெவனவன் றனக்
[கும்
பரிவினன் மோக்க மளிக்குது மென்னுப் பகர்ந்துமா சகிதனு யாங்கே
விரிமலர்த் தவிசிற் றெரியிழை பரவ வீற்றிருந் தருளினன் மாதோ. ()

பின்புமக் கமலை யான்புது நடனப் பெருந்திருக் கோலத்தின் பொலிவை
யென்புநெக் குருகக் கண்டுகொண் டுள்ளத் திடையறு வானந்தம் பெருக
வன்புரு வாகி நாத்தழு தழுப்ப வகத்தடங் காதெழுந் தாங்கு
முன்புநின் றரிய வாக்கிய வகையான் முன்னவன் றனையேத் தெடுப்
[பான்.

ஆதியு நடுவு மந்தமுங் கடந்தோ னனுதியன் சனுதனன் விசால
மேதகு பவஞ்ச ரூபகன் பானவ் வியயனே விபுபல கோடி
யாதவர் மதிக னங்கிகாந் தியனல் லடியவர் மனோரதம் யாவுந்
தீதற வருளு மருட்பெருங் கடலெஞ் சிதளி நாதனுன் போற்றி. ()

வஞ்சுசெறி யுலக சிருட்டிமுன் னுக வயங்குமுக் கிருத்தியம் புரிவோன்.
விரிஞ்சன்மா தவனு ருத்திர வடிவன் வியத்தகு முக்குண நீதன்
சரஞ்சர விசால பலபுரு டார்த்தந் துதிப்பவர்க் கருளருட் டேமைத்
திரஞ்செயு முருவன் பாவநா சகனெஞ் சிதளி நாதனுன் போற்றி. ()

அனந்தவெம் பூத சங்கநா யகனல் லருணிதி சனந்தன ஞதி
யனந்தமா யோக முனிகுல பூசி தாங்கிரி பங்கய னரஞ்சே
ரனந்தமா மகுட பூடண மாக வம்பூயாங் கிரிதரித் தருள்வோ
னினந்தொழு மனந்த நாமரூ பகனெஞ் சீதளி நாதனருள் போற்றி. ()

வெங்கதிர்த் தாணி யங்கிதன் சோம விலோசனத் திரையன்மின் புரையு
மங்கதிர் வேணிக் கங்கையிந் தணிந்தோ னரையினிலுரகருத் திரன்றன்
பொங்குசார்த் தூல சருமவம் பரன்றள் போற்றுநர்ப் புரக்குமங் கண்
[ணன்
றிங்களென் றென்றும் வலஞ்செலுஞ் சிகரச் சீதளிநாதன்றாள்போற்றி.

சுகந்தமா லதிமுன் னுமலர் வேதந் துதிதிரி சுபன்னமுன் னணிந்து
திகந்தமா மணகூர் சுசந்தன படீரந் திமிர்ந்தா தனந்தரு ளாதி
யுகந்தபூ டணகந் தரத்தொடு மெளியேற் கோங்குமா சிற்சபா பதியாய்ச்
செகந்தனி வீடு பேறுற நடஞ்செய் சீதளி நாதன்றாள் போற்றி. (கஉக)

இன்னிசை மிருதங் காதிதா ளங்க ளியைந்தசங் கீதங்கள் யாவுந்
துன்னுச்சா மியமாந் தாண்டவப் பிரியன் றுலங்குமா மறைச்சிலம் பாற்
பொன்னட வாமகுஞ்சித பாதன்புயங்கபூ டணனரி போதன் [றும்
சென்னிதாழ்ந் திருபாற் றுதிசெயுந் தலைமைச் சீதளி நாதன்றாள்
போற்றி. (கஙO)

உமைகராம் புயத்தா லுவந்துசெய் பூசைக் குளமகிழ பவன்புலி முசாரி
யமரர்கண் முனிவருலகபா லகர்க ளனந்தன்முன் னவர்தொழு மமல
னிமமலை யுதவு விமலைதன் னுத னேத்துநர் காமியப் பிரதன்
றிமினிமி ரிடப மூர்ந்தருள் பரமன் சீதளி நாதன்றாள்போற்றி. (கஙக)

புரந்தர னுதி யபார சமுக பூசித பாதவம் புயன்றுங்
கரந்தராம் பனலா னிலாம்பரேந் திரவி யான்மக வட்டமூர்த் தியன்பூ
வரந்தரு பிருகு வருச்சனைக் குவந்தோன் வரனரன் புராந்தகன் மறலி
திரந்தரு முரத்தி ஞெச்சுபங் கயனெஞ் சீதளி நாதன்றாள் போற்றி. ()

என்றுபன் மொழியாற் றோத்திரம் புரிந்தாங் கிலக்குமி யிதயமீ துவகை
துன்றுறக் கசிந்து கண்மழை பொழிந்து துணைக்கரஞ்சிரமிசைக்குவிந்து
நின்றிட வானைத் திகழ்பாற் பானை நிகழ்சபா நடனநா யகனை [றிவாள்
முன்றனி யிறைஞ்சி யெழுந்துநின் றகில முதல்வனைப் பார்த்திது மொ

* சாமீயம் - சமானத்துவம்.

அமரநா யகனே கிட்டற் கரிய வமலைபேர்த் தாண்டவ மளியேன்
றமமற விருகண் களிப்புறக் கண்டேன் சன்மசா பல்லிய முற்றேன்
பமரமா துரிய மதுநுகர்ந் திசைகள் பாடுமிச் சீதளி நாப்பண்[ணைத்தான்
விமலநீ யுரைத்தாங் கென்றுமிற் றொழுதே விழைந்தமர்ந் திடுவலென் று

அம்மொழி வினவிய வமலனுங் கமலை யானன நோக்கியீ தறைவான்[டோ
செம்மலர்த் திருநீ புகன்றவித் துதியைச் சிந்தித்தோ ருரைத்தவர் கேட்
ரிம்மையி னினைத்த விட்டகா மியங்கள் யாவையும் பெற்றுவாழ்ந் தேனை
யம்மையின் மோக்க மடைகுவ ரைய மன்றிது திண்ணமென் றறைந்
தான். (கநஎ)

இவ்வகை யருளு மீசவாக் கியங்க ளிலக்குமி வினவுள மகிழ்ந்தச்
செவ்விய விதழிக் கானன மொருவான் சீதளி நாப்பண்வீற் றிருந்தா [த்
ளவ்வணி யிழைபூ சனைபுரிந் ததற்பின் னமலனைத் தலத்தையத் தடத்தை
திவ்விய நாமஞ் சீதளி நாதன் சீதலஞ் சீதளி யென்ப. (கநஅ)

எத்தகு பொருளு மத்திரு முன்னு வியைந்தன சீதளி யெனவு
மத்தடத் தீசா னொடுதா டத்தி னவிர்தரு மருச்சுன விருக்கங் [ஞ்சார்
கொத்தல ரலங்கற் குழற்றிரு வென்றுங் குறித்தமர் வெறித்தவம் புய
நத்துல வனைய சீதளி யமோக நளினியென் பெயரையு நணுகும்.(கநகூ)

பொன்மகள் காணப் புதுநடஞ்செயுமப் புராதன நகரியின் புத்து[மீசன்
ரன்னவும் யாண்டும் வழங்கிடப் பெற்ற தியார்க்குமூன னவனெனு
பின்னரா மயன்மான் முதலினோ ரிறந்து மிறந்திடாப் பெற்றிய னுகி
மன்னிநின் றிளமை புதியவ னுக வயங்குதல் போன்மென மாதோ. ()

வேறு.

[யோன்
செங்கமலத் திருக்கோயில் வீற்றிருக்குஞ் சேயிழையச் செங்கண் மா
றங்குதிருப் பாற்கடலின் முன்புநடந் தரிசித்த தகைமை யுள்ளத்
தங்கனுற வெழுந்திருகை சிரங்கூப்பு மஞ்சலிபார்த் தவன்பா லந்தத்
துங்கநெறி வினவியிரு வகைவிதிகேட் டுள்ளன்பு தூண்ட லாலே. ()

செவ்விதழி வனஞ்சார்ந்து பிருகுமுனி தனைக்கண்டு சிவனைப் பூசை
யெவ்வமக லுறப்புரிந்து கௌரிதாண் டவந்தரிசித் திறைஞ்சி யந்த
நவ்விமறி திகழங்கை நாதனருள் பெற்றுடனெஞ் ஞான்றுந் தூய
பௌவதிகர் சீதளியி னிடையிருப்ப வரம்பெற்றப் படியே வாழும். ()

திருத்தலமு மத்தகைய தீதளியு மாங்கருளே செய்தெம் முன்னங்
திருத்தமல னருளுருவா யமர்மூல வருட்குறியுந் திகழும் மூன்றுந்
திருத்தகுபல் புராணமிதி காசமுதல் யாவுமுணர் சிந்தை யான்மூ
திருத்தமர்சர் வோத்தமமென் றங்கையெடுத் தனலேந்திச் செப்புவாரால்.

பவித்திரமாய்க் கமலைசெங்காப் பவித்ததுதி யட்டகமப் பான்கை நாக
பவித்திரன்முன் றுதிப்போரப்பானருளாற்றிருநோக்காற்புல்குசெல்வம்
பவித்திரப்போர்க் களித்தினிய மகப்பேறுமுதற்பேறுபடைத்துமேலுற்
பவித்திரங்கு படர்நீத்துப் பரமசிவ பதநிழலிற் பயின்று வாழ்வார். (௧௨௧)

என்றமல யத்தமரு மெந்தைகுறு முனியியம்ப வினிது கேட்ட
துன்றுமுனி வரரெந்தாய் தூயபரன் மாடனந் துகடீர்ந் தின்ப
மொன்றுறநீ புகன்றனைகேட் டெலடுத்த பயன்யாவு முற்றே மந்த
வென்றிவடு கேசனருட் காதையினி விளம்புகென விரிக்க லுற்றான்.

இலக்குமிதாண்டவச் சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அ௪௯.

வைரவச் சருக்கம்.

சிந்தை யன்புறு மந்தணீ
ரிந்தி ரைந்நட மியம்பினு
முந்து சீர்வடு கன்கதை
புந்தி யாதரப் புகலுவாம்.

வேறு

முன்னொருகற் பாரம்பத் திரவி யிந்து முகிழ்க்குமுனம் புவியினை முழுது மூடித், துன்னுமிரு ளேபரம்பி மறைப்ப வானிற் சூழ்ந்துநிறை சுரர்கடமைத் தொலைவி லாற்றற், கொன்னுனைவே லசுரர்குழா மடர்ப்ப வஞ்சிக் குலைகுலைந்தார் புவிநரரைக் குறுகி யாங்கே, வன்னிலைய வெம்பூத வேதா ளங்கள் வல்விடங்கள் பல்பிணிகள் வருத்த நொந்தார். (௨)

இன்னவகை பரிபவமுற் றேங்க விண்ணோ ரிருநிலத்தா ரொழிந் தோர்க ளெவரு மீற்றிற், றன்னியெழு மெழுகடலி னொலியே போலத் துளங்கினர்வாய் விட்டாற்றித் தொல்லை வேத, முன்னாவிலுந் தாரகத்தை யமல னங்கே மொழிந்திறக்கு முயிர்க்குரிய முத்தி நல்கும், பன்னரிய வுருத்திரந் பூமி யாய [illegible] காசிசேர்ப் பாங்கு சேர்ந்தார். (௩)

வேறு.

அன்னரவி முத்தமெனு மப்பதியுற் றாங்கே
மன்னுபல மாதவர்கு ழாத்தைமுன்வ ணங்கி
யின்னுயிர்க ளுய்யமறை வேள்விகளி யற்றித்
துன்னுகல னேயருளுந் தூயமுனி வீர்காள். (௪)

என்றினைய நற்றுதியி யம்பினரி றைஞ்சி
யன்றியசு ராதிகள்செ யார்த்திமுழு தாங்கே
நின்றெதிர்மொ ழிந்தவைக ணீங்கும்வகை செய்வீ
ரினறுநும தின்னருளின் யாங்களுய வென்றார். (௫)

ஆங்கவர்க ளிவ்வகைய யர்ந்தனரி சைப்பப்
பாங்கமரு மாமுனிவர் பற்பலவ ருள்ளே
தாங்குமளி யார்பிரக தாரணன வர்க்காந்
தீங்கறுமு பாயமிது வென்றுநனி தேர்ந்தே. (௬)

ஓவரிய தீவினைகள் யாவுமுட னோட்டித்
தாவரிய வின்புபொரு டாம்பலவு மீட்டி
வீவரிய வாழ்வருளு ருத்திரநல் வேள்வி
யாவதென வெண்ணியஃ தாற்றவுள மேற்றான். (௭)

எண்பிரக தாரணனென் றேத்துறுமத் தீர்த்தன்
விண்பரவு ருத்திரநல் வேள்விசெய வேண்டி
மொண்பொருள்க ளீட்டிமறை யோதுவிதி காட்டி
வுண்பெயன னீட்டிவள ராகுதிகள் கூட்டி. (௮)

ஆற்றிவர வேள்வியினை யாங்கதனி னுப்பட்
போற்றுபல கோடிரவி போன்றொளிரு மேனி
யேற்றறுகு ணப்பகவ னேத்துறவெ ழுந்தான்
கூற்றனைநிகர் தானவர்கு லங்களந டுங்க. (௯)

வேறு.

செய்ய வேணியு முக்கண்ணுந் தாடங்கந் திகழுந்
துய்ய கன்னமும் புருவநன் னெறிப்பொடு துலங்குந்
தெய்வ வாண்முக மும்பகிர் மதியினைச் சிவனும்
வைய மஞ்சுறு வக்கிர தந்தமும் வயங்க. (௧௦)

கரமி ரண்டினுந் தண்டமுங் கபாலமுங் கவினத்
தூள மாலை*மஞ் சீரமங் கதமுதற் றயங்கப்
பொருவின் மந்திர பூடண னுய்வடி வாகிப்
பரம யோகியாய் நின்றன னண்டெழு பகவன். (கக)

நின்ற போதிமை யவர்முதல் யாருமந் நிமலன்
மூன்ற வாதபே ரன்பினுன் முற்றமுறை பணிந்து
ஊன்று கண்களா லருந்துந ராமெனத் துவன்றி
கன்று நோக்கியாங் குருத்திர மகத்திலந் நாதனை. (கஉ)

தோன்று தன்மையாற் றமக்குறு மாபத்தைத் தொலைப்பா
னென்று நிற்றலா லியைபெய ருருத்திர னென்றுஞ்
சான்ற வாபதுத் தாரண னென்னவுஞ் சாற்றி
யான்ற துன்பற வையரீ சரணென வடைந்தார். (கங)

வேறு.

அடைந்து நின்றெமை யாளுடை யண்ணலே
படர்ந்த வேணிப் பகவ பராபர
தொடர்ந்த டர்த்திடு தீமை துமித்தரு
ளிடந்த ரற்கிவண் வந்தரு ளெந்தையே. (கச)

சேரு மாருயிர் மாசு சிதைத்தலுஞ்
சாரு மாசி லியற்கையுந் தற்குள
தியாரு மோர்ந்திட வேகொ லெரிமகத்
( ) தார வந்தனை யாபதுத் தாரணை. (கரு)

ஐய னேயர சேயமு தேயருண்
மெய்ய னேயொளிர் வெண்மதி வேணிய
துய்ய னேயடி யார்க்கருள் சோதியே
குய்ய னேயன வாவருட் குன்றமே, (கசு)

தேவ தேவ திகழ்வடு கேசனே
காவ லான பிரம கபாலனே
பாவ லோர்துதி பண்ணவ வுண்ணடேக்
சீவ தாமிடர் தீர்த்தியென் றேத்தினர். (கஎ)

* மஞ்சீரம் - நூபுரம்.

இன்ன வாறுநின் றேத்தி யிரங்கிய
வன்னர் பாலசு ராதிக ளானனி
துன்னு பேரிடர் தோய்ந்தமை தேர்ந்தவ
னுன்னு மாரரு ளாலொன் றுருற்றுவான். (கஅ)

அன்ன வூர்திய னுய வலர்மிசை
மன்னு நான்முகற் கூவி வரந்திகழ்
பன்ன ரும்மொளி யார்மதி பானுவை
யின்ன நீரவுண் டாக்கென் றியம்பினன். (கக)

ஓது மாற்ற முணர்ந்தனன் மாமதி
யாத வன்றனை யம்முறை யாக்கினன்
வேத னேக விராட புரியினிற்
போத வுன்னியப் புண்ணியன் போந்தனன். (உ०)

வேறு.

பாந்திடு மமல னுங்குப் பொருவிலா வசுர ராதி
யாத்துயர் புரிவார் தம்மை யாவத்தா லழிப்ப வெண்ணி
நாந்தரு மனைய வார்ப்பி னலிகுவர் கால மொன்றின்
மாய்ந்திட வுலக மெல்லாம் வந்ததோ வொலியீ தென்று. (உக)

நம்புக லடைந்தோ ரென்ன வெண்ணுபு வடுக நாதன்
றன்பெரு மாயை தன்னுற் றனித்தனி யனைய மாந்த
ரும்பர்தஞ் செவித்து வார மொருகண மடைத்து வைத்திட்
டெம்பிரா னுகாந்த வார்ப்பே யென்னநின் றொலித்தான் மன்னோ. உஉ

வீறுமா புருடார்த் தங்க ளளித்தருள் விமலன் றன்னைக்
கூறுமா வுருத்தி ரப்போர்க் குழகனை விநாசன் றன்னைப்
பாறுசூழ் சூல கால பைரவன் றன்னை முன்னர்த்
தேறுவா னவர்கண் மாந்தர்க் கிடர்புரிந் தாரிற் சில்லோர். (உங)

தமதுபே ராற்றல் குன்றிச் சரணடைந் தார்கள் சில்லோர்
குமலியி னுருவு தாங்கி நண்ணின ராங்குச் சில்லோ
ரமைவுறு மறிவு நீங்கி மூர்ச்சித ரானார் சில்லோர்
சமரகா மிகளா யெம்மான் றன்னெதிர் சார வந்தார். (உச)

அனையர்க ளெவரு மஞ்சி யழிதரக் கொன்று சூலந்
தனிலுடல் கோத்து விண்ணிற் றூங்குபு கர.கபாலத்
தினிலவ ருடலிற் பெய்யுங் குருதிமுற் றேந்தி யுண்டா
னனியொளிர் களமே யன்ன குருதியா னனைந்த தம்மா. (உ௫)

அன்னவெங் குருதிச் செம்மை யக்களந் தன்னின் முன்னர்த்
துன்னிய கரள நீலத் தொடுமணி யாகித் தோன்ற
மன்னிநின் றங்கெம் பெம்மான் மறைகளே ஞமலி யாகித்
தன்னைவெந் சுமக்கு மாறு சமைத்தனன் கொண்டு பின்னர். (உ௬)

அணியகிங் கரர்க ளாக வடைந்துள பூத நாதர்
திணியபல் வேதா ளங்கள் தேவர்மா னுடர்க ளாதி
பணிகுநர் காண நின்று பயினடஞ் செய்தாங் கச்சம்
புணருமா ரவம் புரிந்தான் பொங்கருள் வடுகநாதன். (உ௭)

வேறு.

மிக்குறு*பீ தரு§ ரவத்தைப் புரிதலினு லாங்கவற்கு விளம்பு நாமந்
தக்கபை ரவனென்று வமரரெலா மகிழ்ந்தினிது சாற்றி னூர்பின்
செக்கமலத் திருக்கரத்திற் றிகழ்தண்ட மேந்திவரு சிறப்பி னூலே
யக்கடவு டனக்குரிய பெயர்தண்ட பாணியென வறைந்தார் மன்னோ. ()

வாயில்செலா யோகியென வருதலினால் யோகியென வழுத்தி னூர்கண்
மேயமல ரயன்றனைக்கூய்ச் சுடர்களையுண் டாக்குகென விதித்த லாலே
தூயமுனி வோரவனைப் பிரமேச னெனும்பெயராற் றுதித்து வாழ்ந்தார்
பாயபலப் பலபூத வேதாள மாதிகண்முன் பரவிச் சூழ்ந்தே. (உ௯)

நயந்துரிய பணிபுரித லாற்பூத நாதனென நவின்றார் முன்னு
னியைந்தமகந் தனிற்பால ரூபகனாய் வந்தருளு மியல்பு நோக்கி [காங்கு
யுயர்ந்தபெயர் வடுகனென வுரைத்தனரெத் தலத்தினிலு முறைந்தாங்
வியந்துசெய்பா லனத்தாற்கேத் திரபால னென்றியற்பேர் விளம்பி னூ
ரால். (௩௦)

இத்தகையி னிவர்திருப்பேர் புகன்றுதுதித் திடவாங்க ணிலங்கி நின்ற
மெய்த்தகுருத் திரகால வைரவனவ் விடைநின்றும் விழைவி னோடு
முத்தமமாந் திருச்சைலத் தாழ்வரையின் மாபுரத்தி னுறையு மொன்பான்
சித்தர்களா லுபாசிக்கப் பட்டவனு யவரெதிரே சென்று நின்றான். ()

---

* பீ—அச்சம். § ரவம்—ஒலி.

ஆங்கவர்பா லுளத்தருள்கூர்ந் தணிமாதி யட்டசித்தி யவர்க்கு நல்கி
யோங்குமகா வுருத்திரனு யுற்பத்தி யொடுக்கமிலை யொழிந்த யோகி
பாங்குறுதன் னமிசத்தா லட்டவை ரவர்கடமைப் படைத்தா னன்னோர்
தாங்கருட்பே ருவகையொடு தற்சூழ்ந்தா ரவர்திருப்பேர் சாற்றுவாமால்.

மாற்றருஞ்சீ ரசிதாங்க வைரவனே ருருவைர வன்னென் றூழ்மெய்ப்
போற்றுசண்ட வைரவனே குரோதவை ரவனேசெம் பொன்னார்மேனி
மேற்றிகழுன் மத்தவை ரவனேகா பாலவை ரவனே வென்றி
யேற்றுயாபீ டணவைர வனனொடுசங் காரவை ரவனென் றெண்மர்.

வேறு.

பொற்பமரும் வடுகேச னுயிர்க ளோர்ந்திப் புனிதநெறி கைக்கொண்டு பொலியுமாறு, *தற்பரனு யனைய ரெண்மர் தமையுநீத்துச் சைலமதின் பாங்கமர்ந்து தன்னை ரில்லோ, னற்பொடுதன் னுதிகா ரண மெய்ஞ்ஞான மறிந்திடுவான றவமியற்று மவர்கள் போல,நற்புவியுய்ந் திடுகுறிப்பி னேற்று னுங்கே நலந்திகழும் பொலஞ்சுடர்வேன் ஞானமூர்த்தி.

அச்சமயஞ் சுவேச்சையினன் மைஞ்ஞை மேற்கொண் டருகணைந் தானன்னதுகண் டன்பி னேடு, முச்சகமும் புகழ்வடுகன் பூசித் தென்றன்முன்னமென்று முடியுமென்று மொழிதல் கேளாச், செச்சைநறுந் தொடைபுரளுந் திரண்முந் நான்கு திண்டோளான் வண்டோலஞ் செய்துசூழும், விச்சையரு ளிதழிவனஞ் சேறி யாங்குன் வேட்கைமுடி மென்றினிது விளம்பிச் சென்றான். (௰௫)

மூறவர்மகண் மணந்தபுயா சலவேள் கூறு மாற்றமுள மேற்றனைய வமிகநாத, னறனவிலு மறையுருவ னமலி நீயிங் கமர்தியென நிமலனருளாணை தந்து, திறனவில்லிங் கார்கடமைப் பூதநாதர் திரளினையங் கழைத்திதனைச்செப்பு நீவிர், பொறையிதனின் பச்சிமத்தி னமர்திர் நாமப் பொன்னிதழி மன்னுவனம் போது வோமால். (௰௬)

அவ்விதழி யடவியினி லன்பர் பூசை யாற்றியநாம் வீற்றிருப்போமாங்கு நீவிர், செவ்வியநற் பிருகுதினத் திரவிற் போந்து செய்பலிகளவைகவர்ந்து திரிய வும்போந், திவ்வரையின் டச்சிமத்தி லமர்தி ரென்று விசைத்தவரை முடுவறனை யிருத்தி யாங்கே, யெவ்வரமுந் தவத்தாலேசித்தி யாமென் றெண்ணிநறுங் கடுக்கைவனத் தெய்தி னானால் (௰௭)

* தற்பரம்—விருப்பம்.

வேறு.

ஆங்குறுசீ தளியனற்றீர்த் தக்குடபா லாடியஃ தவன்பே ராகத்
தாங்குமதன் கரையருகு பரமனிகே தனமெனுஞ்சீ தளியி னுள்ளாற்
பாங்குறுசிற் சபைவடபாற் சருவசித்தி பூமியெனும் பதத்தின் மேவி
யோங்குறுபச் சிமமுகனாய்ப் பரியங்க யோகமுய லுளத்த னாகி. (ருஅ)

பாதமிரண் டையும்பிணைத்தப் பெருவிரலு முழந்தாளும் பாரி னூன்றி
யேதமகற் றவ்விருகாற் குதியினுறச் சகனமிரண் டிருத்திக் கேச [துச்
மோதுமுட்டி ணீடமொ: வுறச்சூழ்ந்து நுதல்விழித்தீ யொடுங்க வைத்
சோதிமணிச் சுருடோடு மணக்கமழு முற்பலமுந் துலங்கு காதும். (ருகூ)

வக்கிரதந் தங்களும்புன் னகையுமொளிர் முகாம்புயமு மனுமுந்நூலுந்[க்
தொக்கமுத்தா ரக்களமும் பதக்கமணி யகன்மார்புந் துணைப்பொற் றோளு
தக்கமிதப் புதாமுஞ்சு நாபியுமஞ் சீரமொளிர் தருபொற் றாளு
மிக்கவிரு கரவளையுங் கங்கணமு மங்கதமும் விளங்குவோனாய். (சo)

வலக்கரத்தி லசனிதரித் ததன்புறமவ் வூருவினில் வைத்திட் டேனை
நலக்கரம்வா மத்தொடையின் வைத்தருண கமலதள நயனத் தோனு
யிலக்கமில்பல் கோடியிளம் பானுவொருங் குதித்தெனமெ யிலங்கித்தோ
ன்றக், கலக்கமறச் சுழுனைவழி மூலவன றனையெழுப்பிக் கருத்தினாலே.

உச்சியிந்து மண்டலத்தி னொழுகமுதுண் டாங்குசிவ முவந்து நாடி
நச்சி*நிமீ லனபால நயனியா யார்வமுற நயந்த யோக
மச்சமற வெண்ணூறுண் டரைக்கணம்போற் கழுவுறவங் காற்றி னானு
லிச்சையுட னவன்றனுதல் விழியிலொரு மகாபுருட னெழுந்தானன்றே.

வேறு.

சாந்தமிகு மதிகோடி யிரவிகோடி தழல்கோடி யொருங்குதித்த தன்
மைபோலக், காந்திசெறி கிருட்டினபிங் களனு யன்றோன் கருத்துறச்
செ யோகினையுட் களிப்ப நோக்கிப், போந்திவணத் திருச்சைல நின்று
மைந்த புடவியின்பம் பொருந்துறநீ புரியு மேன்மை, யாந்தவத்தா லுளத்
துவகை யடைந்தோ மிப்பா லன்பொடுநீ வேண்டுவன வறைதி யென்
றான். (சங)

*நிமீலனம்—மூடுதல்

அவ்வுரைகேட் டருள்வடுக நாத னென்ற னருச்சனையின் கண்மனுக்கள் செயங்கள் சித்தி, வெவ்வியயோ கினிக ணங்கள் வேதா ளங்கள் வெம்பூத கணங்க ளென்பான் மேனாட் டோன்று, மெவ்வமிலா வட்டவை ரவர்கண் முன்னோ ரெற்சூழ விருக்கின்றே னிருந்து மென்னை, கவ்வையகற் றெம்பெரும வென்ற னாதி காரணமு மெய்ந்நூல்சொல் காட்சி தானும். (௪௪)

உள்ளபடி யுணர்ந்திடுவா னுள்ளம் வேட்டே னுத்தமவென் றுனது கேட் டுவகை யோடும், வள்ளலெதிர் நின்றாங்கைம் முகனாய்த் தேவி மருங்கினனாய்ச் சதாசிவனாய் வயங்கித் தோன்றித், தெள்ளமுத நிகர்மதுர வாய்மை யாலே செப்புவா னெமக்கினிய சிறுவ மேனாள், விள்ளரிய பெருஞ்சீர்த்தி புவனம் போர்ப்ப விளங்குதிருக் கைலாய வெற்பின் மாதோ. (௪௫)

நமதருளா முமையொடுநாங் கிரீடித் தாங்கு நண்ணினமெம் மமிசத் தானம்பி நீயவ், வுமையிடத்து மகவாகத் தோன்றி னாயவ் வுமைக்குரிய புத்திரனீ யுண்மை யீதா, நிமலமுறு மெமதுசுத நாமே நீயா னீயேயா மையமிதி னினைக்க வேண்டா, மமைவுறுநம் பஞ்சமுகத் தொன்ற தான வகோரமுக னீயென்றாங் கமலன் பின்னும். (௪௬)

புவனமெலாம் பரம்பியுள பூதம் யாவும் புகலுளத்திற் றிருத்தினனீ பொருந்து மாறு, மவைமுழுதும் புரந்திடவு நீநம் பாலி னமிசபுர னாயுதித்தா யருமை மைந்த, வெவர்கணினைக் குறித்துரிய செபந்தி யானம் யாகமருச் சனையாதி யியற்றினாலுந், தவறிலவை யாவுநமக் களவி லாத சந்தோட கிருத்தியமாந் தவத்தின் மேலோய். (௪௭)

உன்னமிசத் தாலுதித்த வெண்ம ரான வோதுதிறல் வைரவரே யொழியா தென்று, மன்னுலகி லெங்குமுள புரங்க ளெல்லாம் வாரியெலாம் வனம்பூமி மலைக ளெல்லாந், துன்னுமவற் றெல்லைவரை யுன்றுஞ்ஞைத் தொழில்பூண்டு புரந்திடுகை துலங்கு மன்போ, டன்னவர்க்குப் புரிபூசை நின்ன தேயா மையநீ யியண்யோகத் தமர்ந்தா யேனும். (௪௮)

எப்புவனங் களிலுநம தால யங்க ளெவற்றையுநம் மடியர்குழாத் தினையு நீயே, செப்பமுறப் புரந்திடுகை நீயிக் கானிற் செயற்கரிய பரியங்க யோகஞ் செய்த, தப்பில்வரத் தால்யோக குருவென் னுன்பேர் சாற்றுக பல் லுயிர்புரக்குந் தன்மை யாலே, யொப்பில்பசு பதியெனவும் புகல்க வென்றாங் குரைத்தருளி ஞானவிய லோது கின்றான். (௪௯)

வேறு.

சாற்று மறையே யுருவாய சாரமேய வூர்தியநீ
போற்றும் வகைய ஞானநெறி புகல்கென் றிசைத்தா யதுகேட்டி
யாற்றும் யோக முற்றினுறு மதுதான் கிரியை யகப்புறஞ்செய்
பேற்றி னுறுமா லக்கிரியை சரியை புரியப் பெறும்பேறும். (௩௦)

அனைய ஞானக் கிவைமுறையே யேது வாகு மாதலினு
லினைய முறையே முன்னியம்பி யிசைத்தும் ஞான வியலென்று
நனைய விதழி மலர்வேணி நாத னருளு நங்காதற்
றனைய வருணூன் முற்றுணரா சானை யடைந்தி தயத்தன்பால். (௩௧)

நற்றாள் வழிபட் டவனருளா னல்குஞ் சமய தீக்கையினைப்
பெற்றா னையினு விடத்துலகு பெற்றா ளமரெந் நிகேதனத்திற்
சுற்றா றியிற்செங் கதிரெழுமுன் றாநீ ராடிப் புரிநியதி
முற்றா வடைந்து திருவலகிட் டதனமேன் மெழுக்கு முறையாற்றல்.()

புலரு முனம்போய்த் திருநந்த வனத்திற் பழுது புணராத
மலரும் பருவத் தாம்பலநன் மலர்பூங் கூடை மல்கநிறைத்
திலகுங் கனிதா ரிண்டைமுத லியற்றி யெமக்காம் பதத்தளித்த
றலமா ரொருநால் வகைமலர்நந் தனங்க ளமைத்துத் தான்போற்றல். ()

நமதா லயத்திற் றிருவிளக்கா னறுநெய் வாக்கி நனிதருத
லமையா வன்பி னமக்கினிய துதிகள் பாடன் மகிழ்ந்தாட [லிக்
லெமதா ரடியார் தமையெமைப்போற் கண்டாங் கடிக்கீழ் வீழ்ந்திறைஞ்
சமையார் பூசை புரிந்தியிற்றிக் கருத்தி னேவல் பலபுரிதல். (௩௪)

இனைய பலவாய்ப் புறத்தொழின்மாத் திரையெம் முருவத் திருமேனி
தனைநோக் குபுசெய் திருத்தொண்டே சரியை தாத மார்க்கமிஃ
தினிதி னியற்று தாதரெம துலகத் திருப்ப ரெம்புதல்வ
புனித விதுமுற் றுறப்பெற்றோர் புரியுங் கிரியை புகல்கிற்பாம். (௩௫)

அமல குரவ னருள்பெற்றாங் கமையுஞ் சமய விசேடமெனு
முமல மகற்றி யருடீக்கை முறையி னமதா ரருட்குறியாம்
விமல விலிங்கம் பெற்றுரிய விரைமென் மலர்பூம் புகைதீபங்
கமல மினிய நிவேதனமுற் கருதும் பொருள்பற் பலவீட்டி. (௩௬)

பூத முதலஞ் சுத்திபுரிஇப் புகலு முறையா சனமூர்த்தி
யோது மூர்த்தி மனென்று வுரைபா வனைசெய் தாவாகித்

தேதில் விதியா லகம்புறமு மருச்சித் தேத்தி யிறுதியினில்
வீதி கோத்தி ரத்தியற்றும் விதித வோம வினைமுடித்தல். (௩எ)

ஆய வகத்தும் புறத்திலுமன் பமைய நாளு மருவுருவத்
தூய மேனி தனைநோக்கித் தொடங்கும் வழிபா டேகிரியை
வாய வெழிற்புத் திரமார்க்க மற்றீ தாற்றும் புத்திரர்நம்
மேய சாமீப் பியம்பெறுவர் விளம்பும் யோகத்திறங் கேண்மோ. (௩அ)

காமங் குரோத முலோபமுமோ கம்மே மதமாற் சரியமுதற்
றேமங் கொழிபு கட்டோடே தொலையத் தூரத்தி யுள்ளமுகந்
தாமன் புறமக் கிரியைமுதிர் வாக வார்வ மேலெழலா
லேமன் னுணர்வு கீழரணி யிமைதா ரகமே லரணியென. (௩௯)

கொண்டு கடைந்து ஞானங்கி குலவ வெழுப்பி மலந்தகித்து
மண்டு மருடா ரகமாக மருவு நாடி யொருபஃதுங்
கண்டு புகுந்தாங் கோடுசுதா கதியோர் பஃது மதிதேர்ந்து
விண்ட நாடி களினிடையே மின்னற் கொடிபோல் விளங்குவதாய் (௪0)

தாளி னிரண்டு பெருவிரலிற் றொடங்கி மூலா தாரம்வரை
வாளி னுருவ மிரண்டுபிர மாந்தி ரத்தின் வரையொன்றாய்க்
கோளி லாவுட் டுளையினதாய்க் குலவு மிடைபிங் கலையெனும்பே
ராளு நாடி யவையாங்காங் களவிப் பின்னுற் றதுவாகி. (௪௧)

வனச முகிழாங் கதோமுகமாய் மருவுந் தகைத்தாய்ச் சுழுனைதனை
நினைபு சிவார்க்க ளுலவற்றை நிமிர்த்தி யலர்த்தி யக்கிரந்தி
யினையு மவிழ்த்துச் சுழுனைவழிப் பிராண னெழமூ லாதாரந்
தனில்வான் மேற்ப்பை கீழ்சுருக்கிச் சார்ந்து துயிலுங் குண்டலிதான். ()

துயினின் றெழுந்து மேனோக்கத் துகளின் மூலக் கனலெழுப்பி
வியலிந் துருகிச் சுழுனைவழி வெளியும் பெருகி யொழுகமுத
பயமுண் டமர்ந்து மனோலயமாய்ப் பகரு மூலா தாரகுத
மியலுஞ் சுவாதிட் டானகுய மிலங்கு மணிபூ ரகநாபி. (௪௩)

யிரவு மாக தவ்விதயம் விசுத்தி தாலு மூலமொளி
பரவு மாஞ்ஞை புருநடுவாப் பகரு மாறு தாரமவற்
றுருவங் குறியக் காங்கமல மோரா றுள்ள படியுணர்ந்து
மருவு மவ்வா றிடைக்களிற்று வதன னயன்மா லுருத்திரனே. (௪௪)

திகழு மாகேச் சுரன்சதா சிவனென் றிருமூ வகைமுறையே
நிகழ வழிபட் டருள்கொடுமே னெறிசென் றிதழா யிரத்தெட்டுத்
தொகுமம் புயமேற் றுலங்குநடச் சோதி தனைக்கண் டுன்னிநித
மகலு மிருபத் தொராயிரத்தோ டறுநூ ருய சுவாசத்தை. (சுரு)

சங்கென் றுட்பூ ரகம்புரிந்து சமனுற் றமரக் கும்பகஞ்செய்
தங்கென் றெழுப்பு மசபையுணர்ந் தரிய சிவமா மருளான்மா
யிங்ங னியக்குந் திரோதைமல மெனுமைந் தெழுத்தின் மறைப்பிருணீத்
துங்க னருண்மெய்ச் சிவனிருத்தல் வைந்தோ டொருமூன் றிரண்டொ
ன்றாய். (சுசு)

ருமவி முத்தி முதலாகு மனுவை மனத்தா னுறச்செபித்து
விரவி விந்து நாதமுமாய் மேவு வெளியிற் சிந்தைநிறீஇ
வருதன் வடிவஞ் சிவன்வடிவாய் வயங்க நடன குஞ்சிதத்தாட்
டிருவு மிகுநூ புரவோசை தேக்கி யமர்தல் சிவயோகம். (சுஎ)

இனைய யோகாங் கம்மிருநான் கியம நியம மாசனமே
கனை*கா றகைதல் பிரத்தியா காரந் தார ணைதியானம்
புனித சமாதி யாமிவற்றைம் பொறிமுன் மனமார் சாக்கிரத்தி
னனிசெய் தவங்க ளியமமதா நனவிற் பொறிமுன் னொழிகனவில். சுஅ

காணுந் தவநி யமங்கரணங் கலவா நனவின் கட்சுழுத்தி
மாணுந் தனியா சனமாம்வே ருக்கி மலிதத் துவமுழுதும்
பேணும் பிரம மேதானுய்ப் பேத மறுசாக் கிரதுரியம்
பூணும் பிராணா யாமமதாம் பொருவில் பரமா யதுமறந்தே. (சுகூ)

திகழ வருசாக் கிரதுரியா தீதம் பிரத்தி யாகார
மிகலி லகண்ட வடிவதுகண் டெங்குந் தானு யிருந்திடுதன்
மிகுதா ரணையாங் காட்சியெலாங் கண்ணுய் விளங்கி யாட்சியினி
லகலா தமையு மதுதானே யரிய தியான மாகுமால். (எ0)

பரவ லரிய தற்பதந்தொம் பதஞ்சா ருபாதி கற்பனைகள்
சரியு முறைகண் டசிபதமாஞ் சச்சி தானந் தப்பதத்தி
னுரிய சமர நிலையுணர்ந் துறுசிற் பதம்பெற் றுறங்குதலே
யரிய சமாதி யாம்யோக வட்டாங் கத்தி னடைவிதுவே. (எக)

சேர்க்கும் யோக மகத்தொழின்மாத் திரையே யருவத் திருமேனி
நோக்கிப் புரிதொண் டாயசக மார்க்க மாகு நனித்திதனை

---

* காற்கைதல்—பிராணாயாமம். † ஏர்—எழுச்சி.

யாக்கு மவரெஞ் சாரூப மடைவ ரிவ்யோ கமுநாவெனன்
† றேர்க்கும் போத நாட்டமலா விறவா வின்ப மின்றாமால். (௭௨)

நேச மிகுநம் மரும்புதல்வ நிகழ்த்து ஞான மதுகேட்டி
பாச ஞானம் பசுஞானம் பதிஞா னந்தா னெனமூன்றாம்
பசு பாச மெனுமலந்தான் பிரியும் வகைய் னொருமூனறு
மாசென் றுரைக்கு மம்மூன்றன் பெயருஞ் செயலு மறைகிற்பாம். ()

வேறு.

ஆணவங் கரும மாயையென் பனவே யன்னவற் றின்பெய ரவற்று
ளாணவஞ் செம்பிற் களிம்பினுன் மாவி லனுதியே கலந்துள தொன்று
யாணவந் தருபெண் ணலியெனப் பரம்பு மாவிக டோறும்வே றாகி
§யாணவந் தருமவ் வறிவொடு தொழிலை யாவரித் தாங்ஙன நின்றே. ()

தத்தம கால வெல்லையி னீங்குஞ் சத்திக ளனேகங்க ளுடைத்தாய்ப் [யர்
பொத்துறுசடமாய்ப்ஃபோத்திருத்துவத்தைப் புரிவதாய்விரிவதாம்பெரி
கைத்திடு கரும மாவிகண் மனவாக் காயத்தாற் செயுமற மறமா
மத்திறற் பாவ புண்ணிய மிரண்டு மடர்துயர் படர்சுக மளிக்கும். (௭௩)

இனைய*கான் மியந்தா னிப்பவத் தியற்றப் படும்பொழு தத்துவா விடை
கனிவுற வீட்டப் பட்டுயர் தூல கன்மமா யாகாமி யப்பே [மாய்க்
கினையுறும் பவங்க டோறுமிவ் வகையே யீட்டிடப் படுபுதன் பருவந்
தனையுறு மளவுஞ் சூக்கும மாகச் சாருபு புத்திதத் துவந்தான். (௭௪)

தாரக மாக மாயையிற் கிடந்து சாதியோ டாயுபோ கமதாச்
சாருமிம் மூன்றற் கேதுவாய்ச் சனகந் தாரகம் போக்கிய மென்னச்
சேருமூ வகைத்தாயாங்கபூ ருவஞ்சஞ் சிதம்பா மறங்களென் றுரைக்கும்
பேருறு மினைய சஞ்சிதத் தொகையுட் பிரிந்துபக் குவமுறப் பெற்றே.

மேலுறு முடம்பை யதுகொடே யனுப வித்திடப் படுமிரு பயனே
யேலுற வீந்து பயன்படுங் காலை யிலங்குறு மாதிதை விகமே
பாலுறு மாத்தி யான்மிக மாதி பௌதிக மென்னுமுப் பாற்றாய்ச்
சாலுறும் பிராரத் தம்மெனும் பெயர்தான் சாருமா வித்தொகு கருமம்

---

† ஏர்—எழுச்சி § ஆண அம்—அன்பினழகு.
ஃ போத்திருத்துவம்—போகநுகர்ச்சிக்கு வினைமுதலாதற்றன்மை.
* கான்மியம்—கன்மமலம்.

வீற்றவீற் றுகிச் சஞ்சித மாகா மியம்பிரா ரத்தமென் றுரைக்கு [பின்
மாற்றினின் மூன் று வகைத்தென வமையு மனையவை விளைநிலப் பயன்
பேற்றினுக்காகத் தொகுத்திடுகவையும்பிறங்குறவிளைந்திடுமவையு
மேற்றுண வாக நிகழ்ந்திடு மிவையு மென்னுமுப் பகுதிபோ லியையும்.

புகலுமிக் கருமத் திருவினை யபுத்தி புத்தியாற் புரிதலென் றிரண்டா,மி
குமவைபுடைபோந் திடும்வினை பெயராவினையெனும் விதத்தினுமிரண்
டா,மிகலரு மினைய வகைபல வமைந்த வித்தகு கான்மிய மலந்தா,னுகுத
லுற் பவித்த லுடன்பட வெஞ்ஞான் றும்பரம் பரையினில் வரலால். ()

ஆதியி றுடைத்தா யும்பிர வாக வனாதியா யாவியை யார்த்திட்
டோதுகா ரியவேற் றுமைகளுக் கேற்ப வுயிரவைக் குரியபல் வேறாய்ப்
போதுயோ னிகளைத் தோற்றுவிப் பதுவாய்ப் புகறருஞ் சூக்கும மாய்நம்
மேதகா ணையினு ளடப்பதா மாயை விதத்தினை மேலினி விரிப்பாம் ()

பன்னுமிம் மாயை சுத்தம் †வா லாமை பகுதியென் பெயரின்மூன் றுரு
மன்னவற் றமல மாயைநித் தியமா யருவமாய் வியாபக மாகித்
துன்னிய சடமாய்ச் சொற்பொருள் வடிவுஞ் சுத்தமாந் தனுமுத லுன்குந்
தன்னிடை யுதித்தற் காதிகா ரணமாய்த் தனில்வரு பரம்பரை தன்னில்.

அத்தகு நாதம் விந்துசா தாக்கி யத்தொடு மகேச்சுரஞ் சுத்த [கோர்
வித்தையென் றிடுமைஞ் சுத்தகத் துவம்ப வித்திடு முதலதா யெமக்
சத்தியாய் மயக்கஞ் செயாததா யிலகுஞ் சாற்றிய வசுத்தமா மாயை
நித்திய மாகி வியாபக மாகி நிகழ்த்திடு மருவமாய்ச் சடமாய். (௮௩)

பிரளய காலந் தன்னிலான் மாவைப் பிணித்திடு கருமங்கட்கிடமாய்,மரு
வுயிர்களுக்குச் சுத்தமோ டசுத்த வகைத்தனு வாதிக ளுன்கும், உருமுத
னிபமாய் மயக்கஞ்செய் வதுவாய் வயங்குதன் பரம்பரை வழித்தாய்த்
தரவரு கால நியதியே கலைதான் சாற்றிடு மராகமே வித்தை. (௮௪)

வருதிறன் மானுந் தோன்றுகா ரணமாய் வயங்குமிவ் வாறுமே ழாகி
விரவுறு புருட தத்துவத் தோடு வித்தியா தத்துவ மென்னப்
பரவுமிச் சிரதத் துவமெனப் படுமாற் பகுதியி னியல்பினிப் பகர்து
மரசினி னுணர்க வப்பிர கிருதி மாயைதன் பால்வழி வழியாய். (௮௫)

---

† வாலாமை—அசுத்தம்.

பூதபஞ் சகமுஞ் சுரோத்திர முதலாப் போதுஞா னேந்திய மென்னும்
போதபஞ் சகமும் வாக்குமுன் னாகப் பொலிதரு கருமவிந் தியமென்
றேதுபஞ் சகமுஞ் சத்தமுன் னாக வுறுதன்மாத் திரையென வுரைக்கு
மேதுபஞ் சகமும் புத்தியாங் கார மியைமனஞ் சித்தமென் றியம்பும்.()

இவையொரு நான்குட் காரணமு மாக விருபத்து நான்கென லாகி
யவிர்தரு மான்ம தத்துவ மாய வசுத்ததத் துவங்கடா மடைவே
பவமுற நிபமா யசுத்தமாந் தனுமுற் பவித்திடற் காதிகா ரணமாய்த்
திவளுமால் வடுக வாணவங் கருமந் திறப்படு மாயையின் செயல்கள். ()

இனிதுரை பகர்ந்தா மிவற்றொடு மாயே யந்திரோ தாயியென் றிரண்டு
பினுமல முளவா லிவற்றுண் மாயேயம் பேசிய மாயைகா ரியமாந்
தனுவொடு கரண புவனபோ கங்க டத்துவத் தொகுதிக ளாகு
நினை*திரோ தான கரியெனு மலந்தா னிகழ்த்துமும் மலங்களை நிரையே

பாயமற் றவற்று ளாங்தொழிற் படுத்திப் பாகங்கள் வருவிக்கு நமது [ிபா
தூயசிற் சத்தி யாகுமான் மலத்தைத் தொழிற்படச் செலுத்திடு தொட
லேயநஞ் சத்தி யிதனையு மலமென் றியம்புப மைந்தவிவ் வகைய
வாயவைம் மலங்க டமையுமா செனவே றுகிடா தகமென வமர்தல். ()

முன்னவில் பாச ஞானமா மிதன்மேன் மொழிபசு ஞானத்தின் முறையே
ளன்னவைம் மலத்து ளாணவ மல்லா வனைத்தையுங் கழற்றி வேறுகி
யின்னநா னல்லே னிவையெலாங் கீழ்நா னிவற்றின்மேற் பொருளென
வெண்ணப், பின்னுறு முனைப்பி னமிழ்ந்துபு நானே பிரமமென் றகங்
கொள் பெற்றியதே. (கூ0)

இனிவரு பதிஞா னத்தினை யோர்க யானெனு மகமிகு மிதனுற் [ர்திட்
றுனிவரு பவங்க ளகன்றிடா தெனவே துணிந்தமைந் தருள்வழித் தொட
டனையநல் லருள்புக் காணவ மலமு மகன்றிடப் பெற்றிய லான்மாத்
தனையினி துள்ள படியுணர்ந் தவைய னேகமாய்த் தயங்குநித் தியமாய்.

உரைவியா பகமாய்ச் சேதன மாயொன் றுறுமலத் தடையினை யுளவாய்த்
தருபல வுடல்க டோறும்வெவ் வேறாய்ச் சார்ந்ததன் வண்ணமாய் வினை
கள், புரிபதன் பயன்க ளுகர்வதா யுணர்த்திற் போதமா மறிவிலொன்
றொன்று, யரிதரி வனவாய் சிறுதொழி லினவா யமைதலி னினையுவா
ன்மாக்கள். (கூஉ)

---

* திரோதானகரி—திரோதானத்தைச் செய்வது.

தம்மையே பிரம மென்றுகொண் டந்தோ தருக்குபு தம்மறி வெல்லா
மம்மவாங் காரக் களித்தரு நரகி லாழ்வது முறைமையன் றவைதா
மெம்மையு முள்ளும் புறம்புநின் றருளு மிறைமைசால் பதியொருமுதலை
மும்மையுமுடையவாகுமென் றுள்ள முரணுறு வகைதுணிந் துணர்ந்தே.

அப்பதி*யநாதி போதமே சருவஞ் ஞத்துவ நிராமயான் மாவே
தப்பறு மலுத்த சத்தியே யனந்த சத்தியே சுதந்தரத் துவமே
யொப்பறும் விசுத்த தேகமே திருத்தி யெனசிவா கமமினிதோதுந்
திப்பிய குணங்க ளோரிரு நான்குஞ் செறிதர நிறைபர சிவமே. (கசு)

என்னவுத் துணர்ந்தாங் கனையமெய்ஞ் ஞான மினிதுணர் ஞாதுரு வி
லங்கி, மன்னுறு ஞேய மெனும்பகுப் பொழிந்து மலர்தரு ஞேயத்தி
லழுந்தி, யுன்னு தா னதுவா யொன்றியெஞ் ஞான்று மொழிவிலாச் சி
வானந்தத் துறுத,லென்னுமித் தகைத்தா மைந்தநீ விளைய வெழிற்சிவ
ஞானமின் னதுதான். (கரு)

அகப்புறத் தொழில்க ளிரண்டுமொன் றின்றி†யறிதொழின் மாத்திரை
யானே, பகுப்புற முனஞ்சொன் முத்திரு மேனிப் பரத்ததாய் வரத்தம
ர்ந் தெங்கு, மிகப்பொலி யகண்டா காரமா நித்த வியாபக சச்சிதானந்த
சுகப்பிழம் பாய சிவனிடத் தூற்று தொண்டென வியம்புசன் மார்க்கம்.

வேறு.

என்றிவை யுபதே சித்தாங் கெம்பிரான் வடுக நாத
னன்றருள் சரியை யாதி நான்குமுய்த் துலக மோர்ந்து
நின்றிடு மாபி னின்று நின்மலத் துவம்பெற் றுய்பாக்"
கின்றினி துரைத்து நின்பா 'லென்றெழுந் தருளி னுனல். (கஎ)

---

* அநாதிபோத முதலிய இவ்வெண்குணங்களும், முறையே தமி
ழில், இயற்கையறிவு, முற்றறிவு, இயல்பாகவே பாசங்களி னீங்குதல்,
பேரருள், அளவிலாற்றல், தன்வயம், தூயவுடம்பு, வரம்பிலின்பம்,
என வழங்கப்படும். இவற்றுள், நிராமயான்மா அநாதிபோதத்துள்ளும்,
விசுத்ததேகம் அலுப்தசத்தி யுள்ளுமடங்குமாகலின் ஆறுகுண மாத்தி
ரையாகவும வழங்குப.

† அறி—சுறுகெட்டு நின்றபெயர்.

அந்திலவ் வருணி னோர்தாங் காதர மிகவக் காரி
வந்துசெய்ஞ் ஞான யோகம் வயங்கவீற் றிருந்தா னங்கே
கந்தரு வோர்கள் சித்தர் கணங்கள்விண் ணவர்கண் மண்ணோர்
சிந்தையின் விழைந்த யாவுஞ் சேர்வுற வருச்சிப் பாரால். (௯௮)

அங்கருள் வடுகன்* கூளி யருக்கறி வடுத்தாங் கிம்பர்ச்
சங்கன்வா ரங்கீ டோறுஞ் சிலர்பலி தூங்க வாங்குப்
பொங்குறு மடைகொ டுப்பார்§ புபுட்சுக்க ளாகி யந்நாட்
டங்குசீ சைல நின்றும் பூதர்கள் சார்ந்து போவார். (௯௯)

இப்படி நிகழ்நா ளொன்றி லிவ்வடு கேசன் முன்னர்
வெற்புறு சிரத்தி னோடும் வியன்கரத் தசனி தாங்கி
வைப்பின்முன் கண்டி லாத மாயிரும் பூத மொன்றுங்
கப்பரன் காண வீழ்ந்த தலறிக்கொண் டவனி மீதே. (௧௦௦)

விவிதசேட் டிதங்க ளங்கு வீழ்ந்தவெம் பூதஞ் செய்ய
வவை†நமற் காரமாயத புத்திபூ ருவத்தாற் றந்த
நவமுறு வணக்க மாங்கு நவிற்றுமக் கணத்தி னம்ம
திவியதே வுருவங் கீர்த்தி சிறந்தமெய்ஞ் ஞானஞ் சேர்ந்த. (௧௦௧)

சேர்ந்திடு மவ்வி லன்னோன் செங்கரத் தசனி ஞானி
யூர்ந்தவன் றனிக்க ரத்தி லுற்றது தலையின் வெற்புத்
தீர்ந்ததன் றிசையி லோர்பாற் சென்றுவீழ்ந் தமர்ந்த தாங்கே
சார்ந்திடு மனைய வெற்பைச் சயந்தவெற் பென்ப மாதோ. (௧௦௨)

புவனமுற் றடைந்து போற்றும் வடுகனைப் பூதஞ் செய்த
வவயவச் சேட்டை யாய தொழிற்குட னருள்பெ ரும்பே
றிவையெனி லனையான் றன்னை யன்பின்மிக் கிறைஞ்சி னோர்க்குத்
தவமண முவப்ப நல்கும் பேற்றையார் சாற்ற வல்லார். (௧௦௩)

சிறந்ததே வுருவம் பெற்ற தேவனத தேவ நாத
னிறைந்தபூங் கழலிற் பல்கா னெக்குள முருக வீழ்ந்தாங்
கிறைஞ்சின னெழுந்து முன்னின் றின்பமா ருளத்த னாகித்
துறந்தவர் பரவு மன்னோன் றனையடி துதிக்க லுற்றான். (௧௦௪)

---

* கூளியர்-பரிவாரர்கள். கூளியருக்குக் கொடுப்பாரென் [illegible]
§ புபுட்சுக்கள்-புசித்தற்கு விருப்புடையார்.
† நமற்காரம்-நமஸ்காரமென்னும் வடமொழித்தற்பவம்.

முறைமுறை மறைநின் றேத்து முருத்திர மூர்த்தி போற்றி
பிறையணி சடையாய் போற்றி பிரமன்மாற் கிறைவ போற்றி
விறலயிற் சூல போற்றி நவபுரி விமல போற்றி
கறையுகற் றிறைவ போற்றி கவின்வடு கேச போற்றி. (கo௫)

விலக்கருஞ் சாப மென்பால் விடுத்தருள் விமல போற்றி
மலர்க்கரத் தசனி தன்னை வாங்கிய வள்ளால் போற்றி
கலக்குபே ரொலிசெய் தன்ப ரிடர்முனங் களைந்தாய் போற்றி
யலகவின் வயல்சூழ் புத்தூ ரமர்வடு கேச போற்றி. (கoசு)

என்றவன் பரவுங் காலப் பூதத்தி னுருவ மேகித்
துன்றுமங் கலமார் தெய்வத் தோற்றமெய் தியதுங் காரி
தன்றிருக் கரத்தி னேறு சார்ந்ததுந் தலைமே லொன்றி
நின்றகுன் றீசா னத்தோர் நிலையிற்போய் வீழ்ந்த வாறும். (கoஎ)

அத்தகு தேவ ரூப மடைந்தவ னவய வங்கண்
மொய்த்தகங் கணங்கே யூர முத்தமா லிகைமுன் னாவ
மெய்த்திமிர் சுகந்த சந்தந் தொடைதிகழ் வடிவும் விண்ணோர்
சித்தர்மா முனிவ ரேனோர் திகழ்தரக் கண்டார் மன்னோ. (கoஅ)

கண்டவர் யாரு மாங்கட் களிப்புற வவனைக் கூவிப்
பண்டுநீ யார்கே சத்திற் பருப்பத மசனி யங்கைக்
கொண்டதென் னிரண்டு மிங்ஙன் விண்டதென் கூறு கென்றார்
விண்டவை வினவி யன்னா னவர்க்கிறை விடுக்கு மாங்கே. (கoகூ)

விண்டனி யரசன் மைந்தன் சயந்தனென் மேவி நண்பாக்
கொண்டகாந் தருவ ராச குமாரனை விழைந்து நேடிச்
சண்டவெற் பதனின் மேல்பாற் சத்திய கிரிக்கு தக்கி
லெண்டரு மூழ்நின் றுந்த விரையவாங் கேகி னேனால். (ககo)

ஆங்கொரு குகைமு கத்தின் மனோகர மான வீணைத்
தேங்கனி யிசைமுன் செல்லச் சேயிழை யொருத்தி கண்டத்
தீங்குர லிசையுஞ் சேர்ந்தென் சிந்தைநெக் குருகப் பின்சென்
றோங்கிசை யெதுகொ லென்று வுணர்வுறு தொலிப்பக் கேட்டேன். ()

கேட்டலு மிசைவாள் கொண்டென் னெஞ்சினைக் கிழித்தாள் கொங்கை
கோட்டினை யுகிர்வாள் கொண்டு கிழித்தனன் கூடி வேள்போர் [க

நீட்டினன் புறங்காண்பாக்கு நினைந்ததி விரைந்து சென்றேன்
வேட்டுவ னொருவ னுங்கென் னெதிர்புகுந் திதுவி ளம்பும். (ககஉ)

ஐயநின் னுருவ நோக்கி னரசிளங் குமர னுதி
வெய்யமா வழங்கு மிந்த வெற்பரு குற்ற தென்கொ
லெய்யமெய் யோது கென்றா னிசைத்துமுன் னிகழ்ச்சி யாவுந்
தையறன் விழைவுங் கூற வினையிது சாற்று மன்னோன். (ககங)

கேட்டியான் மைந்த முன்னாட் கௌதமன் கிழத்தி யின்பம்
வேட்டுநின் றாதை பெற்ற விழுமநோ யுணர்கி லாய்கொ
றோட்டல ரைம்பாற் சீதை தனைவிழை தூர்த்த னுற்ற
கேட்டினைக் கேட்டி லாய்கொள் கேண்மதி யினிதென் மாற்றம். (ககச)

களிகிளர் சயந்த வீது கௌணனுச் சிரம மன்றே
னுளமகிழ் பன்னி கான மிசைக்கின்றா னுவந்தன் னுளோ
வளமைசான் மயன ளித்தான் மணந்தவம் முனிவன் கானம்
பளகறப் பயிற்று வித்தான் பழுதுநீ போத லென்னா. (ககரு)

கிராதனுங் குரைத்துச் சென்றான் கிளக்குமவ் வாய்மை வாய்மை
தராதலை யறையுங்*கீல கம்மென வாகிச் சால
விரோதமா யமைந்த வாற்றான் விழைந்தவா வாங்கட் சென்றக்
குரோதமின் முனிவன் வாழுங் குகைத்துவா ரத்தின் மாதோ. (ககசு)

அங்கையான் விபுல வெற்பொன் றெடுத்தடுத் ததனை மூடித்
துங்கநீண் மரத்தினா†லர்க் களமுறத் தொடக்கி யாங்குத்
தங்கின னிருப்ப வாற்றுந் தவமுனி வெகுண்டு நோக்கிப்
புங்கமார் கற்பி னாளை விளித்திது புகல லுற்றான். (ககஎ)

மங்கைகே ணின்னை யானிங் கிருப்பது மதித்தி டாத
னங்கபீ டிதனா யெந்த வதமனோ நயந்து வந்தா
னங்கவன் சிரத்தி லிந்தத் துவாரவெற் பமர்க வன்னான்
செங்கையி லதன்மேற் பூட்டு மர்க்கள மிடியாய்ச் சேர்க. (ககஅ)

அவனுருப் பூத ரூப மாகுக வறிவி ழந்தாங்
கவனுறு பித்த னாக வென்றுநான் காய சாப

* கீலகம்—ஆப்பு.
†. அர்க்களம்—தாழ்க்கோல்.

மவனுறச் சபித்தா னென்ச மழிந்தியா னலமந் தஞ்சி
யவனுடைப் பதத்தில் வீழ்ந்தே யடிக்கடி வணங்கிப் பின்னர். (கக௯)

அருந்தவ நிதியே ஞானத் தவிர்மணி விளக்கே தேவர்
மருந்துகைத் திடவா னந்த மருந்துமா முனிவர் வாழ்வே
பொருந்துமெய்க் கருணை வாரீ புன்மையேற் கவித்த சாபப்
பெருந்துய ரொளித்தாள் கென்னுப் பேதுற முனியீ தோதும். (கஉ0)

இந்திர குமார நீயெஞ் ஞான்றுபோ யிதழிக் கானத்
தெந்தைசிர் வடுக நாத னிணையடி யணைய வீழ்ந்து
வந்தனை புரிதி யஞ்ஞான் றிப்பெருஞ் சாப மாறு
மைந்துறு ஞான முண்டா மற்றிது நிகழ்ந்த பின்னர். (கஉக)

போதுதி சுவர்க்க மென்று புகன்றன னவனால் வந்த
மாதுயர்ச் சாப மேற்றுப் பூதசா லங்கண் மன்னு
மேதகு வெற்பிற் பன்னாள் வெந்துய ருழந்து பின்னப்
பூதசா லங்க ளோடு போந்திவண் வடுக நாதன். (கஉஉ)

பொன்னடி பணியப் பெற்றேன் புகல்கிரு தார்த்த முற்றே
னென்னுறு சாப நீங்கிற் றென்றுரைத் திருவி சும்பிற்
றன்னரு கமரர் சூழ்ச் சார்ந்துபல் பொருளுங் கைக்கொண்
டின்னுமக் கொன்றை யங்கான் மீட்டும்வந் துவகை கூர்ந்து (கஉ௩)

கேத்திர பாலற் போற்றிக் கிளர்மணி யாற்செம் பொன்னாற்
சீர்த்திசேர் மயனாற் றேவ சித்தமண் டபமுன் சேர
வேத்துறு கோயில் செய்வித் திலங்கெழிற் சயந்த னென்பா
னார்த்திதீர்த் தருள்செய் காரி தனையிருந் தருச்சிப் பானால். (கஉ௪)

முக்குண வகைய வன்னம் பண்ணிய முதல வாகத்
தொக்கபல் பொருளும் வெவ்வே றளப்பில தொகுத் தமைத்து
மிக்குயு சார மீரெண் விதம்பட விழைவுற் றன்பாற்
றக்கவர்ச் சனைமுன் னூலிற் சாற்றிய விதியாற் செய்தான். (கஉ௫)

இருகாஞ் செவிதோ ணெற்றி யெழிற்சிர மிவையோ ரெட்டுந்
தரையுறப் பரவு மன்பாற் றாழ்ந்தன னெழுந்து செங்கை
சிரமிசைக் கூப்பி நின்று திகழுமுன் னவன்பே ராய்ந்தப்
பரன்ரு ளனிதி னல்கும் பன்னிரு நாமஞ் சொல்வான். (கஉ௬)

வேறு.

தவர்புகழு மாவதுத்தா ரணன்றன் முன்னூல் சாற்றுமுருத்திரமூர்த்தி தண்டபாணி, திவள்வைர வன்பூத நாதன் வேதஞ்செப்புபசு பதியோநற் சித்தி தன்சீர்ப், புவிபுகழ்யோ கினிகுரவன் வடுக நாதன் போதமருள்பிரமேசன் புனித யோகி, நவிலருங்கேத் திரபால வடுகற் காக நமவெனமுன் றொகுதியுற நயந்து போற்றி. (கஉஎ)

அனையமக வான்கூறு மறையோ ஞய வருமுனிமா கௌணன்வெகுண்டறைந்த சாபந், தனையடர வருந்துபய மொருங்கு நீங்கித் தணப்பரியபூதவுருத் தனைவிட் டேக, முனையுருவுற் றறிவெய்த வளித்தமுன்ஞேன் முடுவலிவர் வடுகனருள் முன்னி முன்னி, மனநெகிழத் தனித்தனியநாம மேன்மை வயங்கவரு ணயங்கொளமுன் வழுத்துகின்றான்.

மாவேள்விப் பிரியாங்கி குண்டசாதன் வயங்குமுருத் திரமூர்த்தி மரிக்குஞ் சீவர், பாவாதி மோசனஞ்செய் காசி பூமி பாலன்மகா பலன்கரகா பால னென்றுந், தாவாது தேவமா னுடரா பத்தைத் தவிர்த்தருளு மாவதுத்தா ரணன்றன் பூவின், மாவாழுஞ் சீதளியின் மேவுங் காலவைரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம். (கஉஅ)

தானேசெ யாரவவீ ராட்ட காசத் தாலண்ட சந்ததிக டமைப்பூ ரிப்போன்,வானேந்து ஞானேந்து கண்ட மோடு மாநதியாஞ் சானவ்நான் மறைக்க பால, மூனேயுஞ் சூலமணிந் தோன்*க ராள வுருத்திரமா மூர்த்தியன்ப ருளத்தன் பூவின், மானேயுஞ் சீதளியின் மேவுங்கால வைரவனையகத்திருத்தி வணங்கி வாழ்வாம். (கூ0)

செங்கையமர் கொடுந்தண்ட தாட ஞதி செய்துதைத் தியசங்கஞ்செருக்குந் தீரன், வெங்கதிர்தீ தண்கதிரின் விலோ சனத்தான்விபுகடினவாணபுரி விறலின் மிக்கோன், கங்குல்பகற் றிவியசங்க சேவி தன்சீர்க் கடோர தண்ட பாணியலர்க் கமல வாழ்க்கை, மங்கையுறை சீதளியின்மேவுங் கால வைரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம். (கூக)

பயங்கரமார் தொனிகடமுன் விறல தாகிப் பாவுகண்ட நாதத்தாற் பயஞ்செய் விப்போன், பயங்கரமா பாரதிரி சூலங் கட்கம் பரிசைதரான் சத்துருக்கள் பதைத்துண் மாழ்கப், பயங்கரவெஞ் சமத்தழிப்போன் பயங்கராதி பைரவனுப் பட்கமலே பயிலும் வாவி, வயங்கியொளிர் சீதளியின்மேவுங் கால வைரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம். (கூஉ)

---

* கராளம்—பயங்கரம்.

ஏககா லத்திலிணை யொத்துத் தோன்று மிளம்பிறைவக் கிரதந்த ணிருண்ம யம்மை, நாகசம ரூபதர னகில தேவ நயபூசி தாங்கிரிபங் கய னெஞ் ஞான்றும், பாகமுறத் தற்சூழும் பூத நாதன் பதுமைசி வார்ச் ச னைசெய்தடப் பாங்கர் மன்னி, வாகமருஞ் சீதளியின் மேவுங் கால வை ரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம். (௧௰௩)

சுராசுர ராதியள விலபல் கோடி தொகுசீவ சங்கநா யகனாற் றோற் றச்,சாவசரப் பகுப்புறும்ப் பவஞ்ச மெல்லாந் தந்துங்றீ இ யழிக்குமுதல் சைலந் தோறும், பரவுநிலை யாலயத்தோ னயன்மால் போற்றும் பராபர ன்மா பசுபதியாம் பகவன் மேவி, வரகமலை யினிதமர்சீ தளியிற்கால வைரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம். (௧௰௪)

மன்னுறுநல் லட்டசித்தி சமட்டி வித்தை மரபிணருள் வோனன்பர் மனத்தின் வேட்கை, துன்னவளித் திடுமேன்மைக் கோம ளாங்க சுந்த ரன் மெய்ச் சிட்டரிடர் தொலைத்துப் போற்றத், தன்னில்வரு மட்டவை ரவசொரூபன் சாற்றருமந் திரசித்தி தன்பூங் கொங்கை,வன்னிகர்மா மகிழ்ந்தமர்சீ தளியிற் கால வைரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம்.

பாதமலர்த் தரிசனிக டம்ம னேக பவநாசன் மலர்தாமம் பலகொண் டன்பா,லேதமறவருச்சிப்பார்க்கனேக பாக்கி யப்பிரதன் சீதளிமாட்டெ ன்று மேவு, மேதகைய பிரசன்ன யோக பீடன் வியனுறுயோ கினிகு சவன விரைசூழ் பூவின், மாதமருஞ் சீதளியின் மேவுங் கால வைரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம். (௧௰௬)

வானிலவு மட்டகா சத்தா லண்ட மாதிரங்க ணிறைவித்தோன் வய ங்குகோள்கண், மீனினமா மாலிகா விருத னண்ட வெளிமுகட்டை யூ டுருவி விளங்கு மேன்மைத், தானவருட் சத்திமய விசுவ ரூப னவிர்தே வ வடுகேச னம்பு சாத, மானிலவு சீதளியின் மேவுங் கால வைரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம். (௧௰௭)

ஆயசுபா சுபாதிகன்ம மனேகஞ் செய்யு மன்பர்குழாத் தினைப்புரப் போனறமுன் னுய, பாயபுரு டார்த்ததா யகன்றன் மேனிப் படரொளி யாற்பவஞ்சமெலாம் படைக்கு மேலோன்,மேயதயா நிதிபிரமே சன்மா ல் மார்பின் வீற்றிருக்குங் கோற்றொடிதான் விழைந்து வாழும்,வாயபல வளந்திகழ்சீ தளியிற் கால வைரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம்.

மந்திரவெந் திரதந்தி ரத்தின் சித்தி வழங்கிறைவன் றனதுபக்க மல்லா வேனே, மந்திரவெந் திரதந்தி ரம்பே திப்போன் வலமாரும் யோகதண்ட வாகு மூலனை, மந்திரமா தவர்மனத்த னருள்செய் கண்ணோன் மாயோகி மலர்க்கமல வனிதை வாழு, மந்திரமாஞ் சீதளியின் மேவுங் கால வைரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம். (௧௩௯)

சானவிநீஞ் செய்யசடா வடேந்து கட்க கபால தரன் பிரசண்டசமரந்தன்னி, லானநிறற் பகைவருக்க மனைத்துங் கொல்வோ னரியிரத்த பானமெய்த்தா ரையினுற் பீதி, தானெவர்க்குந் தருமுருவ னட்டகாசன் சகதலபா லனவடுகன் சலசை வாழும், வானிமிரு மாமதிற்சீ தளியிற் காலவைரவனை யகத்திருத்தி வணங்கி வாழ்வாம். (௧௪௰)

மேவறு.

என்றுசுர பதிகூற வியம்புதுதி வரங்கேளா விமையோர் போற்றும் வென்றிபுனை வடுகேசன் விகசிதமு காம்புயனுய் விழைந்து நம்முட்கை னின்றுபுரி துதிமகிழ்ந்தோ நின்விழைவின் மேலருள்வோ நின்றன்வே நன்றுரைத்தி யென்றருளி நலந்திகழ மேலுமிது நவிலுகின்றான். (௧௪௧)

சயந்தமுன்னீ யன்பினெமைச் சாற்றியவித் துதிவரங்கா தலித்துநம்மு னயந்துரிய பத்திமிகச் சிரத்தையொடு மெவன்றுதிப்பா னவிலு மன்னோன், வியந்திடுமோ னந்தவனு பவனுகிச் சகலநிதி விளைவு மேவி யுயர்ந்தவனி வாழ்ந்தெமது சாமீப பதம்பெறுமீ துண்மையாமால் (௧௪௨)

அன்றியுமா றிரண்டுபெய ராலுமுறத் தனித்தனியே யருச்சித் திற்றிற் றுன்றியநல் லோமமொடு துகளறுவிப் பிரவுண்டி துலங்கவாற்றி, யொன்றுமித யத்தொடெமை யுவப்பிப்பா ரெவரவர்கட் குன்பே ரோங்க, மன்ற விழைந் துள்ளனபே றெவையுமொருங் களித்துமென வழங்கி னுனல்.

வேறு.

இதவசனமிதுவினவு மதிவ லாரி யெழின்மதலை யிதயமுறு முதிதனுகி, நதிமதலை மதிமுடிய வடுக நாத னலனருணின் முனமுறலு நவையரூப, மதமுறமு னெழிலுரு வமருளி னுயு னடியனினி யடைவதெனி னலரும் வாச, பதயுகள சபரியையு மளியு மேவு பரிசருடி யெனமுனனி பரவி னுனல். (௧௪௪)

உதுவினவி யருள்வடுகன் சயந்த கேளொவ் வொருவருடந் தொறு
மிரவி மேட மேவு, மதிபிரத மப்பிருகு வாரந் தன்னில் வானவர்சூழ் வு
றப்போந்து மகிழ்வி னீயிங், கதிகவுப காணதிர வியங்க ளீட்டி யன்புமி
கப் புனிதமுற வமர்ந்து பூசை, விதிமுறையிற் புரிகெனவு மபர பக்க
மேவு சதுர்த் தசிதிதியில் வெள்ளி நாளில். (கசரு)

மாபின்முறை வழுவாம லெவர்க ணம்மை மனனுறுமெய் யன்பி
னொடும் வழுத்து பூசை, புரிவரவ ரிட்டகா மியங்கள் யாவும் புரிந்தளித்
து மென்ன வுநீ போற்று மந்நா, ளுரிமைபெறக் குணத்திரையந் தழுவு
பூசையோதுமுறை நமக்கினிய வபிடே காதி, விரைகமழு நறுந்தூப தீ
பந்தூய விசித்திரபோ னகமாடா பூபஞ் சூபம். (கசசு)

தகுசுவைய பூபசுகோ கிருத நாறு சாகபல வருக்கநிவே தனங்கற்
பூர, மிகுவிளக்கா தியவில்சார்ச் சனைமுன் னாக விழைந்துபுரி குநர்க்கெ
வையும் விரும்பியாங்கே,நிகழ்வுறநல் குதுமெனவு முரைத்தானையனே
சமிகு வாசவன்சேய் கெடிது நெஞ்ச, மகிழ்வொடுபன் முறைவணங்கி
யருளி னேகி வான்புகுந்தாங் கமர்ந்தனன்பின் வருடந்தோறும். (கசஎ)

இன்றுமவன் விபுதரொடு மடைந்திங் கந்நா ளின்மறைந்தவ் விரை
மலர்த்தா ளிறைஞ்சுகின்ற,னென்றுகுறு முனியுரைப்ப முனிவர்கேளா
வெட்டைகுணத் திரையபூ சனையென் றுன்முன், னன்றவைநீ விரித்த
ருள்வா யென்ன வோது நறியகுள கிருதபல பாய சான்ன,மன்றன்மலி
மாடாபூ பந்தேனை மருவுதருப் பணமுணர்ந்த மறையோ ருண்டி. ()

ஆயவிவை நிகழ்வுறச்செய் பூசை தன்னை யறைருபசாத் துவிகமெ
னக்*கன சாராதி, தூய நறுமணங்கமழ் குங்கும மாரங்கத் தூரிமுதற்
சுகந்தமரு மல்லிகாதி, சேயமணி யாரமுயர் கிருத தீபந் திகழ்வுறச்செய்
பூசையிரா சதமா மென்ப, சேயபலி சகிதமுற வியற்று பூசை யியம்பிய
தாமதமாகு மென்று பின்னர். (கசகூ)

முன்னரிய வித்தியா சித்தி தெவ்வர் முனைமுருக்கு செயமொடவ
மிருத்து நீக்கம், பன்னகில ரோகநிவா ரணமுன் னுய பலன்பலவு மளி
த்திடுமெப் பகர்முற் பூசை, பின்னுறைதா மதபூசை யயர்த்துஞ் செய்யார்
பெரியோரெம் பிராணிதனைப் பிரித்திடாது, சொன்னதுயிர் பக்குவத்தா
ற்பலவே றுகித்துன்னுதலா லவைக்கியையச் சொன்னதாமால். (கரு0)

* கனசாரம்—பச்சைக்கற்பூரம்.

சாற்றுமித னுலிட்ட சித்தி வேட்டோர் சாத்துவிக ராசதபூ சனைக ண்மேவி, யாற்றுவர்மற் றவற்றினிற்சாத் துவிக பூசையதிகமென வுரை த்தருளி யமல ஞானப், பேற்றினுயர் தவமுனிவீர் சயந்தன் முன்னர்ப் பெட்பினொடு வடுகேசன் பெயர்க ளாய்ந்து,தோற்றமிகு மாறிருபேர் பக ர்ந்துபோற்றுந் துவாதசமஞ் சரியென்னுந் துதியை மாதோ. (கருக)

எவனுறுமெய் யன்பினொடும் வடுக நாத னிலங்கெழிற்சந் நிதியினி தமேத்து மன்னோன், புவனிதனி லிட்டகா மியபல் போகம் புத்திரசம் பத்தாதி பொருந்த வாழ்ந்தே, யுவகைதரு கற்பகநாட் டரியபோக மொரு ங்குநுகர்ந் தொழிவுபெறீஇ யுவம னில்லா,நவநிரதிசயானந்தப் பெருவா ழ்வாய நற்கதிபெற் றிடுஞ்சாத நவிற்றி னோமால். (கருஉ)

மேவருஞ்சீர்க் காசிமகத் தழலிற் றோன்றி விராடமடைந் தொலியி னிசாசரரை வீட்டித், தேவர்நாரப் புரந்துசீ சைலத் தட்ட சித்தியுற நவ நாத சித்தர்க் கீந்தாங், கோவிமறை ஞமலிபூ தங்க டம்மை யொளிரிதழி வனம்புகுந்து சயந்தற் குற்ற, சாவமகற் றியவடுக னென்று மாங்கே தங்குமெனக் குறுமுனிவன் சாற்றக் கேட்டோர். (கருங)

வேறு.

மாதவனை வாமமுறு மாதவனல் வடிவாக்கி வஞ்ச நெஞ்சத்
தீதமரும் வைணவர்தந் தீநெறியை வீநெறியாச் செய்த தேவே[தெவ்வா
சீதளியெண் டிசையினுமெண் டிசையினர்தம் பெயர்த் தீர்த்தஞ் செய்த
ருதாவி னதுகேட்க விழைந்தனமென் றார்முனிவ ரறையு மன்னோன்.

வைரவச்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-க00உ.

சீதளிதீர்த்தச் சருக்கம்.

தாதளிசூழ் போதலர்கோ தாவிரியின் றுவிரியின் றடத்தின் மேவி
யோதளியின் மாதருமைக் கொருபாகந் தருவோனை யொருவாப் பூசை
போதளியாற் றுதாத்தீர் புகழ்வடுகன் றகையுரைத்தும் புகன்ற வாநீர்
சீதளியி னோதுவகைத் தீர்த்தநலங் கூர்த்துணர்மின் செப்பு கின்றாம் (க)

வேறு.

தீமையென் றுரைப்ப வெல்லாந் திரண்டொரு வடிவ மாகோ
ரூமமே னமுசி யென்பா னளிர்திரை நாலை சூழும்
பூமியி னொருவ னுள்ளான் பூமிசை யயனை மேனாட்
டாமரைச் சரணம் போற்றித் தனித்தருந் தவம்பு ரிந்தான். (௨)

இருந்தவத் திண்மை நோக்கி யெகின்புறத் திவர்ந்து ளார்வந்
தருந்தவ லரிய நோன்பிற் றனவன் யானல் லோகை
பொருந்தவந் துலக மீன்ற புண்ணிய னண்ணலி நிற்பத்
திருந்தவங் கைகள் கூப்பி யெழுந்து சேவடியில் வீழ்ந்தான். (௩)

பலமுறை பணிந்து போற்றும் பமரசங் குலம்ப டிந்தாங்
கலமுற மடுத்துஞ் செந்தே னருட்பிர வாக மேன்மை
புலமுறக் காட்டல் போலப் பொழியுஞ்செங் கமல மேநற்
றலமென வீற்றி ருக்குந் தாதைநின் சரணம் போற்றி. (௪)

மாணுமெவ் வுலகுள் ளாரும் வாய்திறந் திசைத்த றன்ன
தாணையில் வைத்து நாளு மவரவர்க் கினிய வாணி
பேணிநன் கருளு மாதா பிராமிவெண் சலசை பாணி
வாணிக ழக்க மாலை வாணிதன் மணாள போற்றி. (௫)

பவனமுற் றொருங்கு வாய்த்த பகவமா தகவ போற்றி
புவனகுண் டிகையங் கைய போதநால் வேத போற்றி
சுவனக மான்பி ரீதித் தொடர்பினிற் படைப்பாய் போற்றி
தவனமுற் றகற்றி யிட்ட காமியந் தருவாய் போற்றி. (௬)

என்றுநின் றிறைஞ்சி யேத்து நமுசியை யினிது நோக்கி
நன்றுள முவந்து வேதன் வரம்பல நல்கிச் சென்றா
னன்றவன் வரத்தின் பேற்றா லாற்றன்மிக் குடைய னாகி
வன்றிற லவுண னந்தோ மற்றிது புரிய லுற்றான். (௭)

உலகொரு நாலி ரண்டு மோம்புமும் பரைய டர்த்தான்
வலிமுதற் கவர்ந்தா னல்ல கண்டமிக் கியற்ற மான்று
நலிபுதம் வலியி ழிந்து நாருருச் சார்ந்து நைந்தே
யலைபவர் நற்பா லுந்தத் திருத்தலந் தலைடந்திட் டாங்கே. (௮)

மாதவப் பிருகு பாங்கர் வந்தடி வணங்கித் தம்பாற்
காதரம் பெருக வந்த கவற்சியு நமுசி மேலு
மாதுயர் புரிந்த டார்க்கும் வஞ்சமு நைஞ்சு கூறி
யேதமுற் றகற்றி யுற்றோர்க் கினிதருண் முனிவ ரேறே. (௯)

எங்கள்பால் வந்த விந்த விட்டள மிரிந்தி யாங்க
டங்குறு திழந்து நீங்கும் பதங்களிற் சார்ந்து வாழு
மங்கள மருடி யென்று வணங்கினர் மீட்டுங் கேட்டுத்
துங்கநன் முனிவர் கோமான் கருணையுட் டுண்ட வோதும். (௧௦)

வருதிரெண் டிசையுங் காப்பீர் மற்றவை யிழந்து நீவிர்
மருவிய வலிக ணீங்கி மானுட வடிவ மேற்றுப்
பரிவுறு மிடர்கண் முற்றும் பரிவுறற் குபாய மீண்டுப்
புரிவதுண் டஃது ரைத்தும் புந்தியுற் றுவந்து கேண்மின். (௧௧)

குடைந்தவர் தம்பா லுள்ள குறையெலா மிறையி லேகத்
தடிந்துளத் திட்ட மெல்லாந் தந்திடு மந்தண் வாவி
யிடந்தரு சீத ளிப்பே ரேல்வைமற் றிதன்பா னீவி
ரடைந்துநும் மாசை யெட்டி னுசையி னேசத் தாடி. (௧௨)

வேறு.

மறைநடுவின் வயங்குசிறு வைந்தெழுத்தை மானதமா மகிழ்வினெ ண்ணி, யிறையவனை யுளத்திருத்திச் சிவயோக தியானஞ்செய் திருமி னுக்கே, நிறைகருணை யோடமலன் றவமுவந்தும் பாற்றோன்றி நீவிர் கொண்ட, குறையனைத்து மகற்றுபுநும் வேட்கைதரு மென்றுவிடை, [கொடுப்ப வன்னோர்.

திருத்தகுமப் பிருகுமுனி பதத்திறைஞ்சி யுவகையுளந் திகழச்சென்றுங் கருத்தியுறத் தத்தமமா திரத்துறையிற் போய்மூழ்கி யமல ஞான,கிருட் டினபிங் களமேனி விமலனையுள் ளிருத்தியிருட் கேத நீக்கித், தெரித்த ருளின் மன்னுவிக்கு மைந்தெழுத்தை மானதமாச் செபித்து நின்றார்()

இன்னதிசைக் கிறையவர்மு னத்தடத்தின் மத்தியத்தி லிலங்கு கோடி மின்னொளியின் மனோகரதே சோமயமா யோரிலிங்கம் விளங்கித் தோ ன்ற, வன்னதனைக் கண்டுவகை மீதூரப் பணிந்திறைஞ்சு மவர்கட் கந்த நன்னயமா மிலிங்கத்திற் றுணுவருள் வாக்கினிலை நவிற்று மின்றான்.

இத்தடத்தின் பச்சிமதீ ரத்திலெமை யெமதருளா மிமய மீன்ற
சத்தியொடு பதிட்டைபுரிந் தருச்சிப்பீர் நீர்வேட்ட சகல காம
சித்தியுறு மெனவவரு மவ்விலங்கந் தனையெடுத்தத் தீரமேல் பாற்
பைத்தமிழற் குரவமூ லத்துமைத னுருவினொடும் பதிட்டை செய்தே.

வேறு.

நிகமநற் சிவாக மத்தி னெறியினிற் றைல மாதி
யகமகிழ் படீர மீரு வாட்டிநற் கலன்கள் பூட்டி
நகைமல ரலங்கல் சூட்டி விசித்திர நாக மீட்டிப்
புகைசுடர் திருமுன் கோட்டிப் புனிதவின் னமுத மூட்டி. (கஎ)

பூசனை நிரப்பி யங்கைப் புவனத்தைப் புதிய போதை
யீசனைந் தெழுத்தை யோர்நூற் றெண்முறை செபித்துச் சாத்தி
யாசனை பூசை யாதி யவன்கையிற் றத்தஞ் செய்து
தேசனை வரும்பெற் றுய்வான் றிருமுனித் துதிசெய் வாரால். (கஅ)

எம்மூல குடையாய் போற்றி யிளம்பிறைச் சடையாய் போற்றி
யம்மறை நடையாய் போற்றி யணிகொள்சூற் படையாய் போற்றி
வெம்மைமால் விடையாய் போற்றி விமலபா லுடையாய் போற்றி
கொம்மையங் குரவ மூலத் தமர்முது குரவ போற்றி. (கக)

மேற்றனி யமல வெங்கண் மேற்றனி கருணை நின்றன்
பாற்றனித் தாள்கொன் பார்க்கப் பரிவருத் தனஞ்செய் வாய்தே
னூற்றனி மடுத்து மூழ்க வொழுகுபொன் னிதழி யானே
கோற்றனிர்க் குரவ மூலத் தமர்முது குரவ போற்றி. (உ0)

வேறு.

என்றுபல் வகையாற் றுதித்தன ரிருந்தாங் கிவ்வகை சிலபக லியை
ந்தன், பொன்றுமர்ச் சனையவ் வெண்மரு முனூற்ற வொருகலை மதிவளர்
வதுபோற், சென்றுபூ சனைதாந் தொடங்குநாண் முதலாத் தெய்வத ரூப
முந்தேச, நின்றதம் வலியுந் தினந்தினம் வளர்ந்து நிறைதரப் பெற்றனர்
முறையே. (உக)

மேற்றனி நாதன் திருமுனிவ் வரங்கள் வேண்டுவோ ரையசீ தனியின், பா
ற்றனித் தனியா மூழ்குமெண் டுறையும் பகருமெம் பெயர்களம் முறை

யே, யேற்றிட வவற்றைக் காணுநர் பரிசித் திடுமவர் பருகுநர் தோய்ந்
தோர்,கோற்றொடி பாக விகபர போகங் குளித்திட வருள்கெனவிரந்தார்.

இரந்தவா றண்ண லீந்தன மென்று னெண்மரு மிறைஞ்சின ரேகிப்
பரந்ததம் பதமுன் போலமர்ந் தனரப் பரமனைப் பரையையிப் பாரி, லுய
ந்தரு பச்சி மேசுரன் பச்சி மேசையென் றுயர்பெய ருரைப்ப, விரிந்த
சீ தளியின் றீர்த்தத்தின் வகையு மேன்மையு மேல்விரித் திடுவாம். ()

இந்திர னனலன் வைரவ னியம னியம்புறு நிருதிநல் வருணன்
வந்துவண் குபேரன் வனசமா னுழி வயங்குமீ சானன்மா கௌரி
தந்தநா மத்தாற் கிட்டிசை முதலாச் சாற்றுறு முறையினிற் சமைத்த
சிந்துநேர் மகிமைத் தீர்த்தமீ ராறுஞ் சீதளி வாவியுட் டிகழும். (௨௪)

வேறு.

இந்திர திசையின் மேவு மிந்திர தீர்த்தந் தன்னின்
மைந்துறு தகரிற் பானு மருவிடு மதியின் மேவு
முந்துசித் திரைநன் னாளின் மொழிந்தவை கறையின் மூழ்கி
யந்தநற் றீரத் திர வாடையோ டமர்ந்து பின்னர். (௨௫)

ஒல்வகை சொன்ன தான மறையவர்க் குதவி னோர்கள்
வெல்வலி யயமே தத்தின் பயன்பெறீ இ விபுதர் வேந்தன்
றொல்பதி யடைந்து போகந் துய்ப்பர்நூல் விசேட மென்று
சொல்பயன் றருமம் மேட மதியினிற் றினமுந் தோய்ந்து. (௨௬)

சீதளி நாதன் பாத தெரிசனஞ் செய்து போற்றி
நீதியி னீட்டு செல்வத் தியன்றவந் தணர்க்கு நேர்ந்தோர்
மேதகு சுநாசி யோடு வியனரித் தவிசின் மேவி
யாதரம் பெருகப் பன்னா ளமர்ந்துவீற் றிருந்து வாழ்வார். (௨௭)

அக்கினி திக்கி லங்கி தீர்த்தத்தி லருக்கன் றேண்மேற்
புக்கியன் மாதந் தன்னிற் பொருந்துகார்த் திகைநன் னாளிற்
றக்கசெங் கதிரோ னுச்சி தனிலுறு மமைய மூழ்கித்
தொக்கமூன் றைந்தே ழாதல் சொலுமவற் றதிக மாதல். (௨௮)

இரணிய தான மீந்தோ னெத்துணை யிழிந்தா னேனுந்
தரணியிற் றனவா னாகிச்*சானமாங் கெய்தி வேள்வி

* சானம்—ஈண்டு ஞானம்.

யாணியி னழலி னூற்று மந்தணர் சன்ம மெய்தி
முாணிய வினையி னீங்கு மொழிந்தவிம் மதியந் தன்னில். (உ௯)

அத்தகு தீர்த்தந் தன்னி னூடொறு மாடி யன்னஞ்
சத்திர மாதி யிட்ட தானமா மறையோர்க் கீந்தோன்
மெத்திய சகல பாவ விமுத்தனாய்ச் சுவர்க்க மேவுஞ்
சத்தியம் விழைந்த யாவை யவையெலா மொருங்கு சாரும். (௩௦)

வயிரவ தீர்த்த நற்று வகன்றிசைக் குடபால் வெய்ய
வயினமன் றிசைக்குக் கீழ்பா லமருமத் தடத்தி லென்று
மயாறு மன்பி னோடு மாசிரி பௌம வாரம்
வியனுறு பிருகு வாரம் விழைதக விதியின் மூழ்கி. (௩௧)

வடுகனை வணங்கி மாடா பூபமா திகணி வேதித்
தடையினிற் பணிந்து போற்றி யந்தணர்க் குண்டி நல்கி
யுடன்முதற் றான மீந்தோன் பாவங்க ளொருங்கு நீங்கு
மிடரெலா மிரியு மன்றோ னெண்ணியாங் கியாவுஞ் சேரும். (௩௨)

இயமன்மா திரத்தின் மேவு மியமன்மா தீர்த்தந் தன்னின்
மயர்வொரீஇக் கடக நன்மா மதிமதி யிரவி யோடும்
பயில்வுறு தினத்தி னுச்சிப் பகன்மன முவந்து மூழ்கி
யியைபுறு பிதிர ரானோர்க் கியற்றுபசி றருப்ப ணாதி. (௩௩)

அமைதரு மனுவோ டாற்றி யாம்பய கிருத குப
*சமன்வித போன கந்தா ன்றுவிலந் தனருக் கீந்தோர்
தமபிதிர் வருக்கஞ் சேர்ப்பர் சத்திய வுலகிற் றுங்க
ணிமிரிய பீதி நீங்கி நேரிய நண்ப ராவார். (௩௪)

நிருதியின் கருபத் தன்னே னிறைந்தசீர் த்தீர்த்தத் தெய்திப்
பரிதிமா மதியி ரண்†டு பராகத்தி னன்பின் மூழ்கி
யிரணிய முட்பூ ரித்திட் டிலங்குகூன் மாண்ட மெள்ளுத்
தரைபொன்கோ கன்னி யாதி தைலநற் கடங்க ளாதி. (௩௫)

துன்னுபல் பீடை யாதி துரிசறும் பொருட்ட தாகப்
பன்னுறு மிட்ட தான மோர்ந்துணர் பனவர்க் கீந்தோர்

---

* சமன்விதம்—சகிதம்.

† உபராகம்—கிரகணம்.

சொன்னவொவ் வொன்றி னுக்குக் கோடிமா பலன்க டேய்ந்து
நன்னலந் தருமு ராரி நற்பத மடைவர் திண்ணம். (ங௬)

வருணனம் பரத்தி லப்பேர் வழங்குறு தீர்த்தந் தன்னில்
விரவுவை சாக மாசம் விசாகநாட் பருவத் தென்று
வருமுத யத்தி லாதன் மத்தியா னத்தி லாதல்
பரிவொடு படிந்தி யன்ற பொருளுயர் பனவர்க் கீந்தோன். (ஙஎ)

இம்மைசெய் பாவ முற்று மிரித்துட னூறு சென்மத்
தும்மைசெய் பாவ முற்று மொழிந்திடப் பெறுத றிண்ண
மிம்மதி ஞான தான மேற்றமித் திருத்தத் தென்ப
செம்மைகொண் டிறைய வர்க்குச் சிவிறிபா துகையி னோடும். (ஙஅ)

சத்திரம் வத்தி ரஞ்சேர் ததியன முப்பலாதி
யித்தடத் தளித்தோன் வானி னின்புறீ இ*வேந்த னும்பி
னித்தமிம் மதியிற் றோய்ந்து பச்சிம நிமலற் பூசை
பத்தியிற் புரிவோன் முக்கட் பரமசா மீப மெய்தும். (ஙக)

வாயுவி னரிதத் தன்னோன் வாரியா ரோக்கி யத்தி
னேயமுற் றவரு திக்கும் பானுமண் டலநேர் நோக்கித்
தோயுறின் வாயு ரோக முதலிய தொலையு மாற்ற
லாயது முதல காம மெண்ணியாங் கடையு முற்றும். (௪0)

தனபதி வம்ப லன்னோன் சலிலத்தோ ராண்டு காறு
மனனுறத் தினமுந் தோய்ந்து மகிழ்புமேற் றளியான் றன்னை
யனகையைப் பணிந்து தம்மா லாமுப கரணத்தோடு
தினமக லாது பூசை சிறப்புறச் செய்து பின்னர் (௪க)

சுவைபல தழுவு நான்கு வகையுணத் தய்த்தி டாம
லவிசப ரான்ன காலத் தொருபொழு தருந்து சீல
ரெவமகன் றாண்டு மூன்று ளெண்ணிலாச் செல்வ மெய்திப்
புவனமோர் மூன்று மொவ்வாப் பொலிவொடு மினிது வாழ்வார். (௪உ)

தேற்றுமத் தனதன் றீர்த்தக் கீட்டிசைத் திருவின் றீர்த்தந்
தோற்றுவித் தவண்முன் போற்றுந் தூயதா மிதனி லன்பின்

---

* வேந்தன்—இந்திரன்.

பேற்றொடு தினமு மாதல் பிருகுவா ரந்தோ ருத
லாற்றுறு நியமத் தாடி யருச்சுன மூலத் தாதல். (௪௩)

சககரத் தெதிரி லாத லொருப்படு முள்ளஞ் சார்ந்து
மிக்கபொன் மகளை முன்னி விளம்பவள் பீசஞ் சேரைந்
தக்கர மயுத மெண்ணி நியதமா யரனை யோர்ந்தே
தக்கமா நிட்டை கூடித் திருத்தல நாதற் போற்றி. (௪௪)

இவ்வகை வருட மூன்று காறுமிந் நெறியி னின்றே
னெவ்வமில் காமி யங்க ளெண்ணியாங் கெய்தி யீற்றிற்
றிவ்விய ரூப னாகிச் சிவபத மடையு மிந்நீ
ருய்வுறு நான மாத்தி ரத்துறு மொழிவி றூய்மை. (௪௫)

வேறு.

இம்பருட னெளிதளிக்கு மிதனிடையோ ரிதிகாச மிசைத்துங் கேண்
மின், பம்புபொரு னைக்கரையிற் பகர்வுறுமோ ரகரமதிற் பயிலுந் தூய
ன், வம்பமரு முலைபாகன் மலர்க்கழற்கீ ழிலக்குவைத்த மனத்தன் வே
ள்வி, யம்புவியிற் பலபுரிவோ னரிசன்மா வெனும்பெயரோ னந்த ணா
ளன். (௪௬)

மாசறும்வ் வேதியன்றன் மைந்தனவன் கிருட்டினசன் மாவென் பேரா
னேசமுறு தாதையைப்போ னியமமுளா னூழ்வலியா னெறியி னீங்கி
யேசிடயா வருஞ்சருவாந் தியவீன குலமடவா ரிணைத்தோள் புல்லு
மாசைகொடு நிரந்தரமற் றவர்த்தழுவித் தூர்த்தர்தமு ளதிப னானான். ()

அல்லார்க்குந் தீநெறியாங் கவன்புரித லானல்லா ரொருவர்க்காக [னீற்
வெல்லார்க்கும் பெய்யுமழை யென்பதனுக் கெதிர்மறையா யிலங்கு வா
செல்லார்க்குந் தண்பெயலைச் செய்யாது மறுத்தலினத் தேய மெல்லா
மல்லார்க்கு மாண்பினின்று மாறாக வற்கடமன் மருவிற் றன்றே. (௪௮)

வேமெரியிற் பூரணை குதிகிரைப்பா ரெழுந்துநின்று விரிபூ வாதி
தாமடுத்தல் போன்மலரா திகளுகுத்தாங் குலர்ந்துநிற்ப தருக்களெல்லாம்
வாய்மைநெறி யறமிலர்தம் வருவாயில் செல்வமென வறப்ப வாவி
தீமையிரிந் தார்க்கலது மற்றவர்க்குஞ் செய்வதெனத் திங்கள்காய்வ.

இரவியெதிர் மாத்திரமவ் வினன்சிலையொன் றிறைக்குமழ லென்னே
யிந்நா, ளிரவுமொழி யாதழலே யிறைப்பவரு வினமுழுது மென்னுங்

கூற்று, யிரவிதமா நிறைவனவா லேற்குநரன் றீகுநரின் றின்மையாலே
யிரவெனுமோர் பொருளிலையாங் கெனலாய தனையநா டெந்தநாளும். ()

வருந்திநெடு நாணோற்று மாதவன்பான் மாதவன்றன் வரவு காணா
தரந்தையுறு மமையத்தாங் கிமையத்தா யுடனாக வருளிப் போந்த
கரந்தைமதி நதியணிந்த கண்ணுதலோன் றிருவெழுச்சி கடுப்ப வானிற்
பரந்தமுகி றடித்துநிரை பரப்பியந்நாட் டொவ்வொருகாற் பயிலுமாதோ.

அம்முகிலி னாடோபத் தாலளப்பி லாண்டுகளுக் கமையும் போலு
மிம்மழையென் றிதயமகிழ் வெய்திடுங்கா லீவாரை யிடையி னீக்கும்
வெம்மையினர் போற்சூறை விலக்கவுற லருட்காழி வேந்தர் வாக்காற்
பொய்ம்மைபுரி தேரருடைந் தாற்போல வுடையுமவ்வம் புதங்க ளம்ம.

வறந்தொழிந்த முகிலிரைந்து வந்தமைகண் டகமகிழ்ந்த மாந்த ரவ்வான்
மறைந்திடமுன் னோகையெலாஞ் சாகைநிகர் துயராக வருந்தி னாற்
பிறந்திடுக சுதனெனவெம் பிரானுரைத்தற் குளமுவந் தெம்பிராட்டி பி
ன்ன, ரிறந்திடுக வெனமுனிவா லிசைத்திடவாங் கனார்க்கடல்வீழ்ந் திர
[ங்கு மால்போல்.

நிறைதழலி னுட்பொதிந்து நீற்றுமற் குழைத்திடநன் னீர்பெய் யாமற்
றுறையமரும் வெண்டாளச் சுண்ணமெளி தெம்முடலிற் றுதைந்த தெ
ன்பார், வெறியபசு மெல்லிலைபா கிலையென்பா ரரிவையர்தம் மெய்யி
னாரந், தெறுவெதுப்பி னீருகிச் செறிவியர்ப்பிற் சேறாய திறத்தையோ
ரார்.

இவ்வகையி னிடருழந்தாங் கடர்வெயிலி னிடைவெதும்பி யெவரு மே
ங்கு, கவ்வைநெடுங் கடற்புவியாள் காவலன்கே ளனோர்ந்து கவற்சி மூ
ழ்கி, யெவ்வகைய பலவளனு மென்றும்வள ரிந்நாட்டி லிந்நாள் வானம்
பெய்வகைதீர்ந் தறவறந்த பெற்றியென்னோ வெனநினைந்து பேதுற்ற
னால்.

பொன்னாடும் புகழ்*நாடும் பொருவில்வளம் பொலிநாடும் புன்கண்மேவி
யன்னாவோ வெனவலற யான்புரியு மரசுமிக வழுகி தந்தோ, வென்னா
லென் றமரான் மற் றெவராலிங் கிருங்கொடுமை யெய்திற் றேயோ, மி
ன்னார்செஞ்சடையமலன் மெய்யடியா ருளங்கொதிப்பவிளைந்ததேயோ.

---

* நாடும்—பெயரெச்சம்.

என்றுபல பலநினைந்தாங் கின்னலுறு மன்னன்மலரடிணிது காப்போன்
வென்றிபுனை யகன்மார்பன் வேதியர்க ளாதியனன் மேலோர் தம்மைத்
தன்றனிமந் திரத்தழைத்தா தனத்திருத்தி மனத்தருத்தி சார நேர்கின்
றின்றுமுகின் மழைமறுத்ததென்கொலிதுநன் கியம்புகென்று தாழ்ந்தான்

அவணமரு மருமறையோ ரனைவருமங் காசனெதி ரறைவா ரந்தோ
புவனிவளர் புயந்தழுவப் புன்னெறிகள் பொன்றவறம் பூப்பமேற் கொ
ண், டவனிமுழு தாசளிக்கு மறந்தருகோ லரசேயிவ் வகரந் தன்னி, லெ
வருமனத் திடையுமெணு விழிதொழின்முற் றியற்றுவனே ரிளையனன்
[ஞன்.

யாவனெனக் கேண்மதியிவ் விரும்பதியா னொருங்குகலை யாவுமோர்ந்தா
ன், றுவிலரி சன்மாவின் றனிக்குமரன் கிருட்டினசன் மாவென்றோர்க
ளாவவிஃ திதுகாறிவ் வகரமெங்கு நிகழ்ந்திலதென் னரசு நன்றாற்
பாவியவ னிவணிரிந்து படர்கவென வுழையருமப் பரிசு செய்தார். ()

அயனைபெரும பதியொழிந்தாங் கவனகன்று னவற்பிரிதற் காற்றுதன்
ஞேன், றனையுதவு மிருவருமத் தனையனிடத் துறுகாத றம்மை யீர்ப்ப
வினைநினைபு நைந்தவனை விடாதுதொடர்ந் தாரனைய வினைசெய் பாத
கனையரசன் றுரத்தியபின் கனமெழுந்து நெடுந்தாரை கான்றதெங்கும்.

வருநதிகால் குளமோடை வாவியெலா நீர்நிறைந்த மருத மாதி
விரிநிலமா பலனளித்த வியன்பொழிலா தியசெழித்த விரவு மாந்த
ருரியமன நனிகளித்த வொருவுபுசென் மறையவனு கூழா லீன்ற
குரவரொடு மிதழிவனங் குறுகினனுத் தாத்திலங்கோர்முனிவர்கோமான்

பன்னுபெயர் குசகேசன் பரமசிவார்ச் சனைநியமம் பழுத்த சீலன்
முன்னுமுளத் தோடனையர் முன்னுறல்கண் டாங்கழைத்தம் மூவர் தம்
மை, யின்னருளான் முகமலர்ந்தாங் கியம்புவான் யாவர்நீ ரிங்குப்போந்த
தென்னகுறித் தும்பதியா தென்னவரி சன்மாமுன் னிறைஞ்சிநின்றே.

தம்மையுமன் பதியினையுந் தானுணர்த்தித் தன்மகன்பா தகத்தி னாலே
வெம்மொழிதந் தாசனவண் விடுத்தகலத் துரத்தியதும் விளம்பியெந்தா
யெம்மையினி தளித்தருளா லிவன்பாவ நீங்கும்வகை யியம்பியாள்கென்
றம்முனிவன் றனைமீட்டு மடிபணிந்தா னதுகேட்டாங் கறவர்கோமான்.

மறையவநின் மனக்கவற்சி மாற்றுகநின் மகன்புரிந்து வலியபாவம்
பறைவகையு பாயமொன்று பகர்துமெனப் பன்னியுணர் புறிபோ யாங்
கே, வறிதுறுமக் கிருட்டினசன் மாவினுக்கங் கருணைக்கம்வழங்கிமை
ந்தா, வறிகுதிமுன் னுளிமயத் தம்பிகையாற் பகர்ந்ததொன் றிங் கறைத
[ல் செய்வோம்.

அக்கிரிசை யாற்பாவ மனைத்துமொழிந் தாவிகளின் படைந்துவாழ்வான்
றக்கவகை முன்னியற்றப் பட்டதொரு தடமதுசீ தளிமா தீர்த்த
மிக்கயநீ சார்ந்ததனி னிலக்குமிதீர்த் தத்தளியோ டினிது மூழ்கிச்
சக்கரமாங் கெதிர்கண்டத் தடக்கரையின் மருதினையுந் தழுவி மாதோ.

பன்னருமச் சீதளியின் பச்சிமத்தி லமர்ந்தருளும் பச்சிமேசன்
றன்னைவிதிப் படிபூசித் தேழுநா ளிந்நியமந் தன்னி னின்று
னின்னதக நெஞ்சுறச்செய் நிலையினதே யெனினுமுகினிரையுண்மாய்
ந்த, மன்னுமின னதினீங்கு மாறுபோ லொருங்கொழிதல் வாய்மையெ
ன்றான்.

இனையவகை முனியருள விறைஞ்சினனக் குமரனகன் றேகி யத்த
னனையொடுமச் சீதளியி னலர்மகட னரன்மாபி னூடி யாங்கே, ஙனைய
கரு பந்தழுவி நேமிகண்டு மேற்றளியி னுதன் பாதந், தனையருச்சித் தெ
ழுதினமுப் பொழுதினிலுந் தான் செய்பா தகநீங் குற்றான். (கள)

பாதகத்தின் முத்தனும் பனவன்முது குரவரொடும் படிவர் கோமான்
பாதமுறப் பணிந்தனன் றன் பதிபுகழுந் தெரிந்தரசன் பாங்கினோர்வான்
பாதவனே ரரசேயிப் பதிபுகுந்தான் முனமகன்றோன் பயினன் மார்க்க
*பாதமுறு கிருட்டினசன் மாவென்று ரதுவினவிப் பாராள்வேந்தன்.

அவனையிவ ணழைமினென வயலினுரு வியவர்கடி தணைந்து கூவி
யெவமகலம் மறையவனை யெதிர்விடுப்ப விறைநோக்கி யென்கொ னீ
தான், பவநிறையு மபரீசுத்தன் பதிமீண்டு புகுந்ததெனப் பனவன் கூ
றும், புவியரசே யுகமுழுதும்போக்கிய ரனருளால்யான்புனிதனானேன்.

என்றுகிருட் டினசன்மாச் சொலவேந்த னின்றூய்மைக் கேதே
தென்னக், கொன்றைவன மடைந்துநீர் குடைந்துமேற் றளியரன்றாள்
குறுகிப் போற்றி, நின்றருளாற் பாவமிரிந் தமையுரைப்ப நிருபனந்த நி
கழ்ச்சி வாய்மை, யின்றுணரக் காட்டுதிகொ லென்றுரைப்ப மறையவ
னவ் விதழிக் கானில். (எ0)

அரசனொடுங் குரவரொடு மடைந்தருட்சீ தளிகுடைந்தாங் கலர்நீள்வாசக்
குரவநிழல் வீற்றிருக்கு மேற்றளியான் றனைச்சிந்தா குலத்த னாகப்

---

* பாதம்—நழுவுதல்.

பாவுமலர டிவீழ்ந்து பணிந்துரைப்பான் முனிபுகன்ற படிநின் பூசை
புரிவினெழு நாட்புரிந்து நினதருளால் வினையகன்று புனித னானேன்.

பாதகத்தின் மிகைநோக்கித் தன்பதிநின் றெனைத்துரந்த பாராள் வேந்த
னீதகத்துத் தேருன்வந் திந்நின்றன் யான்புரிவ தென்னே யெந்தாய்
மாதிரத்தார் தவத்தாலிவ் வாவியிடை யெழுந்தருளி வணங்கு மன்னோர்
காதரத்தைத் தீர்த்துவலி கொடுத்தாசை நிலையுறச்செய் கருணைவள்ளால்

மன்னுளத்தி னாசங்கை மாற்றியடி யேன்வாய்மை வாய்மை யாக
நின்னருளாற் றெரித்தருளாய் நிலமதியுங் குலநதியு நிமிருங் காள
ப்ன்னகமும் படர்சடையாய் பச்சிமநா யகிபாகா பச்சி மேசா
யென்னவகீ யேயாமெனன் றிசைத்திரங்க வனையனன்புக் கெளியனாகி.

திருக்குரவி னமர்சருவ சான்றான சிவமூர்த்தி சித்த ரூபம்
பரித்தடிபன் னிரண்டுநிலம் பதஞ்சூட நடந்தருளிப் பரிதி நேர்பாத்
துரைத்திடுங்கே ரளவேந்தே யோதுறுமிக் கிருட்டினசன் மாவுச் சூழி
யருத்தியுறப் படிந்தெமைப்பூ சித்திரும்பா தகமுழுது மகன்றானன்றே.

ஆதலினாற் கேரளபூ பாலமறை யோருளிவ னதிக னென்றே
பேதமறத் தேறுதிசீ தளிபடிந்து நமைப்போற்றிப் பெயர்ந் தூரேகி
நீதியினின் னரசியற்றி யனந்தரனம் பதம்பெறுதி நீயென் றங்கே
யாதிமத்தி யாந்தமிலா னவ்விலிங்கந் தனிற்கரந்தா னன்னோர் காண. ()

அந்நிலையிற் கேரளவேந் தம்மொழிகேட் டகமகிழ்ந்தவ் வமலற்போற்றிக்
கொன்னிகழ்சீ தளிமூழ்கிப் பரிதிகண்டு மருதுதழீஇக் குரவ மூலந்
தன்னிலமர் மேற்றளிநா தனைவணங்கிச் சீதளிநா தனையு மேத்தி
மன்னகில பாவமுத்த னயளவி னிதியளித்து வழுத்திப் போனான். ()

ஆதலினிவ் விலக்குமிகீர் பிரயாகை யாதியின்மே லான மீதி [நாளுங்
னேதமில்கான் முளைவிழைந்தோர் வந்தியரா யினுமதி யொன் றெண்ணி
காதலுறப் படிந்தாழி கண்டுகசு பந்தழுவிக் கருதீ ராறு
வேதியருக் குணவுதரிற் சிராயுமகப் பெற்றுவப்பார் விளம்போராண்டில்.

இனையதடந் தனிலெவர்தா மெய்தியொரு காற்படிந்தாங் கினிது மேவுங்
கனையொளிய நேமியெதிர் கலந்தனர்தம் பிதிர்களுளங் களிக்குமாற்றான்
மனம்விழைபு தருப்பணமா திகள்புரிவா ரவர்பிதிர்க்கண் மலரோ னூரி
லனவரதம் வீற்றிருந்தாங் கருஞ்சுகமுற் றடைகுவரா லறவிர் காளோ.

நாடுமிதி லிடபதுலா விருச்சிகநா னம்மதிக ணயந்து நாளு
மாடியிய றுனமளிப் பவர்கங்கை காவிரிமுன் னளப்பிலாத
பீடுபெறு நதிநான தானபலன் பெறுவரினிப் பேச லென்னே
நீடுறுமிந் நீர்நான மாத்திரையே யிட்டமெலா நிறைய நல்கும். (எக)

இத்தகுமா தீர்த்தத்தின் கீட்டிசையி லீசதிசை மேல்பா லேயு
மெய்த்தகுசக் கரதீர்த்த மதிற்படிந்தவ் வாழிமுன்வே தியர்க ளுண்டி
யுத்தமதா னம்பிதிரர் தருப்பணமுன் னுயவன்பி னுஞற்று வோர்கள்
சத்தியமொவ் வொன்றினுக்குக்கோடிமடங் கதிகபலன் சார்ந்துவாழ்வார்

தேவரெலாம் பரவுகின்றார் மாரோக தேகியதிற் சேர்ந்து மூழ்கி
னேவருமந் நோய்நீங்கி யுத்தமனு கின்றான்மண் டலமொன் றன்பால்
வீவரிய பவித்திரனாய்த் தினம்படியு மவனுலகம் வெருவத் தோன்றுந்
தாவில்வயம் பெறுகூற்றின் றுயர்சாரான் முகுந்தபதஞ் சார்ந்து வாழும்.

இத்திகிரி புனற்கீழ்பா லீசான தீர்த்தமுறு மிதனின் மூட [னத்
சித்தரெனி னும்மொருகான் மூழ்கிடின்மெய்ஞ் ஞானநிலை சேர்வர் மீ
துத்திரநா ளலதுதனு மதிகுடைந்தப் பாற்றெருமூழ்வோ ருடல்போ மீற்றி
லெத்திசையுந் தொழச்சிவசா ரூபமுறிஇச் சிவலோக மெய்தி வாழ்வார்.

தெரிசமுறு மிந்துதின மூழ்கியருச் சிக்கினுருத் திரமா லோக
மருவுவர்நன் மாககிருட் டினசதுர்த்த சியிலாதல் வயங்கு வில்லா
திரையாதல் படிந்துசீ தளியானைத் தரிசிப்போர் சேர்வர் மோக்கம்
பரிவொடுமோர் காற்படிந்தப் பரனைவிரி வுறப்பூசை பயிற்றி மாதோ. ()

மெய்யுணர்ந்த மாமறையோர்க் கன்பினொடு மமுதளிக்கும் விரத சீலன்
செய்யமனத் தூய்மையனாய் மலமொழிந்து சிவசாயுச் சியப்பே றெய்து
மையமிலை யீதொருமண் டலந்தோய்வோ னெவ்வெவற்றி னுசைமேவுந்
துய்யமுனிவீரவைகண் முற்றுறுவ னிதன்மகிமை சொலற்பாற்றன்றே.

வேறு.

கௌரிமா தீர்த்த மீச கருபதெக் கணத்தின் பாங்க
ரவ்மறும் வலாரி யாசைக் கடுத்தவுத் தரத்தின் மேவு
முவமணி லதனின் மாக மதிரவி யுதிக்குங் காலைத்
திவசமுப் பதுங்கு டைந்து சீதளி நாதர்ப் போற்றும். (அ௫)

திருத்தகு விரதம் பூண்டோன் சிவபுரஞ் சேர்ந்து வாழு
மரித்திர லேப ஞங்கி யாகவெம் மாது மூழ்குங்
கருத்தொடு மவளொம் மன்னை கௌரியா லோகஞ் சாரு
முரைத்திடு கொழுநர்த் தீர்ந்த கைம்மைக ளுற்றோ ராண்டு. (அசு)

நித்தலு மிதனின் மூழ்கி னோர்ந்திடு மேழு சன்மத்
துத்தம குலத்திற் றோன்றி யோதுநல் லிலக்க ணங்கண்
மெய்த்தகு கொழுந ரோடும் பிரிவின்றி மேவி வாழ்வார்
வித்தமா வித்தை கீர்த்தி ஞானமுன் விழைந்து ளோரும். (அஎ)

எண்ணிய வெண்ணி யாங்கே யெய்துவர் யாவு மோர்ந்த
புண்ணிய முனிவீர் நம்மாற் புகலுறுந் தகைய தன்றாற்
றிண்ணிய விவ்வீ ராறு தீர்த்தமுந் திகழு மேன்மை
யெண்ணுசீ தளியெப் பாங்க ராயினு மியைபுற் றேகி. (அஅ)

சிரத்தையுற் றுத லன்றி யாதலத் திரைநீர் மூழ்கித்
திருத்தல நாதற் போற்றின் மலமுத்த னாத றிண்ணம்
வரத்தசீ தளியை நெஞ்சில் வைத்தயற் றீர்த்த மூழ்கு
நரத்தரு மிதனுக் கோது பலனெலாஞ் சார்வ ரன்றே. (அகூ)

இத்தகு சிறப்பு வாய்ந்த சீதளி யிதனை நெஞ்சில்
வைத்தவர் தரிசித் தோர்கள் பரிசித்தோர் வயங்கு மிந்நீர்
துய்த்தவர் குடைந்தோர் சீர்த்தி சொன்னவர் கேட்டோர் யாரு
முத்தரா யமலன் மேவு முதுசிவ புரத்தில் வாழ்வார். (கூ0)

என்றிவ்வா றினைய வாவி யியனலம் யாவு மோதுங்
குன்றெறி திரையி னாற்றல் குலத்தமெ சங் கரத்தெங் கோமான்
றன்றுணை யடிவீழ்ந் தாதி சந்திர வழுதி காதை
நன்றினி யருடி யென்றார் முனிவரா நவிலு மன்னோன். (கூக)

சீதளிதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சOகூ.

—ooꝏoo—

ஆதிசந்திரபாண்டியச் சருக்கம்.

வருதிர் மாதவிர் சீதளி வாவிநீர்ப்
பெருமை யாவையு முள்ளவா பேசுத
லரிதி யாவர்க்கு மாதிநற் சந்திரன்
சரிதம் யாமுணர்ந் தாங்கினிச் சாற்றுவாம். (க)

அமரர் தானவ ராதி யனேகரைக்
குமர ராப்பெறு கோதறு மாதவன்
கமல நான்முகன் கான்முளை காசிபன்
றிமிர மாற்றுவெண் டிங்களை முற்பகல். (உ)

அனைய னுற்றப சாரத்தி னுற்புவி
மனுட னாகெனச் சாபம் வழங்கின
னினைய வெம்மொழி யிந்து செவிக்கொளாக்
கனல்செ ரிந்தென வுள்ளங் கவன்றரோ. (ங)

சாந்தம் வாய்மை யறிவு தயமுத
லேய்ந்த நற்குண மேயுரு வாயினோய்
காந்து தீவினை யான்புரி காசினுற்
றீர்ந்து மானுட னாகெனச் செப்பினாய். (ச)

அண்ண லென்குறை நோக்கி யளியனே
னுண்ண டுங்க வுரைத்த வொருசொலே
யெண்ண முற்று மிரித்தெமை வாட்டுமேன்
மண்ணி லுற்பவ மானுட மென்செயா. (ரு)

இனைய வாறிங் கியம்புவ தன்றியான்
பினையி யற்றுவ தென்னைகொல் பேதையே
னனக வந்தண வாரரு ளாகர
தனைய டுத்தவர் தம்மிடர் பாற்றுவோய். (சு)

வேறு.

இன்னலுற வெழுசாப மிதுமாற்றி யெனைப்புரத்தி யென்று தாழ்ந்தா
னன்னமுனி யருள்புரியு மாலவா யருணகருக் கரச னாகிப்
பன்னலுறும் பெயராதி சந்திரனென் றுரைத்திடப் பூபாரந் தோளிற்
றன்னுறவைத் தவனிமுழு துன்குடைக்கீழ் சுகித்திருப்பத் துகடீர்த்
[தாள்வாய்.

நினதுவழிப் பரம்பரைசந் திரமரபென் றுலகுரைப்பா னிலவ நீதான்
மனுநெறியி னரசியற்றி வருநாளின் மறைநூலு மரபி னோர்ந்து
புனிதமுறு பனவர்கையிற் பூதானம் புரிந்திடினும் புகன்ற சாப[னுறல்
வினையொழிபுன் பதம்புகுந்து விளங்குவைமுன் போலென்று விளம்பி

அன்னமுனி மொழிப்படியே யவனியிடைக்கௌரியநா டதன்பா லுண்
[மைப்
பன்னுபுகழ் மிகுமதுரைப் பதிபுகுந்து மதிகுலத்தன் பார்மேற் றோன்று
மன்னனென நரர்வடிவாய்ப் பெயராதி சந்திரனாய் வயங்க நின்று
தன்னுரிய தாரசுத சகிதனா யரசுரிமை தாங்கி வாழ்ந்தான். (கூ)

மிருபாம *தார்மிகனா யவ்வாதி சந்திரன்றன் வியோம மார்க்கம் [விண்
புகுமதிதண் கரத்தாற்போ லதன்கலையாய்ப் போந்துமவன் புகழி னுல்
கருபமுந்தன்பெயரிலங்கவாழ்ந்தனன்மற்றவர்க்குநிதிக்கடவுளீர்க்கோ
மகபதிக்காங் கெனச்சோழ கேரளர்கண் மித்திர†சா மந்த ராளுர். [ன்

இத்தகைய மூவருமனுச்சொலிய நீதிமுறை யிரவி னேர்தோள்
வைத்தவனி மாதையுயி ரற்பமுமி னுவதனை மருவி டாமே
சித்தமகிழ் கூரவருளுய்த்துவள மார்குடிகள் செறிய வோவா
மெத்தியந லாறிலொரு பைத்தவள மேகவர்பு மேவி னரால். (கக)

மேவுமிவர் மகக்குரிய வாயபல கலப்பைகளும் விழைவி னீட்டித்
தேவர்பதி யுவப்பவுள மோதுமறை நெறிக்கிரியை திகழ நாட்டி
யாவிழுது மடுத்துவல மாகநனி சுழித்திலக வனல மூட்டி
யோவிலவி மனுப்பலவு மோதிநிறை வுறக்கனலி னுளிர நீட்டி. (கஉ)

இவ்வகையின் யாகமன விலலனசெ யாநிகழு மிவர்பால் வேந்தன்
செவ்வியந லாதரமொ டெய்துபுநல் வேள்விபல செயுநீர் வேண்டிந்[திங்
தவ்விலபொருள் யாவையவை சொல்லுகென வானிறைவ தமியே மூர்ங்
கெவ்விடமும் வானுமுறும் வையமருள் கூர்புதரு கெனமா லோர்ந்தே.

அவருரைத்த வாறுமக பதியளித்து வானடைய வனைய தேரி
னிவர்கணித்தம் வானிலிறை வனையடுத்து நீள்புவியி னேகு வார்க
ளுவகைமிக்கு மூவர்களு மரசியற்று நாளொர்பக லுரிய தேரிற்
*நிவமடுத்து நாகர்நிறை சுதன்மைபுக்கு வாசவனை நிரின்மு னேகி.()

---

* தார்மிகன்—தருமஞ்செய்வோன். † சாமந்தன்—சமீபித்தவன்.

* நிவம்—இரண்டுருபுலிரிந்தசுவர்க்கப்பெயர்.

இந்திரன தேவலர்கண் முந்தவியர் மேவியவவ் விறைசமீபத்
தந்திலிடு பீடமிறை கொண்டமர்சு காசனமொ டளவ ளாவி
நந்தவில்ச லாபவச னம்பலவ லாரியொடு நவில்பு நீடு
சிந்தைகளி கூரவவ ணின்றுமகி மீளுவர்க டினமு மாதோ. [கரு)

ஏகியிவர் மீள்பொழுதொ ரோர் நாளரியி னேவலர்பி னிவர்கண் மேய
வாகுமணி பீடமணு காநயன கோசரமன் வழுதி பீட
மாகருமை யாயிலக வாசவச மீபமுற மருவி யோர்வின்
மோகர்மன மாய்வழுதி பீடமுறல் காணுகென மொழிதல் கேளா. (கசு)

மகபதிபின் வழுதியிவண் வரிஞெளிசெய் மறுதவிசென் மாட்டு நீவிர்
தகவிடுமி னெனவுரைசெய் தனமுறை மறுபொழுது சாற்று மாறன்
புகுபுழைய ரிடுமெனிய தவிசினரி யுடனுலைகள் பூப்ப மேவிக்
கருபமுழு தொளிசெய்தவி சவனெழலு மிருளுறுதல் காட்டி னுரால்.

விம்மிதமு றுவுரிய தன்மரபி னுரியனை விளித்து வேந்த
னம்மமணி பீடமிது தென்னனம ராவெழலு மவித்தை மாந்தர்
தம்மனமெ னுவிருள்கொ டன்மையெவ னுவடிகள் சலித்தல் கூர்ந்த
வெம்முளயிர் தீரவருள் கென்னமுழு தோர்குர னிலைசக்கு மாங்கே.

வேறு.

வேந்தகே ளந்த வேந்தர்தந் தேயம் விப்பிர சங்குல ரகித
மாந்தனி பாவ ராசியே சகித மாகின்ற தாசன்மற் றெவனே
வேந்திசைச் சுருதி விதித்தசட் கன்ம மிசைத்தவிப் பிரகுல மில்லாப்
பாந்தளின் படத்திற் பயின்றிடும் பவன பாலனம் பரிந்துசெய் பவன்
றன். ()

அவ்விறை மயான பாலநீ சோப மானியாஞ் சுரர்கள்பூ சுரரா [தைச்
லெவ்*விராட் டிராந்தா னணிசெயப் படுத லில்லையோ வவ்விராட் டிரத்
செவ்விதிற் பால னம்புரி தோடத் திருந்துகூர்ங் குடாரமவ் வேந்தின்
றிவ்விய தரும விருக்கமூ லத்தைச் சேதிக்கு மென்பது திண்ணம். ()

சோழகே ளர்தம் பாலன பூமி சுருதிதேர் விப்பிர புஞ்ச
வாழ்வுகூர் தருமிப் பஞ்சவன் புரக்கு மகிசிறி தேனும்பெற் றிலதத்
தாழ்விஞ லவன்செய் சுகிர்தசா லங்கள் சகலமு மலினமா யதனுற்
கேழ்விரி தவிசு மிலேகர்செய் நிந்தா கிருட்டினத் துவமடைந் தென்று.

பணிவசித் திடுதன் மீளாப் பரகதி புகுந்தார் தம்மைப்
பணிமுடிப் பாணி னீப்பப் பண்ணுநர் முயற்சி போலும். (௩௬)

அரியதிச் செயலென் றெண்ணி யத்திறத் தவருண் மூல
பரிடவே தியரை மட்டு மடைந்துபைந் தருப்பை யாதி
தருதலப் பியங்க நற்*கோ தோகன மவர்பூந் தாள்கள்
வருடவென் றிவைபோ லெண்ணின் மற்றுள பணிகள் யாவும். (௩௭)

ஒவ்வொரு மனைக டோறு மொவ்வொரு வருக்கு நாளுஞ்
செய்விசா துரியத் தாலே தனித்தனி சீட னாகி
வவ்வவர்க் கியையு மாற்றாற் பாரதந் திரனா யல்லு
மெவ்வமில் பகலு மாக விடையறா தியற்றி னானல், (௩௮)

ஈண்டிவ்வா றியற்று மாதி சந்திர வழுதிக் கீரா
றாண்டிடை யகன்று நீங்க வனந்தர மவன்பா லன்பு
பூண்டிடு முளத்தர் மூல பரிடவிப் பிரர்கள் போற்றும்
பாண்டிக §முபாகன் மாரம் பஞ்செய்புண் ணியகா லத்தில். (௩௯)

ஒருபகற் பால ராதி முதியவ ரளவா யுள்ளோர்
மருவின ரொருங்கு கூடி மாண்டரு மோர்பா லாங்க
ணரசனு மடுத்து நோக்கி யவரைவிம் மிதத்த னாகிப்
பரவுமித் தான மன்றோ பங்கய னுலக மென்றான். (௪௰)

ஆபால விருத்த ராக வாங்கமர்ந் தருளும் வேத
சாபால சுவேத பூதி தாரணர் கனக மன்றிற்
காபால னருள்பெற் றுள்ளோர் வேதியர் கணங்க டம்மைப்
பூபால வதிமு போற்றிப் புவியினின் றெழாம லுற்றான். (௪௧)

ஆங்கனம் வணங்கி யாங்கே யவனியிற் கிடப்போன் றன்னைப்
பாங்குற வெழுப்பிக் கூப்பும் பாணிய னிற்கின் றானைத்
தேங்குறு மாசி வாக்கின் வத்திரர் திகழ நோக்கி
யோங்குநற் பணிசெய் யேது வுணர்தர விழைந்தா ரன்னோர், (௪௨)

---

* கோதோகனம்—பசுக்கறத்தல்.
§ உபாகன்மம்—சிராவணக்கிரியை.

ஏதினி துணர வேட்டோர் வழுதியை யினிது நோக்கி
நீதிக ழுருவி னூலே நிச்சயமாக னேயிப்
போதிலெம் மனைக டோறும் புத்திரர் சீடர் தாச
ராதியர் யாருஞ் செய்யும் பணியெலா மாற்று கின்றாய். (௪௩)

சிரமநற் றெண்டு நாளுஞ் செய்திடு தொழும்பர் சிந்தா
தரமெவை யவைகள் யாவந் தந்திடார் பூவ ராசி
பரசிவ னுலக ரோர்ந்தப் பான்மையி னொழுகி மேன்மை
விரவுற வளித்த வேத நிந்தகா விழுமம் போல. (௪௪)

புரையறு மறையோர் தம்மை யிகழ்பவர் புன்கண் போலக்
குரவரை மனித ராகக் குறித்தவர் பாவம் போல
தரமிகு மடியார் நிந்தை சாற்றுநர் சன்மம் போலப்
பிரமநா மெனவாய் பேசும் பேதையர் பாத கம்போல். (௪௫)

ஞானசம் பந்த பானு வாதியர் நவின்ற வாய
தீனசம் பந்த நீங்கத் திரிமலஞ் செய்யு மாற்ற
லீனசம் பந்த விர்த்தே யிமகிரி தனையை வாம
னூனசம் பந்த மில்லா வடிநிழ லமர்பே ரின்பம். (௪௬)

தம்மையன் பொடுநற் றீக்கை யாதிய சமக்கா ரத்தின்
செம்மைகொ ணியமா சார சீலரா யோது வோருக்
கெம்மையுந் தருவ வாகி யிலங்கருட் பாக்க டம்மை
வெம்மையூழ் வலியா லநதோ வாரிய வேத மாய. (௪௭)

கவுங்கலம் புனல்வ டித்த கழிசுவை யமுத மாக
விலங்குமெய் வேத மென்றே யெண்ணிடா தெண்ணில் காலம்
விலங்குறு தளற்றி லாழ்ந்து விழுமமுற் றுழெங்கு மாறு
மலங்கியிப் புடவி யிற்சா மானிய நூலென் றோதும். (௪௮)

அறிவிழி கயமைப் புல்ல ராஞ்சிலர் பாவம் போல
மறிமழுக் காத்தெம் பெம்மான் வயங்குபல் செயலின் மாண்பாற்
செறிதரு பாடை தம்முட் சிறந்ததென் றுயர்த்திக் காட்டு
நெறிதிகழ் தமிழ்க்குக் கூறு நிந்தகர் பாவம் போல. (௪௯)

'அயனரி யிருவர் தம்மை யாற்கடி யார்க னென்கை
நயனிறை மெய்ந்நூ லோர்ந்து நாட்டுதெ லொன்றோ யாண்டும்

வியனிலத் திவர்கள் பூசை செய்துமுன் வேண்டி யாங்கும்
பயனருள் சிவகோ சங்கள் பற்பல காட்டக் கண்டும். (௫௦)

வங்கினி லுடம்பிற் றுங்கள் பிடித்ததே மாப தாகப்
பொங்குது ரபிமா னத்தாற் புராந்தகன் காம நாசன்
கங்கையஞ் சடில னீல கந்தரன் கபாலி சூலி
சங்கரன் றன்னோ டன்னோர் சமமென்பார் பாவம் போல. (௫௧)

ஈசவத் திரங்க ளோந்து ளுந்தா னனமா யெய்ந்த
பேசிய லீசா னத்திற் பிறந்துள காமி காதி
தேசுறு வாது ளாந்த சின்மயா கமங்க டம்மைக்
காசுளத் திழிவு கூறுங் கலதியர் பாவம் போல. (௫௨)

முக்கண னீசா னுதி முகோற்பன புனித மேன்மை
தக்கவர் திருடி யோர்தஞ் சந்ததி யினராய் நாளு
மிக்குறு பரார்த்த பூசை வியனுல கெல்லாம் வாழப்
பக்கமொ டியற்று வாரை யிகழ்பவர் பாவம் போல. (௫௩)

இன்னன வுந்த தத்தோ டிலங்குறு பொருள்க ணிந்தை
பன்னுநர் பாவம் போலக் குலாசல பாரம் போலத்
துன்னுபு விருத்தி யாகித் துக்கமிக் களிக்கு மன்றே
மன்னவ நினக்கு யாஞ்செய் வனதரு வனமற் றியாவை. (௫௪)

நின்மனே பீட்டம் யாவை நிகழ்த்துதி யென்று சொன்ற
சொன்மனு நீதன் வாய்மைச் சுயம்பிர காச ரூபன்
றன்மனு மிடபா ரூடன் சதாசிவ னினிது மேவு
நன்மனு வயனை மீட்டு நமஞ்செழுந் தாசன் கூறும். (௫௫)

போற்றுசீர்ப் பாண்டி நாடு புரந்திடு மாச னேகான்
சாற்றுமென் னும மாதி சந்திர வழுதி சேர
னேற்ற செம்பியன் சகாய மித்திர னெக்கன் னுரோ
டாற்றிய சதம கத்தோ னவையிடை யடைந்தேன் முன்னாள். (௫௬)

வேறு.

கலங்கொள் விப்பிர சங்கமில் லாதநாட் டிரநா
னிலங்கு பாலனம் புரிதரு மிழுக்கினு லிலேகர்

குலங்க ளாலரி சுதன்மைந் சதசிடைக் கொடியேன்
கலங்க நெஞ்சக நிந்தைசெய் திடப்பெறீ இக் கவன்றேன். (௰எ)

நெருங்கு போரில்வெந் நிட்டவர் நிகர்தரக் கவியின்
றரங்கு நித்திடாச் செல்வரைப் பாடினர் தகைய
வரங்கொ டம்மர பிழுக்குறப் பெற்றவர் மான
வரங்கு நெஞ்சனுய்ச் சமழ்ப்புமீ தூர்தலி னடியேன். (௰அ)

தாங்கி ராட்டிர* தாரமென †சசிவபுத் திரர்தம்
பாங்கி ருந்துபு சந்தநு ரூடனுய்ப் படர்ந்து
தேங்கு வீப்பிர பிருந்தபூ ரிததலந் தேடி
யாங்கு வட்டைக ளனேககா லதங்கடந் தடைந்தேன். (௰௯)

திமிரம் வீட்டிய சதானந்த முனிவனுச் சிரம
மமல வம்முனி யருளினு லடிகணீ ரமரும்
விமல வுத்தம வித்தல மேன்மைகேட் டுணர்ந்தந்
நிமல னுஞ்ஞையா லாங்ஙனம் பாகுதேர் நிறுத்தி. (௨௰)

ஒருவ னுகியிங் கென்றுய சொச்ழிகுவா னுமையே
சரண மாகவந் தடைந்தன னடைகின்றேன் றமியேன்
கருது மெண்ணமீ ததுநும தகினமே கருணைக்
குரிய வந்தணீர் நும்மரு ளடியனேற் குளதேல் (௨௧)

எனது நாட்டினுக் கெழுந்தருள் பாக்கிரு நிலத்தோர்
புனித மாதரிற் பணிவுறு பூச்சிய ராகி
யினிது மேவுச குடும்பரா யாங்கணு மிலங்கு
மனக மாதவீ ருமைப்பணி கின்றன னடியேன். (௨௨)

வேறு.

அருந்தவத்தீர் யானெண்ணி யாங்கருளி யளியேனுன்
வருந்துதுணி மாற்றுகிற்பீர் வழிபடுமென் மனங்கொண்ட
திருந்துசெயன் முடியாதேற் றேவசபா நிந்திதனுய்ப்
பரிந்திடுமென் னுயிர்நீக்கப் படுமென்ப துரைப்பானேன். (௨௩)

பன்னுரு மகராதி பயத்தாலே யிடர்கூரத்
தன்னுடு தன்னதெனுந் துணிவின்றித் தடுமாறு

---

* தாரம்—உருபுவிரிந்தபாரம். † சசிவன்—மந்திரி.

மின்ஞறு சதகோடி வேந்திரு நிந்தையினு
மின்றுமிக் குளநிரய மெனக்கினிதா மெனவுரைத்தான். (சுச)

அரசனிவை யுரைப்பவனவி லந்தணருட் சிற்சிலவர்
யரைவிலரும் பெறற்செல்வ வழுதிகேள் வருந்தற்க
யுரைசெயுன தண்ணடைக்க ணுறுகின்றே முறுமெம்மை
யரியகுடும் பங்களொடு மடைவித்த லுனக்கரிதாம். (சுரு)

இனையதனக் கரிதாவ தெவனெனிற்கேண் மதிநின்பான்
மனனுவந்து வருமெமது வைதிகமாண் வழிக்கிரியை
யினிதியற்று காலமதொன் றினையேகா முறுமியல்பிற்
றென்னுணர்தி கணமேனு மேறுதரு மூதற்கிசையா. (சுசு)

ஆதலினாற் பொழுதொன்றே யருத்தியுறு மக்கருமம்
போதுநெறித் தவறுமே புரிந்தியற்றப் படுவதெவ
னோதுறுமெய்ப் பிரமச்சார் புடைத்தாமக் கிரியையினை
வேதியர்க ணையத்தால் வெருட்சியால் வெருட்சியினால். (சுஎ)

அருத்தமதி லுறுகசையா லாதல்விடு கிலர்திண்ணம்
விரித்துரைநாம் புகல்வானேன் மெய்தளர்வுற் றுணர்வொடுங்கி
வருத்தமிகு முயிர்நீக்கம் வருமெனினும் வைதிகமாண்
இருத்தியம்விட் டொழிதலுறார் கெழுதகுசீர் மறையோர்கள். (சுஅ)

ஆயின்மிகு புகழ்தருவ தாஞ்செயலின் வாஞ்சையினார்
யேயவிரா சதகுணத்தர் விடுகிலர்கொ லெனினவருந்
தூயவரு ளாச்சிரமத் தொடர்ச்சியினுக் குரித்தாகப்
பாயமுன்னூ லுரைதருமப் பற்றுவிடா ரொருபோதும். (சுகூ)

சாற்றிருடி*நிபராகிச் சாபானுக் கிரகவலி
யேற்றதிரு வாக்கினரா மினையதிறல் வேதியர்தம்
மேற்றிகழ்நித் தியமேனை மித்திகமாம் வினைகடமி
லாற்றுறுநா ளதிகங்க ளடுத்திடுமே லந்நியத்தால். (எ0)

பருவரன்மிக் குறுபாவம் பற்பலவுந் தேறுமவை
விரிதிரைமுந் நீருடுத்த மேதினிசா வலனாய

---

* நிபம்—உவமை.

நிருபனைவந் தடார்ந்தலக்க ணிறுத்துமன்றோ விவையாவும்
பெரிதுமுளத் தடிக்கடிநீ பேணிநினைந் தொருதியால். (எக)

தென்னவநீ யின்னவைக டோர்ந்துணர்ந்த வழிநாங்கள்
சொன்னவைக டமிலுனக்குத் துணிவுளதே லங்கனமை
நின்னரிய தமிழ்நாட்டி னீயழைத்துக் கொடுபோதி
யென்னமுழு துணர்மூல பரிடமறை யவரிசைத்தார். (எஉ)

வேறு.

வேந்தன்மறை யவர்வாய்மைகள் வினவாவடி யேனீ
ரேந்தும்புகழ்க் கருமந்தவ ருமைப்புரப் பேன்யா
ேனார்ந்திங்கிசைத் ததுசத்திய முமர்மாணதம் யாவு
நேர்ந்தெண்ணிய வாறேபுரி கின்றேனிறை தவத்தீர் (எங)

வனசந்தன மிசைகொண்டுடன் வருமின்றிர விடையே
வனசந்தன நகிலங்களை மகவின்குல முடனே
வனசந்தன மனையந்தணன் மலையுங்களை முகில்பாய்
வனசந்தன மலயங்கொளென் மகிசென்றிட றிணமே. (எச)

வனசந்தனமிசை—அழகிய தேர்மீது. வனசம் தனம் நகில்—சந்தனக் கோலத்தை யணிந்த சுகத்தைச்செய்கின்ற பொன்னிறத்த தேமல்படர்ந்தநகில். வனசம் தனமனை, பாய்வனவாகிய சந்தன மரங்களென்க.

வதிசந்திர முடிகின்றிழி வரமொன்றிய வேக
வதிசந்திர மெறியுந்தடம் வருநுங்களை யேக
வதிசந்திர மருவும்படி நிறுவுஞ்செயல் பாக
வதிசந்திர மணனன்றருள் வரனன்குசெய் வேனால். (எரு)

வேகவதியின் பொன் எறியுங்கரை, அவதிவக சம் திரம் மருவும்படி, பாகவதி சந்திக்கின்ற ரமணன் என்க. வக என்பது ஈறுகுறைந்தது.

என்றின்னப விதவாய்மைக ளியம்பாவெழி விரத
மன்றங்கணு குறுமாகினை வுற்றனது பொழுதே
நன்றுந்திடு விறற்குதச கிதமாயது நவைநீத்
தென்றும்மரு டருமம்முனி யுழைநின்றெழுந் தன்றே. (எசா)

கால * பீடண நாக பூடண காம °பேடண காரண-
நீல கந்தர சேர்ம சுந்தர நேய வந்தர பூரண
சூல பாணிய வேத வாணிய தோய வேணிய தாரண
ஞால லோசன †கோச நாசன பாவ மோசன ‡சாரண. (கக)

வேறு.

அந்தோ சிவனே யெனக்கிந்த வலக்கண் வருமோ வறவர்சினம்
வந்தால் விரணம் புரையோடி வருத்தும் பதத்தின் மற்றுமொரு
வெந்தா ரிருப்புக் கோல்பாய்ச்சின் விளையுந் துயருற் றுலைவேனே
யிந்தார் முடியாய் மதுரேசா வெந்தா யெளியேற் கிரங்காயோ. (கஉ)

ஓது மறையு முணர்வரிய வொருவ வுலக சராசரங்கள்
யாதும் யாரு மாயெங்கு மிலகும் பொருளே யெளியேற்கிப்
போது மருவும் பொறுக்கரிய புன்க ணுணராய் போன்றிருந்தா
லேது மிலையால் வேறுபுக லெந்தா யெளியேற் கிரங்காயோ. (கங)

செல்லார் பொழில்சூழ் திருவால வாயின் மணியே சிங்கிநகர்க்
நல்லார் மிடற்றி னருமருந்தே யகில நாதா வளித்தமகப்
பொல்லா வினைகள் புரிந்தாலு மீன்றாள் கடியிற் புகலுண்டோ
வெல்லாம் பொறுத்தே யித்தருணத் தெந்தா யெளியேற் கிரங்காயோ.

அருளின் றாமோ நினையாளு வரற்று மடியேற் புறக்கணித்த [தோம்
றெருளின் றிகழ்ந்து சபித்தனக்கே செய்யுங் கொலையுஞ் சூழ்ந்தார்
பொருளென் றுணரா தெவர்க்குமெட்டாப் புனித நடந்தந் தவருளத்தி
னிருளன் றகற்றி யருண்மதுரை யெந்தா யெளியேற் கிரங்காயோ.

தீமைக் குறித்தா ரறிவில்லாச் சிறுவர்ப் பயந்தோர் செறுத்தாலு
மாமப் பொழுதே யணைத்தருளவா ரகில மாந்த ரருட்கடலே
தோமெழற் றுண்மை யாற்பணித்தாய் துயர மெனினு மதுதீர்த்திங்
கேமத் திருத்த னின்கடனே யெந்தா யெளியேற் கிரங்காயோ. (கசா)

என்று வழுதி துதிகள்பல வியம்பி யெனக்கூ ழித்துயர
மன்றே வளித்த தினியென்றே வடியேன் புரிவ தென்றலமந்
தின்று வுழந்தா னிங்கிருந்தென் பயனென் றெழுந்தா னம்மறையோர்
முன்று வருவா னுகவவன் றீன சகித முகநோக்கா. (கஎ)

---

* பீடணம்—பயங்கரம். °பேடணம்—பொடியாக்குதல்.
† கோ—மலை. ‡ சாரணம்—உலகங்களைப் பஸ்மமாக்குதல்.

அந்த ராச சல்லாபத் ததிதற் பராம் விப்பிரர்க
ளொந்த வகையுஞ் சகிப்பரிதா மிடருக் கிடனா யிறையவனால்
வந்த * பிராமி யம்மூர்த்த கிரியா பங்க மனங்குறித்தா
ருந்து மருண விம்பந்தி னுதய பதமு முடன்பார்த்தார். (௯௮)

தம்மி லொருவர்க் கொருவரிவை சாற்று வார்பன் னெடுங்கால
மெம்மி லொருநா மியம்பாமே யெண்ணற் கரிய புணிபுரிந்தா
னம்ம தெய்வ கதியாலே யடைந்தா னிந்த மரு○த்தலத்தை
மம்ம ருளனாய் முகப்பொலிவு மாழ்கி நலிந்தான் மகிபாலன். (௯௯)

வேறு.

இவனை யின்னவை நோக்கிநா மிவ்விடைச் சாப
நவிறல் பாதக முசிதமன் றென்றிவை நயந்தாங்
கவர்க ளோதின ரந்நிலை யக்கடத் தரசன்
றவர்கள் யாவருங் காண்புற விப்பிர சரீரி. (௪00)

தேர்த்தி வாகர காந்தியன் சிராயுள்கூர் விருத்த
† னார்த்தி ராம்பரன் பவித்திர காசமித் தவனாய்ச்
சேர்த்த தேவரு முனிவருந் தினந்தினஞ் சென்று
நார்த்த சிந்தையிற் போற்றுறுஞ் சீதளி நாதன். (௪0௧)

அகில நாயகன் மதிமுடி யதனிடை யமர்நான்
முகில நாயகன் கருபமுஞ் சருமமு மொழியுந்
துகில நாயக னொருபுற மேனியிற் றுலங்கோர்
நகில நாயகன் றுயகன் சீதளி நாதன். (௪0௨)

ஏன வெண்மருப் பாமையோ டெழுந்நர வரித்தோன்
மீன வொண்கண்வா மனமுழு வெலும்பதழ் வேய்ந்தே
மான வன்பர்மா லினுமுனிந் தருடால் வயக்கு
ஞான நாயகன் றுயகன் சீதளி நாதன். (௪0௩)

அடுத்து வந்தன னரசன்விப் பிரர்களாங் கனுருங்
கடுத்த தும்பிய கந்தரங் காந்தவந் தணனை
யெடுத்த சிந்தையி னனிமகிழ்ந் தீசசந் நிபனாய்
மடுத்த கண்டிரும் பாவகை பார்த்தனர் மதித்தார். (௪0௪)

---

* பிராமியமூர்த்தம்—வைகறைக்காலம்.

○ மருஸ்தலம்—நீரற்றஇடம் † ஆர்த்திராம்பரம்—நனைந்தவஸ்திரம்.

வேறு.

வேணியை மறைத்து மலர்ச்சிகையாக்கி வியாக்கிர சருமத்தைவிலக்கிப்
பாணியி னனைந்து தண்டுளி தூங்கும் பானிறத் துகிலரைக் கசைத்துப்
பூணர வகற்றித் தவளமுப் புரிநூல் பூண்டுமா லயன்முத லெவருங்
காணொணா வடிவங் காண்பதற்கெளிதாக் கண்டுகண்களிப்புறக்கலந்தான்

கடுக்கையால் வாங்கி யுண்டவா னளித்த கண்ணுதல் வேதிய னாகிக்
கடுக்கையார் வனத்தின் மால்விழி புனைந்தகழலிணை கன்றநேர் நடந்தாங்
கடுக்கையா னமுத கடத்தைநேர் கிடைத்த வரும்பசி யாளனே போலங்
கடுக்கையா ருலக மொருங்களித் தருளவ் வந்தண னடிபணிந் தாசன்.

பேதுறு துக்க சகிதனாந் தனக்குப் பிரத்தியக் கானந்தப் பிரத
வேதிய னாகி வருமவற் பார்த்து விளம்புவா னிங்கொர் * வே சந்த
மாதல்கா ணுமே யனார்க்கடல் மூழ்கு மற்றத்தி 0 லார்த்திராம் பரத்தோ
டேதற வருநந் நாமதா னங்க ளியம்புக வடிகளென் றிசைத்தான். ()

ஆர்த்தலை சுருட்டு மாழிசூழ் புடவி யளித்திடு மரசகேட் குதிநாந்
தீர்த்தநா மப்பே ருடையமில் வனத்திற் சிரஞ்சக குடும்பமோ டன்பு
கூர்த்† தனு சார்சூழ்ந் திடவிருக் கின்றேங் கோணையார் பிரமமா தேயப்
பேர்த்திலங் குறுமிக் கானமீ தமைக பெட்புடைப் பந்துவர்ச் சிதனாய்.

இவனொரு தமியா யடைந்தநீ யாரை யிக்கன மக்கினை விரதத்
தவிர்தர வகாலத் தடுத்திடு மிவரா ரறைகென வதுவினா யரசன்
றவநிறை‡ குகனா விருத்தவே தியமெய் தரித்துறு திருத்தலத்தவற்குத்
துவிசகி ரகண காரண முழுதுஞ் சொல்லுவா னுள்ளவா றமைந்தான்.

வாமமார் தீர்த்த நாமவே தியநான் மாமது ராபுரி யரச
னாமமே லாதி சந்திர வழுதி நான்மறை யவரிலா நாட்டை
யேமகிழ்ந் தளிக்கு மிழிபினா லமரர்க் கிறையெதிர் யான்புகுந் திருந்த
தாமமார் தவிசு களங்கமுற் றதனாற் சாற்றரும் பாபவஞ் சார்ந்தேன்.

---

*வேசந்தம்—நீர்சுருங்கிய சிறுகுளம்.

0 ஆர்த்திராம்பரம்—நனைந்தவஸ்திரம்.

† அனுசார்—பின்சரிப்போர்; அவர்வலானவென்க.

‡ குகனா—வஞ்சனை.

ஆனையதிச் சுடலால் வாரணை வாசி யடைந்தனன் சதானந்தர் மொழியா
லனகரா மந்தர் வேதிவே தியரை யழைத்தனன் மீண்டுசெல் லனவி
லெனதிய லிரத மச்சொடிந் தவனி யிடைவிழ விவரொடு மினைந்தேன்
புனிதவெம் பெருமநனை துகி லொடுநீ போந்தரு ளருமையென்புகல்
|வேன்.

மாதவ துவிச புங்கவ புவன வர்ச்சித ராட்டிர நகரி
வேதியர் வசிக்கப் படுவதன் றன்றோ விளம்புநீ யிங்குளை யாகிற்
சீதள வாரி பூருவ தலத்தைத் தெரித்தருள் கென்றலு மரச
காதலென் னபீட்டமுடித்தியேலதனைக் காட்டுது மென்றனன்கடவுள்

என்றருள் மாற்றங் கேட்டுள மகிழ்ந்தானெந்தைநின் னிட்டம்யாததனை
நன்றுநீயெண்ணியாங்களிக்குவன்யானவின்றதுசரதமென் றுரைத்தான்
பின்றையம்மறையோர்குழுக்கள்விப்பிரசுப்பிரியமேயிருதயம்பெருகும்
வன்றிற லரச னுடன்சிவ மறையோன் வந்தன னவ்வன நாப்பண் ()

சென்றவட் புகுந்த வேதிய வடிவன் சீரண பன்னபூரணமாய்த்
துன்றிய வணந்த மீனமாதியவாய்த் தோற்றுபல் சலசாங் களினு
னின்றுநோக் குநருக் கறிவுறுத்தகைத்தாய் நிகழ்த்துமப்பிரியநல்குவதா
யன்றமைந் திருந்த சீதளி நாமத் தாவிநீர் காட்டின னங்கே. (௧௧௫)

கண்ணுதல் காட்டக் கண்டிடு மறையோர் காவலனுகுல மூழ்கி [ன்னிப்
யெண்ணிவர் தடைந்தோர்க் கீகலான் செல்வ மென்னவுங் கற்புடைக்க
பெண்ணலம் வாளா கழியவோர் வரனைப் பெறுதமர் பெய்வளையெனவு
மண்ணலந் தீர்த்த நண்ணிய திறங்கண் டவலமுற் றழுங்கினர் மாதோ.

கண்டது சிவத்து விசன்மலர் மந்த காசமு காம்புய னுகி
மண்டனை நோக்கு பார்வைய னின்று மலர்பிர ணவமனுச் செபித்துக்
கொண்டுபொ தாள வாகினி தனையக் கோட்டத்தி னழைத்துநாற் றிசையு
மண்டுபு மேற்கொ ளப்பிர வாக வாரிய்யை யந்தவா வியின்கண். (௧௧௬)

தனகர பல்ல வத்தினு லமைத்துத் தகைந்துதா பித்தன னடங்கி
யினகர தாள சங்ககல் லார விமாம்புய சைவலத் தோடு
மனகாம் மியக விலசனி விருத்தி யாயவக் கங்கையின் தனல்
தினகர நயன வேதிய னடிபூ சிப்பவன் போன்மென விரிந்தான்.(௧௧௭)

வேறு.

இன்ன வற்புத மேன்மைகண் டிந்துவின்
மன்னு வப்பெறும் வாரிதி மூழ்கினன்
துன்னு விப்பிரர் யாவருஞ் சொல்லரு
நன்ன யத்தபே ரானந்த நண்ணினர் (ககஅ)

தீர்த்த நாமப் பெயர்கொளச் செம்மன்மு
ளோர்த்த வுட்டுவி சோத்தம ருட்சில
ரார்த்த குஞ்சி யவிழநின் றுடுவார்
பார்த்தி றைஞ்சுபு பாடுவ ரோர்சிலர். (கககூ)

கைத்த லத்தொடு கைத்தலங் கொட்டுவார்
மெய்த்த லத்திற் புளகம் விரவுவார்
முத்த வேணுதண் டேந்துபு முன்னெறிந்
துத்த ரீயம்பின் வீசுவ ரோர்சிலர். (கஉ0)

மன்று குண்டிகை வானெறி வார்சில
ருன்னி யுன்னி யுவகையின் மூழ்குவா
ரின்ன றீர்ந்தன மென்றரி னைத்ததோ
றன்னை விண்ணெறிந் தேற்பர்தங் கைச்சிலர். (கஉக)

மூந்த வானின் முடுக்கு தருப்பையை
யந்தி லங்கையி னுற்றுவ ரோர்சிலர்
சந்தி கால நியமந் தவறிலே
மிந்து சேகர னின்னரு ளிதென்பார். (கஉஉ)

தீர்த்த நாமன் செயலினைத் தேக்குவா
ரார்த்த வோசையி னண்டம் பொதுப்பபாற்
சேர்த்த தேதுகள் தேனைச் சிதறி
தீர்த்த வாத கடத்தி னிலாவுறும். (கஉங)

ஆறி ரண்டு துறையு மடைந்தனர்
வீறு தண்புன றோய்ந்தனர் வேதியர்
கூறு மன்புடை வேந்தங் குடைந்தன
னேறு வேலை யருணனு மெய்தினன். (கஉச)

வேறு.

சீதளியே யங்கிருண்டஞ் செங்கமல மங்கியளி திகழுந் தூமம்
வேதியரே புகலிருந்து விக்கிகள்செய் குரவரென வேந்தன் றனை
யோதுபரி மேதவினை யுஞற்றுவிக்குங்கருத்தாவென் றுரைப்பச்சூழ்ந்தா
ராதரமாக் கொணர்வாளி லனுதினன்கீழ்த் திசைப்புரவி யணித்தேர்ச்
[சூரன்.

ஆதவனு தியர்முனிவ ரமரர்களுக் கருக்கியமுன் னுய செய்தார்
வேதமலர் தருகாயத் திரியொடமைந் தெழுத்துளத்தான் மௌனமேவி
யோதியிவை முதலானி கோத்தமகன் மம்முழுது முஞற்றி னோர்பின்
பாதியுடற் பாவையுருக் காந்துதரா சுராகிருதி பரித்து வந்த. (௧௨௪)

தன்னிகர்விப் பிரசிவனை யரசொமெத் தராசுரர் சூக்குமஞ்சார் நோக்கா
லன்னிலையின் னவனென்ன வாய்ந்துணர்ந்தா ரனந்தரமவ் வந்தணாளர்
தென்னவன்முன் னருள்வடிவாய் நின்றருள்வே தியனுய சீதளீசன்
பன்னுறும்யா வருங்காணச் சானவிதன் சசாங்கமதி பரித்தவேணி. ()

சிலாசனத்தன் றிரிநயனங் கபாலகர காற்புயமுன் றிகழு வாய்மைப்
பலாசனத்த வுமைசங்கித ஞெயிடபா ரூடனெய்ப் பாவுமேதவர்
* கலாசனத்த தவமுனிவர் சேவிதனு யலகில்சிவ கணங்கள்சூழ
○ மலாசனத்தமுறத் தோன்றினனருளக் கண்டரசன் மறையோர்யாரும்.

கண்டளவே கரைபுதண்டா காரமெனக் காறலையிற் கலப்ப வீழ்ந்து
மண்டனிலெட் டங்கமுற வணங்குபுபன் முறைமுறையின் வலியசீல
கண்டனைய கண்டனைமான் கையனையெம் மையனைவான் கதிர்வெண்
[டிங்கட்
டுண்டனைய த§துண்டனைப்பைந் தோகையனை யிகையனைச்சோதிதனை

கனத்தானைக் களனுவா கனத்தானை யினத்தானைக் கருணையன்பர்
மனத்தானைச் சந்திசைக மனத்தானைச் சினத்தானை வயச்சூலானை
யனத்தானை வாமகர வனத்தானை முனத்தானை யருள்செய்கொன்றை
வனத்தானை முடியின்மதி வனத்தானை மேன்மேலும் வணங்கினுரால்.

களன்கனத்தானை ஆவாகனத்தானை என்க. கருணையன்பர் என்பது, இனத்தான் மனத்தான் என்னு மிரிடத்துஞ் சென்றியையும் மத்திலைத்தீபகம். வாமகர வல் நத்தானை என்க.

---

* கலாசன்னத்த எனப்பிரிக்க. ○ மலாசு—மல ஆசு எனப்பிரியும்; குளாம்பல்போல. § துண்டு—பங்கு.

ஒருவிடைமே லமர்ந்திருவே றுருவாய்மும் மலமகற்றி யோது நாலாம்
பாநலமே தந்தருளுமைந்தெழுத்தை யாறமையப் பகர்வாருள்ளம்[றோன்
விரவியெழு மெண்குணனென் பானுருவ னுங்கவர்முன் வெளியி னின்
றிருவடியிலிறைஞ்சுநரின் பத்தழுந்த வருணோக்கஞ்செய் தான்மன்னோ.

இறையிடபத் தெழுந்தருளி யிலங்குதிரு வெழுச்சியுரு வெப்பிலைநோக்கி
நிறைமகிழ்ச்சி யுளங்கொள்ளா நீருருவாய்ப் புறம்பொழியு நீர்மைத்தாகச்
செறியருவி விழியொழுகச் செங்கரங்கண் மேற்குவியச் சிந்தை செந்தீ
யுறுமிழுதா யுருகமொழி தழுதழுப்ப நின்றுதுதித் துவகை கூர்வார். ()

திலனுமிள மதியரவு தேங்கொன்றை நதிமுதல திளைக்க வாய்ந்து
கவினிலகு வித்துரும மொத்திலகு செஞ்சடையின் காட்சி போற்றி
குவலயமெல் லாந்தழைப்ப விரவிமுன மரவிந்தக் கொள்கை போல
வவரவர்தம் பயனடைய வருள்பொழியுந் திருவதனத் தழகு போற்றி.

மும்மலமே முக்குணமே முக்கரண முக்குற்ற மூன்று பற்றே
மும்மனமே முப்பகையே முப்புரமே மூன்றவத்தை மூன்று புத்தி[றே
மும்மைவினை முதலவற்றின் முரண்சாய்த்தின்புறற்கேதிம் முழுநீறென்
மும்மையுலகுணர்த்தவணி முக்குறிவெண்ணீற்றுநுதன் முதுசீர்போற்றி.

ஆருயிர்கட்கிடரிருணீத்தவிரொளியெங்கணும்பரப்பியருளும்வாய்மைச்
சீருறுமுச் சுடர்நயனத் திறல்போற்றிமறைமலருஞ் செவ்வாய்போற்றி
காருருவா யரிவெதும்ப வடர்ந்துலக மொருங்கவியக் கனன்ற கோற
னீருறுவெந் நெருப்படங்கி நிலவுதிரு மணிமிடற்றி னிலைமைபோற்றி.

மேருமலை யுளநாணித் தலைகுனிந்து சிலையாக வீறு தோளு
மாருமுந்நூ லக்கடுக்கை யலங்கல்சா ரக்கடுக்கை யணிந்த மார்புஞ் [சந்
சாருமினென் றொலித்தழைத்துத் தானிசமென் றழலேந்திச் சார்ந்தாரச்
தீருமினென் றளித்தருள றேற்றுறுநாற் றிருக்கரமுண் சீரும் போற்றி.

கதனுழுவை யதளுடுத்த கவினிலகு திருவரையின் காட்சி போற்றி
புதநிறைந்து விதிதொடர்ந்து போதநிலை தனிற்படர்ந்த புனித சீல
ருதயலய மொன்றுமின்றி யொருநிலையாய் நிரதிசய வுலவா வின்ப
விதமயமா யலகிலர்வீற் றிருப்பவிரி திருப்பதத்தி னெழிற்சீர் போற்றி.

பவளமலை தனிற்படர்ந்த பனிபோலத் திருநீறு பரவு மேனித்
திவளுமெழி னலம்போற்றி சிதளிநா யகனெனுமா திருப்பேர் போற்றி

தவளமலை தருமாது தருமாறி வளர்த்தருளுந் தளிர்க்கை யன்னை
துவளுமிடைச் சிவகாம சுந்தரிசே ரிடப்பாகத் தோற்றம் போற்றி. ()

என்றிவைமுற் பற்பலவா யிறையவனு மறையவருஞ் சீத ளீசன்
றன்றனிமான் மியங்கடமைத் தருவேத சாரகீர்த் தனங்க ளாலு
நன்றிதரு சாமகா னங்களினு லுந்துதிக ளவின்ற பின்னர்
மன்றநிறை யன்புளத்தின் மல்காதி சந்திரப்பேர் வழுதி மாதோ. ()

வேறு.

ஏக னுயரான் சந்நிதி நின்றவ் விறைவ னேருற லாற்சுப வாக்குண்
டாக லும்மிட பாருட னுகி யம்பி0கான் வித னுய்விபு வாய
மாக மாரிர*தாட்சபங் கத்தால் வருந்து மேல்வையு தகமளித் திடர்கூர்
மோக மாற்றிய சீதளி நாதன் முளரி யம்பத முதமிகத் துதிப்பான். ()

பொன்னி சேர்வாத் தாற்றல மீதப் பொறியை முன்னொடு நிருத்தல
மெனவுந், தென்ன லந்தைதா னன்னவள் வசிக்குந் திறத்திற் சீதளி
யெனவுமர்ச்சனையா, னின்ன பேர்திருத் தலத்திறை யெனவு நிகழ்த்து
வார்புத ரருட்டிற லுணர்ந்தேன், பன்னு சீதளி நாதவி போகின் பங்க
[சாதசிற் பதம்பணி கின்றேன்.

அண்ண லேநித்தி யானிக வித்தி யாசம் விப்பிர ரிவர்க்குறச் சிறுநீர்
நண்ணொர் பல்வல மாயினு நாடி நனுகு ருதுள நலியுமிவ் விபினத்[னே
தெண்ணிவேதிய னுயடுத் தெழினீரேல்வைகாட்டியென்னிடர்கடிந்தரு
பண்ணு சீதளி நாதவி போகின் பங்க சாதசிற் பதம்பணி கின்றேன்.

சென்னி கோளர் தம்மொடு முன்னிந் திரச பா†கத னுகிய வேல்வைத்
துன்னு விப்பிர ரகிதபூ பால தோடத் தாலவ மதிப்புறத் துயர்ந்தே
னென்னை யாள்பசு பதிதயா நிதிம கேச முற்றுணர் வியாபக யாண்டும்
பன்னு சீதளி நாதவி போகின் பங்க சாதசிற் பதம்பணி கின்றேன்.

இந்து பானுகு சலம்வனி யனில மேந பம்மிய மானனென் மூர்த்தி
மந்த்ரயோகசு தற்பரமுனிவோர்மறைமுன்னூல்களினுலகண் ணியனே
தந்த்ரகாம முப்புர தக்க நாச சக்க ராதியர் போற்றுறு சரண
பைந்தண் சீதளி நாதவி போகின் பங்க சாதசிற் பதம்பணி கின்றேன்.

---

0 அன்விதம்–சகிதம். * அட்சம்–அச்சு. † கதன்–தென்றவன்.

தரும தாரக சுகன்மயா கிகட்குத் தகுபொன் ஞட்டுறு போகதா யகவ
தரும தன்மவி வேகிக*ணிதனந் தன்னி லவ்வவ பலன்றரு தாணு
கரும சாதசு பலனுல கினர்க்குக் கடிதி னீந்தருள் பவதன்மா கானே
பரம சீதளி நாதவி போகின் பங்க சாதசிற் பதம்பணி கின்றேன்.

அரியை யாதிய வமரர்க ளானீ யலகிoறுளினு நோக்கவு மரியை
யுரமி லேன்விழி காணவந் துதக முதவு தீர்த்தநா மப்பிர•போகின்
றரிச னத்தள வாதவின் புற்றேன் றைவி கத்தரு மப்பலனிதுவோ
பரவு சீதளி நாதவி போகின் பங்க சாதசிற் பதம்பணி கின்றேன். ()

சம்பு சாருவ சுராசுரர் முனிவோர் தங்க ளாலடிக் கடிதுதித் திடுவோய்
வம்பு ஞற்றிய தக்க%பூ தாத்து வாந சித்திட முனிந்தருள் வாநி
னம்பு யார்ச்சித பதத்தினிற் றுருவ மாக வென்மனம் பதிதா வருள்சீர்
பம்பு சீதளி நாதவி போகின் பங்க சாதசிற் பதம்பணி கின்றேன்.

வாம மேவுமை தனகடbகாடான் விதாலிங் கனமுற மகிழ்தரு மகேச
சோம நின்மல சானவி சடில சுவர்ண சந்நிப சுவன்னக தாம
காம நாச†வு தாசன வரிண கராம்பு சாதவித் தலத்தமர் பரம
§பாம சீதளி நாதவி போகின் பங்க சாதசிற் பதம்பணி கின்றேன்.

என்றிவ் வாறிறை துதித்திட வெந்தை யினிது வந்தனன் றிருச்செவி
சாத்தி, நன்று பார்த்திப வெந்தெந்தச் சமய நம்மை யந்நிய விடயத்தி ன
டவா, தொன்று மன்பொடு கருதுகின் றுய்நீ யோது மப்பொழு துன்
னுளத் தபிட்ட, மென்ற யாவையு மளிக்குது நின்னு லியம்பு மித்துதி
[யார்தின மிசைப்பார்.

அவா கோரதுர்க் கதியமdசாச னத்தை மேவில ரானந்த மேல்கொண்
டிவர்சு சந்ததி யலகில செல்வ மிட்ட காமியம் யாவையும் பெறுவர்
திவிய நம்பத நிச்சய மாகச் சேர்வ ரிங்கிதி லையமொன் றிலையென்
றெவருமின் புடன் வினவியயுரைத்தானிமபமின் புணர்திருத்தளிநாதன்.

---

* நிதனம்—முடிவு. o தாள்—முயற்சி.
% பூதாத்துவரம்—முன்னடந்தயாகம்.
b காடான்விதாலிங்கனம்—இறுகத்தழுவல்.
† உதாசனன்—அக்கினி. § பாமம்—பிரபை.
d சாசனம்—ஆணை.

வேறு.

எதுபொழுது தேவசங்க சேவிதனு யேற்றி னிமகிரிசை யிடத்தமா வி ருடிகண மேத்த, வதிகசிவ கணஞ்சூழ வெழுந்தருள்சீ தளியா னருளு ருவ மிருவொருவ வமர்ந்துதெரி சித்தா, ரதுபொழுது மூலபரி டத்து விசர் முதத்தா னுங்குதனித் தனிநடன சாமகா னுதி, விதமருவு மார்ப்பி னராய் நதியிதழிமதியம் விரவுமுடி யானையின துதிகள்விளம் பினரால்.

திருமருவு மணிமார்பத் தரிபிரம னுர்பூ சிதாங்கிரிபங் கேருகனைச் சில் லையவ்வி யயனை, யருண்மருவு சங்கரனைப் பிரமதா திபனை யனங்கர் பல கோடிசூழு மினங்கணிக ராகா, வுருமருவு சுந்தரனை யிந்துபூ டண னை யோதுபுவ னேசுரனைச் சதாசிவனை யாவுந், தருமருவு சதாம்பிகாப் பிரியநா யகசீ தளியானை யளியானைச் சரணமடை கின்றேம். (கருஉ)

மேதகுசிற் சொரூபனையீ சனையனு மயனை விளம்பரிய வுதாரகீர்த் தியனையுக்கி ரனைவான், மீதிலகு சோமவிம்ப நிபானனனை யானை விரவுயிர்க ளவைக்குமன்ன தானமருள் பரனைக், கோதில்கரு ணுநிதியைத் தூநிதிய வீதி கோத்திரச சாங்ககா பதங்கவிலோ சனனைக், சாதமருள் சதாம்பிகாப் பிரியநாயகசீ தளியானை யளியானைச்சரணமடைகின்றேம்.

அரைதிகழம் பரவியாக் கிரசரும தரனை யச்சுதவல் லபனையிட பத்து வச கரனை, விரைகமழுஞ் சாதகும்ப சங்காச தீர்க்க வேணியனை யிந்தம ர தரங்கிணிதா ரணனைக், கரையிலிட ருவணைபுவி யினர்க்கியற்று மந்த காசுரரு தனனையுவ கைம்முனிவற் றிடுநே, சரையருளுஞ் சதாம்பிகாப் பிரியநா யகசீ தளியானை யளியானைச் சரணமடை கின்றேம். (கருச)

மெய்புர பாலவை ரவாட்டசே விதனை விளம்பனந்த ரூபனையே கனைய னீ சுரனைப், பாயசுதா பசுமசந்த லேபனனை மிருது பாடிதனை பீடில்பு ரப் பகைஞனையின் படியார், தோயவரு ணீலகோ மளசைல ராச சுதை வதனும் புயபார்க்க ரனையருணன் மேனித், தாயினல சதாம்பிகாப் பிரி யநா யகசீ தளியானை யளியானைச் சரணமடை கின்றேம். (கருரு)

நீபவன பதியாதி சந்திரம கீ*சா நீதமகி சுராசிரய நிமலவிக்கி ரகனைத் தாபதனு மிருகண்டு வால்விளைந்த சென சாபவிமோ சனையதர பல்லவ சோபிதனை மங்கலன்மிக் கருள்யாக்கத் திரிசையுல கவர்க்கு வகுத்தனை சீ தளிபுனித கிருத்தியனை மேருச், சாபகா சதாம்பிகாப் பிரியநா யகசீ தளியானை யளியானைச் சரணமடை கின்றேம். (கருசு)

பன்னங்கி ராசவரப் பிரதவருண் மேனிப் பனுமகுட நாககணை பூடணை முனிவோ, ருன்னதகும் போற்பவபூ சிதலிங்க வாமத் துறமகிமை யுண்டவனைக் கொண்டவனைப் போநிற், பொன்னிமனோ ரதப்படியே புரிந்தளிப்பான் கௌரி புனிதநடங் காட்டியருள் புண்ணியனை யாருந், தன்னிகரில் சிதாம்பிகாப் பிரியநா யகசி தளியானை யளியானைச் சரணம [டை கின்றேம்.

சிசரசி னெழுந்தலவு சிதளா னிலத்தாற் செய்கௌரி நடசிரம முத்த னையுந் தமனைத், தேசவிரும் பல†ராச விருக்கவனுந் தரத்திற் றிப்பியநி கேதனம்வீற் றிருப்பானை விருப்பா, ஞேசமிகு சிவதேவ தாங்கினி யா தடித்தி னுமாசகலீ லகனையெவர்க் கும்வினையி னுளுற்றாஞ், சாசன னைச் சிதாம்பிகாப் பிரியநா யகசி தளியானை யளியானைச் சரணமடை கி [ன்றேம். (௧௫௮)

காமினியச் சிவகாம சுந்தரியை யிடப்பாற் கலந்தவனைச் சலந்தரனைக் க டிந்தவனைப் படிந்து, *பூமினிய லம்பரோ தநிபான நிசியம் புதநிபகந் தரனைமழுக் கரனையரி புரனை, †யாமினிய பதிகோடி நிகர்பூதி மேனி யிலங்குபாண் டரனையருள் வரனைநதி தரனைத், தாமினிய சிதாம்பிகாப் பிரியநா யகசி தளியானை யளியானைச் சரணமடை கின்றேம். (௧௫௯)

என்றினைய வாறுவகை மீக்கூரு மிதயத் தினராக மூலபரி டத்துவிசர் யாரு, நின்றுதுதித் திடலுநவ புரியிலனவரத நிவாசர்சி தலாகதமான வரா தி யோர்க்கு, நன்றுவரப் பிரதனுஞ்சி தலத்தைநினைப் பவரே நவில்சரு வ காமதா யகனுமா யிலகு, வென்றிதரு சிதளிநா யகனுரைப்பா னீவிர் விளம்பியவித் துதிவாத்தின் மிகவுமுள மகிழ்ந்தேம். (௧௬௦)

கமதுதிருத் தலவாச விப்பிராகான் கேண்மி னமையிவணீர் துதித்திடுமி வ் வட்டகமா றுதியை, யமையுமுளத் தொடுமெவன்றான் றினம்படன ம் புரிவா னனையனிம்மை தனிலிட்ட காமியங்க ளனைத்தையும், நமைவி னுகர்ந் தினிதிருந்தே யம்மையினம் பதத்திற் கலந்திருக்கும் பெருவாழ் வு பெறுவனென வருளி, யெமையளிக்கும் பரங்கருணைத் தடங்கடலெ ம் பெருமா னெழின்மறையோ ரவர்க்கினருள் புரிந்தனனவ் வேல்லை.

வேறு.

மந்திரமா தனுவரனைப் பார்த்தாதி சந்திரனிர் மாற்றன் கூற

விந்துனிவேணியர்முன் குத்திரக்கொண்டொருபுருட விபக்க முன்னின்

†ராசவிருக்கம்—கொன்றை. * பூமியின் அம்பரமாகிய உததியைப் பானித்த நிசிபோன்ற அம்புதம் என்க. அம்பரம்—வஸ்திரம். அம்புதம்—மேகம். † யாமினிபதி—சந்திரன்.

றந்தவழியேயோடிக்கும்பாவையின்பாலொருவரம்வேட்டவன்கேட்டாங்கு
நந்தலிலா நின்மாயா வசமாகிப் பலபுவன நடன் மாற்றும். (ககஉ)

*அநிதநிலை யான்மலியு மான்மவர்க்கத் தொருவனு யளப்பில் கோடி
தநுவின்வினை வழிபுகுந்தாங்கிடருழந்து நின்னருளின் றன்மையாலிம்
மநுடதனு வினைப்பரித்து வந்தபர தந்திரனென் மாட்டு வேட்டுப்
புநிதமலர் வாய்மலர்ந்தென் னுற்புரியுஞ் செயலொன் றுபுகன்றுயன்றே.

தாதையர்க டனையர்தமில்விழைக்[illegible]று வினவிலவர்தம்பாற்கொண்ட
காதல்வெளிப் படவிருவீர் [illegible]ருதமெனக் கழறு மாபோ
லாதரமொ டாதேய மாமெனைக்கு மாதார மாகி யாண்டு
மேதகநின் றருள்பரமவடியேன்பால்வினவியதென் விளம்புகென்றான்.

அதுவினவு மனருணு மாசனிணு லானீத ராய வேத [தேரு
முதுமறையோ ருடனமையா யிரத்தெழுநூற் றொருவரொனு முறைநீ
மதிகொடபூ தானமுமத் தொகையீந்து மனமுதல வயங்க வாற்றிச்
சதமகனிந் தனையொழிகென் றருளவினு யாசனிவை சாற்று கின்றான்.

இந்திரன்மா லயன்முதலா மெண்ணரிய சுரர்க்குமரீ யு மெந்தாய்
வந்தெனிதி னெனக்கெதிர்நின் றியான்றருபூ தானமுநீ வாஞ்சிப்பாயே
லந்தமிலா நின்கருணை மறைமுதற்பல் லளவைகளி னடங்கு மோநின்
சிந்தனையிங் கிதுவாகி லென்போல வரியதவஞ் செய்தாரியாரே.(ககச)

காதரமார் நயனகெள ரீசதிருத் தலவாச கௌரி மாவுட்
‡காதரமார் திருநடன விப்பிரர்தஞ் சாபவெங்கோங் கவற்று மென்னுங்
Oகாதரமா ரளியனுளங் கலங்குநர்முன் கலங்கவருங் கருணைமகத் [தோட
§காதரமா விடனெனவர்க்கு மளிக்குமொரு வெளிக்குமிடங் காண்பாருண்

மேதகைய தன்பரிச மாத்திரமே காத்திரக வேத மாற்றி
யேதுறுமின் புதவுமினந் தென்றல்வியர் வுற்றனில மிரப்ப துண்டோ
வோதுறுபல் லண்டமொருங் குண்டகிரம் பாவகி யுதர மேய
வீதிகோத் திரஞ்சொலிப்ப வவுடதமா ரிடத்தேனும் விழைவ துண்டோ

---

* அநிதம்—அநியதம். அது ஈண்டு அளவின்மை.
‡ காதரம்—விருப்பம்.
O காதரம்—அச்சம்.
§ காது அர என்க.

அகிலபுவ னத்தினும்யா வர்க்குநிய மக்கின்றி யமையா தாகிச்
சகலவுயிர் வருக்கமெலாந் தட்பமுறத் தாகவிடாய் தணிப்ப தாகி
யுகமுடிவின் மிகவிரிந்தெவ்வுலகமுந்தன் னுட்கொள்பெருக் குடைய தாகி
நிகழ்புவனந் தனக்குருப்ப முற்றொழிப்பா னிரந்திடுமோர் நெறியுமுண்
[டோ

பல்வளனுந்தன் னிடையுற்பவிப்பித்தாங்கெவர்க்குமருள்பண்பே பூண்ட
செல்வநிறை வசுந்தரைக்கும் பசும்பொனுறக் கொடுத்திடுதல் செய்வாரு
ண்டோ, வில்வரைய நின்னருளால் வில்வரையா தகிலமெலாம் விளக்கு
மேன்மை, யெல்வளரு மல்லவற்கு மெல்லவற்கும் வில்லொருத்த ரீவ
[துண்டோ.

எவருக்கும் புனல்வழங்கு மழைமுகிலும் புனல்வேண்ட வீத லுண்டோ
தாவகற்றும் பெருங்கடற்குங் குறைவுள தாய்க் குறைநிரப்புந்தகையருண்
டோ, யாவருக்கும் பிணியகற்ற மருதினுக்கு நோய்மருத்தொன் றிடு
வாருண்டோ, மேலெவர்க்குங் கொடுத்திடுநீ யான்கொடுப்பக் கொள்வது
[நின் விளையாட் டன்றோ.

என்றரச னியம்புதலு மீவானு மேற்பானு மேற்கின் றோர்க்கு
நன்றுதரு பைம்பொருளு நாமேயாங் கௌரியமு னவின்ற வாறே
துன்றியபூ தானமெமக் களித்தியெனவிளம்பியருள் சுரந்துதாவுந்[றே.
கன்றிள்மான் கரத்தேந்துங கண்ணுதலோ னருட்குறியிற் கரந்தா னன்

வேறு.

விரைக்கொ ணீத்த வேணியா, னருட்கு றிக்கு ளாயபி
னுருக்கு மன்பொ டுவகைமேற், றரிக்கு மாதி சந்திரன். (கஎ௩)

திருத்த லேசர் செப்பியாங், கருத்தி கூர்சி வாகமந்
தெரித்து ணர்த்து சிற்பநூ, னிரைத்தொ லாழி நீந்தினோர். (கஎ௪)

ஆய கம்மி யர்க்கொணுத், தேய மிக்க சீதளி
வாயு னோர்க்கு நாடுநர், பாய சிந்தை பார்வைகள். (கஎ௫)

மீண்டி டாவி தம்பிணித், தாண்டு தம்வ யஞ்செயுங்
காண்ட குங்க ருப்பகின், மாண்ட வத்த மண்டபம். (கஎ௬)

மாத ரார்மா மண்டப, மாதி யாக வமர ரூர்
மீது சஞ்சி மானமோ, டோது றும்ப லுறப்பெலாம். (கஎஎ)

கரையி லாட கங்கிளிச், சிறைசொல் சாத ரூபந்திண
ணறிய சாம்பு நதமெனு, மறுவி னான்கு வகையவாம். (கஎஅ)

சாத கும்பந் தன்னைமிக், கோத னற்க ணுடைவைத்
தேத கட்டி னெங்கணுங், கோத றக்கு யினறரோ. (கஎகூ)

கலைஞர்க் குள்ளங் கவற்றுறு. விலைமிக் கேறு வேதியக்
குலனிற் கூறு மணிகொடத், தலனிற் ரூப னஞ்செயா. (கஅ0)

கேழ்கெ ழுந்நி கேதனம், வாழ்ம திக்கொ டாற்றியங்
கேழ்பொ ழிற்கு மேணிபோற், சூழ்ம திற்றொ குத்துமேல். (கஅக)

பெருகொ ளிச்செய் பிரதமா, வரணத் தீசன் மாதிரத்
திரணி யத்தி னியற்றினான், றெரிம ணிக்கொள் சிற்சபை. (கஅஉ)

இருமை யாகுமா வரணத் தீசனு, * ரித மேவிய வமலை யம்பிகை
கிரிசை வாழுங் கேதனம்பல,வுரைசெயங்கமோ டொளிர வாற்றினான்.

தேசி னன்னசே திமத்த தென்பிர, தீசி யாசையிற் செய்ய காரிவா
ழாசி லாலய மாட கத்தினாற், காசில் காசினாற் கவின வாற்றினான். ()

இதன்னி லங்குமிச் சினக ரம்மெலா, முன்ன ருள்ளன வேனு மொய் [யொளிப்.
பொன்னின் மாமணியாற்புதுக்குவித்,துன்னரும்பலபணியுனாற்றினான்.

மாதர் சூழ்பரி வார தேவர்தஞ், சேதி மங்களுந் திகழ வாற்றியிவ்
வாதியாகவா வரண மேழுமெண், மாதி ரங்களின் வயங்க வாற்றினான்.

உவமையொன்றனீளொகரமுந்திரண்,டலர்பதத்தன்மூன்றம்பகத்தனுன்
மலர்மறைக்கண மைந்து ளாறுசேர்ந், திலகெ பூச்சியோ ரெவர்க்கு மெ [ட்டொனு.

நிலையி னிற்பினு நவபு ரிக்கணோர்ந், துலகு பத்திநின் றுய்ய மேவுகைக்
கலைய ரன்சிவ காமி சண்டனைந் தலைவ ருந்திர தம்மைந் தாற்றினான்.

சலசைமேவுசீ தளிப்பைஞ் சூழியைக், கலச மாநகிற் கௌரி யாதியாக்
குலவு மாறிரு குணித ராதிநாட், டலைமை சாலபி தானத் தாற்றிய.

பன்னி ரண்டெனப் பாவு தீர்த்தமு, மன்னு தண்டுறை வயங்க வாற்றுபு
சொன்ன நீடுசோ பான மேனைய, துன்னுசூழெலாந்துலங்க யாத்தனன்

* அரிதம்—திசை.

சைவ மாதவர் தாவி லாகமத், துய்வ ழிக்கணின் றுயர்ப சார்த்தமா
தெய்வபூசையான்மார்த்தஞ்செய்துசெய்தவைதிகத்தர்வாழ்சதனமாலைகள்

ஏழு நூறுமே லெண்ணு மாயிரம், வாழி யந்தணர் மதிய மாற்கரு
ளாழி யான்றளிக் கயாசியாசையி, லூழினத்தொகை மனையு ளுற்றினான்.

கோதி லேனைமுக் குலத்தி னோர்கள்வாழ், மாதர்நீடுப வனத்தனுள்ளனு
மோது மேனைகீழ் மயக்கி னுற்றுள, சாதி யாகர நியாம சாலமும். (ககரு)

பொதியின் மன்றநீள்பொங்கர்நந்தனம், கதிர்*செயோதிமங்கழகமாவணம்
புதுநிலைக்கொடேர்பொழிலுய்யானங்களெதிமடாலயமெல்லைவாவிகள்

தெற்றியம்பலஞ்செல்லுறங்குபொற்பொற்றையன்னகோபுரங்களாதியா
வெற்றிதங்கொண்மாநகரிக்கேய்வன, முற்றுமுற்றினானவனை மோகுற.

இன்ன வாறெலா மியைத்த னந்தர, நன்ன ராகமத் தொடர்பு நாடியே
சொன்னவானியஞ் சுபமு கூர்த்தநா, டன்னின் மேவுசீ தளிய ரற்கரோ.

வேறு.

[illegible]யற்றிடுநீள்○கலப்பைப்பொருளினிரைபற்பலவுநிமிரக்கொணர்வித்
[illegible]முற்றையுமோருணர்விற்பெருகாசிரியத்திறலோர்சிவவேதியரால்.

சாற்றும் பெருமா சாந்திச் செயலாங், கேற்றங்கொளுமாறிம்பர்த் தலமுந்
தோற்றத் தரமார்சுவர்க்கத் தலமும், போற்றும்பரிசாற் புரிவித் தனனால்.

அ[illegible]முற் றியபின் மறையோர்க் கமைத்த, புதுமைச் சதனந் தொறுமேப் [புனிதர்
வதிவுற் றிடுதா பனமாண் செயலும், விதியிற் புரியா விழைவுற் றனனால்.

மறையோ ருணவு மாகே சுரார்தந், நிறைபூ சனையு நிகமா கமஞ்சொன்
முறையிற்புரிந்தான்முதமேவுளமோ, டறைபூ ரியதக்கணை தந்தனனால்

அந்நாண் முதலா வரசந் நகரிற், றன்னு காமாய்ச் சமைவுற் றுளநீள்
பொன்னார் மணிமா ளிகையிற் பொலியப், பன்னுண் மருவாப் பகர்தன் [முறையே.

* செய் ஒதிமம்—செய்குன்று.
○ கலப்பை—யாகபூஜாத்திரவியங்கள்.

கோலென்டிசைசெங்கோல்சென்றுலவ, ஞாலம்புரவாஞாலஞ்சடைகோ
பாலன் கரகா பாலன் புரிகா, பாலன் ஹுமையும் பாலன் புரமும். (உ0௨)

கோபாலன்—கண்நுதலன். புரிகாபாலன். செய்கின்ற காபால மெ
ன்னுங் கூத்துடையான். உமையும் பாலன் புரமும் என்பதில் பாலன்
நடுநிலைத் தீபகம்.

நவமாபுரியன்னவமாருருவன்,னவையுங்கடந்தோனவையும்பயில்வோன்
புவனம் முடியன் புவனம் முழுதார், பவனென் றிலுஞ்சேர் பவனன்
றெனுமுன்.

நாகப் பணியன் ஞகப் பணியன், மாகண் ஹுளஞர் மாகண் ஹுளஞர்
வேகத் தபனன் வேகத் தபன, னேகத் துடையா னேகத் துடையான்.

நா கப்பு அணியல் நாகப்பணியன், மாகண் உளன் நார்மா கண்ணுள
ன்ஆர்வேகு அ தபனன் வேகதபனன் ஏகு அத்துஉடையான்,ஏகத்துஉ
டையான் என்க. கண்—இரக்கம். கண்ணுள்—கூத்து. தபனன்—அக்கினி
சூரியன். அத்து—செந்நிறம். ஏகத்தன்மையின் நீங்கான்.

தளியா ரருட்சி தளிநா யகற்கா, ரளியோ டானீ யவிழா வார
மொளியார் பக்க மாசோற் சவமுற், களிகூர் தருமா கவினப் புரியா.

சாற்றுந் தகைவைசாகம் மதியிற்,போற்றும்புணர்தத் திருநாட்புனைசெய்
தேற்றின் றுவசமேற்று விதியின்,வீற்றெண்டினவிம் மிதவுற் சவமும்.

வைமா தினமா ரதவுற் சவமுஞ், சிவமா ரொருபான் றின்மே தகைய
கவிஞர்தீர்த்தோற் சவமுங் களிகூர்,புவிவான் பரவப் புரிவித் தனனால்.

வேறு.

கூநாசிருஹுவின் றுன்பறுத்தி ன்பமே,யகாளி னல்கியவரவுதுத் தூரணன்
பஞக பூடணன் காரி பைரவன்,னெனுவ ழுத்தெம் பிரான்வயிகேசனே.

தாரை சித்திரை மாதஞ்சயித்திரத்,தாருமானியத் தான்ற பொருட்குவை
சேர நல்குபு செல்வச் சிறப்புறச், சாரு மன்பிற் சபரியை யாற்றினன்.

கௌரி மாவுட் களிப்பமுற் காணுறக், குவலயத்தர் குளிப்ப வருங்கூடு
னவி லுமைங்தொழினட்டநவிற்றியாங்கவிர்சபேசனுக்காநிரைவின்மதி.

ஆனி யுத்திர மாதி இரேறுந்சவ,மேனி மூர்த்திகட் கேயும் விழாக்களு
மேனி லத்தின் விதித மதியெனு, மான மிக்க வழுதி யியற்றினன்.

திருத்த லத்தம லன்முனஞ் செப்பியாங், கருத்தி யோம்டெழு நூற்றொ
ன் றடுக்குமா, யிரத்தொகைக்கொள்பூ தானமு மீந்தன, னுரைத்த வம்ம
[றை யோர்க்கு மொருவற்கும்.

இன்ன வாறிவை யாதி யியற்றியத், தென்ன னுதரச் சீதளி நாதனார்
மன்னு கோயின் மூன்றங்கம் வயங்கிய, நன்ன ராகமநீதி நடாத்துபு.

உரிய காலங்க டோறு முளநிறை, பரிவு கூரப் பணிந்தப் பரமனை
விரியு மாமறை நூனெறி மேதினித், தெரிவை யாதரத் திண்புய பூதரம்.

தன்பனில் வாழ்வுறத் தாங்கின னிம்பரின், மன்னி நாள்பல வாழ்ந்தனன்
[மைந்தனைப்
பொன்னின் மாமுடி சூட்டிப் பூதர, மன்னவன் புயத் தாற்றவளித்தனன்.

மாநி லத்தை விடுத்து மறைமுனி, தானளித்தமுற் சாபந் தணந்துபோ
யானெ டுத்த கமலத் தமலனார், கான டுத்த மலர்க்கழல் கைதொழா.

அன்ன சீதளி நாத னருடரத், தன்ன வாழ்பதந் தன்னின் மருவுபு
வென்ன வாழ்வு மிதற்கிணை யின்றென, மன்னி வாழ்ந்தனன் மாமதி
வேந்தனே.

வேறு.

பூதலமு மீதலமும் போற்றுறுமிச் சீதலத்தின் புராணந் தன்னைக்
கோதறுமெய்ம் மாதவனைங் குறுமுனியன் புறுமுனிவர் குலவு காதன்
மீதெழமுற் றோதுதலும் வினவுமவர் மனமொழிமெய் வேறின் றாகி
மேதகைய வாதரமே விளங்குருவா யுளங்குளிர்ந்தார் விழிநீர் பெய்தார்.

விழியொழுகு மானந்த வெள்ளமதி னுள்ளுடலம் விரவ நின்றார்
பொழியமுத மழலைமொழிப் புனிதைசிவ காமிநடம் புரியெம் மீசன்
வழியருணன் மலரடிகண் மனத்திருத்திச் சிரத்திருகை வயங்கச் சேர்த்தி
மொழியமுதுண் டமரரொன்பேர்முகமன றவடைந்துபர முத்தாரேனும்.

மலையமலை சிலையமலை மன்னமலை துன்னமலை மலையக் கோமா
னிலையமலை யிலையமுறுத் தின்னருளே மன்னுயிர்க்கீந் திடச்செ யீச
னிலையமலை தலையொழிகென் றுமுனிவர் மனனுவந்து நின்று போற்றுங்
கலையமலைத் தெழுமடிகேள்சுரோத்திரத்தினேத்திரமுங் களித்தல்வேட்
[டேம்.

மலையமலையானது, சிலை அமலைக்கு மன்னுடைய அமல் ஐ துன்னு அ மலையேயாம். மலையக்கோமான், இலையத்தை மன்னுயிர்க்கு அலை இலயமுறுத்து இன்னருளீந்திடச் செயீசனேயாம். (இதுவே) நிலை (இதில்) அ மலைதலை ஒழிக என்றுமுனிவர்......போற்றும் அடி கேளென்க. இலையம்—நடனம். அலை—ஏற்று இரட்டிக்காமல் நின்றது. இலயமுறுத்து—கெடுத்து. அ—இரண்டும் சுட்டு. கலையம்—கலசம். அலைத்து—உடைத்து.

எனமுனிவ ரிறைஞ்சியினி தியம்புமொழி யெழின்மலயத் திறைவன்
னினியுவகை யுளந்துாப்ப நற்றவத்தீர் நமதுளமு நயந்தவாறே [கேளா
யினிதுரைத்தீ ரெனத்தவத்தே ரிவர்ந்துவிசும்பாறாக வெழுந்துபோந்தம்
முனிவரொடு நவபுரியின் முன்னுபுசீ தளியின்முறை முழ்கி னானல்.

அனந்தரமக் குறுமுனியோ டெறுமுனிவ ராலயத்து ளணைந்து போய்த்தா
மினந்தரமுன் கேட்டவகை யெய்துமுறைப் பொருள்வெளியி னெதிரே
யனந்தழலி னெழுதாக மலர்விழிநீ ராறாக மாறா தோடக் [கண்டு
கனந்தருமா மிடற்றனைய சீதளிநா தனைப்பணிந்து கரைந்து போற்றி.

உரியசிவா கமமாபா லுடையானை யிடையாமெய் யன்பி னோடு
மரியவுப காணமெலா மவணீட்டிச் சபரியைநன் குற்றி யங்கட்
பிரியமுள நிறையவுப வாசிகளாய் வீற்றிருந்து பிற்றை நாளுந்
துரியநிலை கடந்தபராஞ் சோதிசீ தளிநாதற் றொழுது முன்போல்.

பூசனைநற் றைலமுதற் பொற்பமரும் பற்பலமாண் பொருளி னாட்டித்
தூசணிபைந் தொடைநறிய தூபமொளிர் சுடர்வகைய சொன்றி யாதி
யாசகல வணிந்துவளைத் தமுதுசெய்வித் திம்மாபி னூற்றி யாவு
நேசமுறச் சமர்ப்பணஞ்செய் தங்கணெதிர் நின்றுதுதி நிகழ்த்துவாரால்.

திருக்கைலைதனிலிடப்பாற்செல்விநடம்வினையவனி சேர்ந்து நோற்றீண்
டிருக்கவெதிர்போந்தவள்பேரிலையமகிமாதவன்முன்னிமையோர்காணக்
கருக்கழலும் பிருகுமுனி கட்செவிமுன் னொருவகைக் கடலின் மூழ்க
வுருக்கமுள நிறைந்தவடா னுவந்தருளப் புரிந்தருளு மொருவ போற்றி.

கண்டிடுமால் பின்றனிப்பாற் கடலினெழுந் தஞ்சலித்த காட்சிநோக்கிப்
பண்டிவனோற் றமர்ந்திருந்தப துமைமுனம்புதுநடஞ்செய்பரமபோற்றி
திண்டிறல்சேர் பரியங்க சிவயோகஞ் செய்வடுகச் செம்மற் கந்நா
ளண்டர்நிறை சீதளிபா லனம்புரியுங் கணம்புரிந்த வரசே போற்றி.

சீதளியெண் டிசையினிலுந்திசைபாலர்தினைத்திழந்ததிறன்முற் சேர்ந்து
காதரமற் றுலகளிப்பக் கருணைபுரிந் தருணயனக் கடவுள் போற்றி
பாதிசந்தி ரப்பெயரி னவனிபன்றே ரச்சிறுவித் தவனை யீண்டு
மாதியற வெதிர்தகைந்து பணிபுரிவித் தருள்புரிந்த பகவ போற்றி.

பெருகுதவப் பிருகுமுனி பிரியாம லருகமர்ந்து பேணி நாளு
முருகுமனத் துடன்பூசை யுவந்துசெய நிவந்தமருமொருவ போற்றி

திருமணஞ்செய்வித்தரிதன் றிருத்தளியுத்தரத்திருப்பச்செய்வாய்போற்றி
யருமுனியை யிகழ்ந்தமணிப் பிரகாசற் கருளுருவ மளித்தாய் போற்றி.

அரசன்வெகுண்டகாமதிலடையாமல்கற்றுவிப்பவனுருண்மூழ்கும் [ற்றி
புரைகொள்கிருட்டினசன்மாப்புனிதமுறீஇப் புகுதவருள்புரிந்தாய் போ
பராவரிய சீதளியெம் பரம்பரனே நிரம்பருள்பா லிப்பாய் போற்றி
விரவுமலர்க் குழலிசிவ காமசௌந் தரியொருபால் விமல போற்றி.

என்றினைய துதிகள்பல வியம்பிமுனி வார்யாரு மிறைஞ்சி யன்பு
துன்று முளஞ்சீதளியான் றுணையடிக்கீழிருத்துபின்றொலைவில் சீர்த்தி
மன்றன் மலர்ப்பொழின்மலயமாதவனைவணங்குபுதம்வனத்திற்சென்றார்
பின்றனியக் குறுமுனிதன் பெயரிலங்கு சிவலிங்கப் பெருமான் பாதம்

தனையுமருச் சனைபுரிந்து தன்மலய மலையதனிற் சார்ந்தா னென்று
வினையறுநைமிசமெனும்பேர்விபினமதிற்சூழ்ந்திருந்துவிரும்பிகேட்ட
முனிவருளங் களிதூங்கி முதமிகுமற் புதமடைய முதிர்பேரன்பாற்
புனிதநிறை சூதமுனி புகன்றுரைத்தான் றிருப்பத்தூர்ப் புராணமீதே.

வேறு.

மாதிருப் புத்தூர் வாழி மன்னிரு தீர்த்தம் வாழி
சீதளிநாதர் வாழி சிவகாம வல்லி வாழி
யாதர வடுகன் வாழி யகம்படித் தொண்டர் வாழி
யோதுமிப் புராணம் வாழி யுலகெலா மென்றும் வாழி. (உ௯

ஆதிசந்திரபாண்டியச் சருக்கமுற்றிற்று.

ஆ௳ திருவிருத்தம்-௧௧௨௫.

திருப்புத்தூர்ப் புராணம்

முற்றிற்று.